மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 4 மணி நேரத்தில் நானும், அரசுச் செயலாளர் அவர்களும், இயக்குநரும் அந்த இடத்திற்கே சென்று, இரவு முழுவதும் அங்கேயே இருந்து, அங்கிருந்த நோயாளிகளையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி வேறு மருத்துவமனைக்கு மாற்றினோம். ஒரு மாதம் அந்த மருத்துவமனை செயல்படவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது தவறான தகவல். நானும் அந்தச் சம்பவ இடத்தில் இருந்தேன். நானே நேரடியாக அந்தச் சம்பவ இடத்திற்குச் சென்றிருந்தபோது, அரசுச் செயலாளர் மற்றும் இயக்குநர் என்னுடன் இருந்தனர். நான்கே நாட்களில்,*

அதே மருத்துவமனையை மீண்டும் செயல்படுகின்ற அளவிற்கு, நோயாளிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத அளவிற்கு சிறப்பாக மாற்றினோம். (மேசையைத் தட்டும் ஒலி) நோயாளிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். Geographical ஆக, சாலையிலிருந்து செல்லும்போது மிகவும் பள்ளத்தில் அந்த மருத்துவமனை அமைந்திருக்கிறது. அதற்கு உரிய நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். அங்கே குடிதண்ணீர்ப் பிரச்சினை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அங்கே மிகப் பெரிய sump கட்டப்பட்டு, பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேண்டுமானால், புள்ளிவிவரங்களை நான் உங்களுக்குத் தருகின்றேன். Geographical அமைப்பின்படி, அந்த இடம் மிகவும் பள்ளமாக இருக்கிறது. பொதுப் பணித் துறையின் மூலமாக அதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவிலே, அந்த மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளும் சிறப்பாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை 43 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்த மருத்துவமனையை பல்நோக்கு மருத்துவமனையாக தரமுயர்த்தி, எல்லா விதமான வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எனது பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பம்மல்–அனகாபுத்தூர் சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுவது குறித்து உங்களுடைய கவனத்திற்கும் வந்திருக்கும். கடந்த ஆண்டு, நீங்கள் நெரிசல் குறித்து கணக்கெடுத்து சென்றிருக்கிறீர்கள். ஆனால், இதுவரை சாலையை அகலப்படுத்துகின்ற பணி நடைபெறவில்லை. ஆகவே,

2016 செப்டம்பர் 2] [திரு. இ. கருணாநிதி]

அந்தச் சாலையை பம்மல்–அனகாபுத்தூர்–பொழிச்சலூர் வரை அகலப்படுத்தித் தருமாறு தொகுதி மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று, பல்லாவரம் நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 16–11–2010 அன்று 77.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு சென்னை குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி அளித்தது. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 99.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு, வேகமாக நடைபெற்று வருகின்றன. எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பம்மல் நகராட்சியிலும் அந்தப் பணிகள் 43.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. என்னுடைய தொகுதியிலுள்ள அனகாபுத்தூர் நகராட்சியிலும் 14.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன என்ற செய்தியை நான் அறிந்திருக்கின்றேன். அதேநேரத்திலே, பல்லாவரம் தொகுதியில் 3 நகராட்சிப் பகுதிகள் இருக்கின்ற காரணத்தினால், குடிநீர்த் தேவை மிகவும் அவசியமாக இருப்பதால், திட்டப் பணிகளை வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட திருநீர்மலை பேரூராட்சி மற்றும் பொழிச்சலூர் ஊராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன். பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட குரோம்பேட்டை, ராதாநகர் இரயில்வே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 2008 ஆம் ஆண்டு, 14.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. 2010–2011 ஆம் ஆண்டு இரயில்வே துறையினால் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், 6 ஆண்டு காலம் ஆகியும் சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள் இன்று வரை தொடங்கப்படவில்லை. தேர்தலுக்காக மக்களிடம் வாக்குகள் கேட்கச் செல்கின்றபோது, கடந்த ஐந்தாண்டுகளாக சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள்

நிறுத்தப்பட்டிருக்கின்றன. எப்போது பணிகள் முடிவடையும் என்று மக்கள் கேட்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக அந்தப் பணிகள் தொடங்கப்பட வேண்டும். அதிலே ஒரு சின்ன சிக்கல் இருக்கிறது. சுரங்கப் பாதை அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, 2008 ஆம் ஆண்டு நகராட்சியிலே 4 சக்கர வாகனங்களுக்காக நாங்கள் தீர்மானம் போட்டோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னர், 2012 ஆம் ஆண்டு இரண்டு சக்கர வாகனங்களுக்காக நகராட்சியிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதன்பிறகு, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இரண்டு சக்கர வாகனங்களுக்காக தீர்மானம் போட்டு, மக்கள் போராட்டங்கள் நடத்திய பிறகு, 2015 ஆம் ஆண்டு 4 சக்கர வாகனங்களுக்காக மீண்டும் ஒரு தீர்மானம் போடுகிறார்கள். இதுவரை அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி கேட்கின்றபொழுது, உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதாகக் கூறுகிறார்கள். அந்த வழக்கை விரைவுபடுத்தி, ஒன்றரை இலட்சம் மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே சுரங்கப் பாதையை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பல்லாவரம் நகராட்சியிலே பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், 1998 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் 36.73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 2001 ஆம் ஆண்டு அதற்கு அரசாணை வழங்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டுதான் அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. பின்னர், 2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் அப்போது அமைச்சராக திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் இருந்தபோது, நான் நகராட்சி மன்றத் தலைவராக இருந்த காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. பின்னர், 2016 வரை, விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற 57 கிலோ மீட்டர் தூரத்திற்கு 24 கோடி ரூபாய் என்ற அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

2016 செப்டம்பர் 2] [திரு. இ. கருணாநிதி]

முற்பகல் 10–25

அதுமட்டுமல்லாமல், பாதாள சாக்கடைத் திட்டத்தை பல்வேறு இடங்களில் அறிவித்தாலும், அந்தப் பணிகள் நடைபெற்று முடிந்த பிறகு, சாலைப் பணிகளுக்கென்று நிதியை ஒதுக்குவது இல்லை. அதை நான் குற்றமாகச் சொல்கிறேன் என்று நினைக்க வேண்டாம். தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவும், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் துணை முதலமைச்சராகவும் இருந்த அண்ணன் தளபதி அவர்கள், பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவு பெற்ற எங்களுடைய நகராட்சி பகுதிகளில் மட்டுமல்லாது, தமிழகத்திலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் சாலைக்கென்று 10 கோடி ரூபாயை அன்றையதினம் ஒதுக்கீடு செய்தார்கள். ஆகவே, இந்த அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, பாதாள சாக்கடைத் திட்டம் எங்கெங்கெல்லாம் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம் சாலைப் பணிகளுக்கென்று நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, தி.மு.க ஆட்சிக் காலத்தில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கு முன்னாள் துணை முதலமைச்சர், எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களால் திட்டம் தீட்டப்பட்டு, தொடங்கப்பட்டது. தற்போது ஜூலை 16 ஆம் தேதியில் ஆற்றப்பட்ட ஆளுநர் அவர்களுடைய உரையில், மெட்ரோ இரயில் சம்பந்தமான பணிகள் 2017 இல் முடிவடையும் எனவும், மெட்ரோ இரயில் திட்டத்தினை திருவொற்றியூர் வரை நீட்டிப்பு செய்திட மத்திய அரசு 3,770 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது, ஆலந்தூரிலிருந்து மீனம்பாக்கம் வரை மெட்ரோ இரயில் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. எனது தொகுதியான மீனம்பாக்கத்திலிருந்து பல்லாவரம், குரோம்பேட்டை வழியாக தாம்பரம் வரை மெட்ரோ இரயில் திட்டத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கோரிக்கை வைக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், வேளச்சேரியிலிருந்து நன்மங்கலம், மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை வழியாக தாம்பரம் வரை பறக்கும் இரயில் திட்டத்தை நீட்டிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குரோம்பேட்டை, அஸ்தினாபுரம், பொழிச்சலூர், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளில் துணை மின்நிலையம் அமைத்துத் தருமாறு தொகுதி மக்கள் சார்பாக வண்டி, கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை கோரிக்கைதான் வைக்கிறேன். வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: தொகுதிக் கோரிக்கைகளை முடித்துவிட்டால், பதில் சொல்கிறேன். தொகுதிக் கோரிக்கையை முடியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. ஆனால், இதுநாள் வரையில் கட்டடம் இல்லாமல், பல்லாவரம் நகராட்சியில் ஒரு நெருக்கடியான இடத்தில் இருப்பதால், சிரமப்பட்டு மக்கள் செல்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு புதிதாக இடம் ஒதுக்கீடு செய்து, கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 11 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. அந்த 11 சட்டமன்றத் தொகுதிகளில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உத்திரமேரூர் தொகுதியிலும், செங்கற்பட்டு தொகுதியிலும் இருக்கின்றன. ஆனால், சென்னைக்கு அடுத்து புறநகர் என்று வருகின்றபோது, மறைமலை அடிகள் வாழ்ந்த பல்லாவரம் பகுதியில் இல்லை. எனவே, அங்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் கோரிக்கையாக வைக்கின்றேன்.

அடையாறு ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டுவது சம்பந்தமாக சொல்ல விரும்புகிறேன். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடையாறு ஆற்றின் ஓரமாக அமைந்துள்ள அனகாபுத்தூர் நகராட்சி,

திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் ஒவ்வோர் ஆண்டும் வெள்ள நீர் வீடுகளுக்குள்ளே செல்கின்றது. ஆகவே, அடையாறு ஆற்றின் கரை ஓரமாக தடுப்புச் சுவர் அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பொழிச்சலூர் வழியாக கெருகம்பாக்கத்திற்கு செல்வதற்கு அடையாறு ஆற்றின் மேலே ஒரு மேம்பாலம் அமைக்க தற்போது பொதுப் பணித் துறையால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக அந்தப் பணி தொடங்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், பொழிச்சலூர் ஊராட்சி மிகவும் வளர்ச்சியடையாமல் இருக்கிறது. அது 50,000 மக்கள் வாழ்கின்ற ஒரு பெரிய ஊராட்சி. பூந்தமல்லிக்குச் செல்ல வேண்டுமென்றால்கூட ஆற்றைக் கடந்து செல்வதற்கு 5 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த ஊராட்சி மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான அந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, தொல்லியல் துறை என்பது இந்திய அளவிலே மத்திய அரசின் மூலமாக. . . (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித் துறை சம்பந்தமாக பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மற்ற துறைகள் தொடர்பாகவும் கோரிக்கைகளை வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்லாவரம் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, பம்மல் நகராட்சி போன்ற பகுதிகளுக்கெல்லாம் இன்றைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார். பல்லாவரம் நகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 99.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 28–1–2013 அன்று அரசாணை வழங்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

இப்போது 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. ஜனவரி, 2014 முதல் செயல்படுத்தப்பட்ட இந்தப் பணி, ஏப்ரல் 2017–ல் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் 2.30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

முற்பகல் 10–30

அதைப்போல, அனகாபுத்தூர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 14.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19–12–2014 அன்று அரசாணை வழங்கப்பட்டு, நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தையும் 2016 முதல் ஆரம்பித்து, ஜூன் 2018–க்குள் முடிக்கச் சொல்லி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்மூலம் 56,000 மக்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, பம்மல் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 43.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி, 28–1–2013–ல் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, அதிலேயும் 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. இந்தப் பணியை டிசம்பர், 2016–க்குள் முடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்மூலம் 75,000 மக்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். பல்லாவரம் நகராட்சியில் 75.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 251.11 கிலோ மீட்டர் நீளத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டத்தில், 197.34 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஏற்கெனவே பாதாள சாக்கடை உள்ளது. மீதமுள்ள 53.77 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி, 24.06 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு D.P.R. தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், அதுகுறித்து ஆய்வு செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, இன்றைக்கு சாலைகள் உடனடியாகப் போடப்படுகின்றன. அவர்களுடைய ஆட்சியிலே, தி.மு.க. ஆட்சியிலே, ‘உடனடியாக நாங்கள் அதற்கு நிதி

ஒதுக்கினோம்' என்று சொன்னார்கள். உங்களுடைய ஆட்சியிலே நிதி ஒதுக்கப்படவில்லை. அதற்கு நான் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். ஏனென்றால், உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் முடிவடைந்தவுடனே, அப்போது நிதி ஒதுக்கப்படாததால், இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுமையாக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அதைப்போல, மதுரை மாநகராட்சிக்கு, JnNURM திட்டத்திற்கு, உங்கள் ஆட்சியில் நிதி வந்தது. மதுரை மாநகராட்சிக்கு JnNURM திட்டத்தின்கீழ் வந்த நிதி போதுமானதாக இல்லாததால், 250 கோடி ரூபாயைக் கூடுதலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சென்னையில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின்மூலமாக நடைபெறுகிறது. அந்தத் திட்டம் முடிந்ததும், சாலையைப் போடுவதற்கு சென்னை மாநகராட்சி தயாராக இருக்கிறது. அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்காக, எந்தச் சாலையில் பள்ளம் தோண்டுகிறார்களோ, அதில் பைப் லைன் பதித்து, அத்திட்டம் முடிந்தவுடன், உடனடியாக சாலை போடுவதற்கு டெண்டர் விடப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி, இன்றைக்கு சென்னை முழுவதும், சாலை போடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுகுறித்து, உறுப்பினர் அவர்களுக்குக்கூடத் தெரியும். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில், அது ஒரு long way scheme. சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு அனுமதி கிடைப்பதற்கு எப்போதுமே நேரமாகும். உங்கள் ஆட்சியில், கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால், பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த சாலையைத் தோண்டினால், 5 வருடங்கள், 6 வருடங்கள், 7 வருடங்கள் ஆகின்ற சூழ்நிலை இருந்தது. ஆனால், இப்போது, திட்டம் போட்டு, ஐந்தாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் பணி முடிந்ததும், level permission வாங்கி, அந்த சாலையில் correct–ஆக level பார்த்து, உடனடியாக சாலையை

போடச் சொல்லி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக, பைப் லைன் பதிக்க சாலையைத் தோண்டினாலே, பணி முடிந்தவுடன் சாலையை போடாமல் இருக்கமாட்டார்கள். ஆகவே, எந்த வீதியிலும் இன்றைக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த தோண்டினாலும் உடனடியாக சாலை அமைக்கச் சொல்லி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் பேசுகின்றபோது மெட்ரோ இரயில் திட்டத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்றும், அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிவேகமாக வளர்ந்து வரும் சென்னை பெருநகர மக்களின் தேவைக்காக சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கொண்டுவரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல்கட்டமாக, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கிலோ மீட்டர் உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் பயணிகள் சேவையை 29–6–2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடங்களான சின்னமலை முதல் சென்னை விமான நிலையம் வரை மற்றும் ஆலந்தூர் முதல் புனித தோமையார் மலை வரையிலான பகுதிகளிலும் அடுத்த மாதம் பயணிகள் சேவையைத் தொடங்கி வைக்கும் வகையில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

நிலத்தடி வழித்தடங்களில் பயணிகள் சேவைக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் துவங்கப்பட்டு, அடுத்த ஆண்டின் இறுதியில் முழுமையாக செயல்பாட்டிற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினை, வண்ணாரப்பேட்டையிலிருந்து விம்கோ நகர் வரை ரூ.3,770 கோடி செலவில் நீட்டிப்பதற்கான மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டத்திற்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 23–7–2016 அன்று அதற்கான அடிக்கல்லை மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டியதோடு, கட்டுமானப் பணிகளையும் துவக்கினார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, இத்திட்டத்திற்கான இரண்டாம் கட்டத்தில், 104.5 கி.மீ. நீளத்தில் 3 வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுப் பணிகளும் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அதை நகராட்சிக்கு செய்யவில்லையென்றுதான் நான் தெரிவித்தேன். ஆகவே, தி.மு.க ஆட்சிக் காலத்தில் 10 கோடி ரூபாயை எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் வழங்கினார்கள். அதோடு, எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், திருநீர்மலை ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

அடுத்து, தொல்லியல் துறை சம்பந்தமாகப் பேச விரும்புகிறேன். மத்திய அரசு 2010 ஆம் ஆண்டு, மாநில அரசுகளுக்கு ஒரு கடிதம் அனுப்பியது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் பழங்கால நினைவுச் சின்னங்களைக் காத்திடும் பொருட்டு தொல்லியல் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாநிதி, உரையை விரைவில் முடியுங்கள். இன்று நிறைய பேர் பேச வேண்டும் என்று நான் உங்களிடம் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள்.*

திரு. இ. கருணாநிதி: முடித்துவிடுகிறேன். எல்லாப் பகுதிகளுக்கும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். தொல்லியல் துறை தடையாணை விதித்துள்ளது. 1 முதல் 100 மீட்டர்களுக்கு கட்டடம் கட்ட முடியாது. 101 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை, அனுமதி பெற்று, NOC பெற்று கட்டலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, 101 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை கட்ட முடியவில்லை என்ற பிரச்சினை வந்தபொழுது, அப்போதைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி, ஒரு சிறப்பு I.A.S. அதிகாரியை சென்னை எழும்பூரிலேயே அமர வைத்து, அவர் மூலமாக NOC பெற்று, கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனால், மீண்டும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில், தடை செய்யப்பட்ட 101 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை உள்ள இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி தந்து, நீங்கள் NOC வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்லாவரம் நகராட்சிப் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், 44 கோடி ரூபாய் செலவில் அன்றைய தினம் உருவாக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது, சென்னை வண்டலூருக்கு அருகிலே உள்ள வேங்கடமங்கலம் பகுதியிலே, 50 ஏக்கர் இடத்தை ஒதுக்கி, ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் பகுதிகளுக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் கொண்டுவரப்பட்டு, இன்று அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதை நிறைவேற்றியிருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பாக, சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்திட வேண்டும், நிலத்தடி நீர் ஆதாரத்தை நாம் பாதுகாத்திட வேண்டுமென்பது தொடர்பாக பல அறிவிப்புகளை வெளியிட்டார்கள். பல்லாவரம் நகராட்சியிலே ஒரு ஏரி, குப்பைக் கிடங்காக இருக்கின்றது. அந்தக் குப்பைக் கிடங்கு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. நாங்கள் தொடங்கியதை நீங்கள் முடித்தீர்கள். இருந்தாலும், அங்கு 4,000 டன் அளவிற்கு குப்பைகள் இருக்கின்றன. அந்தக் குப்பைகளை அகற்ற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அனகாபுத்தூர், திருநீர்மலை, பொழிச்சலூர் பகுதிகளிலுள்ள

குப்பைகளையும் அகற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திரிசூலம், இரயில்வே சுரங்கப் பாதை. இப்பகுதியில் சுமார் 30 ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். விமான நிலையத்திற்கு எதிரே உள்ள மலையடிவாரத்திலே, மக்கள் இரயில்வே கேட்டைக் கடந்து செல்ல கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் காத்திருக்கிறார்கள். அந்த சுரங்கப் பாதையையும், இரயில்வே பாலம் LC–23-ஐயும் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்னை, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்க்கட்டளை ஏரி, திருநீர்மலை ஏரி இவையெல்லாம் மிகப் பெரிய ஏரிகள். அங்கே, தூர் வாரி, நடைபாதைகள் அமைத்து, சென்னை சேத்துப்பட்டில் இருப்பது போன்று, பல்லாவரம் ஏரியிலே படகு குழாம் அமைத்து, சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பல்லாவரத்தில் இருக்கின்ற காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கிடையாது. பல்லாவரம், சங்கர் நகர், குரோம்பேட்டை, சிட்லபாக்கம் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று எனது தொகுதி மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள பெண்கள் அரசினர் மேல்நிலைப் பள்ளியை தனியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பல்லாவரம் நகராட்சிப் பகுதியின் அருகிலே வடநெம்மேலியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அண்ணன் தளபதி அவர்கள் அன்றையதினம் தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டம் என்னுடைய தொகுதிக்கு அருகில் உள்ள மடிப்பாக்கம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதன் பக்கத்தில் இருக்கின்ற பல்லாவரம் நகராட்சிக்கு கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் கொண்டுவந்தால், என்னுடைய தொகுதியிலுள்ள மற்ற பகுதிகளுக்கும் செம்பரம்பாக்கத்திலிருந்து குடிநீர் வருவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தையும் தாங்கள் மனதிலே வைத்துக் கொண்டு நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. கருணாநிதி, நீங்கள் ஆரம்பித்து. . . (குறுக்கீடு) அனுமதியில்லை.

திரு. இ. கருணாநிதி: உரையை முடித்துவிடுகிறேன். இதைச் சொல்லி, உரையை முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான். ஐந்து நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. கருணாநிதி, நீங்கள் ஒத்துழைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் இவ்வளவுதூரம் கேட்டுக் கொண்ட பின்னரும், நீங்கள் பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்? உரையை முடியுங்கள்.

திரு. இ. கருணாநிதி: அடுத்து, உணவுப் பொருள் வழங்கல் துறையை நான் கேட்டுக்கொள்வது, ஆலந்தூரிலும், தாம்பரத்திலும் நுகர்பொருள் வாணிபக் கழகம் தனி மண்டலமாக இருக்கின்றது. அதிலிருந்து, பல்லாவரத்தைத் தனி மண்டலமாகப் பிரித்துத் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் நிதி குறித்து சொல்ல விழைகிறேன். இந்த சட்டமன்ற உறுப்பினர் நிதி 2 கோடி ரூபாய் என தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. ஆனால், ஒவ்வோராண்டும், திட்ட மதிப்பீடுகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. அப்படி ஒவ்வோராண்டும் உயர்கின்றபட்சத்தில், நிதி பற்றாக்குறை ஏற்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது போதாததாக இருக்கிறது. அதை 3 கோடி ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று கோருகிறேன். இன்றைக்கு திட்ட மதிப்பீடுகள் உயர்ந்ததன் காரணத்தினால், அந்தப் பணிகளின் எண்ணிக்கை குறைகிறது. எல்லாமே அரசாங்கத்திற்காக கட்டிக் கொடுக்கப்படும் கட்டடங்கள்; மக்களுக்குத் தேவையான கட்டடங்கள் என்பதால், நீங்கள் உயர்த்திக் கொடுத்தால் அந்த எண்ணிக்கையை சரி செய்ய முடியும். இதை நான் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்காக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, உரையாற்றியது போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. இ. கருணாநிதி, நான் சொன்ன பிறகும்கூட, நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்காவிட்டால் எப்படி? இவ்வளவு தூரம்

நான் சொல்லியிருக்கிறேன். மணி என்ன ஆகிறது? 10–15 மணிக்கு ஆரம்பித்து இப்போது 10–45 மணி ஆகிறது. அரை மணி நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார். சொன்ன பிறகும், திரு. இ. கருணாநிதி கேட்க மாட்டேன் என்கிறார். அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள் என்று சொன்னேன். அரை மணி நேரத்திற்குமேல் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் ஒத்துழைப்புக் கொடுக்கமாட்டேன் என்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார். குரோம்பேட்டை, ராதாநகரில் இரயில்வே சுரங்கப் பாதை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இரயில்வே பகுதியில் கீழ்ப் பாலம் இரண்டு வழித்தடமாக இரயில்வே துறையால் கட்டப்பட்டது. ராதாநகர் குடியிருப்புவாசிகளில் ஒரு பகுதியினர் அணுகுசாலையை அகலமாகக் கட்ட வேண்டுமென்றும், மற்றொரு பகுதியினர் வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதையாகக் கட்ட வேண்டுமென்றும் கோரியது தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. பல முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. வழக்கு முடிந்த பின் அணுகுசாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போல, திரிசூலம் இரயில்வே பாலம் எல்.சி. 22–ல் திரிசூலம் அருகில் இரயில்வே கீழ்ப் பாலம் அமைப்பதில் மத்திய அரசின் S.A.R.C. எனப்படும் நிறுவனத்தின் நில எடுப்புப் பணியில் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் நிதி என்று சொன்னார். அது ஏதோ சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதி கேட்பதுபோல் இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்று சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. கருணாநிதி, அனுமதியில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேங்கடமங்கலம் பகுதியிலே திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பற்றியும், பல்லாவரம் நகராட்சியிலே ஒரு ஏரி குப்பைக் கிடங்காக இருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள், "எங்கள் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது, நீங்கள் முடித்தீர்கள்" என்று சொன்னீர்கள். நீங்கள் ஆரம்பித்து விடுகிறீர்கள், எந்தவொரு திட்டத்தை நீங்கள் ஆரம்பித்தாலும், முழுமையாக முடிப்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இன்றைக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அவர், அத்திட்டத்தில் பல நகராட்சிகளை சேர்த்தோம் என்று சொன்னார். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பொறுத்தளவில், கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,515.19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது சரித்திர சாதனையாகும்.

அதுமட்டுமல்லாமல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக இன்றைக்கு ஊராட்சிப் பகுதிகளுக்கும்கூட நிதி ஒதுக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்றைக்கு, தூய்மை காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதற்காக சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில் விருது கொடுத்தார்கள். இன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்.

கடந்த ஐந்து வருட தி.மு.க. ஆட்சியில் வெறும் 303.51 கோடி ரூபாய்தான் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கினீர்கள். 'நாங்கள் ஆரம்பித்தோம் நீங்கள் முடித்தீர்கள்' என்று சொல்கிறீர்கள். நீங்கள் ஆரம்பித்த திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முடிப்பார்கள். நீங்கள் ஆரம்பிப்பதோடு சரி; நீங்கள் ஆரம்பித்து அதற்கு நிதி ஒதுக்கவில்லை. அது ஒன்று.

அதேபோல, கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில், அவர்களது தலைவர் கொண்டு வந்ததாக உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2003–2004 ஆம் ஆண்டிலே தொலைநோக்குப் பார்வையோடு, கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவரே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதற்குப் பின்னால் நீங்கள் நெம்மேலியில் 100 மில்லியன் என ஆரம்பித்து, 28 சதவிகிதம் மட்டும்தான் முடித்தீர்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்தத் திட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். தற்போது சென்னைக்கு 100 MLD, 200 MLD அளவு குடிநீர் வந்து கொண்டிருக்கின்றது. அது 22–2–2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

நெம்மேலியில் ஜெர்மன் நாட்டு நிதியுதவியுடன் 1371.86 கோடி ரூபாயில், 150 MLD கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் அமைப்பது குறித்து விதி 110–ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசுடன் இணைந்து கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது. 28–6–2016 அன்று அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கூட்டம் நடத்தப்பட்டு, பல்வேறு நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன. அதேபோல், நீங்கள் பல்லாவரம் நகராட்சியை கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தில் சேர்த்தோம் என்று சொன்னீர்கள். அதையும்கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 400 MLDஆக அறிவித்திருக்கிறார்கள். அதுவும் ஒரு மிகப் பெரிய திட்டமாகும். அதற்கு 3,227.84 கோடி ரூபாய் நிதி தேவைப்படும். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைமூலம் நிதி பெற பல்வேறு முயற்சிகளை அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள். மத்திய அரசுடன் பல்வேறு நிலைகளில் பேசி, மாண்புமிகு பிரதமரிடம் நேரடியாகச் சென்று கோரிக்கை மனு கொடுத்து, அந்தத் திட்டத்தை சீக்கிரம் கொண்டு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கினார்கள். இன்றைக்கு 400 மில்லியன் லிட்டரிலிருந்து 38 மில்லியன் லிட்டரை பல்லாவரம் நகராட்சிக்கு வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஒப்புதல்

வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொல்லியல் துறை சம்பந்தமாக ஒரு கேள்வியைக் கேட்டார். தமிழகத்தில்தான்* UNESCO World Heritage Sites *அதிகமாக இருக்கின்றன. 0–விலிருந்து 100 மீட்டர் வரைக்கும் எந்த* discretion-*ம் கிடையாது. 101–லிருந்து 300 மீட்டர் வரைக்கும்* discretion *இருக்கின்றது. ஆனால், நீங்கள் சொன்னதுபோல், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு* Special Officer *போட்டு, அதை* regularise *செய்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், கடந்த ஐந்து வருடங்களாக, எந்தவித சட்டத்தையும் மீறி, அது நீர் நிலைகளாகட்டும்,* Heritage Sites–*ல் 300 மீட்டருக்குள் இருக்கிற* constructions *ஆக இருந்தாலும், எந்தவித விருப்பு, வெறுப்புமின்றி,* regularisation *செய்யாமல் புராதன கலாச்சார பொக்கிஷங்களை முறையாகப் பாதுகாத்து வருகிறோம். அதற்காக* Special Officer–*ஐ போட்டுள்ளோம்.* Discretionary approval *கொடுக்கவில்லை என்பது இந்த அரசாங்கத்தின் ஆளுமைக்கு ஒரு நற்சான்று என நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். எந்தவிதமான விருப்பு, வெறுப்புமில்லாமல் தரப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, உங்களுக்கான வாய்ப்பு முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு, ஜக்கையன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜக்கையன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் சார்.*

(குறுக்கீடு) இன்று நேரமில்லை, எனக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரமில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன். விழித்திருக்கும் நேரம் எல்லாம். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னொரு நாள் பேசலாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன். விழித்திருக்கும் நேரம் எல்லாம், மக்கள் தழைத்திருக்கப் பாடுபடும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், வாய்ப்பில்லை, உட்காருங்கள். இன்று நேரமில்லை. இன்னொரு நாள் நீங்கள் பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) இன்னொரு நாள் பார்க்கலாம்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, பூமியை அழகுபடுத்த வந்த புண்ணியத் தாயே! சாதனை விரலும், சரித்திரக் குரலும் பிறவியில் அமைந்த பிறவித் தாயே! (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் கொஞ்சம் இன்றைக்கு ஒத்துழையுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ஜக்கையன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *ஆட்சியின் முதலிடமே, அறிவின் இலக்கணமே! நெஞ்சுரத்தின் சிகரமே! (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மையின் அகரமே! புலர் காலைப் பொழுதாக, பூந்தமிழர் வாழ்விற்குப் பொழிய வந்த மாமழையே! ஞானத்தின் சூத்திரமே! ஞாலத்தின் சுடர்விளக்கே! காலம் கனிந்தளித்த கற்பக விருட்சமே! தலைகளை மட்டும் எண்ணும் தலைவர்கள் மத்தியில் இதயங்களை*

மட்டும் எண்ணும் இதயத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) திராவிடப் பாரம்பரியத்தின் திசைகாட்டும் தீபச் சுடரே! வசந்தத்தின் திருவுருவே! வானத்தின் மறுவுருவே! தானத்தில், நிதானத்தில், சமாதானத்தில், தத்துவத்தில், கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கும் அரசியல் சூத்திரமே! 'தலைவியின் பாதச் சுவடுகளே எமக்கு வேதச் சுவடுகள்' எனப் புடம்போட்டு நிற்கும் எங்களை இயக்கும் வெற்றித் தலைவியே! நாடுகின்ற செயல்களிலே நன்மையாகி, நல்லவர்கள் நெஞ்சினிலே உண்மையாகி, ஓடுகின்ற வாழ்வினிலே உறுதியாகி, உயிர்களெல்லாம் போற்றுகின்ற, இறுதியாகி நிற்கும் உண்மைப் பொருளே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் மலர்ப் பாதங்களை வணங்கி, இன்றைய விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் சாதனைகள் பேனா முனையில் நுழைந்து, மெய்க்குள்ளே உயிர் போல மைக்குள்ளே கலக்கிறது. "உயர்ந்தோர் வரலாற்றைத் தோற்றுவிக்கிறார்கள்; வரலாறு உயர்ந்தோரைத் தோற்றுவிக்கிறது" என்றார் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள். அவரது வைர வரிகளுக்கு வைரம் பாய்ச்சுகிற நம் அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் தினந்தோறும் பல சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். "தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் நலனே என் நலன்" என்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றல்மிக்க ஆட்சி இன்றையதினம் நூறு நாட்களைக் கடந்து, ஆயிரம், பல்லாயிரங்களை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவிலும், உள்நாட்டிலும் நிலவி வரும் உறுதியற்ற பொருளாதார சூழ்நிலைகளுக்கிடையில், மாநிலப் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் பொறுப்பை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டுள்ளது. 2011—2012 ஆம் ஆண்டின் நிலையான விலைகளின்படி, 2015—2016 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான வளர்ச்சி விகிதம் 7.57 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளபோதிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

தலைமையிலுள்ள தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.79 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்று கணிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்குகிறார். மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்குகிறார். உலமாக்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கியவர் எங்கள் தங்கத் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். "நாட்டுப் பற்று என்பது கொடியேற்று விழாக்களில் மட்டுமல்ல, தங்கள் உழைப்பை நாட்டுக்குக் கொடுப்பதில் உள்ளது" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் உணர்வையும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உழைப்பையும் உணர்ந்த தியாக தீபமாம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.11,000/– லிருந்து ரூ.12,000/– ஆகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,500/–லிருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தப்படும்" என்று சுதந்திரத் திருநாளில் அறிவிப்பு செய்தார்கள். அதுமட்டுமல்ல, விடுதலைப் போராட்டத்தில் சிறப்புறப் பணியாற்றியவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்களது வாரிசுதாரர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.6,000/– ஆக உயர்த்தி அறிவித்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் படை வீரர்களுக்கு தொழில்சார்ந்த செயல்திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வழங்க, தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழக (TEXCO) *நிதியிலிருந்து ரூ.1 கோடி வழங்கப்படும் என்று அறிவித்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவியை ரூ.4,000/–லிருந்து ரூ.4,500/– ஆக உயர்த்தி, 531 முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களை வாழ வைத்த தங்கத் தலைவி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி)

பணியிலிருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தின் உடனடித் தேவைக்காக, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு நிதியின்கீழ் வழங்கப்படும்

முன்பணத்தை ரூ.5,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கி, அவர்களின் துன்பத்தை விடுவித்தவர் எங்கள் தங்கத் தலைவி, கருணைத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

22–3–2012 அன்று, 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023' ஆவணத்தை வெளியிட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். "அமெரிக்காவைப் பற்றிய ஒரு மாபெரும் கனவைக் கண்ட மார்டின் லூதர் கிங்கைப் போல, தமிழ்நாட்டிற்காக நானும் ஒரு தொலைநோக்குப் பார்வை கனவு கொண்டுள்ளேன். வேலையில்லாமை என்ற நிலை இளைஞர்களுக்கிடையே அறவே இல்லாத, வறுமை முற்றிலும் ஒழிக்கப்பட்ட, கல்வி, சுகாதாரம், குடிநீர், மருத்துவம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் ஒவ்வொரு குடிமகனும் எளிதில் பெறக்கூடிய, இவை அனைத்திற்கும் மேலாக, பாதுகாப்பு, அமைதி, வளத்தை அனைத்து மக்களும் பெறுகின்ற மாநிலமாகத் தமிழ்நாட்டைக் காண்பதே எனது கனவாகும்" என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவை முன்னோக்கிச் செலுத்துவதாக, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை இங்கே மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

வறுமை, சுகாதாரம், கல்வி போன்றவற்றில் பின்தங்கியுள்ள 105 வட்டாரங்களில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் திட்டமான, "மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு" இந்த நிதியாண்டிலும் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கப்படுகிறது.

பொதுச் சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டுசேர்க்கும் 'அம்மா திட்டமும்', மக்களின் குறைகளை 24 மணி நேரமும் தீர்க்கவல்ல 'அம்மா அழைப்பு மையமும்' மக்களால் இன்று வெகுவாகப் பாராட்டி புகழப்படுகின்றன. 'இ–சேவை மையம்' மூலம், தற்போது அளிக்கப்பட்டு வரும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுச் சேவைகளின் எண்ணிக்கை, நடப்பாண்டில் 300 வரை உயர்த்தப்படவுள்ளது.

2016 செப்டம்பர் 2] [திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களின் தகுதி வாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு, 1–7–2016 முதல் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு மருத்துவச் சிகிச்சைகளை வழங்குவதற்காக புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2016–ஐச் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தற்போது நீட்டிக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக, சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு மட்டும் உச்சவரம்புத் தொகை ரூபாய் 7.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கு ரூபாய் 500/– ஆக வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூபாய் 1,000/– ஆக உயர்த்தி வழங்கிய வள்ளல் பெருந்தகைதான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதிப் பிரச்சினைகளை மிகச் சுருக்கமாக இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். கம்பம் தொகுதியில் உள்ள கம்பம் நகரில் அரசு கலைக் கல்லூரி ஒன்றை அரசு நிறுவிட வேண்டும்.

பாதாள சாக்கடைத் திட்டத்தை கம்பம் நகரில் நிறைவேற்றிட வேண்டும்.

கம்பம் நகரில் உள்ள அரசு மருத்துவமனையின் தரத்தை மாவட்ட மருத்துவமனையின் தரத்தின் அளவிற்கு உயர்த்திட வேண்டும்.

பக்கத்திலே இருக்கின்ற கேரளா மாநிலத்திற்கு இன்றையதினம் ஆயிரக்கணக்கான மக்கள் நித்தம் நித்தம் சென்றுவரக்கூடிய சூழ்நிலையும், சபரிமலைக் கோயிலுக்கு சென்றுவரக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. இப்படியெல்லாம் செல்வதற்கு அங்கே, சாக்கலூத்து மெட்டுப்பாதை, ராமக்கல் மெட்டுப்பாதை போன்றவற்றை அமைப்பதிலே, இடையிலே வனத் துறையிலே சில பிரச்சினைகள் இருந்தாலும்கூட வனத் துறையினரிடம் கலந்து பேசி, அந்தச் சாலைகளை விரைந்து அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே நீண்டகாலமாக ‘தொட்டமான் அணைத் திட்டம்’ என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றித்

தரவேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகளிடத்திலே இருக்கிறது. இதனால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைவார்கள். பல ஆயிரக்கணக்கான நிலங்கள் பாசன வசதி பெறக்கூடிய நல்ல சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரியத்தின் விளைச்சலுக்கு விதையாக இல்லாமல் விறுவிறுப்பான பணிகளுக்கு விழுதுகளாக இருக்கும் மக்கள் நலத்திட்டங்களெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இனி மாண்புறும். அப்போது மக்களும் இங்கே மாண்புறுவார்கள்.

'மற்றொருவன் மூக்கினால் இன்னொருவன் மூச்சுவிட முடியாது' என்பது தாய்லாந்தின் பழமொழி. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அது தெரியும். அதனால்தான், எதிலும் அவர் தனித்து நின்றே களம் காண்கின்றார். தனி மனித இராணுவமாகக் களம் கண்டு, அதில் வெற்றியும் பெறுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிங்கமெனத் திகழ்பவரை சிறு நரிகள் பிடித்திடுமா? தங்கமென ஒளிர்பவரை தகரம்தான் சிதைத்திடுமா? ஆலமரமான நம்மை அறுகம்புல் அடக்கிடுமா? ஓர் அறையில்தான் அடைத்திடுமா? ஞாலமெனச் சுழல்வோரை நகராமல் முடக்குவரோ, சுவர் நாலுக்குள் அடக்குவரோ?

முற்பகல் 11–00

இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் 'தரையைப் பார்த்து நிக்குது நல்ல கதிரு, தன் குறையை மறந்து மேலே பார்க்குது பதரு' என்று கவிஞர் மருதகாசி அவர்கள் அன்றைக்கே நாசூக்காய் பாடியிருக்கிறார்.

"Great talkers are little doers" என்று சும்மாவா சொன்னார்கள்? We can't wash charcoal to white. ஆமாம், அந்தக் கரித்துண்டுகளை இனி வெளுப்பாக்க முடியாது. அவற்றின் நிறம் இனி கறுப்புதான். துணிவே துணை என்பது நமக்கெல்லாம் வார்த்தை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுக்கோ அதுதான் வாழ்க்கை. அந்தத் துணிவுக்கு நாமும் துணையிருக்க வேண்டும். அதற்கான நேரம்தான் வருகிற உள்ளாட்சித் தேர்தல். அரசியலில் சிலர் இக்கரைக்கும், அக்கரைக்கும் பரிசில் ஓட்டி, தாங்கள் எக்கரை என்பதையே மறந்து, நித்திரையிலேயே நிர்மூலமாகிவிட்டார்கள். வாய்வலிக்கச் சொன்னாலும் வஞ்சகர்கள் நமது வரலாற்றை அழித்து எழுதப் போவதில்லை. ஆட்கொணர்வு மனு போட்டு வேட்பாளர்களைத் தேட வேண்டிய கட்சிகள் எல்லாம் நம்முடன் போட்டியிட முயற்சிக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். இன்றைக்கு கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, காலத்தை வென்றவர் நீங்கள், காவியமானவர் நீங்கள், வேதனை தீர்த்தவர் நீங்கள், விழிகளில் நிறைந்தவர் நீங்கள், வெற்றித் திருமகள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும், தாங்கள் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் ஆயிரம் நாளாக வேண்டும். பிரம்மன் மட்டும்தான் இவ்வுலகில் படைப்பவனல்ல, புதிய யுகங்களைப் படைக்கும் நீங்களும்தான் இங்கு பிரம்மா என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாள். பொதுவாக, நிதிநிலை அறிக்கை மீதான கூட்டத் தொடர் முடிகிற நேரத்தில்தான் பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, மற்ற குழுக்கள் எல்லாவற்றிற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிப்பது வழக்கம். ஆனால், கடைசி நாளான இன்றுகூட

அந்தக் குழுக்களைப் பற்றி எந்தச் செய்திகளும் தங்களிடத்திலிருந்து வரவில்லை. என்ன காரணம் என்று தங்களிடமிருந்து அறிந்து கொள்ளலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று கேட்டார்கள். நான் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அதனால், உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் உரிய நேரத்தில் வரும். (குறுக்கீடு) எல்லாவற்றையும் பார்த்து நாங்கள் செய்வோம். (குறுக்கீடு) எல்லாவற்றையும் பார்த்து, நிச்சயம் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: சார், ஒரேயொரு விஷயம், ஏனென்றால், அவை நடக்கும்போது போட்டால்தான் யார், யாரைப் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டு, போட முடியும். நாளை, அவை முடிந்து ஊருக்குப் போய்விட்டோம் என்றால், மதிப்பீட்டுக் குழுவில் யாரைப் போட்டிருக்கிறீர்கள் என்று தேடிக்கொண்டிருக்க முடியாது. அதற்காக ஒரு நாள் அவையைக் கூட்டுவீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் தக்க நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும். உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: சார், எப்போது எடுக்கப்படும்? எனக்குத் தெரிந்தாக வேண்டும். The House must know when are you going to do that.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் எந்த விதியும் இல்லை. கட்டாயம் எல்லாம் இல்லை. உரிய நேரத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ** என்று பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மானியக் கோரிக்கை மீதான விவாதம் முடிந்தபிறகு நடவடிக்கை எடுக்கிறோம். நீங்கள்

** ***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.***

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு உரிய பதிலைச் சொன்னீர்கள். கூடிய விரைவில் அதற்குண்டான அறிவிப்பு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மணி மொழியாய், மாதர்குலம் காக்க வந்த மணிச்சுடராய், வேதங்களில் சொல்லாத வார்த்தையாய், ராகங்களில் கேட்காத இனிமையாய், நிகழ்காலத்தில் வாழும், வருங்காலக் காவியம், ஏழைகளின் ஏணியாய், மீனவர்களின் தோணியாய், மாற்றுத் திறனாளிகளின் மறுவாழ்வாய், மாண்பாய், மரபாய், மரகதமாய், மாணிக்கமாய், மாதர் குல தெய்வமாய், வான வில்லின் வடிவமாய், (மேசையைத் தட்டும் ஒலி) பாசறை கண்ட தாய், பார் போற்றும் பைந்தமிழாய், ஓரறிவு ஜீவனும் உச்சரிக்கும் சொல் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உன்னத மனம் கொண்ட உயிரோவியம், எதிரிகளுக்கு நீங்கள் சிம்ம ஓவியம், தண்ணீரை மீட்டெடுத்து, விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்திட்ட தாயே, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த உயிர்த் துவக்கமே, செந்நீர் சிந்திய தியாகிகளின் மறு வாழ்வே, நிகழ் காலத்தில் உங்களுக்கு எதிரிகள் எவரும் இல்லை. எதிர் காலத்தில் உங்களுக்கு நிகர் எவருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முப்பொழுதும், எப்பொழுதும், எம்மை ஆளும் ஆற்றல் படைத்திட்டவரே, ஆறாம் முறை அரியணை கண்டு, அறவழி நடப்பவரே, நொடிப் பொழுதில் அடி எடுத்து வைக்கும் வீரமே, கடைநிலைத் தொண்டருக்கும் கருணை காட்டும் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பொற்பாதம் பணிந்து, எனது கன்னிப் பேச்சினைத் துவக்குகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடியில் இருக்கும் குப்பனும், சுப்பனும் ஆட்சி அரசியலில்

பங்குபெறவேண்டும் என்று பேசுவார்கள். நடைமுறையில் இதனை எவரும் செயல்படுத்த மாட்டார்கள். ஆனால், சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்திலுள்ள ராமநாயக்கன்பாளையம் என்ற கிராமத்தில் ஓலைக் குடிசையில் ஆதி திராவிட விவசாயக் கூலித் தொழிலாளிகளான மாரி, பெரியம்மாள் ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்த என்னை, ஊராட்சி கிளைக் கழகச் செயலாளராகவும், ஊராட்சிக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்றத் தலைவராகவும், தற்போது ஒன்றியக் கழக அவைத் தலைவராகவும், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒன்றியக் குழுத் தலைவராகவும் கழகத்தில் பல பதவிகளை வழங்கி அழகுபார்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2016 ஆம் ஆண்டு ஆத்தூர் தொகுதிக்கு கழக வேட்பாளராக அறிவித்து, எனக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியை பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழக நிருவாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

இன்று, பொதுத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியம் போன்ற துறைகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டத்தின்வழி ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்திய முப்படைப் பணிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த படை வீரர்கள் வீர, தீரச் செயல் புரிந்து சிறப்பாகப் பணியாற்றியமைக்காக வழங்கப்படும் விருதுக்கு, தற்போது வழங்கப்படும் பணப் பலனை குறைந்தபட்சம் இரண்டரை இலட்சம் ரூபாயிலிருந்து அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரித்து வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பரம்வீர் சக்ரா விருது பெறுவோருக்கு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலும், அசோக் சக்ரா விருது பெறுவோருக்கு

2016 செப்டம்பர் 2] [திரு. ஆர்.எம். சின்னதம்பி]

ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம் வரையிலும், மகாவீர் சக்ரா விருது பெறுவோருக்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சம் வரையிலும், கீர்த்தி சக்ரா விருது பெறுவோருக்கு ரூ.8 இலட்சத்திலிருந்து ரூ.12 இலட்சம் வரையிலும், வீர் சக்ரா விருது பெறுவோருக்கு ரூபாய் ஏழரை இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சம் வரையிலும், சௌரிய சக்ரா விருது பெறுவோருக்கு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சம் வரையிலும் அதிகரித்து வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.11,000/–ஐ ரூ.12,000/– ஆகவும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கான குடும்ப ஓய்வூதியத்தை ரூ.5,500/ லிருந்து ரூ.6,000/–ஆகவும், சுதந்திரப் போராட்ட வாரிசுகளில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக வழங்கப்படும் தொகையை ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை சுமார் 58,553 படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இப்பேரவையில் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் ஐந்தாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பணியிடங்கள் சுமார் 29,529 மட்டுமே.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் இந்த வருடம் ஜூன் மாதத்துடன் நிறைவடைந்தது. அரசு அலுவலர்கள் மற்றும் தகுதி வாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு 1–7–2016 முதல் மேலும் 4 ஆண்டுகளுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2016–ஐச் செயல்படுத்துவதன்மூலம் சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு உச்ச வரம்புத் தொகை ஏழரை இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு திருமண உதவித் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், மருத்துவக் காப்பீட்டுத்

திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் அவர்கள் கண்ணியத்தோடும், பாதுகாப்போடும் வாழ்வதற்கு வழிவகை செய்யும்வகையில், இந்த நிதியாண்டில் ரூ.105.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாகப் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–10

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புதிய காப்பீட்டுத் திட்டத்தில் 654 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், 113 வகையான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகளை கட்டணமின்றி மேற்கொள்வதற்கு வழிவகை செய்துள்ளார்கள். 1–7–2012 முதல் 30–6–2016 வரை 731.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,85,781 பயனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் சீரிய முயற்சிகளில் ஒன்றான சென்னை மெட்ரோ இரயில் போக்குவரத்து மேலும் வலுப்படுத்தப்பட்டு, உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து அமைப்பாக மாற்றப்படுவதன்மூலம் சென்னை நகரம் பொலிவு பெற்று, எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும் வகையில் தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமையப்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழக அரசில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்புக் காலத்தை 6 மாதத்திலிருந்து 9 மாதங்களாக நீட்டித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

2016 செப்டம்பர் 2] [திரு. ஆர்.எம். சின்னதம்பி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தபடி, 1.75 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு, விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர் மற்றும் விலையில்லா மடிக் கணினி, விலையில்லா ஆடு, மாடு, பசுமை வீடுகள் போன்ற நலத் திட்டங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: என்னுடைய ஆத்தூர் தொகுதியில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன். ஒருசில கோரிக்கைகளை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். சேலம் மாவட்டம், ஆத்தூர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள், அந்த கோரிக்கைகளை எல்லாம் எழுதிக் கொடுங்கள். நான் அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன். நன்றி சொல்லி உட்காருங்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, கண்துஞ்சா உழைப்பே, காலத்திற்கு ஏற்ற கடமையே, (மேசையைத் தட்டும் ஒலி) கடவுளின் மறு உருவமே, நான் வணங்கும் திருவுருவமே, எங்களின் குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா. அம்மா என்பதே மந்திரம், அதுவே உலகை வென்றிடும், அம்மா என்பதே வாசம், (மேசையைத் தட்டும் ஒலி) அதுவே உலகின் சுவாசம். தேசியமே, தெய்வீகமே, நாட்டை ஆளத் துடிக்கும் இரக்கமற்ற இதயங்களில் ஈட்டியாய்ப் பாய்ந்து இத்தேசம் காத்திட்டவரே, எங்கள் இதயமே, தங்களின் பொற்கால ஆட்சி ஏழைகளுக்கு ஏற்றம், எதிரிகளுக்கு ஏமாற்றம், இனி தமிழகத்தில் ஏற்படாது ஆட்சி மாற்றம், தங்களது ஆட்சியில்தான் தமிழக முன்னேற்றம். மீண்டும் மீண்டும் தொடரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, மீண்டும் மீண்டும் தொடரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சமர்ப்பித்து, 100 நாட்களில் நூற்றாண்டு சாதனைகளைப் படைத்து நல்லாட்சி செய்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உள்ளாட்சித் தேர்தலிலும் 100 சதவிகித வெற்றிதான் என்று கூறி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். இந்த மாமன்றத்தில்

என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை நான் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளுமாறு தங்களை மிக்க பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

சேலம் மாவட்டம் ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்றையும், விவசாயிகள் நிறைந்து காணப்படும் ஆத்தூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி உள்ளிட்ட வட்டங்களுக்கு தலைமையிடமாக இருக்கும் ஆத்தூரில் வேளாண்மை கல்லூரி ஒன்றையும், ஆத்தூர் தொகுதியை மையமாகக் கொண்டு அரசு தொழிற்பயிற்சி நிறுவனம், ITI ஒன்றையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் அரசு பொது மருத்துவமனையில் எலும்பு முறிவு அறுவை சிகிக்சைப் பிரிவு ஒன்றையும், ஆத்தூரிலிருந்து தினசரி திருப்பதிக்கு கள்ளக்குறிச்சி வழியாக பஸ் வசதியும், ஆத்தூர் தொகுதியில் அனைத்து ஏரி, குளம், கண்மாய்களில் உள்ள சீம கருவேல மரங்களை அகற்றித் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் தொகுதியில் ஏத்தாப்பூர் பேரூராட்சியில் ஆமணக்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் அரசு எடைமேடை ஒன்றையும், கல்வராயன்மலையில் உள்ள மண்ணூர், ஆவாரை ஆகிய மலைக் கிராமங்களுக்கு மின்சார வசதியையும் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள அரசு தொழுநோய் நோயாளிகளுக்கான குடியிருப்புப் பகுதியில் காலியாக உள்ள 5 ஏக்கர் நிலத்தில் தாலுகா அளவில் அரசு மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தரும்படியும், சுமார் 15,000 மக்கள் தொகை கொண்ட ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தரும்படியும், நாள் ஒன்றுக்கு சுமார் 8,000 லிட்டர் பால் உற்பத்தி ஆகும் இந்த கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் நகரத்திற்கென தனியாக காவல் நிலையம் ஒன்றையும், ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஒன்றியம், இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் கல்லாறு நீர்த்தேக்கம் ஒன்றையும் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் சின்ன காலனியில் நிலமற்ற 100 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு நில குடியேற்ற சங்கத்தின் சார்பாக 1960 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட விவசாய நிலத்திற்கு பட்டா வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையம், பெரியகல்வராயன்மலை, கீழ்நாடு ஊராட்சியில் 1,000 அடி உயரத்திலிருந்து விழும் நாகலூர் நீர்வீழ்ச்சியை சுற்றுலாத்தலமாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையம், மலைவாழ் மக்கள் பயன்பாட்டிற்காக நாகலூர் முதல் இராமநாயக்கன்பாளையம் அய்யங்காடு வரை உள்ள 5 கி.மீ. நீளச் சாலையை தார்ச் சாலையாக அகலப்படுத்தி சீரமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய கல்வராயன்மலை மேல்நாடு ஊராட்சி, கலக்கம்பாடி கிராம மக்கள் பயன்பாட்டிற்காக கலக்கம்பாடி முதல் பாப்பநாயக்கன்பட்டி வரை உள்ள 1.950 கி.மீ. மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ்குமார் அவர்கள், 5 நிமிடத்தில் முடிக்கவும். (குறுக்கீடு) சொல்லுங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. செ. ராஜேஷ் குமார், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். மைக்கை கொடுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் நான் கேட்ட கேள்வியையே மறுபடியும் கேட்கிறேன். தங்களிடத்தில் assurance எதிர்பார்க்கிறேன். ஏனென்றால், புதிய குழு அமைக்கவில்லை என்றால் பழைய குழுவே நீடிக்கும் என்று இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு, நான் உங்களுக்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: நீங்கள் நிச்சயமாக, உறுதியாக, திடமாக, இந்த ஆண்டு இந்தக் குழுவையெல்லாம் அமைப்பீர்களா என்ற உறுதியை தங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்கள் அனைவரையும் பேசச் சொல்லிவிட்டேன். எதிர்கட்சித் தலைவர் கேட்டதற்கும் பதில் சொல்லிவிட்டேன். இன்று காலையில் நீங்கள் கேட்டதற்கும் பதில் சொல்லிவிட்டேன். நீங்கள் தேவையில்லாமல் இதுகுறித்துப் பேசவேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) பேரவை முன்னவரும், நானும், உங்களுக்கு பதில் சொல்லிவிட்டோம். உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உரிய நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும். அமருங்கள். (குறுக்கீடுகள்) அமருங்கள். அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள், பேசுங்கள்.

முற்பகல் 11–15

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இன்றைக்கு நடைபெறுகின்ற 7 துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியினுடைய கோரிக்கைகளை அரசு கவனமாக எடுத்துக் கொண்டு, செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினை ஒன்று. 2004 ஆம் ஆண்டிலே சுனாமி ஏற்பட்டபோது 42 கடலோர மீனவ கிராமங்களிலும், 2006 ஆம் ஆண்டில் தொடங்கி, விளாத்துறையிலிருந்து அஞ்சுகிராமம் வரை செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சுனாமி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ரோட்டினுடைய நடுவிலே பதிக்கப்பட்ட குழாய்கள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றன. இந்தக் குழாய்கள் பழுதடைந்த காரணத்தினால் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களின் வாயிலாக அங்கே அந்தச் சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தச் சாலைகளில், இன்றைக்கு pressure மூலமாக தண்ணீர் வெளியே பாய்ச்சப்பட்டு, அந்தச் சாலைகளெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஆக, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு பல்வேறு மனுக்கள் கொடுக்கப்பட்ட நிலையிலும் இன்றைக்கு அந்தக் குழாய்கள் சரி செய்யப்படாமல் உள்ளன. அந்தக் குழாய்களை சரி செய்வதன் மூலமாகத்தான் அந்தச் சாலையும் சரியாக இருக்கும். ஆக, அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள், அந்தச் சாலையை சீரமைத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், அங்கே பதிக்கின்ற அந்தக் குழாய்களையும் சீரமைத்துத் தர வேண்டுமென்று

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் பேருந்து வசதிகள் இல்லாத நிலையில் உள்ளன. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் சிற்றுந்துகள் இயக்கப்படுவதுபோல, எங்களுடைய மாவட்டத்திலுள்ள கிராமங்களிலும் மக்கள் பயன்படுத்துவதற்கு சிற்றுந்துகளை இயக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கருங்கல் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தீயணைப்பு நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிள்ளியூர் தொகுதி, புதுக்கடை துணை மின் நிலையத்திற்குட்பட்ட கொல்லங்கோடு, சிலுவைபுரம், கோரங்கோடு, கல்லுத்துறை, வலியவளை விராலி, நம்பாளி ஆகிய பகுதிகளில் சுமார் 50 வருடத்திற்கு முன்பு போடப்பட்ட மின் கம்பங்கள் மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றவகையிலே அவை இருக்கின்ற காரணத்தினால், உடனே அந்த மின் கம்பங்களையும், மின் கோபுரத்தையும் மாற்றி, சாலையின் ஓரமாகப் போட வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் ஆளுகைக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் பயன்படுத்தப்படுகின்ற தண்ணீர் செம்மண் கலந்து வருகின்ற நிலையில், அந்தத் தண்ணீரை சுத்திகரித்து, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் பயன்படுத்துகின்றவிதத்தில் கிடைக்கச் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடியிருப்புப் பகுதிக்குள் வருகின்ற இரண்டு சாலைகளும் மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. அந்தச் சாலைகளைச் செப்பனிட்டு, சாலையின் இருபுறங்களிலும் இருக்கின்ற மண்ணையும், முட்புதர்களையும் அகற்றித் தந்து, இரவு நேரங்களில் வெளிச்சம் இல்லாமல் இருப்பதால், வெளிச்சம் ஏற்படுத்துவதற்கு மின் விளக்குகளை அமைத்துத் தர வேண்டுமெனவும் தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில், வேலை சம்பந்தமான பணிகளுக்காக, அனைத்து தொகுதி

மக்களும் அதிக எண்ணிக்கையில் தினந்தோறும் வந்து செல்கின்றார்கள். இந்த மக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பயன்படுத்தும்வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் தற்போது பயன்பாட்டிலுள்ள உணவகத்தை தரம் உயர்த்தி, எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய அளவில் சுத்தமாகவும், முழுநேரமும் கிடைப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்திற்குள்ளும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நாய்களின் தொல்லை மிகவும் அதிகமாக இருப்பதால், அவற்றை அப்புறப்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெறும்வகையில் நடைப் பயிற்சி மேற்கொள்வதற்கு விடுதி அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தை சீரமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அதிகமாகப் பயன்படும் வகையில், மற்ற மாநிலங்களில் நிதி ஒதுக்கப்படுவதுபோல, தற்போது வழங்கப்படுகின்ற 2 கோடி ரூபாயை உயர்த்தித் தந்து, மக்களுக்கு பிரயோஜனமாக அதைச் செய்து உதவிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசினால் உதவி பெறுகின்ற பள்ளிகள், கல்லூரிகள் அதிக அளவில் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய நலனுக்காகவும், மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்காகவும் அரசு அதிகாரிகளை அணுகும்போது,

ஒருதலைப்பட்சமாகச் செயல்படாமல், எங்களுடைய கருத்துகளையும் உள்வாங்கி, நியாயமான முறையில் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக புதிதாக தங்கும் விடுதி 10 மாடிகளில் கட்டும் வேலை முடியும் தருவாயில் உள்ளது. இதற்கு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் வாயிலாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நாய்கள் தொல்லை இருப்பதாக இங்கே ஒரு கருத்தைப் பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் நாய்கள் சுற்றித் திரிவதைத் தடுக்கும்பொருட்டு, சென்னை மாநகராட்சியின்மூலம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுதொடர்பாக சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளர் அவர்களுடன், சென்னை மாநகராட்சியின் மருத்துவ அலுவலர், கால்நடை மருத்துவ அலுவலர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்கள் கலந்துகொண்ட ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் நாய்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும், சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறும் நாட்களில் குடியிருப்பு வளாகத்தில் நாய் பிடிக்கும் வண்டி ஒன்று நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்றும் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, குடியிருப்பு வளாகத்தில் காலை 10–00 மணி முதல் நண்பகல் 12–00 மணி வரையிலும், பிற்பகல் 2–00 மணி முதல் மாலை 5–00 மணி வரையிலும் நாய் பிடிக்கும் வண்டி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டு, அதன்மூலம் நாய்கள் அப்புறப்படுத்தப்படுவதோடு, அவற்றுக்கு கருத்தடையும் செய்யப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகள்மூலம் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் நாய்களின் நடமாட்டம் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், கொஞ்சம் இருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாய்களைப் பற்றி சபையிலே பேசியது, பரவாயில்லை. ஆனால், மாண்புமிகு முன்னவர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். நீங்கள் அதைப் பிடித்துக் கொண்டுபோய் கருத்தடை செய்வதெல்லாம் இருக்கிறதே! இது மேனகா காந்தி அவர்களுக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? (சிரிப்பு) (குறுக்கீடு)

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் விலங்குகளுடைய, பிராணிகளுடைய வதையைத்தான் கடுமையாக எதிர்க்கின்றார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதெல்லாம் இல்லை. (சிரிப்பு) கருத்தடையை எல்லாம் எதிர்ப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் வேண்டாம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: இது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுதான். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ராஜேஷ் குமார், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.12,000/– வழங்குகிறீர்கள். இன்றைய பொருளாதார சூழ்நிலையில் இது மிகவும் குறைந்த தொகை. பாண்டிச்சேரி, மேகாலயா, உத்தரப் பிரதேசம், கேரளா, மஹாராஷ்டிரா, ஹரியானா போன்ற மாநிலங்களில் ரூ.25,000/–க்கும் மேல் ஓய்வூதியம்

வழங்கப்படுகிறது. அதேபோல, நம்முடைய மாநிலத்திலும் வழங்க வழிவகை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வழங்குகின்ற மருத்துவப் படியையும் உயர்த்திக் கொடுக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேஷ் குமார், உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நீண்டகாலமாக வழங்கப்படாமல் இருக்கும் ஒப்படைப்புத் தொகை, வருவாய் வைப்பு நிதி, பணிக்கொடை, விருப்ப விடுப்பு ஊதியம் போன்றவற்றை உடனடியாக வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசால் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக தேங்காய் கொப்பரை உற்பத்தி செய்பவர்கள், தென்னை ஓலை முடைபவர்கள், பனை ஓலை வைத்து, கடவம், பெட்டி, அழகு சாதனப் பொருட்கள் போன்ற தொழில்களைச் செய்பவர்கள் ஆகியோருக்கு ரூ.10,000/– முதல் அதிகபட்சமாக ரூ.50,000/– வரை மத்திய காலக் கடன் கொடுக்கப்பட்டது. மக்கள் நலன் கருதி, தமிழக அரசு கடன் தொகையை தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால், கருங்கல் உழவர் பணி கூட்டுறவு வங்கி, கீழ்குளம், ஐரேனிபுரம், பாகோடு பகுதிகளில் உள்ள விவசாயிகளை இன்னும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, அவர்களையும், அரசு கணக்கில் எடுத்துக்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சில தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன்களான, மத்திய காலக் கடன், பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் போன்றவை தள்ளுபடி செய்யப்பட்டதில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சில பகுதிகளிலுள்ள விவசாயிகளை

கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறார். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் இதற்காக சிறப்பான வழிகாட்டுதல்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். மேற்படி சங்கங்களில் misappropriation ஏற்கெனவே நடந்திருந்து, பிரிவு 81–ன்கீழ் enquiry போடப்பட்டு, தவறு நடந்திருக்கும் பட்சத்தில், அப்படிப்பட்ட சங்கங்களில்தான் பயிர்க் கடன் தள்ளுபடி வழங்குவது நிலுவையில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு தக்க விசாரணைக்குப்பின் உரிய தீர்வு கண்டபின், உரிய காலம் வந்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்படும். அந்தக் கடன்கள், முறையாகத் தள்ளுபடி செய்யப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆஸ்டின், தேவையில்லாமல் Point of order கேட்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பும் மற்றொரு விஷயம் என்னவென்றால், இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். இந்தியாவில் இதுவரை எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும், கடன் தள்ளுபடி செய்யப்பட்ட பயனாளிகளினுடைய தகவல்களை இணையதளத்தில் வெளியிட்டதாக வரலாறு இல்லை. அந்த வரலாற்றைப் படைத்த முதல் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சம்பந்தப்பட்ட பயனாளிகள் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலிருந்து தாங்கள் வாங்கிய கடனில் எவ்வளவு தொகை விடுவிக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு தொகை கிடைத்திருக்கிறது என்பது குறித்த விவரங்களை, ஒவ்வொருவரும், இணையதள வசதியிருக்கும் பட்சத்தில், கூட்டுறவு இணையதள முகவரியைப் பெற்று பார்த்துக்கொள்ளலாம், அவர்களுடைய கைபேசியில்கூட பார்த்துக்கொள்ளலாம். இன்றைக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்காக இணையதளம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக அதுகுறித்த தகவல்களை அறியலாம். அவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் கூட இது தெரியும் அதில் ஏதாவது குறைபாடு இருக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மண்டல இணைப் பதிவாளரிடத்திலும், சரக துணைப் பதிவாளரிடத்திலும் பாதிக்கப்பட்டவர்கள்

முறையிடலாம். வருகிற 10 ஆம் தேதி வரை அவர்கள் மனு செய்துகொள்ளலாம். அந்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டவுடன், உரியவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்படாமலிருந்தால், அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்த அற்புதமான வாய்ப்பை 16–9–2016 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் நல்கியிருக்கிறார்கள். இதுபோன்ற ஒரு திட்டம் இதுவரையில் இல்லை. இந்தியாவில் எந்த ஒரு மாநில முதலமைச்சரும் செய்யாத ஒரு திட்டத்தை, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்காகவே, அவர்களுடைய நலன் கருதி, அவர்களுடைய மேம்பாட்டுக்காக, இத்திட்டத்தைச் செயல்படுத்தி, பயிர்க் கடனை முழுமையாக இரத்து செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆஸ்டின் அவர்கள்கூட இங்கே ஒரு கருத்தை வற்புறுத்தியுள்ளார்கள், அவருடைய பகுதியிலே பட்டா இல்லாதவர்களுக்கு வழங்க வேண்டுமென்று. அவர்களுக்கு தனியாக ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் இந்தத் திட்டத்தில் முழுமையாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பதிலை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: அவ்வளவுதான், முடித்துவிட்டேன். அவர்களும் அதுகுறித்து கேட்க வேண்டியதில்லை. அவர்களுக்கு உரியனவற்றை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே செய்துவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக அரசாணையை தனியாகப் பிறப்பித்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட 79 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். இத்திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு 8.50 எம்.எல்.டி. குடிநீர் பெறப்பட்டு, 4 பேரூராட்சிகளுக்கு 70 லிட்டர் வீதமும், 4 குடியிருப்புகளுக்கு 40 லிட்டர் வீதமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால், அவ்வப்போது குழாய்களில் ஏற்படும் சிறு, சிறு கசிவுகள் உடனடியாக சரிசெய்யப்பட்டு, குடிநீர் தடையின்றி

வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பழுதடைந்த குழாய்களைச் சீரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.26 இலட்சம் நிதியை ஒதுக்கியுள்ளார்கள். மேலும், உடனடியாக அந்தப் பணியைத் துவங்க ஆணையிட்டுள்ளார்கள். எனவே, அது உடனடியாக சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாலைகளையும் உடனடியாக சரிசெய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக வழங்கப்படுகிறது. மின் கம்பங்களை மாற்றுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். மின் கம்பங்கள் சாலையோரங்களில் இருக்கின்றன. மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் சாலைகள் அமைக்கப்படும்போது மின் கம்பங்கள் ஓரமாகத்தான் அமைக்கப்படுகின்றன. ஆனால், சாலைகளை அகலப்படுத்தும்போது, அந்த மின் கம்பங்கள் சற்று உள்ளே வந்துவிடுகின்றன. நகராட்சிகள், பேரூராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் மின் கம்பத்தை அகற்றுவதற்கு E.B.–க்கு பணம் கட்டவேண்டியதில்லை. ஆனால், தனிப்பட்ட நபராக இருந்தால், E.B. Estimate கேட்டதும் அவர் பணம் செலுத்த வேண்டும். எங்கே சாலையை அகலப்படுத்த வேண்டுமோ, அங்கே உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க சரிசெய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–30

மாண்புமிகு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது 50 ஏக்கர் நிலம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்டதாகக் கூறினார்கள். (குறுக்கீடு) நான் மற்றவற்றிற்கெல்லாம் பதில் சொன்னேன். 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் 105 இலட்சம் ரூபாய் மதிப்பில் வண்டலூருக்கு அருகில் வேங்கடமங்கலம் கிராமத்தில் 50 ஏக்கர் வாங்கப்பட்டது. இவர்களுடைய ஆட்சியில் 19–6–2008 இல், ரூ.44.21 கோடிக்கு Central Sanctioning Monitoring Committee–ல் அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். அதற்குப் பின்னர்கூட 15–10–2012 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த காலத்தில்தான் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டுள்ளது

TRUTH ALONE TRIUMPHS

என்பதை புள்ளிவிவரத்துடன் நான் சொல்கிறேன். அதற்குப் பின்னர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது 99 கோடி ரூபாய்க்கு 18–1–2013 இல் ஒப்பந்தம் கோரப்பட்டு, 29–4–2013 அன்று பணி துவங்கப்பட்டது. இன்று எங்கேயும் இல்லாத அளவுக்கு, முதல் முறையாக, Refuse–derived fuel, *திடக்கழிவிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தையும் கொண்டுவர மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிலம் வாங்கப்பட்டதும், திட்டம் துவங்கப்பட்டதும் மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், பேசி முடியுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் குறைந்தது இரண்டு யூனியனாவது இருக்கிறது. ஒவ்வொரு யூனியனிலும் அந்தத் தலைவருக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், பேசி முடியுங்கள். அவையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள். இன்று நேரம் குறைவாக இருக்கிறது. உரையை முடியுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு யூனியனிலும் தலைவருக்கு அரசு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வாகனம் இல்லாமல் இருந்தால்கூட,* zero percentage–*ல்* interest *இல்லாமல், வாகனங்கள் வாங்க கடன் தருவதற்கு நீங்கள் வங்கிமூலம் ஏற்பாடு செய்துதருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–வது சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் பொதுத் துறை மற்றும் பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, என் உரையினைத் தொடங்குகிறேன். அம்மா மூன்று எழுத்து, தமிழ் மூன்று எழுத்து, அன்னை மூன்று எழுத்து, அண்ணா மூன்று எழுத்து, எம்.ஜி.ஆர். மூன்று எழுத்து, அன்பு மூன்று எழுத்து, அறிவு மூன்று எழுத்து, துணிவு மூன்று எழுத்து, பணிவு மூன்று எழுத்து, பாசம் மூன்று எழுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) பண்பு மூன்று எழுத்து, வீரம் மூன்று எழுத்து, ஈ.வே.ரா. மூன்று எழுத்து, ஈரோடு மூன்று எழுத்து (மேசையைத் தட்டும் ஒலி) எம்.எல்.ஏ. மூன்று எழுத்து, அம்மா நீங்கள் கொடுத்த பதவி மூன்று எழுத்து, நீங்கள் வாங்கித் தந்த வெற்றி மூன்று எழுத்து, நான் எப்போதும் உங்கள்மீது வைத்திருக்கும் நன்றி மூன்று எழுத்து, சிவன் மூன்று எழுத்து, சக்தி மூன்று எழுத்து, இத்தனைக்கும் மேலான நான் வணங்கும் தெய்வம் அம்மா அம்மா அம்மா மூன்று எழுத்து. உலகத்துத் தமிழர்கள் உளமாரக் கொண்டாடும் ஒப்பில்லா நேசம், ஒன்றரைக் கோடி தொண்டருக்கோ உணர்வான உயிரான சுவாசம் எங்கள் அம்மா. என் வாழ்வு எல்லாம் மக்களுக்கு என்பதால், எத்திசையும் புகழ் மணக்க எங்கும் ஒளி வீசும் எம் தாயே! தமக்காக வாழாத தாயுருவப் போராளியே, ஏழைக்கு இரக்கம் காட்டும் எங்கள் தாயே! சங்கத் தமிழ் பூமிக்கு சந்தியா தாய் தந்திட்ட ஞான பெட்டகமே, வெற்றிகளின் வித்தகமே! வேதா நிலையத்து விவேகத்து புத்தகமே, சாதனைகள் பல குவிக்கும் சத்தியமே! கலை உலக காவலரே, கன்னித் தமிழ் பாவலரே! செந்தமிழ் பூங்காற்றே, சிந்தனையின் தேனூற்றே, இனிவரும் உள்ளாட்சியிலும் நம் அம்மாவின் நல்லாட்சி, இது சாத்தியமே, சத்தியமே, இது நிச்சயமே என்று கூறுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஓ.கே. சின்னராஜ்) தலைமை)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மாநகர் மக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையான ஊராட்சி கோட்டை குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 484 கோடியே 45 இலட்சம் தொகையினை ஒதுக்கீடு செய்து, அதை இந்த மாமன்றத்தில் விதி 110–ன்கீழ் அறிவித்து, ஈரோடு மக்களின்

2016 செப்டம்பர் 2] [திரு. கே.எஸ். தென்னரசு]

தாகம் தீர்க்க ஜீவநதியாய் வந்த தாயே! தங்களின் பொற்பாதம் தொட்டு, பணிவான நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–35

20 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவலுடன்கூடிய மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ஒன்று 62 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என அறிவித்த எங்களது அன்னைக்கு, கோடானு கோடி நன்றியை பொற்பாதம் தொட்டு வணங்கி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு உள்நோயாளிகளுடன் வரும் உதவியாளர்களுக்கு ரூ.25 இலட்சத்தில் ஓய்வு விடுதி அமைத்துக் கொடுக்க ஆணையிட்ட அம்மாவின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி,
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி
பொன்னான உலகென்று பெயருமிட்டால்
இந்த பூமி சிரிக்கும் அந்த சாமி சிரிக்கும்”

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கேற்ப, அண்ணாந்து பார்க்கின்ற அளவிற்கு தரமான 9 அடுக்குமாடி வீடுகள் கட்டி, அதற்கு நவீன மின்தூக்கி வசதியும் செய்து கொடுத்த அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக ஈரோடு, பெரிய அக்ரஹாரம் பகுதி, அன்னை சத்தியாநகரில் 441 வீடுகளும், ஈரோடு, பெரியார் நகரில் 440 வீடுகளும், ஈரோடு, புதுமை காலனியில் 400 வீடுகளும், ஈரோடு, கருங்கல்பாளையம், அழகரசன் நகரில் 172 வீடுகளும் என மொத்தம் 140 கோடி ரூபாய் செலவில், 400 சதுர அடி பரப்பளவு கொண்ட தரமான வீடுகளை உருவாக்கித் தரவிருக்கின்ற ஏழைகளின் ஏந்தல், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றிகளை சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, CNC கல்லூரியில் மொத்தம் 1,320 மாணவர்கள் பயின்று வருகின்றனர். கல்லூரியின் மொத்த பரப்பளவு 52 ஏக்கர். அந்தக் கல்லூரி,

தற்போது அரசு உதவிபெறும் கல்லூரியாக உள்ளது. அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிக்க வேண்டுமென்று அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். இது, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில், மருத்துவமனைகளுக்காக நேற்றையதினம்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் 1,438 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் 608 உள்நோயாளிகளும், 2,100–க்கும் மேற்பட்ட வெளி நோயாளிகளும் நாள்தோறும் வந்து செல்கின்றார்கள். மகப்பேறு மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்படுகிறது. மாதந்தோறும் 200–க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்கின்றன. ஈரோடு மாநகராட்சியில் 5 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். அதன் சுற்றுவட்டாரத்திலிருந்து 5 இலட்சம் மக்கள் அந்த மருத்துவமனைக்கு வந்து செல்கின்றனர். ஆகமொத்தம் 10 இலட்சம் மக்கள் இந்த மருத்துவமனையைப் பயன்படுத்துவதால், சுமார் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையினை Super Speciality Hospital ஆக தரமுயர்த்தித் தருமாறு தாயின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

அதேபோல, ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் எய்ம்ஸ் மருத்துவமனை வருவதாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால், உடனடியாக அதனைக் கொண்டு வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு–சக்தி சாலை, ஈரோடு-சத்தியமங்கலம் சாலை மற்றும் ஈரோடு–பவானி சாலை ஆகிய சாலைகள் மிகவும் நெருக்கடியாக இருப்பதால், அந்தச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஈரோடு இரயில்வே நிலையத்தின் அருகில், காளைமாட்டுச் சிலை பகுதியில் ஒரு மேம்பாலமும், வெண்டியபாளையம் பகுதியில் இரயில் பாதையைக் கடக்கும் விதமாக ஒரு மேம்பாலமும் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் தங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வேண்டி, வணங்கி கேட்டுக்கொள்கிறேன் தாயே!

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரலாற்றிலேயே முதல்முறையாக* Group–IV *தேர்வுக்கு 17.06 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பெற்று, 14.12 இலட்சம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அளித்த ஒரே அரசு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கணினிமயமாக்கப்பட்டதன் விளைவாக, அனைத்துத் தேர்வுகளும் நேர்மையாகவும், மிகச் சிறப்பாகவும் நடைபெற்றது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11–40

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆக, இந்த ஒட்டுமொத்த மானியக் கோரிக்கைகள்மீது நடைபெறக்கூடிய இந்த விவாதத்திலே பங்கேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையிலே, என்னுடைய கருத்துகளை இந்த அவையிலே எடுத்து வைக்க அனுமதி தந்திருக்கக்கூடிய தங்களுக்கு முதலில் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.*

கடந்த 25–7–2016 அன்று இந்த அவையிலே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இன்று வரை, விடுமுறைகளைத் தவிர்த்து, 22 நாட்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்று, வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆளுங்கட்சியின்

சார்பிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதேபோல ஆளுங்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அதேபோல், எதிர்க்கட்சியின் சார்பில் நான், எங்களது எதிர்க்கட்சியின் மாண்புமிகு துணைத் தலைவர் மற்றும் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியிருக்கிறோம். அனைவருக்கும் வாய்ப்பு கிடைத்த நேரத்திலெல்லாம், மக்களுடைய பிரச்சினைகளை, சில முக்கிய நிகழ்வுகளை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆளுங்கட்சியினருக்கு அதிகம் வாய்ப்பு கிடைப்பது என்பது இயல்புதான். ஆனால், அதேசமயத்தில் எதிர்க்கட்சியினருக்குரிய வாய்ப்பும் கொடுக்கப்படுவதும் பொதுவாக இந்த மன்றத்தின் மரபாக இருந்துவருகிறது. அதுமாதிரியான வாய்ப்பு கிடைக்காத நேரங்களில், சில பிரச்சினைகள் வந்திருக்கலாம். ஏன்? வெளிநடப்புகூட நாங்கள் செய்திருக்கலாம். அதையும் கடந்து, சில நேரங்களில் காரசார விவாதங்கள்கூட நடைபெற்றிருக்கலாம். ஆனால், நாம் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நாம் அனைவருமே மக்களுடைய பிரச்சினைகளுக்காகவே அப்படிப் பேசிக்கொள்கிறோம். தனிப்பட்ட விவாதங்கள் அடிப்படையில் நிச்சயமாகக் கிடையாது, அது இருக்கவும் கூடாது என்பது என்னுடைய உணர்வு மட்டுமல்ல, இங்கிருக்கக்கூடிய அனைவருடைய உணர்வாக இருந்திட முடியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முயன்றவரை ஆளுங்கட்சியினர் எடுத்துக்கொண்ட நேரத்தையும் தாண்டி, எங்களுக்கு நேரம் தர முயற்சிக்கிறார். குறுக்கீடுகள் செய்வது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குரிய புள்ளி விவரங்களை என்னுடைய உரையில் சொல்கிறேன், அப்போது நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறு என்று சொல்லவில்லை. குறுக்கீடுகள் செய்வது, ஆளுங்கட்சியினுடைய வழக்கம் என்று சொன்னாலும், எங்களால் இயன்றவரை, பல்வேறு பிரச்சினைகளை நாங்கள் எடுத்து வைத்திருக்கிறோம். அந்த திருப்தி ஓரளவிற்கு எங்களுக்கு இருக்கிறது. நான் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனாலும், எதிர்க்கட்சியான எங்களுக்கு இன்னும் அதிக வாய்ப்பு தந்திருந்தால், அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருந்தால், அது அரசினுடைய நிருவாகத்திற்குப்

பயன்பட்டிருக்குமே என்றுதான் நாங்கள் எண்ணுகிறோம். நாம் மக்களுடைய பிரதிநிதிகள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கக்கூடியவர்கள். இந்த மன்றத்தில் நாங்கள் கோரிக்கை எழுப்பி, அதை நிறைவேற்றித் தருவதற்கு நீங்கள் இருக்கிறீர்கள். அதனால் பயன்படப்போவது உங்களுக்கும், எங்களுக்கும் வாக்களித்திருக்கக்கூடிய மக்கள்தான். அதை நீங்களும் அறிவீர்கள், நாங்களும் அறிவோம்.

இந்தக் கூட்டத் தொடர் எப்படி அமைந்திருந்தாலும், அடுத்தடுத்து நடைபெறக்கூடிய கூட்டத் தொடரிலே அதிக எண்ணிக்கையிலுள்ள எங்களைப் போன்ற எதிர்க்கட்சிக்கு இன்னும் அதிக நேரம் பேசக்கூடிய வாய்ப்பை நீங்கள் வழங்கிட வேண்டுமென்று நான் பெருந்தன்மையோடு, உரிமையோடு உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

'தமிழக சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள்போல செயல்பட்ட காலம் இந்த சபாநாயகருடைய காலம்' என்று வருங்காலத் தலைமுறை சொல்ல வேண்டும். அதுபோன்ற ஓர் உறுதிமொழியை நாங்கள் எடுத்துக்கொண்ட காரணத்தால்தான், எத்தனையோ காரசார விவாதங்கள் நடைபெற்றபோதும், எங்களுடைய உணர்வினை அவ்வப்போது வெளிப்படுத்துவதற்காக வெளிநடப்பு செய்து, அதைப் பதிவு செய்துவிட்டு, அதற்குப் பிறகு உடனடியாக இந்த அவைக்குத் திரும்பி, விவாதத்திலே தொடர்ந்து பங்கேற்று வருகிறோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நன்றாக அறிந்திருப்பார் என்று நான் நம்புகிறேன். இந்தக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த ஒரு தீர்மானம். சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய பெயரை மாற்றி 'தமிழ்நாடு உயர் நீதிமன்றம்' என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் பேசிய எங்களுடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அதை வரவேற்றுப் பேசியது இந்த நாட்டிற்கே நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, 'வரம் கொடுக்கும் தெய்வமாக ஆளும் கட்சியோ, தவம் கிடக்கும் பக்தனாக எதிர்க் கட்சியோ' என்று இல்லாமல், மாநிலத்தின் பிரச்சினைகளுக்காக இரு கட்சிகளுமே இணைந்து போராட தயாராக இருக்க வேண்டும் என்பதுதான்

முக்கியம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

அடுத்து, இந்த அவையில் சபாநாயகர் எப்படி முக்கியமாக இருக்கின்றாரோ, அதேபோல இந்த அவைக்கு ஆளுநரும் முக்கியமாக இருக்கிறார். அரசியல் சட்டப்படி ஆளுநரை உள்ளடக்கியதுதான் சட்டமன்றம். இது அனைவருக்கும் தெரியும். இதனை அரசியல் சட்டப் பிரிவு 168 மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்த அவையைக் கூட்டும் அதிகாரம் ஆளுநரிடம்தான் இருக்கிறது. 23–வது கவர்னராக இருந்த மேதகு ஆளுநர் திரு. ரோசய்யா அவர்களின் பதவிக் காலம் சென்ற மாதத்தோடு நிறைவுபெற்றிருக்கிறது. ஆளுநர் நியமனத்தில் மாநில அரசினுடைய கருத்தைக் கேட்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உரையாற்றி வருகின்றார்கள், அந்த உணர்வோடுதான் இருக்கின்றார்கள். அதேபோல, மாநில உரிமை என்ற வகையிலும், முதலமைச்சர் உரிமை என்ற வகையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இதிலே ஒன்றுபட்ட கருத்துதான். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டுச் சொன்னார்கள். 'ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையா' என்று திராவிட முன்னேற்றக் கழகம் முழக்கமிட்டிருந்தாலும், ஆளுநர் பதவி நீடிக்கும் வரை அந்தப் பதவிக்குரிய மரியாதையை, மாண்பைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் உறுதியாக இருக்கிறது. எனவே, ஆளுநர் நியமனத்தில் முதலமைச்சருடைய கருத்தை மத்திய அரசு கேட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

முதலில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. 2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தாக்கல் செய்து, அதன்மீது விவாதம் நடைபெற்று, அதற்குப் பின்னர் நிறைவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றி, நிறைவாக 14 அறிவிப்புகளை அவர்கள் இங்கே வெளியிட்டார்கள். அதிலே 4–வது அறிவிப்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதாவது, பொள்ளாச்சி, திருவண்ணாமலை, அரியலூர், கடலூர் ஆகிய 4 நகராட்சிகளுக்கும், தஞ்சாவூர் மாநகராட்சிக்கும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

2016 செப்டம்பர் 2] [திரு. மு.க. ஸ்டாலின்]

அலுவலகக் கட்டடங்கள், புதியதாகக் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். இதிலே நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது, திருவண்ணாமலை நகராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் 150 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட, 13–12–2013 அன்றே டெண்டர் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்காக திருவண்ணாமலை நகர மன்றத்தில், 8–1–2016 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையருடைய ந.க.எண் இ1/2132/2013, நாள் 13–1–2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 50 சதவிகித கட்டடப் பணி நடைபெற்றுள்ளது. ஒப்பந்தப்படி ஒரு வருடத்தில் முடிக்க வேண்டிய அந்தப் பணி 2 வருடமாகியும், இதுவரை நடைபெறவில்லை. 50 சதவிகிதப் பணிகள் முடிந்த நகராட்சிக் கட்டடத்திற்கு, இந்த ஆண்டு புதிய அறிவிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி வெளியிட்டார் என்பது வியப்பிலும் வியப்பாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஓ.கே. சின்னராஜ்) தலைமை)

இன்றைக்கு மனித உரிமைகள் குறித்து உலகெங்கும் பேசப்படுகிறது, போற்றப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மாநில மனித உரிமைகள் ஆணையம் 17–4–1997–ல் உருவாக்கப்பட்டது. சேலம் சிறைச்சாலையில் சமூக ஆர்வலர், திரு. பியூஷ் மனுஷ் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார். ஆங்காங்கே மாநிலத்தில் பல்வேறு மனித உரிமை மீறல்கள், புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. சென்னை கூர்நோக்கு இல்லத்திலிருந்து 33 பேர் தப்பிச் சென்றது குறித்து தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. சென்னையில், பள்ளிகளுக்கு அருகில் போதை சாக்லேட்டுகள் விற்பனை குறித்தும் தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. உள்ளாடைகளைத் துவைக்க மறுத்த ஊழியரைப் பதவி நீக்கம் செய்தது குறித்தும் மாநில மனித உரிமைகள் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. ஆந்திராவில் 20 அப்பாவித் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்தும் மாநில மனித உரிமை ஆணையம் தாமாகவே முன்வந்து நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 செப்டம்பர் 2 முற்பகல் 11–50

மனித உரிமை மீறல்கள் நடைபெற்றால், அது முதிர்ச்சி அடைந்த ஜனநாயகத்திற்கு அறிகுறியாகத் தெரியாது. எனவே, மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்திட அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, 1–4–2007 முதல் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கக்கூடியவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இலங்கை அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி, மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சார்ந்த திரு. இரவீந்திரன் என்பவர் இலங்கை அகதிகள் முகாம் மின்கோபுரத்திலிருந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. எனவே, இலங்கை அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகளைப் பெருக்க, நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நிருவாகத் தேரை இழுத்துச் செல்லவேண்டுமென்றால், அரசு ஊழியர்களின் பணிகள் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன. அரசு ஊழியர்களுக்கும், அரசுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளை, அவர்களது கோரிக்கைகளை, சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்வதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரசாணை எண் 157, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 2–11–2009–ன்படி ஒரு Committee of Appeal அமைக்கப்பட்டது. Vigilance Commissioner தலைமையில் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் செயலாளர் Convenor–ஆக இருக்கக்கூடிய அந்த Committee ஒவ்வொரு மாதமும் கூடும். அந்தக் குழுவில் ஒருவேளை ஏதாவது மாற்றங்கள் செய்யவேண்டுமென்றால், அந்த மாற்றங்களைச் செய்து, உடனடியாக அந்தக் குழுவைச் செயல்பட வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதியரசர், திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில், நிருவாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டு, இரு கட்டங்களாக அறிக்கை பெறப்பட்டது. கழக ஆட்சியில் முதல் அறிக்கையின்கீழ், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இரண்டாவது அறிக்கையின்மீது நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். ஒரு வேளை, புதிய நிருவாக சீர்திருத்தக்

2016 செப்டம்பர் 2] *[திரு. மு.க. ஸ்டாலின்]*

குழு அமைக்கப்பட வேண்டுமென்றால், என்னென்ன நிருவாக நடைமுறைகளை புதிதாக மாற்ற வேண்டுமோ அவற்றையெல்லாம் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, பழைய ஓய்வூதியத் திட்டமே தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் மத்திய அரசின் 7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து விரைவில் மாநில அரசு ஊழியர்களுக்கும் உரிய ஊதியப் பலன் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்பட வேண்டும். அரசு ஓய்வூதியம் பெறுவோர் ஆண்டுக்கொருமுறை கருவூலங்களுக்கு நேரில் சென்று புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதனை மாற்றி, அவர்கள் எங்கு ஓய்வூதியம் பெறுகிறார்களோ, அங்கிருக்கக்கூடிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேயே 'வாழ்வுச் சான்றிதழ்' வழங்கக்கூடிய முறையை அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வெளிப்படையான நிருவாகத்திற்கு வித்திடும் வகையில், Vigilance Commission, *வலுப்படுத்தப்பட வேண்டும். லஞ்ச ஊழல் தடுப்புத் துறையின் தலைவர் பதவிக்கு இதுவரை முழுநேர* D.G.P. *நியமிக்கப்படவில்லை. அதேபோல்,* Vigilance Commission*–க்கும், முழுநேர ஆணையர் நியமிக்கப்படவில்லை. 5 வருடங்களாக* Vigilance Commission*–க்கு தலைமைச் செயலாளராக யார் நியமிக்கப்படுகிறாரோ, அவர்தான் பொறுப்பு அதிகாரியாக இருந்து வருகிறார். ஆகவே, விரைவில் லஞ்ச ஊழல் தடுப்புத் துறையின் தலைவர் பதவிக்கும்,* Vigilance Commissioner *பதவிக்கும் முழுநேர அதிகாரிகளை நியமிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து,* 'Lok Ayuktha' *அமைப்பு கொண்டுவரப்பட வேண்டும் என்பது நாடு தழுவிய இயக்கமாக இருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தில் அது உருவாக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கை வலுவாக இருக்கிறது. தி.மு.க ஆட்சியிலிருந்தபோது 1973 ஆம் ஆண்டில், பொது ஊழியர் குற்ற நடவடிக்கைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1977 ஆம் ஆண்டில் அது இரத்து செய்யப்பட்டுவிட்டது. இதுபோன்ற சட்டம் மக்களிடையே*

அதிக அளவில் எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது. இந்தியாவில் இருக்கின்ற 29 மாநிலங்களில், 20 மாநிலங்களில் இன்றைக்கு இந்தச் சட்டம், 'Lok Ayuktha' அமைப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக, கர்நாடகா, கேரளா, ஆந்திர மாநிலங்களிலும்கூட இந்த அமைப்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மட்டும்தான் 'Lok Ayuktha' அமைப்பு இல்லை. விரைவில், தமிழகத்திலும் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கையினை எடுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–55

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அகில இந்திய சிவில் சர்வீசஸ் போட்டித் தேர்வுகள் தமிழக மாணவர்களுக்கு சவாலாக இருக்கின்றன. அகில இந்திய குடிமைப் பணி தேர்வுகளில் தமிழக இளைஞர்களுடைய தேர்ச்சி விகிதத்திலே முன்னேற்றம் இருந்தாலும், அதற்கான தரமான பயிற்சி மேலும் தேவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை மனதிலே வைத்துதான் சென்னையிலுள்ள I.A.S. பயிற்சி மையம் தவிர, மதுரை மற்றும் கோவையிலும் Anna Centenary Civil Services Coaching Academy–யை உருவாக்க அரசாணை எண் 14, நாள் 2–2–2010–ல் ஆணையிடப்பட்டது. சென்னையில் உள்ளவர்கள் மட்டுமின்றி, கோவை மற்றும் மதுரை பகுதிகளில் இருப்பவர்களுக்கும் பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் அந்த மையங்கள் உருவாக்கப்பட்டன. இதை மேலும் விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில், அனைத்து மாநகராட்சிகளிலும் அமைத்தால், அகில இந்திய தேர்வுகளில் தமிழக மாணவர்கள் இன்னும் அதிக எண்ணிக்கையிலே தேர்ச்சி பெறுவார்கள் என்பதிலே சந்தேகமில்லை. இன்றைய இளைஞர்களுக்கு I.A.S. மற்றும் I.P.S. என்பது கனவாக இருப்பதால், அரசு அதிக கவனம் செலுத்தி, இதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இளைஞர்கள், குறிப்பாக, படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கக்கூடிய இளைஞர்கள் பெரும் நம்பிக்கை வைத்திருப்பது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைத்தான். எழுத்துத் தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி, இளைஞர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற இடமாக இந்த ஆணையம் இருக்கிறது. 84 இலட்சத்திற்கும் மேற்பட்ட

இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை கேட்டு பதிவு செய்திருக்கிறார்கள். போட்டித் தேர்வுகளை நடத்தக்கூடிய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மீது மக்களுக்கு பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பதிலும், தலைவரை நியமிப்பதிலும் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் மற்றும் தலைவர் நியமனங்களில் ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் அளித்திருக்கக்கூடிய தீர்ப்புகளின் அடிப்படையிலே வெளிப்படைத் தன்மை மிகுந்த நடைமுறையைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொலைநோக்குத் திட்டம், Vision 2023. *தொலைநோக்குத் திட்டம், 2023–ஐ உங்களின் கொள்கையாக பிரகடனம் செய்திருக்கிறீர்கள். அதன்படி, ரூ.15 இலட்சம் கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள முதலீடுகளில், ஏற்கெனவே 11 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளதாக 2016–2017 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில், மாநில திட்டக் குழுவின் செயல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் பதவி இன்னும் காலியாக இருக்கிறது. அதுமட்டுமின்றி, முழுநேர உறுப்பினர்கள் யாருமில்லாமல், மாநில திட்டக் குழு செயல்பட்டு வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநில திட்டக் குழு தொய்வின்றி செயல்பட்டு, தமிழகத்தினுடைய முக்கிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், விரைவில் முழுநேர உறுப்பினர்கள் மற்றும் துணைத் தலைவரை நியமிக்கும்படி நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

அதேபோல, தகவல் புரட்சி யுகத்திலே நாம் இருக்கிறோம். 1997 ஆம் ஆண்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வந்தது தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான். அதன் பிறகு, 2005 ஆம் ஆண்டு, மத்திய அரசு தகவல் உரிமைச் சட்டத்தை அங்கே கொண்டு வந்தது. சமூக ஆர்வலர்களுடைய நண்பனாக, ஊழலுக்கு எதிராகச் செயல்படுபவர்களுடைய உற்ற தோழனாக, வெளிப்படையான நிருவாகத்திற்கு உத்தரவாதம் தரக்கூடிய அமைப்பாக மாநில

தகவல் ஆணையம் செயல்பட வேண்டும். ஆகவே, மாநில தகவல் ஆணையத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர் நியமனங்களில் வெளிப்படையான அணுகுமுறையை உருவாக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வைப்பு நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்புத் தொகை மற்றும் Commutation உள்ளிட்ட தொகைகள் இன்னும் வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன. அதையும் உடனடியாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 12–வது ஊதிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஒப்புக்கொண்ட சலுகைகள் மற்றும் உரிமைகளை வழங்கவும் அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு.டி.ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்ததாக ஒரு தவறான கருத்தை பதிய வைத்திருக்கின்றார்கள். மத்திய அரசு இந்தச் சட்டத்தை மாநிலங்களில் இயற்ற வேண்டுமென்று சொன்னபோது, அதை நடைமுறைப்படுத்திய முதல் மாநிலம், நம்முடைய தமிழ்நாடு மாநிலம்தான். அந்தச் சட்டத்தை Cabinet–லே கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே நிறைவேற்றிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12–00

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொள்ளாச்சியில் புதிய கட்டடம்

கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இப்போது புதிய கட்டடங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் கட்டுவதற்காக கூடுதல் நிதி ஒதுக்கப்படுவது வழக்கம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புதிய கட்டடங்களை புதிய design*–ல் கட்டும்போது, புதிய கட்டடங்களுக்கு நிதி என்றுதான் ஒதுக்கப்படுகிறது. அது கூடுதல் நிதி. மாண்புமிகு அம்மா அவர்களே தேர்வு செய்து அற்புதமான* design*–ல் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். பொள்ளாச்சியிலும், திருவண்ணாமலையிலும், அதைப்போன்ற கட்டடங்கள் இருக்கின்றன. மக்கள் நலப் பணியாளர்கள் பற்றியும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார். மக்கள் நலப் பணியாளர்கள் சம்பந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், உங்களுடைய அறிவிப்பில் புதிய கட்டடம் என்று அறிவித்திருக்க வேண்டும். நான் டெண்டர் விடப்பட்டதை சொல்லியிருக்கின்றேன். திருவண்ணாமலை நகராட்சி மன்றத்தில் அதற்கான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றேன். கட்டடம் கட்டப்பட்டதை சொல்லியிருக்கிறேன். புகைப்படமும் என்னிடம் இருக்கின்றது. 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இதை எவ்வாறு நீங்கள் புதிதாக அறிவித்தீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. அதை எதற்காக அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பொள்ளாச்சி மற்றும் திருவண்ணாமலையில் ஓர் அற்புதமான கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவிப்பின்மூலம் கட்டப்படுகிறது. அதிலே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதற்காக சத்தம் போடுகிறீர்கள்?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *கூடுதல் கட்டடத்திற்கு நிதி என்றாலும், ஒரு* compound *என்றாலும் புதிய கட்டடம் என்றுதான் அறிவிக்க முடியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். புதிய கட்டடம் என்று சொன்னால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள்.* (குறுக்கீடு) *எதற்காக நீங்கள் சத்தம் போடுகிறீர்கள்?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்கு நான் பதில் சொல்கிறேன். எதற்காக அவர்கள் சத்தம் போடுகிறார்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது எல்லோரும் அமைதியாகக் கேட்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லும்போது நீங்கள் எதற்காக சத்தம் போடுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர் கூடுதல் கட்டடம் என்றுதான் சொல்லியிருக்கிறார். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்பு 4 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி பொள்ளாச்சி, திருவண்ணாமலை, அரியலூர், கூடலூர் ஆகிய 4 நகராட்சிகள் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு 10 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் புதியதாகக் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். அதாவது எப்படி என்றால். . .* (குறுக்கீடு) *இல்லை. இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *எந்த ஒரு கட்டடத்தையும் புதிதாகக் கட்ட ஆரம்பிக்கும்போது, ஒரு* design *தயார் செய்வோம்.*

அதில் சுற்றுச் சுவர் வசதியும் இடம் பெற்றிருக்கும். அதற்குப் பிறகு, அந்தக் கட்டடப் பணியை ஆரம்பிக்கும்போது, அதில் கூடுதல் அறையோ, அல்லது elevation போன்ற மாற்றங்களோ ஏற்படும். அங்கு இருக்கிற தேவைக்கேற்ப, இன்றைக்கு கூடுதல் கட்டடத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டாரா? **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று எல்லாம் சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். ** என்றெல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ** என்று குறிப்பிட்டது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதை எல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் படித்ததையே நான் திருப்பி படிக்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள சில மாநகராட்சிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினுடைய உறுப்பினரோ அல்லது தலைவரோ நியமிக்கப்படும்போது வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டுமென்று சொன்னார். (குறுக்கீடு)

***** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினுடைய உறுப்பினர்கள் மற்றும் தலைவரும் சட்ட வரைமுறைகளுக்குட்பட்டுதான் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைவிட கூடுதலாக இன்னொரு தகவலும் சொல்கிறேன். தி.மு.க ஆட்சிக் காலமான 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 29,521 காலிப் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், பொற்கால ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு முதல் 22–8–2016 வரை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களுக்காக தேர்வுகள் நடத்தப்பெற்று, 58,553 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்பதனை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது நீங்கள் அமைதியாகக் கேட்டீர்கள். அதேமாதிரி, அவை முன்னவர் முக்கியமான ஒரு விளக்கத்தைச் சொல்ல வருகிறபோது கேட்காமல், நீங்கள் கூச்சலிடுவது என்ன முறை? (குறுக்கீடுகள்) இந்த முறையை நீங்கள் மாற்ற வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் மீண்டும் சொல்கிறேன். நான் புரிந்துகொண்டுதான் பேசுகிறேன். புரியாமல் பேசவில்லை. அதாவது, நீங்கள் சொன்னதுபோல் திருவண்ணாமலையில் 60 சதவிகிதம் அல்ல, 75 சதவிகிதம் பணி முடிவடைந்துள்ளது.

2016 செப்டம்பர் 2] [திரு. எஸ்.பி. வேலுமணி]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 13–12–2013 இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 13–1–2014 இல் பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது 75 சதவிகிதம் பணி முடிவடைந்துள்ளது. 60 சதவிகிதம் அல்ல. கூடுதல் கட்டடத்திற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, பொள்ளாச்சியிலும் 50 சதவிகிதத்திற்கும்மேல் முடிவடைந்துள்ளது. பொள்ளாச்சி நகராட்சிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதியொதுக்கப்பட்டு, கட்டடப் பணிகள் முடிந்துவிட்டன. கட்டட வேலைகள் முடியும்போது, அங்கு பொதுமக்கள் வரும்போது தேவையான சுகாதார வளாகம், கழிப்பிட வசதி வேண்டுமென்று கோரிக்கைகள் வரும். அவையும் கட்டடத்திற்குள்தான் வருகின்றன. அந்த compound–ற்குள்தான் வருகிறது. அதையெல்லாம் கட்டுவதற்குத்தான் கூடுதல் நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இது அவருக்கு நன்றாகவே தெரியும். இதற்குத்தான் அவர் இப்படி கேள்வி கேட்கிறார். அது மட்டுமல்ல, நான் கேட்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்பொழுது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை சரியாக பயன்படுத்த முடியவில்லையென்று தகவல் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதற்கு ஆர்ப்பாட்டம் செய்வோம் என்று அறிக்கைகளெல்லாம் விட்டிருந்தார். நான் கேட்கிறேன். அவர் கேட்ட மாதிரியே நானும் ஒரு கேள்வி கேட்கிறேன். 2011–2012–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஒரு வருடம் முழுவதுமாக நீங்கள் எந்த பரிந்துரையும் செய்யவில்லை. ஆனால், நீங்கள் வெளியில் வந்து, நாங்கள் அனைத்து பரிந்துரைகளையும் கொடுத்துவிட்டோம், ஆனால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையென்று பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்கிறீர்கள். 2011–2012–ல் நீங்கள் எந்த பரிந்துரையும் செய்யவில்லை. சில வரைமுறைகள் இருக்கின்றன. அவரும் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை பயன்படுத்த சில வரைமுறைகள் இருக்கின்றன. காவல் துறை கட்டடத்திற்கு கொடுக்கக் கூடாது. அதேபோல தூர் வாருவதற்கு கொடுக்கக் கூடாது என்று வரைமுறை இருக்கிறது. அதற்கெல்லாம் கடிதம் கொடுத்துள்ளீர்கள். இப்படியெல்லாம் கடிதம் கொடுத்துவிட்டு, இப்பொழுது கேள்வி கேட்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கட்டடங்களுக்கு கூடுதலாக நிதி

வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொலைநோக்குப் பார்வை, 2023–ஐ குறித்து ஒரு முக்கியமான கருத்தைப் பதிவு செய்தார்கள்.* Vision 2023–ஐ implementation–செய்வதற்கான institutional mechanisms என்பதில் Tamil Nadu Planning Commission மட்டும் கிடையாது. ஐந்து கட்டமைப்புகளைச் சார்ந்த institutional mechanisms உருவாக்கப்பட்டிருக்கின்றன. Tamil Nadu Investment Board உருவாக்கப்பட்டிருக்கிறது. Equitable Growth Fund உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு வகையிலே பார்த்தால், Global Investors Meet என்ற ஒரு கட்டமைப்பே Vision 2023–ஐ implementation–செய்வதற்காகத்தான் உருவாக்கப்பட்டது நீங்கள் கூறிய 15 இலட்சம் கோடி என்பது 217 திட்டங்களாக திட்டப்படுத்தப்பட்டுள்ளதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதே பேரவையில் பதிய வைத்துள்ளார்கள். எத்தனை திட்டங்கள், எந்த இடத்தில் இருக்கின்றன. எந்த stage–ல் இருக்கின்றன என்று. 9 மாநிலங்கள் இந்த vision-ஐ அறிவித்திருக்கின்றன. 2006–2011–ல், தி.மு.க. அரசாங்கத்தில் தொலைநோக்குப் பார்வைக்கான எந்தவித document–ம் உருவாக்கப்பட்டவில்லை. அதை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை உருவாக்கி, அதற்குக் கட்டமைப்புகளையும் உருவாக்கி, வலு சேர்த்து, இன்று அனைத்து projects-ம் எந்தெந்த stage–ல் இருக்கின்றன என்பது குறித்த விவரங்கள் அனைத்தையுமே transparent ஆக communicate செய்திருக்கிறோம். நீங்கள் சொன்ன 15 இலட்சம் கோடி ரூபாய் முழுவதுமே மாநில அரசாங்கத்தின் முதலீடுகள் கிடையாது. 4 விதமான முதலீடுகள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. நீங்கள் சொன்ன 11 இலட்சம்

2016 செப்டம்பர் 2] [திரு. க. பாண்டியராஜன்]

கோடி ரூபாய் இந்த 4 வருடங்களில் பெறப்பட்டிருக்கிறது. இது I.M.–ஐ வைத்து சொல்லப்பட்டிருக்கிற விஷயம். It is an investment intent. எனவே, அவருடைய அந்தக் கருத்து, தவறான கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். Vision 2023 is not equal to Tamil Nadu Planning Commission. Tamil Nadu Planning Commission is only one of the 5 institutional mechanisms which has been created. நன்றி.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது, 84 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பதாகக் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2011 லிருந்து 2016 வரை Job seekers placed through employment offices for Government vacancies are 77,696. Job seekers placed in private sectors are 1,42,114.

இதுமட்டுமல்லாமல், இந்த 84 இலட்சம் பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்றார்கள் என்று சொன்னார்களே, இவர்களில் 72,71,152 நபர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்கள் ஆவார்கள். இவர்களில் பெரும்பாலானோர் உயர் கல்வி பயின்று கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, 25 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் 2012 ஆம்

ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 20.67 கோடி ரூபாயில் இலங்கை அகதிகள் முகாம்களை மேம்படுத்தவும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலமாக, முகாம்களில் குடிநீர் வசதியை அமைத்துத்தர 4.33 கோடி ரூபாயையும் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், அதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலுள்ள அகதிகள் முகாம்களில் நீடித்து நிலைக்கும் 1,655 புதிய வீடுகளை தலா ரூபாய் 1.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கு 2012–2013–ல் ரூ.19.86 கோடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, 1,164 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 38 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. 453 வீடுகளைக் கட்டுவதற்கு அமைவிடம் கிடைக்கப்பெறாததால், அதற்கான மீதத் தொகை ரூ.543.60 இலட்சத்தை முகாம்களில் இருக்கின்ற வீடுகளுக்கு, பழுதடைந்த கூரைகளைப் பழுது பார்ப்பதற்காகும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஆகியவை இலங்கைத் தமிழர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பிற்காக நீட்டிக்கப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் பட்டம், பட்டயம் பெற்ற பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.20,000/–லிருந்து ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்துடன் திருமாங்கல்யத்திற்கான நான்கு கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் திருமாங்கல்யத்திற்காக 4 கிராம் தங்கமும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், இதுவரை 455 மகளிர் பயனடைந்துள்ளனர். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்மூலம், கருவுற்ற முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கு மகப்பேறு உதவியாக

ரூ.12,000/– நிதியுதவியை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், இதுவரை 3,298 பெண்கள் பயனடைந்துள்ளனர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20,000 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய 10 மின் திட்டங்கள், தொலைநோக்குத் திட்டம், 2023–ல் அறிவிக்கப்பட்டன. அந்த 10 மின் திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூ.1,07,284 கோடி ஆகும். தொலைநோக்குத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டங்களுக்காக ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அதேபோன்று, கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மின்சாரத்தை முடித்துவிட்டு, குடிநீருக்குச் சென்றுவிட்டார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டார். அதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். நீங்கள் ஏன் சத்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்வில்லை என்றால், அமைச்சர் அவர்கள் எழுந்து நின்று பதில் சொல்லப்போவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டதால், அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம். அவர் பதில் சொல்கிறார். நீங்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

[திரு. பி. தங்கமணி] [2016 செப்டம்பர் 2

அவர்கள், "20,000 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கான 10 மின் திட்டங்களுக்கு 1 இலட்சம் கோடி ரூபாய் நிதியை தயார் செய்துவிட்டீர்களா?" என்று கேள்வி கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், எப்பொழுதுமே ஒரு திட்டத்தைத் தீட்டுகிறார் என்று சொன்னால், அதற்குப் போதிய நிதி ஆதாரம் இல்லாமல், திட்டத்தை ஏற்பாடு செய்யமாட்டார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2021–க்குள், 20,500 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்று கடந்த மின்சார வாரிய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கின்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்திருக்கின்றீர்கள். எந்தெந்த வகைகளில், எப்படி எப்படியெல்லாம் நிதி ஆதாரம் உள்ளது என்பது குறித்து அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கின்றது. இப்பொழுது அந்தப் பணிகளுக்கு, ஒவ்வொரு பணியாக டெண்டர் விடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உங்களுடைய 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், நீங்கள் எந்தவொரு திட்டத்தையும் கொண்டுவராமல், தமிழகத்தை இருட்டாக வைத்திருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டு காலம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தமிழகம் மின் மிகை மாநிலமாக உள்ளது என்ற நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல், மத்திய அரசே, "11,649 மில்லியன் யூனிட் மின்சாரம் தேவைக்கு அதிகமாக தமிழக அரசு வைத்திருக்கிறது" என்று அறிக்கையை அளித்திருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமைக்கு இதைவிட வேறு சான்று இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட அந்த 20,000 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கான நிதியை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்பாடு செய்துவிட்டார்கள். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள், 20,000 மெகா வாட் மின்சார உற்பத்தியை 2023 ஆம் ஆண்டுக்குள் நிச்சயமாகக் கொண்டு வந்துவிடுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது, ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை பற்றி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. 13–4–2015 ஆம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, அவர்களுக்கு ஊதிய உயர்விலே வழங்கப்பட வேண்டிய 20 சதவிகித நிலுவைத் தொகையான 61.91 கோடி ரூபாயை, கடந்த 28–6–2016 ஆம் தேதி வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள நிலுவைத் தொகைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, படிப்படியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கிய தொகை 926.86 கோடி ரூபாய் ஆகும். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கிய தொகை 1,446 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஓய்வு பெற்ற போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய 922.24 கோடி ரூபாய் உங்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கப்படாமல் நிலுவையாக இருந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12–20

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருடைய வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக ரூபாய் 422 கோடி செலவில் 2,673 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் 2016–2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். காவல் துறைக்கு மொத்தமாக 6,102.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். 'உங்கள் சொந்த இல்ல' திட்டத்தின்கீழ் காவல் துறையில் காவலர்கள் முதல் துணைக் கண்காணிப்பாளர் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கென ஒதுக்கீடு செய்து, அந்தக் கழகத்தின்மூலம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3–5–2012 அன்று விதி 110–ன்கீழ் இதே அவையிலே வெளியிட்டிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் தவிர, மற்ற 31 மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அடிப்படை பணிகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அறிவிக்கப்பட்ட 36,000 குடியிருப்புகள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, காவலர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது பற்றி திடீரென்று அக்கறையும், கவலையும் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களுக்கு, காவல் துறையினருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது குறித்து, யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். ஆனால் தி.மு.க.வினர் கேட்கக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதைக் கேட்பதற்கான அருகதை தி.மு.க.வினருக்கு இல்லை. (குறுக்கீடுகள்) ஏன் என்று சொல்கிறேன், கேளுங்கள். காரணம் இல்லாமல் எதையும் சொல்ல மாட்டேன். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லையே!

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதெல்லாம் சரியல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இப்படிச் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1980 ஆம் ஆண்டு காவல் துறை வீட்டு வசதிக் கழகம் என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், 1989 ஆம் ஆண்டு திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, முதல் வேலையாக அந்தக் காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தைக் கலைத்து, இழுத்து மூடினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர் 1991 ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர், காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் துவக்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர், ஆயிரக்கணக்கில் காவல் துறையினருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அந்த விவரங்கள் எல்லாம் ஏற்கெனவே வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் தரப்பட்டிருக்கின்றன. அதற்கு நான் மீண்டும் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், காவல் துறையினருக்காகவே பிரத்யேகமாகத் தொடங்கப்பட்ட காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தைக் கலைத்து, இழுத்து மூடிய தி.மு.க.வினருக்கு இதைப்பற்றி கேள்வி கேட்க அருகதை இல்லை என்று அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் காவல் துறை வீட்டு வசதிக் கழகம் பற்றிக் கேட்டீர்கள்.

(குறுக்கீடுகள்) உட்காருங்கள். கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்குரிய விளக்கத்தை இந்த அவையிலே தெரிவிக்கிறார். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்த தவறுகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். (கூச்சல்) அவர் அளிக்கிற விளக்கத்தை நீங்கள் கேட்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு, இந்தப் பக்கத்திலே அமைதியாக இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதில் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கூறுகிற பதிலை நீங்கள் அமைதியாகக் கேட்க வேண்டும். விளக்கம் கேட்பதாக இருந்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கட்டும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கூறுகிற பதிலைக் கேட்காமல் நீங்கள் பேசிக்கொண்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (கூச்சல்) அமைதி, அமைதி, (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். அதிலே எங்களுக்கு கருத்து மாறுபாடு கிடையாது. நாங்கள் சில கோரிக்கைகளை வைக்கிறோம், சில பிரச்சினைகளைச் சொல்கிறோம், மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்கிறார்கள். அதை நான் தவறு என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுவதில் நான் ஒன்றும் குறுக்கிடவில்லை. நீங்கள் பேசுகிறபோது, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எப்படி அமைதியாக இருந்து கேட்டு, அதற்குரிய விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். (கூச்சல்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறபோது இப்படி கூக்குரலிடுவதை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றுதான் நான் சொல்கிறேன். நீங்கள் அமைதியாகப் பேசலாம், விளக்கம் கேட்கலாம், விளக்கம் வரும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்வது எங்களுடைய கடமை. நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஏற்றுக் கொள்ளாதது எங்களுடைய பிரச்சினை. ஆனால், அதேநேரத்தில் இதைக்

கேட்கக்கூடிய தகுதி எங்களுக்கு இல்லை என்று சொன்னால், மக்கள் எங்களை ஏன் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்? எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றுவதற்கு ஏன் இங்கு வந்திருக்கிறேன்? (மேசையைத் தட்டும் ஒலி) ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்த்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிய அந்த கடைசிப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்னதற்கு விளக்கம் சொன்னார்கள். நீங்கள் தேவையில்லாமல் சொல்லிய அந்தக் கருத்தை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்விதான் கேட்கலாம். தேவையில்லாத வார்த்தையையெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, அதையெல்லாம் சேர்க்க முடியாது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன், அமருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய துறையின் சார்பாக விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். அதிலே நீங்கள் செய்யத் தவறியதை மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆகவே, சுட்டிக்காட்டியிருப்பதற்கு, நீங்கள் கேள்விதான் கேட்க வேண்டுமேயொழிய, தேவையில்லாமல் வார்த்தைகளை அவைக் குறிப்பிலே ஏற்றக் கூடாது. (குறுக்கீடுகள்) அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள்

** ***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.***

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு நான் விளக்கம் அளிக்கிறேன். உட்கார்ந்து கேட்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு விளக்கம் அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) காவல் துறையைப் பற்றிக் கேட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) தேவையென்றால், நீங்கள் அதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாத வார்த்தைகளையெல்லாம் அவையில் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) தேவையில்லாத வார்த்தைகளைப் பேசினால் நான் அதை அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டு கூச்சலிட்டனர்.)

நான் இந்தச் சபையை அமைதியாக நடத்தி முடிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாமல் பேசி, குழப்பத்தை விளைவிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் குழப்பத்தை விளைவிக்கின்றமாதிரி உங்களுடைய நடவடிக்கைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அமைதியாக இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொடுக்கின்ற பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அந்த பதிலுக்கு விளக்கம் இருந்தால், (குறுக்கீடுகள்) முடிந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு உங்களுடைய பதிலைச் சொல்லுங்கள். இல்லையென்றால், (குறுக்கீடுகள்)

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு விளக்கம் அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்கின்ற எந்தக் கேள்விக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் விரல் நுனியிலே விவரங்களை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட எதிர்க் கேள்விக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையை இன்றைக்கு நல்லபடியாக முடிப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னால் இன்றைக்கு பல முக்கிய தீர்மானங்களை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் அமைதி காத்து, இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள். (குறுக்கீடுகள்) அதை விடுத்து, நீங்கள் வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கின்றமாதிரி செய்வது முறையற்றது. (குறுக்கீடுகள்) நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் இதைப் பற்றிக் கேட்டாலும் என்னுடைய முடிவு, அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது, நீக்கியதுதான். (குறுக்கீடுகள்) அதற்கு மாற்று பதிலே இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக இருந்து பேசுவதாக இருந்தால், உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், நீங்கள் எவ்வளவு கூச்சலிட்டாலும் அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு ஒவ்வாத சொல் எதையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர்கள் விளக்கம் சொல்லி, நீங்கள் அதைக் கேட்பதற்குத் தகுதியில்லை என்ற முறையில்தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விளக்கம்*

சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களிடத்தில் 15, 20 நிமிடங்களாக மன்றாடிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) போராடிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–35

நீங்கள் அவைக்கு கட்டுப்படாமல், (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருடைய கட்டளைக்குக் கட்டுப்படாமல், (குறுக்கீடுகள்) நான் எழுந்து நின்று உங்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறபொழுது, விதிகளை மதிக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் தீர்ப்பு அளித்த பிறகு நீங்கள் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவராகிய நான் ஒரு தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு அதில் நீங்கள் குறுக்கிட்டுப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) விளக்கமும் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடுகள்) அதில் ஏதாவது உங்களுக்கு விளக்கம் தேவை இருந்தால், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அமைதியாக உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

இப்போது நேரத்தைப் பாருங்கள், 12–35 ஆகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசி முடித்து, அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லி, அதற்குப் பிறகு அரசினர் தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டியுள்ளது. (குறுக்கீடுகள்) இரண்டு மணிக்கு guillotine. அதற்குப் பிறகு, பல சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இவ்வளவு business இருக்கின்றன. ஆகவே, நீங்கள் அவையின் நேரத்தை வீணடிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) நான் கொடுத்த தீர்ப்பில் மாற்றமில்லை. (குறுக்கீடுகள்) அதை நான் மாற்றமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவுதான் வற்புறுத்தினாலும், அதில் மாற்றமில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திட்டமிட்டு குழப்பம் செய்ய வேண்டாம். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்கார்ந்து, அவை நடவடிக்கைகளை நடத்திட எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில்

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரே விதியைப் பின்பற்றமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். பேரவைத் தலைவர் எவ்வளவு நேரம் நின்று கொண்டு பேசுவது? (குறுக்கீடுகள்) சிறிதளவாவது விதியை மதிக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) சிறிதளவாவது விதியை மதிக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) விதிகளை நீங்கள் மதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்களாக ஒரு திட்டம் போட்டு, குழப்பம் விளைவிக்க வேண்டும் என்று வருகிறபொழுது, அதில் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன கூறினாலும் சரி, நான் அதை ஏற்பதற்குத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) எனக்கு இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மறுபடியும் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) அந்த விளக்கத்தை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) அதில் ஏதாவது விளக்கம் பெற வேண்டியிருந்தால், உரிய பதிலினை மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேசுவதற்கு, இவர்கள் தொடர்ந்து இடையூறு விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேலும் நீங்கள் பொறுமையாக இருந்துகொண்டு, (குறுக்கீடுகள்) அவர்களை சமாதானப்படுத்துகின்ற முயற்சியைவிட்டு, அவர்கள் அமைதியாக உட்கார்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பதிலைக் கேட்கிறார்களா, இல்லையா என்று மட்டும் நீங்கள் கேட்டு, அதற்குப் பின்னால் நீங்கள் உங்களுடைய நடவடிக்கையை தொடரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். என்னுடைய தீர்ப்பை நீங்கள் விமர்சிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அந்தத் தீர்ப்பினை நான் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பை விமர்சிக்க முடியாது. இன்றைக்கு,

நீங்கள் பேசுவதற்கு, (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கின்றபொழுது, நீங்கள் அதைக் கேட்டு, அதற்கு விளக்கங்களைப் பெறுங்கள். (குறுக்கீடுகள்) அதைவிடுத்து, தேவையில்லாமல் குழப்பம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்லாமல், ஒரு முக்கியமான அரசினர் தனித் தீர்மானம் நிறைவேற்றப்படவிருக்கிறது. (குறுக்கீடுகள்) அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதைத் தடுக்கிறவிதமாக, நீங்கள் குழப்பம் செய்வது, அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எதிராகச் செயல்படுவதுபோன்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, நான் உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், எத்தனை முறை நீங்கள் கேட்டாலும், நான் வழங்கிய தீர்ப்பை, (குறுக்கீடுகள்) நான் வழங்கிய தீர்ப்பை மாற்ற மாட்டேன். (குறுக்கீடுகள்) மாற்ற மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக உட்கார்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்கின்ற பதிலுக்குப் பின்னர், விளக்கம் தேவைப்பட்டால் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–40

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அதைவிடுத்து, வரவிருக்கின்ற தீர்மானம், கில்லட்டின் நேரம் இதையெல்லாம் உத்தேசித்து, நீங்கள் இன்றைக்கு குழப்பம் விளைவிக்காமல் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி, நீங்கள் உங்கள் இடத்தை விட்டு, இங்கு வந்து பேசுவது தவறு. உங்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் விரைவில், இதுபோல் தொடர்ந்து நீங்கள் நடந்து கொண்டால், விதிகளைப் பயன்படுத்தி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், எதிர்க்கட்சித் தலைவரான நீங்களே, பேரவைத் தலைவருக்குக் கட்டுப்படாமல், விதிகளுக்குக் கட்டுப்படாமல் இப்படி எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், அதற்கு பதில் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அதை மாற்ற மாட்டேன். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நான் மாற்ற மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன். பேரவைத் தலைவர், ஒரு முறை, ஒரு பொருள் குறித்து ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டால், அந்தத் தீர்ப்பின்மீது நீங்கள் யாரும் விமர்சனம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள், மறுபரிசீலனை செய்யுங்கள் என்று என்னைக் கேட்கக் கூடாது. (குறுக்கீடுகள்) நான் கொடுத்த தீர்ப்பு, தீர்ப்பு தான். (குறுக்கீடுகள்) அதில் மாற்றம் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள், முதலமைச்சர் அவர்களுடைய பதிலைக் கேட்டு, உங்களால் முடிந்தால் அதற்கு பதில் சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) அதுதானேயொழிய, நான் வழங்கிய தீர்ப்பை, நீங்கள் மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வதற்கு, உங்களுக்கு உரிமை இல்லை. (குறுக்கீடுகள்) உரிமை இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள், பேரவைத் தலைவருக்கு (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு, நீங்கள் direction கொடுப்பதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவருக்கு தீர்ப்பு வழங்கக்கூடிய அந்த உரிமையிருக்கிறது. நான் அந்த உரிமையின் அடிப்படையிலே நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நீக்கியிருப்பதை, நீங்கள் கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு என்ன தோன்றுகிறது என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, நீங்கள் பதில் சொல்வதற்கு உங்களிடத்திலே எந்த பதிலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கேட்ட கேள்விக்கு, உங்களிடத்திலே சரியான பதில் இல்லை. (குறுக்கீடுகள்) அதனால், நீங்கள் பேரவைத் தலைவருடைய தீர்ப்பை மாற்றுங்கள் என்று கேட்கின்றீர்கள், குழப்பம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இதைத்தான் என்னால் சொல்ல முடியும். இதைத் தவிர மேலும் எதையும் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, நீங்கள் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் செய்த தவறுகளை, நீங்கள் செய்ய முடியாததை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்

சுட்டிக்காட்டினார்கள். (குறுக்கீடுகள்) சுட்டிக்காட்டினார்கள். (குறுக்கீடுகள்) அதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்) நீங்கள் அதற்கு பதில் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்த பதிலிலே உங்களுக்கு ஏதாவது கேட்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் கேட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்கு பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்வதற்கு அவர் தயாராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அது முடிந்து, அரசினர் தனித் தீர்மானம் ஒன்று வருகிறது. (குறுக்கீடுகள்) அந்தத் தீர்மானத்தை சீர்குலைக்கிற வகையிலே, அதை வேண்டாமென்று சொல்கிற வகையிலே, நீங்கள் அவையினுடைய நேரத்தை வீணடிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தீர்மானத்தை திசை திருப்புகின்ற மாதிரி உங்களுடைய பணி இருக்கிறதேயொழிய, (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பது மாதிரி எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–45

நான் கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு 2–00 மணிக்குள் எல்லா அலுவல்களையும் முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இன்றைக்கு guillotine time இருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் ஒத்துழைப்பதைத் தவிர வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களிடத்திலே பல முறை மன்றாடிச் சொல்லிவிட்டேன். நேரத்தின் அருமை கருதி, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு, நான் அடுத்த அலுவலுக்கு, அரசினர் தனித் தீர்மானத்திற்குச் செல்கிறேன். (குறுக்கீடுகள்) இப்போது நேரமில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்தமாதிரி எல்லாம் வற்புறுத்திக் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டாமென்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) முன்மொழிய வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

இங்கே பாருங்கள். அந்தப் பிரச்சினைகளுக்கு நான் முற்றுப்புள்ளி வைத்து, விவாதத்தை இதோடு முடித்துவிட்டேன்.

இப்பொழுது நேரத்தின் அருமை கருதி, நான் அரசின் சார்பாக வருகிற தனித் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

4. அரசினர் தனித் தீர்மானம்

காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்ற வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் காவேரிப் படுகையில் எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது என மத்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி நதி, அட்டப்பாடி பள்ளத்தாக்கில், கேரள மாநிலத்தில் உற்பத்தியாகி அம்மாநிலத்திற்குள்ளேயே ஓடி, பவானி ஆற்றுடன் கேரள எல்லைக்குள்ளேயே சேருகின்ற ஒரு நதி ஆகும். இந்த ஆறு, பன்மாநில நதியான காவேரி நதியின் துணை உப நதியாகும்.

காவேரி நடுவர் மன்றத்தில், கேரள அரசு, பவானி படுகையில், 27 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரியது. அட்டப்பாடி பள்ளத்தாக்கில் பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைக்காக 4.5 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனக் கோரியது. காவேரி நடுவர் மன்றம், அதன் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில், கேரள பவானி படுகைக்கென மொத்தம் 6 டி.எம்.சி. அடி நீரை ஒதுக்கீடு செய்தது. இதில், அட்டப்பாடி பாசன உபயோகத்திற்காக 2.87 டி.எம்.சி. அடி நீர் ஒதுக்கீடு செய்தது.

காவேரி நடுவர் மன்ற ஆணையை எதிர்த்து கர்நாடகா மற்றும் கேரள அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்களை 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாக்கல் செய்தன.

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2

1956 ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர்த் தாவாச் சட்டம், பிரிவு 5(3)—ன்கீழ் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்மீது தமிழ்நாடு அரசு விளக்கங்கள் கோரும் மனுவினை காவேரி நடுவர் மன்றத்தில் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாக்கல் செய்தது. பின்னர், 5—5—2007—ல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவையும் தாக்கல் செய்தது. இவ்விரு மனுக்களிலும் இரண்டாவது போக பாசனப் பரப்பையும் மற்றும் அதற்குரிய நீரை ஒதுக்கீடு செய்ததையும் மறுபரிசீலனை (குறுக்கீடு) செய்து, தொன்றுதொட்டு பாசனம் மேற்கொண்டு வரும் பகுதிகளில் இரண்டாம் போக நன்செய் பயிரை அனுமதித்து அதற்குரிய நீரை தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென்றும், கர்நாடகாவிற்கும், கேரளாவிற்கும் பாசனம் செய்வதற்காக பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர்த் தேவையைக் குறைக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. அதே தருணத்தில், 1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பாசனப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த இரண்டாம் போக பாசனப் பரப்பை அனுமதித்து அதற்குரிய நீரை ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

பிற்பகல் 12—50

ஜூன் 2012—ல் அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறது என ஊடகங்களில் செய்திகள் வந்ததையடுத்து, நான் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு 21—6—2012 ஆம் நாளிட்டு அனுப்பிய கடிதத்தில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்மீது உச்ச நீதிமன்றத்தில், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் விளக்கங்கள் கோரும் மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில், அந்த இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும், நீதிமன்ற உத்தரவுகள் வரும் வரையிலும், கேரள அரசு காத்திருந்து அவற்றில் முடிவு தெரியும் வரையில் எந்த ஒரு திட்டத்தையும் எடுத்துக்கொள்ளக் கூடாது எனத் தெரிவித்து, பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, கேரள அரசு கட்ட உத்தேசித்துள்ள அட்டப்பாடி பாசனத் திட்டம் அல்லது வேறு எந்த ஒரு திட்டத்தையும் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைக்கு முரணான வகையில் கட்ட வேண்டாம் என கேரள அரசுக்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொண்டேன்.

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மேலும், மத்திய நீர் வளக் குழுமம் கேரள அரசின் அணை கட்டும் திட்டத்திற்கு எந்த ஒரு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கக்கூடாது எனவும் அறிவுறுத்தும்படி கேட்டுக்கொண்டேன்.

இதனைத் தொடர்ந்து, மத்திய நீர் ஆதார அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் கேரள அரசு ஆகியவற்றிற்கு தமிழக அரசின் சார்பில் கடிதங்கள் அனுப்பப்பட்டு வந்தன.

மத்திய நீர் ஆதார அமைச்சகம் அதன் 19–9–2013 ஆம் நாளிட்ட கடிதத்தில், அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு உபயோகிக்கப்பட உள்ள நீர் குறித்து சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவினைப் பெற்ற பின்னர், காவேரி நடுவர் மன்றத்தின் இசைவைப் பெறும்படி கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கேரள அரசு, தன்னிச்சையாக அட்டப்பாடி பள்ளத்தாக்குத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு மேற்கொள்வதற்காக, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவிடம், Expert Appraisal Committee–இடம் நிலையான ஆய்வு வரம்புகளை, Standard Terms of Reference–ஐ அளிக்க கேட்டுக்கொண்டது. கடந்த மார்ச் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற 92–வது கூட்டத்தில் கேரள அரசின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இக்குழு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறுமாறும், தமிழ்நாடு அரசு அதன் கருத்தினை அளித்த பின்தான் கேரள அரசின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என முடிவு எடுத்தது. தமிழ்நாடு அரசுக்கு 10–5–2016 அன்று கிடைக்கப்பெற்ற கேரள அரசின் கடிதம் பரிசீலனையில் இருந்தபோதே, கேரள அரசு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறாமலேயே தன்னிச்சையாக இத்திட்டத்திற்கான பரிந்துரைக்காக மீண்டும் வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவினை அணுகியது. கடந்த ஆகஸ்ட் மாதம் 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடைபெற்ற 96–வது கூட்டத்தில் ஒரு பொருள் நிரலாக Agenda Item ஆக சேர்க்கப்படாமல், ஒரு கூடுதல் பொருள் நிரலாக Additional Agenda Item ஆக இது பரிசீலிக்கப்பட்டு, கேரள அரசு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்வதற்கான, நிலையான ஆய்வு வரம்புகளை வழங்க பரிந்துரை செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

[செல்வி ஜெ ஜெயலலிதா][*2016* செப்டம்பர் *2*

இந்நிலையில், இக்குழு தமிழ்நாட்டின் கருத்தினைப் பெறாமல் முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்தும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்து தமிழ்நாடு அரசுக்கு இதன் தொடர்பாக கடிதங்கள் ஏதும் வரவில்லை என்பதை எடுத்துரைத்தும், அவ்வாறு கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக இக்குழுவின் நடவடிக்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது உண்மைக்கு மாறானதாகும் என்றும் நான் *27–8–2016* அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

பிற்பகல் *12–55*

மேலும், இப்பிரச்சினையில் பிரதமர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான நிலையான ஆய்வு வரம்புகள் வழங்குவதற்கு அளித்த பரிந்துரையை உடனடியாக திரும்பப் பெற மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் அதனைச் சார்ந்த முகமைகளுக்கு அறிவுரை வழங்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளேன். காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும், கேரள மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் நீர் ஆதார அமைச்சகம் ஆகியன அனுமதி அளிக்கக்கூடாது எனவும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்.

இதனைத் தொடர்ந்து, எனது உத்தரவின்பேரில், தலைமைச் செயலாளர் அவர்கள் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கும் மற்றும் நீர் ஆதார அமைச்சகத்திற்கும் இதே கருத்துகளை வலியுறுத்தி, *30–8–2016* அன்று கடிதம் அனுப்பியுள்ளார். மேலும், தலைமைச் செயலாளர் அவர்கள் *30–8–2016* அன்று கேரள அரசின் தலைமைச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில், உத்தேசித்துள்ள இந்த ஆய்வினை மேற்கொள்ளக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியும் மற்றும் எந்தவொரு அணை கட்டும் பணியையோ அல்லது திட்டத்தையோ காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும், கேரள அரசு மேற்கொள்ளக் கூடாது எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 96–வது கூட்டத்தில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு நிலையான ஆய்வு வரம்புகள் வழங்க அளித்த பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும், காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் மத்திய அரசை கேட்டுக்கொள்ள பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீர்மானம்

“சிறுவாணி நதி, அட்டப்பாடி பள்ளத்தாக்கில், கேரள மாநிலத்தில் உற்பத்தியாகி அம்மாநிலத்திற்குள்ளேயே ஓடி, பவானி ஆற்றுடன் கேரள எல்லைக்குள்ளேயே சேருகின்ற ஒரு நதி ஆகும். இந்த ஆறு, பன்மாநில நதியான காவேரி நதியின் துணை உபநதியாகும். எனவேதான், காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையில் சிறுவாணி நதி, பவானி ஆற்றுப்படுகை ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் நீரையும் கணக்கில் கொண்டு மாநிலங்களுக்கிடையே காவேரி நதிநீர் பங்கீட்டு அளவைப் பற்றி குறிப்பிட்டுள்ளது.

பிற்பகல் 1–00

2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறது என ஊடகங்களில் செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு

21–6–2012 அன்று கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்மீது உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தில் விளக்கங்கள் கோரும் மனுக்கள் நிலுவையிலுள்ள நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும், நீதிமன்ற உத்தரவுகள் வரும் வரையிலும், கேரள அரசு எந்தவொரு திட்டத்தையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என கேரள அரசுக்கு அறிவுரை வழங்கும்படி கேட்டுக்கொண்டதுடன், மத்திய நீர்வளக் குழுமம் எந்தவொரு தொழில்நுட்ப அனுமதியும் வழங்கக்கூடாது எனவும் கேட்டுக்கொண்டார். அதைத் தொடர்ந்து, தமிழக அரசால் இதுகுறித்து மத்திய அரசுக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டன.

19–9–2013 அன்று தமிழ்நாடு அரசுக்கு மத்திய நீர் ஆதார அமைச்சகம் அனுப்பிய கடிதத்தில், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவினைப் பெற்ற பின்னர், காவேரி நடுவர் மன்றத்தின் இசைவைப் பெறும்படி கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது என தெரிவித்தது.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, Expert Appraisal Committee 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற 92–வது கூட்டத்தில், அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு மேற்கொள்வதற்கான நிலையான ஆய்வு வரம்புகளுக்கு, Standard Terms of Reference ஒப்புதல் அளிக்க கேரள அரசு கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கு தமிழ்நாடு அரசின் கருத்தினைப் பெறுமாறும், தமிழ்நாடு அரசின் கருத்து பெறப்பட்டபின்தான் கேரள அரசின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் எனவும் முடிவெடுத்தது.

இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு 2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் நடைபெற்ற 96–வது கூட்டத்தில், கேரள அரசின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்வதற்கான நிலையான ஆய்வு வரம்புகளுக்கு அனுமதி அளிக்க மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது.

2016 செப்டம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மத்திய நீராதார அமைச்சகத்தின் 19–9–2013 நாளிட்ட கடிதத்திற்கும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் மார்ச் மாதம் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் நடைபெற்ற கூட்ட முடிவிற்கும் முரணானதாக இந்தப் பரிந்துரை உள்ளது. மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள வல்லுநர் மதிப்பீட்டுக் குழு கூடுதல் பொருள் நிரலாக இந்தப் பொருளை எடுத்துக்கொண்டு, அவசர கதியில் ஒப்புதல் வழங்கியுள்ளது வருத்தத்திற்குரியது. இந்த கூட்ட நடவடிக்கைக் குறிப்பில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் தமிழ்நாடு அரசுக்கு பல கடிதங்கள் அனுப்பியும், தமிழ்நாடு அரசின் பதில் கிடைக்கப் பெறவில்லை என உண்மைக்கு மாறாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கு இந்த மாமன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டிற்கு எதிராக அவசர கதியில் இந்தக் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இம்மாமன்றம் கருதுகிறது.

"The EAC took note of no responses from the Tamil Nadu State instead of several letters sent from the Government of Kerala and MoEF & CC to the Government of Tamilnadu. . ." *என்று,* "inspite of" *என்பதற்குப் பதிலாக* "instead of" *என எழுதப்பட்டிருப்பதே இந்த அவசர கதியை தெரிவிப்பதாக இந்த மாமன்றம் கருதுகிறது.*

எனவே, மத்திய நீர் ஆதார அமைச்சகத்தின் 19–9–2013 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் 92–வது கூட்டத்தில் தெரிவித்துள்ளபடியும், தமிழ்நாடு அரசு மற்றும் காவேரி நடுவர் மன்றத்தின் இசைவு பெறாத நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவின் 96–வது கூட்டத்தில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு திட்டத்திற்கு நிலையான ஆய்வு வரம்புகள் வழங்குவதற்கான பரிந்துரை தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என இந்த மாமன்றம் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா][2016 செப்டம்பர் 2 பிற்பகல் 1–05

மேலும், காவேரிப் படுகையில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு நடைமுறைக்கு வரும் வரையிலும், மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இறுதியாக்கம் செய்யப்படும் வரையிலும் கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் மத்திய அரசை இந்த மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்மானத்தை இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற உறுப்பினர்கள் நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாகக் கருத்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் காவேரி நதியின் உப நதியான சிறுவாணி நதி நீரை, கேரள அரசின் தவறுகளை வேரறுக்கும்வகையிலும், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டும்வகையிலும் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்த மாமன்றத்தில் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சிறப்பு மிக்க தீர்மானத்தை மனதார வழிமொழிகின்றேன்.

இந்த நேரத்திலே ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உலகின் பிரம்மாண்டமான நதிகளிலே ஒன்று பிரம்மபுத்திரா. அது திபத்திலே உருவாகி, சீனாவைக் கடந்து, இந்தியாவிலே நுழைந்து, பங்களாதேஷ் நாட்டின் வழியாக வங்கக்கடலில் கலக்கிறது. இந்த நேரத்திலே, இந்தியாவும், ரஷ்யாவும் ஏவுகணை கூட்டுத் தயாரிப்பிலே ஈடுபட்டபோது, அந்தக் கூட்டுத் தயாரிப்பான ஏவுகணைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று ஆய்வு நடந்தது. அந்த நேரத்திலே, தமிழ்நாட்டினுடைய திருமகன், மேதகு அப்துல் கலாம் ஐயா அவர்கள், அந்த ஆலோசனை நடந்த கூட்டத்தில் சொல்கிறார், 'இரண்டு நாடுகளுக்கும் சிறப்பு ஒன்று இருக்கிறது. ஒன்று, ரஷ்யாவின் தலைநகர், மாஸ்கோ நதியின் ஓரமாக இருக்கிறது. மாஸ்கோ நதி என்பது ரஷ்யாவின் சிறப்பு.

2016 செப்டம்பர் 2] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

அதேபோன்று பிரம்மாண்டமாகப் பாய்ந்து எங்கள் நாட்டை வளப்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய பிரம்மபுத்திரா நதி என்பது எங்களுடைய நாட்டின் சிறப்பு. எனவே, மாஸ்கோ என்ற வார்த்தையிலிருந்து ஒரு பகுதியையும், பிரம்மபுத்திரா என்று வார்த்தையிலிருந்து ஒரு பகுதியையும் இணைத்து "பிரமோஸ்" என்று அந்த ஏவுகணைக்குப் பெயர் சூட்டலாம் என்று முடிவெடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் நான் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், அந்த பிரம்மபுத்திரா நதி திபத்திலிருந்து, சீனாவைக் கடந்து, இந்தியாவின் வழியாக பங்களாதேஷ் நாட்டைக் கடந்து வங்கக் கடலிலே கலக்கக்கூடிய நிலையிலே, சீன அரசு பன்னாட்டு விதிகளை மீறி, இந்தியாவிற்குக் கிடைக்கக்கூடிய பிரம்மபுத்திரா நதியின் நீரை கெடுக்கும்வகையில் அவர்கள் ஒரு தடுப்பணையைக் கட்டியபோது, நம்முடைய இந்தியப் பேரரசு என்ன சொன்னது என்று சொன்னால், நம்முடைய இந்தியத் திருநாட்டிற்கு வரக்கூடிய பிரம்மபுத்திரா நதியின் நீரைத் தடுக்காதீர்கள் என்று சீனாவை எச்சரித்தது. இன்று தமிழ்நாட்டை அண்டை மாநிலங்கள் நதி நீரிலே வஞ்சிக்கக்கூடிய நிலையிலே, நீங்கள் நேர்மையாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமா? என்று இந்த நேரத்திலே நான் மனம் திறந்து கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றாகப் பார்த்துப் பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் என்று சொல்லுங்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். உள்நாட்டு விவகாரத்திலே, அதுவும் தென்னாட்டு விவகாரத்திலே, எங்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் பிறந்த, நமது முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ்நாட்டின் விவகாரத்திலே, தண்ணீரிலே வஞ்சகம் செய்யலாமா? தண்ணீர் விவகாரத்தில் ஏமாற்ற முனையலாமா? அதை ஒரு காலத்திலும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது.*

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரளத்தைச் சேர்ந்த அதிகாரிகள் டில்லியிலே, ஆதிக்க அவைகளிலே பெரிய அளவிலே lobbying *செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக முடிவெடுக்கும் போக்கை நடுவண் அரசு எடுப்பது என்ன நியாயம்? என்று கேட்கிறேன்.*

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2016 செப்டம்பர் 2

உடம்பிலே கொழுப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, சிறிதாக இருக்கக்கூடிய மூளையைவிட கொழுப்பு சிறந்தது என்று யாரும் முடிவெடுத்துவிட முடியாது. இதைப் புரிய வேண்டியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நேரத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவரின் உணர்வுகளை வெளிப்படுத்தும்விதமாக, நடுவண் அரசுக்கு ஓர் அருமையான தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்ய இருக்கிறேன். 'காற்றுள்ள பந்து தண்ணீரில் மூழ்காது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு இந்த விஷயத்திலே ஒரு காலத்திலும் தோற்காது' என்று கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் தமிழர்கள். 'Sare Jahan se Accha Hindustan hamara' என்று கவிஞர் Allama Muhamed Iqbal அவர்கள் தேசிய ஒருமைப்பாடு குறித்து பாடினார்கள். அதை பாரதியார் அவர்கள் தமிழிலே மொழி பெயர்த்தார்கள். 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்று சொன்னார்கள். இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டை, பண்பாட்டைக் கட்டிக்காக்கும்வகையிலே, நதிநீர் விஷயத்திலே, தமிழ்நாட்டிற்கு நீதி மறுக்கக்கூடாது என்று சொல்லி, நாம் இந்தியர்கள், நாம் தமிழர்கள், அதேநேரத்தில் நம்மை கடலிலே மிதக்கும் வெறும் கட்டுமரங்களாக யாரும் நினைத்துவிடக் கூடாது. உரிமையைப் பெற, நீதியைக் காக்க, நமது முதல்வர் அம்மாவின் தலைமையிலே அலைகடலை கிழித்துச் செல்லும் போர்ப்படை கப்பலாக மாறுவோம். அதில் புறப்படத் தயாராக இருங்கள் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்று, வழிமொழிந்து அமர்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்மொழியப்பெற்றிருக்கிற அரசினர் தனித்

தீர்மானம், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற தீர்மானம். நியாயத்தின் அடிப்படையிலும், உரிமையின் அடிப்படையிலும் அவசியமான தீர்மானம். சிறுவாணி நதியின் குறுக்கே, அட்டப்பாடியில் தடுப்பணை கட்ட 2012—ல் கேரள அரசு முனைகிறது என்கின்ற செய்தியை ஊடகத்தின் வழியாகத் தெரிந்து, அதைத் தடுத்து நிறுத்திட, சம்பந்தப்பட்ட மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு அன்றே கடிதம் எழுதி, தமிழ்நாட்டின் ஆற்று நீர் உரிமையைக் காத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முடியளவும், கடுகளவும், ஒரு நொடியும் தயங்கியது கிடையாது என்பதை அப்போதே கடிதத்தின் வாயிலாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகஸ்ட் 2016—ல் சம்பந்தப்பட்ட மதிப்பீட்டுக் குழு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு வரம்புக்கு அனுமதி அளிக்கும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்தது, முந்தைய மதிப்பீட்டுக் குழுவின் முடிவுக்கு முரணாக உள்ளது. தமிழ்நாடு அரசினுடைய கருத்தை அறியாமல், நாங்கள் அதற்கு அனுமதி தரமாட்டோம் என்று சொல்லிய பிறகும்கூட அதற்கு முரணாக, மீண்டும் 2016—ல் இப்போது அதே மதிப்பீட்டுக் குழு சம்பந்தப்பட்ட துறை அமைச்சகத்திற்கு அனுமதி வழங்கலாம் என்கின்ற இந்தப் பரிந்துரை, தமிழகத்திற்கு எதிராகச் செய்யப்பட்டிருக்கின்ற துரோக அனுமதி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தின் வழியாக தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகச் சரியான நேரத்தில் தமிழ்நாட்டு மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்துள்ளார்கள். ஏற்கெனவே, காவேரியை மீட்டுத் தந்து, முடங்கிக் கிடந்த அந்தக் காவேரியினுடைய இறுதித் தீர்ப்பை, மத்திய அரசிதழிலே கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வியானார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுடைய, ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய நம்பிக்கையை, பரிசைப் பெற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் தமிழ்நாட்டினுடைய முல்லை-பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி, அண்டை மாநிலங்களில், அனைத்துக் கட்சிகள் கூடி, பல கூட்டங்கள் நடத்தி, அனைத்துக் கட்சிகளும் கூடி, அரசாங்கமே நீதிமன்றத்தில்

[திரு. உ. தனியரசு] [2016 செப்டம்பர் 2

முறையிட்டபோதும்கூட தமிழ்நாடு அரசினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு வாதத்தை வைத்து, ஒரு வார்த்தையை வைத்து, ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டால், அதை மறுத்து தீர்ப்பு கூறுவதற்கு உலகத்தில் எந்த நீதிமன்றத்திற்கும் மனசாட்சி இல்லை, எந்த நீதிமன்றமுமேகூட மாற்ற முடியாத அளவிற்கு இயற்கையின் நீதியின்பால், சட்டத்தின் நீதியின்பால், மாநிலங்களுக்கிடையில் இருக்கின்ற இறையாண்மையின்பால், மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்ற உயர்ந்த ஜனநாயகவாதி. நீதியையும் சட்டத்தையும் மதித்து, நாட்டு மக்களை நேசிக்கின்ற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் 7 கோடிக்கும் மேல் இருக்கின்ற, ஒட்டுமொத்த மக்கள் சமுதாயத்தினுடைய ஒரு துண்டு நிலத்தையும் யாரும் அபகரித்துவிட முடியாது. அப்படி தாரை வார்த்த நிலத்தைக்கூட, கச்சத் தீவைக்கூட மீட்டெடுப்பதற்கான தீர்மானமும், உச்ச நீதிமன்றத்திலே வழக்கும் தொடுத்த தலைவி நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்றே காவேரி ஆற்றினுடைய உரிமையிலே, திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது வேறு எந்த கட்சியை சேர்ந்தவர்களோகூட அதற்காக முனைந்து, அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது பணியாற்றாமல் இருந்தபோதும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் பாகுபாடு இல்லாமல், நியாயத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆற்றுநீர் உரிமையைப் பெற்றுத் தந்தார்கள். ஒரு சொட்டு நீரைக்கூட வீணாக்காமல், கேரளாவோ, ஆந்திராவோ அல்லது கர்நாடகாவோ, மத்திய அரசாங்கமே நினைத்தாலும், உச்ச நீதிமன்றத்தின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டு ஆற்றினுடைய உரிமையையும் பெற்றுத் தருவார், இந்த நிலத்தையும் பெற்றுத் தருவார். சிறுவாணி ஆற்றின் குறுக்கே அட்டப்பாடியில் அணை கட்ட முயற்சிக்கின்ற கேரள அரசின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தினை நான் மனதாரப் பாராட்டி, வழி மொழிந்து என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2]

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், ஏன் இவ்வாறெல்லாம் உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்? இவ்வாறெல்லாம் பேசாதீர்கள். அமைதியாக இருங்கள். தீர்மானத்தின்மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சட்டமன்ற நிகழ்வில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்காலச் சந்ததியினரின் குடிநீர் ஆதாரத்தை நிலைநிறுத்துவதற்காகவும், தமிழர்களுடைய குடிநீர்ப் பிரச்சினை உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கின்ற ஆணித்தரமான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். சிறுவாணி, கோயம்புத்தூருக்கு மேற்கே, 37 கி.மீ. தூரத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது. கோவை நகரின் முக்கிய குடிநீர் ஆதாரங்களில் ஒன்றாக அது இருக்கிறது. என்றைக்கும் 'கோவையின் குற்றாலம்' என்று அழைக்கக்கூடிய அது, இன்றைக்கு இவர்கள் செய்யக்கூடிய இந்த சதியின் பயனாக, 1956 ஆம் ஆண்டு பன்மாநில நதிநீர் தாவாச் சட்டம், சிறுவாணி நதிக்கும் பொருந்தும் என்று சொல்லப்படுகிறது. அந்த வகையில், 10–5–1969 அன்று கேரள அரசும், அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசும் 2.5* T.M.C. *பாசனக் குடிநீர் திட்டத்திற்காக அன்றைக்கு ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து, 2007 ஆம் ஆண்டில் கேரள அரசு உச்ச நீதிமன்றத்திலும், காவேரி நடுவர் மன்றத்திலும் 6* T.M.C. *தண்ணீர் வேண்டும், அதை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மனுவில் கோரியுள்ளது. அந்த நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான தமிழக அரசு, அன்றைக்கு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்மீதும், தமிழ்நாட்டிற்கு உள்ள சாதக பாதகங்களைக் கண்டறியும்படியும், கேரள மற்றும் கர்நாடக அரசுகள் ஒதுக்கீடு செய்த நீரின் அளவு அதிகம் எனக் கருதி, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனு வருகின்ற 18–10–2016 அன்று நீதிமன்றத்தில் வரவிருக்கிறது. இந்த நிலையில், இம்மாமன்றத்தில் இன்று வந்திருக்கக்கூடிய இந்த முக்கியமான தீர்மானத்தைப் பொறுத்தவரை, நடைபோட்ட காவேரிக்குத் தடை போட்டவர் பலருண்டு. ஆனால், மதி கொண்டு, சதி வென்று, காவேரியை வென்றெடுத்த காவேரித்*

தாய், தமிழர்களின் கருணைத் தாய், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காவேரியை அன்று தடுத்துக் காத்தது, கரிகாலன். காவேரியை இன்று நிலைத்துக் காத்துக்கொண்டிருப்பது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடலின் நடுவே பயணம் போனால், குடிநீர் தருவது யாரோ என்பது அன்றைய ஒரு கேள்வியாக இருந்தது. அந்த நிலையை மாற்றி, இன்றைக்கு அம்மா குடிநீர்த் திட்டத்தைத் தந்து, அந்தக் குறையையும் போக்கியவர், மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழர்களின் உரிமைக்காகப் போராடுகின்ற வாழும் 'போராளி', (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லைப் பெரியாறு, கச்சத் தீவு, பாலாறு, இன்றைக்கு சிறுவாணி. காவேரிக்காக சட்டப் போராட்டம் நடத்தினார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதில் மாபெரும் வெற்றி பெற்றார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறுக்கு சட்டப் போராட்டம் நடத்தினார், மாண்புமிகு அம்மா அவர்கள். அதிலும் வெற்றி பெற்றார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவுக்காக சட்டப் போராட்டம் நடத்துகிறார், மாண்புமிகு அம்மா அவர்கள். நாளை வெற்றி பெற்றே தீருவார் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதில் யாருக்கும் எந்த ஒரு சந்தேகமும் இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித்தான் பாலாறுக்கும் நடக்கும். பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை, அனைத்து கட்சிக் கூட்டம், அனைத்து கட்சிக் கூட்டம், அனைத்து கட்சிக் கூட்டம், என்கிறார்கள். காவேரிப் பிரச்சினைக்காக யார், யார் பேசினார்கள்? எத்தனை முறை பேசினார்கள்? எத்தனை முறை அனைத்து கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள்? என்ன பயன்? நீதிமன்றம் ஒன்றே தீர்வு என்று முடிவெடுத்தார், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தீர்க்கதரிசனம் வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சட்ட நடவடிக்கை வெற்றி பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் இழந்த ஜீவாதார உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2] [திரு. சே. கருணாஸ்]

தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளைப் போராடி வெற்றி பெற்றுத் தந்துகொண்டிருக்கக்கூடியவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

தமிழகத்தின் ஜீவாதார உரிமையான சிறுவாணி உரிமையையும் பெற்றுத் தரப்போகிறவர் மாண்புமிகு அம்மா, அம்மா, அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) *மற்றவர்களெல்லாம் சும்மா, சும்மா, சும்மாதான் என்று சொல்லி,* (மேசையைத் தட்டும் ஒலி) *இந்தத் தீர்மானத்தை என்னுடைய திருவாடனை தொகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்த்திருக்கக்கூடிய முக்குலத்தோர் புலிப்படையின் சார்பாகவும் மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஜீவாதார பிரச்சினையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். இப்பேர்பட்ட தீர்மானம் ஏகோபித்த முறையிலே இந்த அவையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் வலியுறுத்தி இருக்கின்ற வகையிலே, சிறப்பான ஒரு தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கின்றது. எல்லா நிலைகளிலும் தமிழர்களுடைய வாழ்வாதாரத்தை நசுக்கக்கூடிய வகையில், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா அரசுகளும், மத்தியில் ஆட்சியிலே இருக்கக்கூடியவர்களும் நம்முடைய உணர்வுகளை எல்லாம் கொச்சைப்படுத்தக்கூடிய வகையில், நம் வாழ்வாதாரத்தை இழக்கக்கூடிய அளவிலே, ஒரு நடவடிக்கையை கண்டிக்கக்கூடிய வகையிலும், ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியிலே இருக்கின்றோம் என்பதை எடுத்துச்சொல்லக்கூடிய வகையிலும் ஒரு சிறப்புக்குரிய தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.*

கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பன்மாநில நதியாக இருக்கக்கூடிய சிறுவாணி நதி குறித்து தமிழக சட்டமன்றப் பேரவையில் தனித் தீர்மானம் இங்கே

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2016 செப்டம்பர் 2

முன்மொழியப்பட்டிருக்கின்றது. தமிழகத்தினுடைய பாதுகாப்புக்காக எல்லைப் பாதுகாப்பு வீரர்களும், மொழிப்போர் தியாகிகளும் எப்படி அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டார்களோ, அதனடிப்படையில் இப்போது நம்மை சுற்றியிருக்கக்கூடிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உரையை சுருக்கமாகப் பேசி முடியுங்கள். இன்றைக்கு கில்லட்டின் இருக்கிறது, 2–00 மணிக்குள் நான் அலுவலை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு கில்லட்டின் நேரத்திற்குள் அலுவல்களை முடிக்க வேண்டும்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு ஒரு நிமிடம்கூட கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். நான் எதுவும் தவறாகச் சொல்லவில்லையே.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தவறாகச் சொல்லவில்லை, சுருக்கமாக உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: சிறுவாணி நதி குறித்து தமிழக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்படக்கூடிய சிறப்புக்குரிய தனித் தீர்மானத்தை இந்திய தேர்தல் ஆணையத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மாநில அரசியல் கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம்கூட பேசவில்லை. மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் இரண்டு முறைதான் நான் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். தேர்தல் ஆணையத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கக்கூடிய மாநில கட்சி. நான் எதுவும் தவறாகச் சொன்னேனா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் காலையிலே என்னிடம் கேட்டதற்கு, வரவேற்பதற்கு அனுமதி தருகிறேன் என்று சொன்னேன். தீர்மானத்தை வரவேற்று விட்டீர்கள், உட்காருங்கள். 2–00 மணிக்குள் நான் அலுவலை முடிக்க வேண்டும்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: இங்கே முன்மொழியப்பட்ட தனித் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன், வழிமொழிகின்றேன்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஒரு முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே முன்மொழிந்திருக்கிறார்கள். சிறுவாணி நதியில் அட்டப்பாடி என்ற இடத்திலே ஓர் அணையைக் கட்டுவதற்கு கேரள அரசு முயற்சி செய்கிறது. அவ்வாறு அந்த அணையைக் கட்டினால், கோயம்புத்தூர் மற்றும் அதற்கு அருகில் இருக்கக்கூடிய மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை ஆரம்பக் கட்டப் பணியைத் துவக்குவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. அந்த அனுமதியை மத்திய அரசு எவ்வாறு கொடுத்தது? ஏன் கொடுத்தது? என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சியாகிய நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு, இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் மிக, மிக முக்கியமானது. இதைப்போல, காவேரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்திலே ஓர் அணை, அதைப்போல பாலாற்றின் குறுக்கே ஓர் அணை என்று தமிழகம் தண்ணீரைப் பெறுவதிலே இவ்வாறு பல தடங்கல்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். அதிலே, நம்முடைய அரசு இன்றைக்கு நீதிமன்றத்தின் வழியாக ஒரு நல்ல முடிவைப் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். அதில் இன்னொன்றும் இருக்கிறது. ஏன் அந்த அரசு. . .

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தீர்மானத்தை வரவேற்று, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள்.

திரு. கரி. இராமசாமி: முடித்துவிடுகிறேன். சம்பந்தப்பட்ட அரசுகளுடன் பேசி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

[2016 செப்டம்பர் 2

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாது என்ற இடத்தில் காவேரியின் குறுக்கே அணை கட்ட வேண்டும் என்று முயற்சிப்பது மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் அரசு என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கொண்டு அவர் அதைப்பற்றி இங்கே பேசாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதோடு முடியுங்கள்.

திரு. கரி. இராமசாமி: அதெல்லாம் முக்கியமான விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் சொல்வது உண்மைதான். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இது ஜீவாதார உரிமை. தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமை. தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உங்களுக்கு நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில், நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வரவேற்கிறோம். இதுபோன்ற நடவடிக்கைகளை நீங்கள் தொடர்ந்து எடுக்க வேண்டும். எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் எப்பொழுது அழைத்தாலும், எந்த நடவடிக்கைக்கு அழைத்தாலும் நாங்கள் வரத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வரவேண்டுமென்று தமிழக விவசாயிகளில் ஒரு பகுதியினரும், ஏன் பெரும் பகுதியினரும், தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சியினரும்

2016 செப்டம்பர் 2] [திரு. துரைமுருகன்]

இதை வெளியிலே வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகள் எல்லாம் இதை அடிக்கடி வற்புறுத்தினார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று அன்றைக்கு வலியுறுத்திப் பேசினார்கள். எது எப்படி இருந்தாலும், எல்லோருடைய அந்த அபிலாஷைகளையெல்லாம் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. இதிலே முக்கியமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், இங்கே நாம் அவர்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்களல்ல. கர்நாடகத்திலோ, கேரளத்திலோ அவர்கள் நமக்குத் தரும் தொல்லைகளை நம் தமிழகத்தில் இருக்கிற அரசு எதிர்த்துதான் தீரும். ஆனால், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் என்ற ஓர் அமைச்சகம் இருக்கிறது. அந்த அமைச்சகத்திலே ஒரு Expert Appraisal Committee *இருக்கிறது. அவர்கள்தான் அந்த* Standard terms of reference *கொடுக்க வேண்டும். அதை அவர்கள் முதலில் மார்ச் மாதத்தில் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, ஆகஸ்ட் மாதத்தில் மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், எங்கேயோ தவறு மத்திய அரசிடம் நடந்திருக்கிறது என்று அர்த்தம். அதனால்தான் அதைக் கொடுக்கக் கூடாது என்று மறுபடியும்* insist *செய்திருக்கிறீர்கள். இருந்தாலும், இதோடு நாம் விட்டுவிடாமல் மறுபடியும் இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களும், வெளியில் இருக்கிறவர்களும் இதையொட்டி இன்னும் 2 கோரிக்கைகளைச் சொல்கிறார்கள். அதை நீங்கள் செய்வீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று இதுகுறித்து, மற்ற பிரச்சினைகள் குறித்து தேவை என்றால், கூட்டுங்கள்.*

பிற்பகல் 1–30

இல்லாவிட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே போனால், இன்னும் வலிவும், பெருமையும் சேர்க்கும். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலேயே ஒரு குழு

[திரு. துரைமுருகன்] [2016 செப்டம்பர் 2

மத்திய சர்க்காருக்குச் சென்று முறையிடலாம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், நமது சுற்றுவட்டாரங்களிலே, நெய்யாற்றங்கரையிலே ஆரம்பித்து கேரளாவிலே பல பிரச்சினைகள், காவேரியிலே ஆரம்பித்து பல பிரச்சினைகள் கர்நாடகத்தோடு, இப்போது பார்த்தால் பற்றாக்குறைக்கு பாலாற்றுப் பிரச்சினை. மத்திய சர்க்காரிலே இவற்றைக் கொண்டு போய், நம்முடைய எதிர்ப்பை வலுவோடு தெரிவிக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றால் தமிழ்நாட்டுக்கு அது பெருமை, வலிமை. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முடியாவிட்டாலும், மாண்புமிகு நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அல்லது concerned Minister தலைமையிலோ எதிர்க்கட்சிகள் அடங்கிய குழுவை அழைத்துச் சென்று, மத்திய சர்க்காரிடத்திலே நாம் தெளிவாகச் சொல்ல வேண்டும். நாங்கள் எவ்வளவு உறுதியோடு இருந்தோம். இதற்குப் பிறகு எங்களையும் மீறி, நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம். எங்களைக் கேட்டுக்கொண்டுதான் அவர்கள் எதையும் செய்ய வேண்டும் என்று நீங்கள் அறிவுறுத்தியும், பிறகு உங்களிடத்திலே இருக்கக்கூடிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் இப்படிச் செய்கிறதே, இது நியாயமா என்பதை மாண்புமிகு பிரதமர் வரையிலே நாம் தெரிவித்துவிட வேண்டும். அப்போதுதான், இந்தப் பிரச்சினையிலே, மத்திய சர்க்காரும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும், நமக்குள்ளே பல பிரச்சினைகள் இருந்தாலும்கூட, நாம் இதிலே ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதைக் காட்டுவதற்கு உதவும். இப்போதுகூட நமக்குள் ஆயிரம் சண்டை ஏற்படுகிறது. ஆனால், எப்படி இதே சண்டை கர்நாடகத்தில் வரவில்லையா என்றால், வருகிறது. அங்கே எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றாகப் போய்விடுவார்கள். இங்கே நமக்கும்தான் வருகிறது. தயவுசெய்து நான் சொல்கிறேன், இந்த ஒரு பிரச்சினையில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அரசாங்கம் செய்கின்ற முடிவுக்கு, தமிழ்நாடு முழுவதும் உள்ள அத்தனை பேரும் ஒத்துழைக்கிறார்கள். எனவே, அத்தனை பேரையும் இணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் சர்க்காருக்கு இருக்கிறது என்று சொல்லி, தீர்மானத்தை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். தமிழக விவசாய மக்களின் நலன் காத்திட்ட, நதிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் குறிப்பாக, காவேரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற பன்மாநில நதிகளிலிருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீர்ப் பங்கினை உரிய வழியிலே பெற்றுத் தரும் நாடு போற்றும் ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பன்மாநில நதி சம்பந்தமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாரதப் பிரதமர், சம்பந்தப்பட்ட மாநில முதல்வர் மற்றும் மத்திய அரசின் செயலகம் ஆகியவற்றிற்கு கடிதம் எழுதப்பட்டும், பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து கோரிக்கை வைக்கப்பட்டும், அதற்கு தீர்வு ஏற்படாததால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு, அதில் வெற்றிகண்டு, சாதனை படைத்தவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் எவருமில்லை, இதை நாடறியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிலையில், அட்டப்பாடி பாசனத் திட்டத்திற்காக கேரள அரசு அணை ஒன்று கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருவதை நிறுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கேரள அரசுக்கு 13 கடிதங்கள் எழுதப்பட்டன. மத்திய நீர் ஆதாரத் துறை அமைச்சகத்திற்கு 7 கடிதங்கள் அனுப்பப்பட்டன. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்திட்ட நடவடிக்கையின்மூலம், விவசாய மக்களுடைய நன்மைகளைப் பாதுகாப்பதில் ஒப்பற்ற தலைவியாக விளங்குபவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் நலன் காக்க வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவும், பரிவும் கவரி வீச, கருணையும் தயவும் பதாகையாக, கடமையும், கண்ணியமும் வெண்கொற்றக் குடையாக, மக்களுக்கு அர்ப்பணித்த வாழ்வு செங்கோலாக, நியாயமும், நேர்மையும் கவசமாக, தவ வாழ்வு வாழ்ந்து வரும் தமிழகத்தைக் காத்து வரும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர சாதனையாக, மகத்தான தொடர் வெற்றி பெற்று 6 ஆவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக அரியணை ஏறி, அளப்பரிய சாதனைகளை தினம், தினம் தந்து கொண்டிருக்கக்கூடிய எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், வாக்களித்த மக்களின் கை விரல் மையின் ஈரம் காய்வதற்குள், தமிழக மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே தலைவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியைக் காத்த மாண்புமிகு அம்மா அவர்கள், முல்லைப் பெரியாறைக் காத்த மாண்புமிகு அம்மா அவர்கள், மீனவர்களைக் காத்த எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்றைக்கு சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட திட்டமிட்டுள்ளதற்கு எதிராக தனித் தீர்மானம் இயற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களின் நலன் காத்த அம்மா அவர்களுக்கு, கோவை மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சதி செய்து காவேரியைத் தடுத்தபோதும், மதி கொண்டு தடையை உடைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை, தமிழ் மண்ணில் ஜதி செய்ய மற்றொரு விதி செய்த, செயல் வீரமிக்கவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

தட்டும் ஒலி) குடகு விட்டு குதித்து வரும் காவேரியை அடகு வைத்த தவற்றை தன் அறிவால் சரி செய்து, மதியால் புது விதி செய்து தலைக் காவேரியை தமிழகம் அழைத்து வந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு பிரச்சினையிலும் முடிசூட்டியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் காவேரி படுகையில் கேரள மற்றும் கர்நாடக அரசுகள் எந்தத் திட்டத்தையும் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கக்கூடாது என மத்திய அரசை வற்புறுத்தி, சிறப்புமிக்க தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்துள்ளார்கள்.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்”

என்னும் வள்ளுவத்தை, தண்ணீரில் மெய்ப்பித்த தாயுருவப் போராளி, மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொண்டு, சிறப்பான தீர்மானத்தை முன்மொழிந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே ‘இல்லை’ என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை
(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்
(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை
(உ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
(ஊ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(எ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) நேரம் 1–37 ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) நேரத்தின் அருமை கருதி, நீங்கள் எனக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அரைமணி நேரம் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள்.*

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.*)

பேரவைத் தலைவரை மதியுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை மதித்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, நான் இரண்டு மணிக்குள் எல்லா விவாதங்களையும் முடிக்க வேண்டும். இரண்டு மணிக்கு Guillotine. *நீங்கள், ஏற்கெனவே அரை மணி நேரத்திற்கு மேலாகப் பேசிவிட்டீர்கள். நேரமில்லாததினால், எனக்கு ஒத்துழைக்கவும். (குறுக்கீடு) இல்லை, தீர்ப்பு நான் ஏற்கெனவே சொன்னதுதான். பதிலும் சொல்லிவிட்டேன். அந்தத் தீர்ப்பு, தீர்ப்புதான். தீர்ப்புக்கு மாற்று கிடையாது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் பேச*

முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) இன்று நிறைய சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டியன இருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு "அம்மாவின் பாதங்களில்தான் அடங்கியிருக்கிறது சொர்க்கம்" சொன்னது இஸ்லாம். (குறுக்கீடுகள்) "அம்மா நம் அருகில் இருந்தால், எமனுக்கும் நடுக்கம் வரும்" என்றது மகாபாரதம். (மேசையைத் தட்டும் ஒலி) "ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்க முடியாதென்றே அம்மாவைப் படைத்தான் என்றார்" அறிஞர் சிம்மன்ஸ். (குறுக்கீடுகள்) "அம்மா எனும் தியாகமே அனைத்தையும் வெல்லும்" என்றதோ, பிரபு லாங்வெல். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) என்னுடைய தீர்ப்பை மாற்ற முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்பைக் கொடுங்கள். வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) நான் Guillotine நேரத்திற்குள் விவாதத்தை முடிக்க வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்பைக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: "உலகில் புனிதத்திலும் புனிதமானது அம்மா" என உரைத்தவர் சாமுவேல் டைலர். (மேசையைத் தட்டும் ஒலி) "அம்மா எனும் கடவுள் மீதுதான் உலகம் நம்பிக்கை கொண்டுள்ளது" என்றவர் சாம் ஃபோர்ட் (குறுக்கீடுகள்) "அம்மாவின் இதயத்தில் மட்டுமே அன்பு மலர் மணம் வீசும்" இது, இங்கர்சால். (குறுக்கீடுகள்) "அம்மாவின் தியாகத்தை எழுத்தால் எழுத இயலாது" என தீர்க்கமாய்ச் சொன்னவர் திரு.வி.க. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் Guillotine time–க்குள் அலுவல்களை நிறைவேற்ற வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை மதியுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை மதிக்கிறீர்கள் அல்லவா! உட்காருங்கள். பேரவைத் தலைவரை மதிப்பதாக இருந்தால், நீங்கள் அவை

விதிகளுக்குக் கட்டுப்பட்டு உட்காருங்கள். இன்றைக்கு கில்லட்டின். அதற்குள் முடிக்க நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விதிகளை நான் சொல்லித்தர வேண்டியதில்லை. ஏற்கெனவே நீங்கள் இந்த அவையிலே பணியாற்றியிருக்கிறீர்கள்; விதிகள் தெரியும். பேரவைத் தலைவர் ஒரு முடிவைச் சொல்லிவிட்டால், அந்த முடிவின்மீது நீங்கள் மேற்கொண்டு பேச முடியாது. (குறுக்கீடுகள்) நான் அனுமதி அளிக்க முடியாது. (குறுக்கீடுகள்) ஆகவே, அதற்கு நான் அனுமதி அளிக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். நான் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். இன்றைக்கு கில்லட்டின், அந்த நேரத்திற்குள் அலுவல்களை முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்று பாடியவர் ஔவை மூதாட்டி. 'ஜீவ நதியாய் வருவார், தாகம் தீர்த்து மகிழ்வார், தவறினைப் பொறுப்பார், தருமத்தை வளர்ப்பார், தரணியிலே வளம் சேர்த்திடுவார், அந்தத் தாயில்லாமல் நானில்லை' என்று பாடினார் புரட்சித் தலைவர். இப்படி அறிஞரும், கவிஞரும் புகழ்ந்த தாயின் வடிவமாம், தாயன்பின் உருவமாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பெருமை கண்டு, ஏழரை கோடி தமிழர் கூட்டம் வணங்கி, வாழ்த்துகிறது. (குறுக்கீடுகள்) ஆறாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 100 நாட்களிலே இமயம் தொடும் இணையில்லா சாதனைகளைப் படைத்த சத்தியத் தாயை, சரித்திரத் தாயை, தெய்வத் தாயை, தியாகத் தாயை, கருணைத் தாயை, காவியத் தாயை, தமிழக மக்கள் தங்கள் இதயக் கோயிலிலே தெய்வமாக வைத்து பூஜித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கோடி தமிழகத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்மீது, பெற்ற தாயினும் மேலாக பரிவு காட்டி, அரசியல் முகவரி தந்து, நகரச் செயலாளராக, நகர மன்றத் தலைவராகப் பொறுப்பளித்து, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளராக, மாவட்ட

2016 செப்டம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கழகச் செயலாளராக, கழகத் தேர்தல் பிரிவு செயலாளராக, கழகப் பொருளாளராக்கி, ஆட்சி அடையாளம் கொடுத்து, இரண்டு முறை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினராக்கி, தற்போது, இரண்டாம் முறையாக போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்து, நிதி அமைச்சர் என்னும் பெரும் பொறுப்பை மீண்டும் எனக்கு அளித்து, என்னையும், என் குடும்பத்தையும் வாழ வைக்கும் தெய்வம், கலியுக மக்களின் கண்கண்ட தெய்வம், துன்பம் அணுகாது காக்கும் வழித்துணைத் தெய்வம், பாரம்பரிய பெருமைமிக்க இப்பேரவையில் பொதுத் துறை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், சட்டமன்றம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களுக்கு பதிலளிக்கின்ற நல்வாய்ப்பினை எனக்கு அளித்த, எளிய தொண்டனுக்கும் ஏற்றம் தரும் தெய்வம், எல்லோருக்கும் எல்லாம் தந்தருளும் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு நேரம் கோஷம் போட்டாலும், என்னுடைய முடிவிலே மாற்றமில்லை. (குறுக்கீடுகள்) அதை நான் மாற்ற முடியாது. அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வது எதையும் கேட்பதற்கு எனக்கு நேரமில்லை. (குறுக்கீடுகள்) 2 மணிக்கு கில்லட்டின், அதற்குள் விவாதத்தை முடிக்க வேண்டும். நீங்கள் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு குழப்பம் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை. நான் தீர்ப்பை நிச்சயம் மறுபரிசீலனை செய்யமாட்டேன், உறுதியாகச் செய்யமாட்டேன், கண்டிப்பாகச் செய்யமாட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு பொதுத் துறையின்கீழ் வருகின்ற மேதகு ஆளுநரின் அலுவலகம், இல்லப் பராமரிப்புப் பணிகள், மாண்புமிகு அமைச்சர்களின் நியமனப் பணிகள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், வருவாய் அலுவலரின் நிருவாகப் பணிகள், முன்னாள் படை வீரர்களின் நலன், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் நலன், சுதந்திரப்

போராட்ட வீரர் நலன் ஆகிய பணிகளைத் திறம்படக் கவனித்து வருகிறது.

பிற்பகல் 1–45

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமையில் நடைபெறும் சுதந்திரத் திருநாள், மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெறும் குடியரசுத் திருநாள் ஆகிய தேசிய விழாக்கள் நடைபெறும்போது மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கல்பனா சாவ்லா விருது மற்றும் கோட்டை அமீர் விருது ஆகியவற்றிற்கு விருதாளர்களைத் தேர்வு செய்தல் போன்ற பல பணிகளையும் பொதுத் துறை மேற்கொள்கிறது. (குறுக்கீடுகள்) தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியமும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. புகழேந்தி, உங்களை பலமுறை எச்சரித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய இடத்தை விட்டுவிட்டு இங்கே வந்து நின்று வீண் குழப்பம் செய்து கொண்டிருக்கிறீர்கள். நான் எச்சரிக்கிறேன். வேறு வழியின்றி நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நான் எச்சரிக்கிறேன். உட்காருங்கள் எல்லோரும். எல்லோரும் ஒத்துழைப்பைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால், நான் நிச்சயம் விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உங்களுக்கு எச்சரிக்கையாக தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு 2–00 மணிக்கு guillotine செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். வேறு வழியில்லை. அமைதியாக இருங்கள். மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தியாகிகள் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை 11,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 5,500 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும் மற்றும் சிறப்பு ஓய்வூதியத்தை 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி, கடந்த 15–8–2016 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாள் உரையில்

2016 செப்டம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அறிவித்தார்கள். (குறுக்கீடுகள்)

முதலமைச்சரின் தனிப் பிரிவு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் கோரிக்கை விடுத்து பொதுமக்கள் அனுப்புகின்ற மனுக்கள்மீது விரைந்து தீர்வு கண்டு, பொதுமக்களுக்கு உரிய நியாயத்தை வழங்கிட முதலமைச்சரின் தனிப் பிரிவு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் 31–7–2016 வரை 19,76,073 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 18,72,815 மனுக்களுக்கு, அதாவது, பெறப்பட்ட மொத்த மனுக்களில் 95 விழுக்காடு தீர்வு காணப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சரின் தனிப் பிரிவுக்கு இணையதளம்மூலம் மனுக்கள் அளிக்கும் வசதியை, மாண்புமிகு அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் கடந்த 2012 ஆம் ஆண்டு முதன்முதலாகத் துவக்கி வைத்தார்கள். (குறுக்கீடுகள்) இத்திட்டத்தின் வாயிலாக தமிழகத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வசித்துவரும் தமிழகத்தைச் சார்ந்தவர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பின்னாலே ஏதோ உடைக்கின்ற மாதிரி சத்தம் கேட்கிறது. அது மாதிரி இருந்தால், நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் இதையெல்லாம் செய்வது முறையல்ல. நான் கடுமையாக உங்களை எச்சரிக்கிறேன். அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) எச்சரிக்கிறேன். இதற்கு மேலே என்னால் பொறுமை காக்க முடியாது. இதற்கு மேலே எனக்கு பொறுமையில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) பின்னாலே உடைக்கின்ற சப்தம் கேட்கிறது. அதை நான் பார்த்த பின்னால்தான் சொல்ல முடியும். நான் கடுமையாக எச்சரிக்கிறேன். நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் உரையை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை மட்டுமல்லாமல், பொதுத்

தேர்தல் துறை, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, ஓய்வூதியத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய துறைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவ்வப்போது தக்க பதிலைத் தந்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) Guillotine time *நெருங்கிக் கொண்டிருப்பதால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று, நிறைவுரை தந்து, அதற்குப் பின்னாலே அறிவிப்புகளை வெளியிடலாம் என்று நினைக்கிறேன்.* (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமே வடிவெடுத்து, சாதனைகளால் உருவெடுத்து, சங்கத் தமிழ் பூமிக்கு வந்துதித்த சரித்திரமாம், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆற்றல் குவியல்களை, அளவில்லா தியாகங்களை வார்த்தைகொண்டு கோர்த்தால் வளர் தமிழும் பெருமைகொள்கிறது. ஆனால், சிலருக்கோ வயிற்றெரிச்சல் பொங்குகிறது. பசி என்னும் சொல்லையே எங்கள் பாசத் தாய் ஆளும் மண்ணின் எல்லைக்குள்ளிருந்தே துடைத்தெறிந்த கருணையும், கொடையும் நிரம்பி வழியும் மாண்புமிகு அம்மா அவர்களின் அளவில்லா புகழையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துவிட்டு, இனி காப்பியங்களும் கடையெட்டு வள்ளல்கள் என்றே கல்வெட்டாய்ச் சொல்லும். எங்கள் அம்மா எட்டாம் வள்ளல், எவராலும் எட்டமுடியா வள்ளல் என்று சங்கத் தமிழ் பூமி சத்தியமிட்டுச் சொல்லும். (கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று அறிவிப்புகளை வெளியிடுகின்றேன். (கூச்சல்)

பொதுத் துறை

1. இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி உயர்த்தி வழங்குதல்

இரண்டாம் உலகப் போரில் பணியாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ரூபாய் 4,500/–லிருந்து ரூபாய் 6,000/– ஆகவும் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி

ரூபாய் 2,500/—லிருந்து ரூபாய் 3,000/— ஆகவும் உயர்த்தப்படும். இதன்மூலம் 4,870 பேர் பயனடைவார்கள். (குறுக்கீடுகள்)

இதற்குக் கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூபாய் 3.42 கோடி ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

2. மறு வேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப் பணியில் வேலைவாய்ப்பு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இரட்டை குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வூதியத்துடன் படைப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், மறு வேலைவாய்ப்பு அடிப்படையில் குடிமைப் பணியில் வேலைவாய்ப்பு பெற்று, குடிமைப் பணிக்கான ஓய்வூதியமும் பெற்று உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் குடிமைப் பணியில் பணியாற்றியமைக்கான குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்படும். (குறுக்கீடுகள்)

1—4—2003—க்கு முன்பு, குடிமைப் பணியில் மறு வேலைவாய்ப்பு பெற்று, பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்பு ஓய்வூதியம் பெற்றுள்ள முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு இது பொருந்தும். (குறுக்கீடுகள்)

இதன்மூலம் மாநில அரசிற்கு ஆண்டுச் செலவினம் ரூபாய் 55.75 இலட்சம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்படை வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல்

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முப்படை வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்:

- உயிர்நீத்தவரின் வாரிசுதாரர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 10 இலட்சத்திலிருநது ரூபாய் 20 இலட்சமாகவும்;
- மிகக் கடுமையான காயத்தினால் இரண்டு கை, கால், கண் இழந்தவர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 7 இலட்சத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாகவும்;
- கடுமையான காயத்தினால் ஒரு கை, கால், கண் இழந்தவர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

இச்செலவினம் கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

4. எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவ (BSF, CRPF, CISF, ITBP, SSB) படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல்

எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உயிர்நீத்த மற்றும் காயமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவ (BSF, CRPF, CISF, ITBP, SSB) படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்:

- உயிர்நீத்தவரின் வாரிசுதாரர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும்;
- மிகக் கடுமையான காயத்தினால் இரண்டு கை, கால், கண் இழந்தவர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 7 இலட்சத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாகவும்;
- கடுமையான காயத்தினால் ஒரு கை, கால், கண் இழந்தவர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

இச்செலவினம் அரசு நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

5. போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள், வாரிசுதாரர்கள் மற்றும் உடல் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்கு கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல்

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிர்நீத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூபாய் 50,000/–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும்.

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கான கருணைத் தொகை ரூபாய் 30,000/–லிருந்து ரூபாய் 50,000/– ஆக உயர்த்தப்படும்.

இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

6. போர் விதவைகளின் மகள்கள் மற்றும் போர் நடவடிக்கைகளில் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் மகள்களுக்கு திருமண மானியத்தை உயர்த்துதல் மற்றும் திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்குதல்

போர் விதவைகளின் மகள்கள் மற்றும் போர் நடவடிக்கைகளில் 50 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்படும் திருமண மானியம் ரூபாய் 50,000/–லிருந்து ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உடல் ஊனமுற்ற படைவீரர்களின் மகள்களுக்கு வழங்கப்படும் திருமண மானியம் ரூபாய் 25,000/–லிருந்து ரூபாய் 50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்படும்.

இதற்கு கூடுதல் செலவினம் ஆண்டிற்கு ரூபாய் 6.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–55

7. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு இறுதித் தேர்வுகளில் முதல் 5 இடங்களைப் பிடிக்கும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியாற்றும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவரும் பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்

முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் சேவையைப் பாராட்டும் வகையில் அவர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு இறுதித் தேர்வுகளில் மாநில அளவில் மாநில பாடத் திட்டத்தில் மற்றும் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தில் முறையே முதல் 5 இடங்களைப் பிடிக்கும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் பணியாளர்களின் குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்: (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

10 ஆம் வகுப்பில்

- *முதலாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.7,500/–லிருந்து ரூ.25,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*
- *இரண்டாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.6,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி (குறுக்கீடுகள்)*
- *மூன்றாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.4,500/–லிருந்து ரூ.15,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*
- *நான்காம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.3,000/–லிருந்து ரூ.10,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*
- *ஐந்தாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

அதுபோலவே, 12 ஆம் வகுப்பில்

- *முதலாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

- இரண்டாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.13,500/—லிருந்து ரூ.30,000/— ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)
- மூன்றாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.12,000/—லிருந்து ரூ.20,000/— ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)
- நான்காம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.10,500/—லிருந்து ரூ.15,000/— ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)
- ஐந்தாம் இடத்தைப் பிடித்தவருக்கு ரூ.9,000/—லிருந்து ரூ.10,000/— ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

இச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் (டெக்ஸ்கோ) நிதியிலிருந்து செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

நிதித் துறை

1. கருவூலக் கணக்குத் துறையில் கணக்கர், கண்காணிப்பாளர் மற்றும் உதவிக் கணக்கு அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவூலக் கணக்குத் துறையிலுள்ள கணக்கர், கண்காணிப்பாளர் மற்றும் உதவிக் கணக்கு அலுவலர்களுக்கு நிதி கணக்கியல், ஓய்வூதியம், பட்டியல் ஏற்பளிப்பு, தணிக்கை மற்றும் கணினி அடிப்படையிலான அலுவலக நிருவாகம் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 23 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

2. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை தலைமை அலுவலகங்களுக்கு புதிய கணினிகள் வழங்குதல்

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை தலைமை அலுவலகங்களிலுள்ள பழைய கணினிகளுக்குப் பதிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

ஆணையின்படி 12.87 இலட்சம் ரூபாய் செலவில் 20 புதிய கணினிகள் அச்சுப் பொறிகளுடன் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் அனைத்து நிலையிலான தணிக்கையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையிலுள்ள அனைத்து நிலையிலான தணிக்கையாளர்களுக்கும், அவர்களின் தணிக்கைத் தரத்தை மாநிலக் கணக்காயர் அலுவலர்களின் தணிக்கைத் தரத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி சென்னை, நடேசன் கூட்டுறவுப் பயிற்சி மையத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 18.24 இலட்சம் ரூபாய் செலவில் தொடர் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

4. கூட்டுறவு தணிக்கைத் துறையில் அனைத்து நிலையிலான தணிக்கையாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளித்தல்

கூட்டுறவு தணிக்கைத் துறையிலுள்ள அனைத்து நிலையிலான தணிக்கையாளர்களுக்கும் அவர்களின் தணிக்கையின் தரம் மற்றும் திறமையினை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 10 இலட்சம் ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

5. தமிழ்நாடு அரசின் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978–ன்கீழ் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களே, நேரமாகிவிட்டது. வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தரக் கோரும் கோரிக்கையை முன்வைக்கவும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிய வினாக்களுக்கு எனது விளக்கம் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வைத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கவனத்தில் கொண்டு ஆய்வு செய்யும். எனவே, உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்றைக்கு வேண்டுமென்றே Guillotine நேரத்தைக் கெடுக்கவேண்டும் என்பதற்காக (குறுக்கீடுகள்) திட்டமிட்டு இந்தமாதிரி செய்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (குறுக்கீடுகள்) இன்று நீங்கள் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடாது என்ற தீர்மானத்தோடு வந்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நாட்டு மக்கள் எல்லோரும் இதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து, (குறுக்கீடுகள்) இதை வன்மையாகக் கண்டித்து நான் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.593,28,68,000/–, மூலதனக்

கணக்கில் ரூ.3,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.20,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2–00

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.43,59,67,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.* (குறுக்கீடுகள்)

(*வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.*)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.33,06,55,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது. (குறுக்கீடுகள்)

(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,014,40,86,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,003,60,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.109,47,23,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

(உ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.92,92,76,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.37,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

(ஊ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.* (குறுக்கீடுகள்)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.253,44,39,000/–, மூலதனக் கணக்கில் ரூ.174,64,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–05

(எ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,914,56,18,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2] [*பேரவைத் தலைவர்*]

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

(*திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.*)

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.* (குறுக்கீடுகள்)

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.* (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.* (குறுக்கீடுகள்)

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, முன்மொழிதல் (ஆ.செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2005–2006 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:* (குறுக்கீடுகள்)

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2005–2006 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year." (குறுக்கீடுகள்)

6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005–2006 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005–2006 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2005–2006 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

நிறைவேற்றப்பெற்ற 2005–2006 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
3	*நீதி நிருவாகம்*	..	*31,64,882*	..
8	*கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை–பால் வளம்*	*4,64,292*	..	..
12	*கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை*	..	..	*1,11,350*
21	*உள் துறை–காவல்*	..	..	*8,99,182*
38	*பொதுப் பணித் துறை*	*5,47,61,580*	..	..
46	*போக்குவரத்துத் துறை*	..	*2,84,63,722*	..
	பெருமொத்தம்	**5,52,25,872**	**3,16,28,604**	**10,10,532**

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006–2007 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 அன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:* (குறுக்கீடுகள்)

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2006–2007 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year." (குறுக்கீடுகள்)

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2006–2007 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2006–2007 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நிறைவேற்றப்பெற்ற 2006–2007 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
5	வேளாண்மைத் துறை	..	7,16,34,613	..
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்	..	2,75,009	..
40	பொதுப் பணித் துறை–பாசனம்	84,99,71,264	..	..
44	சிறு தொழில்கள் துறை	..	2,20,958	..
47	தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை	..	50,81,114	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	..	2,50,00,000
	பெருமொத்தம்	**84,99,71,264**	**7,72,11,694**	**2,50,00,000**

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007–2008, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007–2008 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 அன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2007–2008 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007–2008, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007–2008 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2007–2008 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2007–2008 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

நிறைவேற்றப்பெற்ற 2007–2008 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1,47,444	..	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	..	54,743	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	94,98,92,099	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	14,17,35,603	..	..
48	போக்குவரத்துத் துறை	..	46,92,998	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு	3,39,20,621	..	..
	பெருமொத்தம்	112,56,95,767	47,47,741	..

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 அன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2008–2009 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2008–2009 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)

நிறைவேற்றப்பெற்ற 2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	..	..	63,200
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	..	..	33,50,07,639
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	118,65,74,501	..	..
48	போக்குவரத்துத் துறை	..	36,96,559	..
	பெருமொத்தம்	**118,65,74,501**	**36,96,559**	**33,50,70,839**

பிற்பகல் 2–15

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2009–2010, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2009–2010 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2009–2010 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

2016 செப்டம்பர் 2]

10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2009–2010, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2009–2010 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2009–2010 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2009–2010 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2009–2010 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
14	எரிசக்தித் துறை	..	7,00,00,000	..
16	நிதித் துறை	..	..	64,36,821
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	17,87,898	..	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	9,87,78,076	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	31,05,13,243	..	3,30,679
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	..	4,94,70,628	..
47	இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	..	40,80,391	..
	பெருமொத்தம்	**41,10,79,217**	**12,35,51,019**	**67,67,500**

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டேயிருந்தனர்.)

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010–2011, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010–2011 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2010–2011 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

11. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010–2011, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது* வாக்கெடுப்பு. *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010–2011 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2010–2011 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2010–2011 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	2,23,896	..	..
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	2,96,67,768	..	..
16	நிதித் துறை	..	..	6,93,08,469
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	..	1,00,48,033	..
33	சட்டத் துறை	83,01,210	..	..
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	94,16,281	..	..
48	போக்குவரத்துத் துறை	..	2,88,751	..
	பெருமொத்தம்	**4,76,09,155**	**1,03,36,784**	**6,93,08,469**

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஏ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011–2012 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2011–2012 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

பிற்பகல் 2–20

12. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2011–2012, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011–2012 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011–2012 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2011–2012 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நிறைவேற்றப்பெற்ற 2011–2012 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	2,27,14,054	..	..
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	..	..	1,600
16	நிதித் துறை	..	..	23,79,818
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	36,05,778	..	..
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	352,69,56,159	..	..
	பெருமொத்தம்	**355,32,75,991**	**..**	**23,81,418**

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஓ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 2—25

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 6) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அஅ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 செப்டம்பர் 2

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 7) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 8) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(அஇ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2016 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 9) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

13. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஆஸ்டின், நான் உங்களை எச்சரிக்கிறேன். உங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கையில் சென்று உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அறியாமல், துடைத்தெறியப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களால்தான். உழைப்பாளி சிறார்களை மாணவர்களாக்கியது மாண்புமிகு அம்மா அவர்களது கல்விச் சீர்திருத்தம். சோழ நாடு காத்து, சோறுடைத்த வரலாற்றை மீட்டு, கரிகாலன் பூமி காத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது வழிகாட்டுதல்கள்தான்.

அடுத்த நாளைக்கு எது தேவை, அடுத்து என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்று திட்டமிடுகிறவன்தான் மனிதன். நாட்டிற்கு, மக்களுக்கு அவர்தம் வளமான வாழ்வுக்கு, நல்வாழ்வுக்கு, உயர்வுக்கு, பாதுகாப்பிற்கு அடுத்த ஆண்டுக்கும் என்ன தேவை, அதனை எப்படி நிகழச் செய்வது என்று அடுத்த ஆண்டைப் பற்றிச் சிந்தித்துத் திட்டமிடுகிறவர் தலைவர். இதற்கும் மேலாக, இன்னும் பத்து ஆண்டுகள் கழித்து, இருபதாண்டுகள் கழித்து, அந்த நாட்டின் மக்கள் பெருக்கம், அடிப்படை ஆதார வளங்களின் நிலை, தட்பவெப்பச் சூழல், பெருக்கிட வேண்டிய உற்பத்தி, மேம்படுத்தப்பட வேண்டிய கட்டமைப்பு வசதிகள், உயர்த்திட வேண்டிய மனித வளம், குடி மக்களின் சுகவாழ்வு என அத்தனையையும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை, செயல் திட்டங்களை, தொலைநோக்குச் சிந்தனை கொண்டு திட்டமிடுகிறவரே தீர்க்கதரிசி. அந்த வகையில், தொலைநோக்குச் சிந்தனையோடு திட்டங்களைத் தீட்டி, விஷன், 2023 என உயர் இலக்கை நிர்ணயித்து திட்டங்களைச் செயல்படுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்காலத்தை உணர்ந்த ஞானியாகச் செயல்பட்டு, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் தமிழகம் வளம் பெற திட்டங்களைத் தந்து, தமிழக மக்களின் அன்பைப் பெற்றார்கள், பாசத்தைப் பெற்றார்கள், நேசத்தையும் பெற்றார்கள்.

மே திங்கள் 2016 பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு. மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டு காலச் செயல்பாடுகளை மக்கள், மனதில் கொண்டு விரல் விசையில் விடையளித்தனர்.

விலையில்லா அரிசியால் உலை கொதிக்கும் இல்லங்கள் விரல் அசைவில் ஒலித்த நன்றியால், கறவை மாடு, ஆடுகள் எழுப்புகிற அம்மா எனும் கருணை ஒலியால், வாகைத் தாய்க்கு வாக்குகளாகி உரைத்த நன்றியால், தாலிக்குத் தங்கம் தந்து, தாயிருக்க ஜெயமே எனும் தைரியம் தந்து, தாய்க்குலத்தைக் காக்கின்ற தங்கத் தாரகைக்கு, மாதர்குலமும் கூடிச் சூடிய மகுடம், முப்பருவக்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

கல்வி தந்து, முதுகுச் சுமை குறைத்து, பாதம் சுமக்கக் காலணி, தூரம் கடக்க மிதிவண்டி, இவற்றோடு மரத்தடி வகுப்புகளை மடிக் கணினி வகுப்புகளாக்கிய மகராசிக்கு, முதல் முறை வாக்களிக்கும் மாணவச் சமூகம் மனதார வழங்கிய மகத்தான பரிசு, மனு எழுதி கையில் பிடித்து அதிகார இடம் தேடி அலைந்திட்ட காலத்தை, அம்மா திட்டத்தால் அடியோடு மாற்றி, இருப்பிடம் தேடி வந்து மக்களுக்கு பட்டா, சிட்டா, வசிப்பிடச் சான்றிதழ் வழங்கிய மகராசிக்கு, ஏழை எளிய மக்கள் வழங்கிய பாராட்டுப் பத்திரம், சிரிக்கும் ஏழை முகம் காண, அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற, வறுமை போக்கும் திட்டங்களால் வாழ்விக்கும் வள்ளலுக்கு, செந்தமிழர் பூமி செலுத்திய செய்நன்றி, பள்ளியிலும் பந்தியிட்டு, ஆலயத்திலும் அன்னமிட்டு, அம்மா உணவகத்தால் அரும்பசி தீர்த்த ஈகைக்கு ஈரிலையில் வாக்களித்து, இயலாதோர் இயம்பிய நன்றிக் காணிக்கை. காவேரி, முல்லையாற்று உரிமைகளை கடமையாற்றி வென்றுவந்த தாயுருவப் போராளிக்கு ஓட்டுப் பதிவு எந்திரத்தால் உழவினமும் உரைத்த நன்றி, வால்மார்ட்டை துரத்தி வணிகர் நலம் காத்ததாலே அண்ணாச்சிகளும், சிறு, குறு வியாபாரிகளும் செலுத்திய நன்றி, இரண்டரை இலட்சம் கோடிகளை ஈர்த்து வந்து ஆலைகளைப் பெருக்குகிற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆற்றலரசுக்கு, ஐவகை நிலமெல்லாம் சேர்ந்து ஆறாம் முறை ஆட்சிக்கு ஆசி கூறி, தமக்கென வாழாத தவத்திற்கு தமிழினம் செலுத்திய நன்றிக் காணிக்கை, தாய் நாட்டில் தமிழகத்தை தலை நாடாய் உயர்த்துகிற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு காணிக்கையாக, மே 19 ஆம் தேதி தேர்தல் முடிவுகள்.

மே 23 ஆம் தேதி மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்று, வாக்களித்த மக்களின் விரல் மை ஈரம் காய்வதற்குள், வாக்குறுதிகளை நிறைவேற்றும் சாதனைப் பயணத்தின் சரித்திரத் தொடக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐவகை நிலம் சூழ்ந்த அழகுத் தமிழ் மண்ணுக்கு அன்னையிட்ட ஆணைகள் ஐந்து. அது, முத்தான முதல் கையெழுத்திலேயே ஏரோட்டும் உழவினம் ஏகமாய் மகிழ, விவசாயக் கடன்கள் ரத்து. ஏழை எளிய பெண்கள் ஏற்கும் இல்லறத்திற்கு தாலிக்குத் தங்கம் எட்டு கிராம் என்பதாக உயர்வு, இல்லங்கள் அனைத்தும் இன்புற்று மகிழ, முதல் நூறு யூனிட் மின்சாரக் கட்டணம் முழுவதுமாய் ரத்து, செய்யும் தொழிலில், நெய்யும் தொழிலே உயரியது என்பதால், கைத்தறி நெசவாளருக்கு இருநூறு யூனிட் மின் கட்டணம் ரத்து, விசைத்தறி நெசவாளருக்கு எழுநூற்று ஐம்பது

யூனிட்டுக்கு கட்டணமில்லா மின்சாரம், மதுவில்லா தமிழகத்தை மலர்விக்கும் முதல் படியாய் மது விற்பனை இரண்டு மணி நேரம் குறைப்பு. கூடவே, மதுக்கடைகள் ஐநூறு மூடல் என்றே அன்னையிட்ட ஆணைகள் ஐந்தால் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி, வீடுகளுக்கு மகிழ்ச்சி, மகளிருக்கு மகிழ்ச்சி, மானம் காக்கும் ஆடை நெய்யும் நெசவாளருக்கு மகிழ்ச்சி, மதுவிலக்கின் முதல்படி கண்டு, மக்களுக்கும் மகிழ்ச்சி. ஆக, தமிழகத்தின் தலையெழுத்தை தரணியே வியக்கும் உயர்வெழுத்தாய், உயிரெழுத்தாய், மேன்மைகள் தருகிற மேதகு மெய்யெழுத்தாய் ஆக்கிட அவதரித்த ஆயுத எழுத்து எங்கள் அம்மா என்றே ஆர்ப்பரித்து மகிழ்ந்தது தமிழகம்.

சட்டமன்றப் பேரவையும் கூடியது. பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 25–5–2016 முதல் இன்று, 2–9–2016, வரையிலும் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத் தொடரின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

25–5–2016 அன்று உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம்/ உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். 3–6–2016 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரும் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையின் பேரவைத் தலைவராக மீண்டும் இந்த இருக்கையில் அமர வைக்கப்பட்டேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்குச் செய்துள்ள எண்ணற்ற உதவிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்குச் செய்திருக்கிற உதவிகளைக் கோடிட்டுக் காட்டி, என்னுடைய நன்றியை அவர்களுடைய மலர்ப் பாதங்களில் மீண்டும் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இந்த உரையைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணினாலும், நேரத்தின் அருமை கருதி, சுருக்கமாக உரைக்க விரும்புகின்றேன்.

1985 ஆம் ஆண்டும், அதற்குப் பின்பும் எனக்கு இரண்டு விபத்துகள் ஏற்பட்டன. அந்த விபத்துகளுக்குப் பின்னர், மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்ற எனக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவ உதவி செய்து, ஆறுதல் வார்த்தை

சொல்லி, என்னுடைய குடும்பத்திற்கு ஆதரவு அளித்து, தைரியம் கொடுத்து உதவி செய்தது மட்டுமல்லாமல், சோர்ந்து போன எனக்கும், என் குடும்பத்திற்கும் தைரியம் அளித்து பொது வாழ்விலே பணியாற்ற தொடர்ந்து ஆதரவு அளித்து, என் குடும்பத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கிற குல தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உடலில் ஓடும் உயிருக்கு சுவாசத்தைத் தந்தது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். அரசியலில் எனக்கு ஓர் அந்தஸ்தைத் தந்து, இந்த அளவிற்கு உயர்வளித்தது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். நானும், என் குடும்பத்தினரும் எங்கள் வாழ்நாள் முழுவதும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாகவும், விசுவாசமிக்கவர்களாகவும் என்றென்றும் இருப்போம் என்பதைப் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	—	36
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	—	167 மணி 30 நிமிடங்கள் (இன்று பிற்பகல் 3–00 மணி வரை)

31–8–2016 அன்று பேரவை காலை 10–00 மணிக்குக் கூடி, உணவு இடைவேளைகூட இல்லாமல் மாலை 5–39 மணி வரை, அதாவது, 7 மணி 39 நிமிட நேரம் தொடர்ச்சியாக நடைபெற்று, அன்றைய அலுவல்கள் அனைத்தையும் நிறைவு செய்தது குறிப்பிடத்தக்கது.

16–6–2016 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள்	—	4
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	23 பேர்
உரையாற்றிய நேரம்	—	13 மணி 25 நிமிடங்கள்

அதில் ஆளுங்கட்சியினர்	—	9 பேர்
பேசிய நேரம்	—	4 மணி 9 நிமிடங்கள்
இதர கட்சியினர்	—	14 பேர்
பேசிய நேரம்	—	9 மணி 16 நிமிடங்கள்
மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரை ஆற்றிய நேரம்	—	1 மணி 22 நிமிடங்கள்.

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 5 மணி 7 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

இன்றைக்குப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எதிர்க் கட்சிகளுக்கு இன்னும் அதிக வாய்ப்பு தரவேண்டும் என்று பேசினார்கள். இங்கே ஒன்றை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

132 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஆளும் கட்சியின் சார்பாக 9 உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பேசிய நேரமும் 4 மணி நேரம்தான். ஆனால் இதர கட்சியினர் விவாதத்தில் பங்கு கொள்ள அதிக அளவு வாய்ப்பு தரப்பட்டு, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசிய நேரத்தைப்போல, இரண்டு மடங்கிற்கு மேல் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் பேச நேரம் தரப்பட்டுள்ளது.

சில நேர்வுகளில் எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையில் போதிய நேரம் அளிக்கப்படுவதில்லை என வெளியில் சென்று பேட்டியளித்துள்ள காரணத்தினால் இதைச் சொல்கிறேன்.

வானின் காயங்கள் கறுப்பு மேகங்கள், மண்ணின் காயங்கள் மலட்டு பாகங்கள், நிலவின் காயங்கள் நிலையில்லா அலைச்சல்கள், வெளிச்சத்தின் காயங்கள் வெற்று நிழற்பிம்பங்கள், மலையின் காயங்கள் மடிந்து விழும் மடுக்கள், உறவின் காயங்கள் உரசல் பேதங்கள், உணர்வின் காயங்கள் உணராத உள்ளங்கள், மனதின் காயங்கள் நிரந்தர சூன்யங்கள், எனக்கும் ஏற்பட்டன காயங்கள், சிலரின் நடவடிக்கைகளினால். ஆனாலும், அன்பு ஒன்றே ஒன்றிணைக்கும் பாலமாகும், ஆற்றல் ஒன்றே தொழிலுக்கு நல்லுரமாகும். இன்முகம் ஒன்றே மனிதனை புனிதனாக்கும், ஈகை ஒன்றே இல்லாமையை போக்கும், உண்மை ஒன்றே

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

உயர்வினைத் தரும், ஊக்கம் ஒன்றே உற்சாகம் தரும், எளிமை ஒன்றே நல்வழிப்படுத்தும், ஏற்றம் ஒன்றே மாற்றத்தைத் தரும், ஐயம் ஒன்றே அறிவுக்குத் துணை, ஒழுக்கம் ஒன்றே புகழ் சேர்க்கும், ஓயா உழைப்பு ஒன்றே மேன்மை தரும் என்று என்னை இந்தப் பதவிக்கு அடையாளம் காட்டிய மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதல்கள் அந்தக் காயங்களுக்கு மருந்தாகின.

பிற்பகல் 3–15

ஜனநாயக முறையில் இந்தச் சபை செயல்படுகிறது என்பதற்காகத்தான் இதனை நான் குறிப்பிடுகிறேன்.

நிதி அலுவல்கள்—

2016–2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத்திட்டத்தை 21–7–2016 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

வரவு–செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்	—	5
பங்கேற்ற உறுப்பினர்கள்	—	28
உரையாற்றிய நேரம்	—	16 மணி 52 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	—	12 பேர்
பேசிய நேரம்	—	4 மணி 11 நிமிடங்கள்
இதர கட்சியினர்	—	16 பேர்
பேசிய நேரம்	—	12 மணி 41 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 8 மணி 30 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	—	1 மணி 33 நிமிடங்கள்

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட், தூய தாயின் தொண்டில் விளைந்த பட்ஜெட், தமிழகத்தின் வளமை பெருக்க, தரணி வியக்கும் புதுமை படைக்க, துறுதுறுத்த பணிகள் கொண்டு, கூட்டிக் கழித்து, கழித்துக் கூட்டி, வாஞ்சைமிகு தாய் வழங்கிய வரியில்லாத பட்ஜெட்.

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

வழக்கம்போல வாரித் தருவதிலே குறைவில்லை. வான் மழை பொய்த்தாலும், வள்ளல் தாய் மனம் பொய்க்காது என்பதை மெய்ப்பிக்கும் வகையில், சலுகைகளைக் கணக்கிட்டுப் பார்ப்பதற்கு விரல்கள் பத்தும் போதவில்லை. வியப்பு இன்னும் தீரவில்லை. மரத்தடி வகுப்புகளை மடிக் கணினி வகுப்புகளாக்கிய மகராசி ஆட்சி, இரண்டு இலட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான பயிற்சியை பரிவோடு தருகிறது. அம்மா உணவகத்தால் அன்னம் வார்த்து, அம்மா குடிநீரால் தாகம் தீர்த்து, அம்மா மருந்தகத்தால் பிணி தீர்த்து, தாராளம் காட்டுகிற தாய்மைக் கரங்கள், இ–சேவை மையங்களின் மூலம் அளிக்கப்பட்டு வந்த பொதுச் சேவைகளின் எண்ணிக்கையை 300 வரை உயர்த்திக் காட்டுகிறது. கூட்டுறவு பயிர்க் கடனைக் கூடுதலாக வழங்கிடவும், பசுமைப் பரப்பை மேம்படுத்தி, சுற்றுச்சூழல் காத்திடவும், அலுங்காத, குலுங்காத சாலைகள் என அழகுறவே அமைத்திடவும், மின்மிகை மாநிலமாய்த் தமிழகத்தை மாற்றிடவும், உலகத் தரக் கல்வியை உளமாரத் தந்திடவும், மருத்துவக் காப்பீட்டை மக்களுக்குப் பெருக்கிடவும், மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கவும், காவல் துறையை நவீனமாக்கி, கம்பீரத்தைக் காத்திடவும், பொது விநியோகத் திட்டத்தில் புரட்சிகளைப் படைத்திடவும், குடிநீர்த் தட்டுப்பாட்டை அடியோடு போக்கிடவும், வறட்சிகளை எதிர்கொண்டு, வளர்ச்சிகளை வார்த்திடவும், இந்தியாவில் தமிழகமே இணையில்லா மாநிலம் என்னும் வரலாற்றுப் புரட்சிதனை வரும் நாளில் தொடர்ந்திடவும், வல்லமை கொண்ட தாய் தந்த வரியில்லா நிதிநிலை, வரலாற்றில் இதற்கோ நிகரில்லை, நிகரில்லை.

“நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க
விளைக வயலே வருக இரவலர்
பசி இல்லாகுக பிணி சேண் நீங்குக
வேந்து பகை தணிக யாண்டு பல நந்துக
அறம் நனி சிறக்க அல்லது கெடுக
நன்று பெரிது சிறக்க தீது இல்லாகுக
மாரி வாய்க்க வளம் நனி சிறக்க”

என சங்க கால இலக்கியம் ஐங்குறுநூறு கூறுகிறது.

இதைப் போன்ற பொற்கால ஆட்சியை நடத்திய, நடத்துகின்ற, நடத்தும் நம் அம்மா அவர்கள், பேரறிஞரும், மூதறிஞரும், மக்கள்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

திலகமும் அமர்ந்து, மக்கள் பணியாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவையில், நூறறிவு கொண்ட பேரறிவுத் தாய் நம் அம்மா அவர்கள், புரட்சி பல படைத்து, புதுமைகள் பல விதைத்து, புனித ஜார்ஜ் கோட்டையையும் சேர்த்தே காத்த புரட்சித் தலைவி நம் அம்மா அவர்கள், எண்ணற்ற அறிவிப்புகளை பேரவையில் செய்துள்ளார்கள்.

மானியக் கோரிக்கைகள்—

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	—	22
உரையாற்றிய உறுப்பினர்கள்	—	118
உரையாற்றிய நேரம்	—	52 மணி 09 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	—	66 பேர்
பேசிய நேரம்	—	19 மணி 09 நிமிடங்கள்
இதர கட்சியினர்	—	52 பேர்
பேசிய நேரம்	—	32 மணி 50 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 13 மணி 41 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம் — 1 மணி 5 நிமிடங்கள்

தனது பொறுப்பிலுள்ள துறைகள் மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்த நேர்வுகள்— 54 முறைகள்— 57 நிமிடங்கள்

மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்——28 மணி 53 நிமிடங்கள்

வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட)—

வரப்பெற்றவை	—	4,389
அனுமதிக்கப்பெற்றவை	—	3,255
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	1,030

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

வினாக்கள்–விடைகள்—

இப்பேரவை தொடங்கிய 25-5-2016 முதல் 2-9-2016 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	14,817
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	—	177
அனுமதிக்கப்பெற்றவை	—	14,817
உடுக்குறியிட்டவை	—	5,024
உடுக்குறியிடாதவை	—	6,814
குறுகிய கால வினா	—	11

அனுமதிக்கப்பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	உறுப்பினர் பெயர்/கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
1.	திரு. கே.எஸ். மஸ்தான் தி.மு.க.	1018
2.	திருமதி எஸ். விஜயதரணி இ.தே.கா.	659
3.	திரு. எம். இராமச்சந்திரன் தி.மு.க.	583
4.	திரு. சே. கருணாஸ் அ.இ.அ.தி.மு.க.	488
5.	திரு. எஸ்.ஆர். இராஜா தி.மு.க.	457

உடுக்குறியிட்ட வினாக்கள்—

அவையில் விடையளிக்கப்பட்டவை — 126

மொத்த துணை வினாக்கள் — 368

அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் நான்கு நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
1.	திரு. என். முருகுமாறன்	அ.இ.அ.தி.மு.க.	தலா 4
	திரு. சு. ரவி	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. எச். வசந்தகுமார்	இ.தே.கா.	
	திரு. பா. ஆறுமுகம்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. C.V. சேகர்	அ.இ.அ.தி.மு.க.	

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
2.	திரு. க. பாண்டியராஜன்	அ.இ.அ.தி.மு.க.	தலா 3
	திரு. அ. நடராஜன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. பி.எம். நரசிம்மன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. எஸ். பவுன்ராஜ்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ஐ.எஸ். இன்பதுரை	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	இ.தே.கா.	
	திரு. சோ. மாரியப்பன் கென்னடி	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. சி. சந்திரசேகரன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. வி. பன்னீர்செல்வம்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. வி.சி. ஆறுக்குட்டி	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. எம். இராமச்சந்திரன்	தி.மு.க.	
	திரு. ஆர். காந்தி	தி.மு.க.	
3.	திரு. என்.ஜி. பார்த்திபன்	அ.இ.அ.தி.மு.க.	தலா 2
	திரு. பி.வி. பாரதி	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	இ.யூ.மு.லீ.	
	திரு. தூசி கே. மோகன்	அ.இ.அ.தி.மு.க.	
	திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. V.T. கலைச்செல்வன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ப. சத்தியநாராயணன்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. வி.வி. இராஜன் செல்லப்பா	அ.இ.அ.தி.மு.க.	
	திருமதி எஸ். விஜயதரணி	இ.தே.கா.	
	திருமதி. மு. சந்திரபிரபா	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. எம். தமிமுன் அன்சாரி	ம.ஜ.க.	
	டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. க. அன்பழகன்	தி.மு.க.	
	திரு. அ. ராமு	அ.இ.அ.தி.மு.க.	

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
4.	திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி	தி.மு.க.	தலா 1
	திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்	தி.மு.க.	
	திரு. எஸ். ஆஸ்டின்	தி.மு.க.	
	திரு. எஸ்.ஆர். இராஜா	தி.மு.க.	
	திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்	தி.மு.க.	
	திரு. மு.பெ. கிரி	தி.மு.க.	
	திருமதி பி. கீதா ஜீவன்	தி.மு.க.	
	திரு. அர. சக்கரபாணி	தி.மு.க.	
	திரு. சபா. ராசேந்திரன்	தி.மு.க.	
	திரு. துரை கி. சரவணன்	தி.மு.க.	
	திரு. ஓ.கே. சின்னராஜ்	அ.இ.அ.தி.மு.க.	
	திருமதி பெ. சீத்தாபதி	தி.மு.க.	
	திரு. க. சுந்தர்	தி.மு.க.	
	திரு. டி. செங்குட்டுவன்	தி.மு.க.	
	திரு. அ. சௌந்தரபாண்டியன்	தி.மு.க.	
	திரு. பி.கே. சேகர்பாபு	தி.மு.க.	
	திரு. ஆர். தங்கதுரை	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. தங்கம் தென்னரசு	தி.மு.க.	
	திரு. மு. திராவிடமணி	தி.மு.க.	
	திரு. துரை. சந்திரசேகரன்	தி.மு.க.	
	திரு. கே.எஸ். தென்னரசு	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ஆர். நடராஜ்	அ.இ.அ.தி.மு.க.	
	திரு. ஏ.பி. நந்தகுமார்	தி.மு.க.	
	திரு. அ. நல்லதம்பி	தி.மு.க.	
	திரு. கு. பிச்சாண்டி	தி.மு.க.	
	திரு. பெரியண்ணன் அரசு	தி.மு.க.	
	திரு. த. மனோ தங்கராஜ்	தி.மு.க.	
	திரு. கே.எஸ். மஸ்தான்	தி.மு.க.	
	டாக்டர் இரா. மாசிலாமணி	தி.மு.க.	
	திரு. கி. மாணிக்கம்	அ.இ.அ.தி.மு.க	
	திரு. பி. முருகன்	தி.மு.க.	
	திரு. சிவ. வீ. மெய்யநாதன்	தி.மு.க.	

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
	திரு. டி.ஆர்.பி. ராஜா	தி.மு.க.	தலா 1
	திரு. வி.ஜி. ராஜேந்திரன்	தி.மு.க.	
	திரு. செ. ராஜேஷ் குமார்	இ.தே.கா.	
	திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்	தி.மு.க.	
	திருமதி ம. வரலட்சுமி	தி.மு.க.	
	திரு. எ.வ. வேலு	தி.மு.க.	
	திரு. செ. ஸ்டாலின் குமார்	தி.மு.க.	

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	அமைச்சர்	வினாக்களின் எண்ணிக்கை
1.	மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	15
2.	மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ் சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்	13
3.	மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்	தலா 11
	மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்	
4.	மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்	8
5.	மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர்	தலா 7
	மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்	

வினாக்கள்–விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் — 20

வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் — 5

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் — 35 நிமிடங்கள்

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள் — 15

உரையாற்றிய உறுப்பினர்கள் — 24

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் (அமைச்சர்களின் பதிலுரை உட்பட) — 1 மணி 56 நிமிடங்கள்

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை — 453

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை — 234

அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை — 11

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை — 16

நிறைவேற்றப்பெற்றவை — 16

அரசினர் தனித் தீர்மானம்—

வரப்பெற்றவை — 2

நிறைவேற்றப்பெற்றவை — 2

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க் குடி. உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. இருந்தாலும், பல்வேறு மொழிகளுக்கு இல்லாத சிறப்பு அன்னைத் தமிழ் மொழிக்கு உண்டு. வார்த்தைக்கு பஞ்சமில்லா மொழி தமிழ் மொழி. தமிழ்ச் சொல்லுக்கு தனி ஓசையுண்டு. எண்ணமெல்லாம் ஈர்க்கும் திறனுண்டு. இன்னும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எத்தனையோ சிறப்புகள் உண்டு. இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாய்ப் பிரித்து மொழியில் தனித் தன்மையைப் பழந்தமிழ் பெரியோர்கள் உண்டாக்கினர். யாழின் இனிமையோ, குழலின் நாதமோ என்று வியந்திடும்வண்ணம் அழகிய சொற்களைக் கொண்ட மொழி தமிழ் மொழி.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கடல் கடந்து உலகமெங்கும் வணிகம் புரிந்து வரலாற்றைப் படைத்த நாடு தமிழ்நாடு. கல்வியில் சிறந்த நாடு தமிழ்நாடு. அறம் வளர்த்த நாடு தமிழ்நாடு. தியாகம் பிறந்த நாடு தமிழ்நாடு! வீரம் செறிந்த நாடு தமிழ்நாடு! அனைத்து சமயங்களையும் போற்றி வளர்க்கின்ற நாடு தமிழ்நாடு! வள்ளுவன் தன்னை உலகுக்கு அளித்து வான்புகழ் கொண்ட நாடு தமிழ்நாடு! கலைக்கு மதிப்புக் கொடுப்பது தமிழ்நாடு! வந்தாரை வாழ வைக்கும் நாடு தமிழ்நாடு!

சென்னையில் அமைந்துள்ள இந்த உயர் நீதிமன்றம் சென்னைக்கு மட்டுமல்லாது, தமிழ்நாடு முழுமைக்குமான உயர் நீதிமன்றம் என்பதாலும், மதுரையில் அமைந்துள்ள உயர் நீதிமன்றத்தின் கிளை “சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை” என்று சொல்வதைவிட “தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தின் கிளை” என்று சொல்வது பொருத்தமானது என்பதாலும், இந்தியாவிலுள்ள பெரும்பாலான உயர் நீதிமன்றங்கள் மாநிலத்தின் பெயராலேயே பெயரிடப்பட்டிருப்பதாலும், சென்னையிலுள்ள உயர் நீதிமன்றம் “தமிழ்நாடு உயர் நீதிமன்றம்” என பெயரிடப்படுவதே சாலப் பொருத்தமாகும். எனவே, 1862 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்படுத்தப்பட்ட மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் பெயரை, மத்திய அரசால் தாக்கல் செய்யப்பட்ட சட்டமுன்வடிவில் மாற்றங்கள் செய்து, “தமிழ்நாடு உயர் நீதிமன்றம்” என பெயரிடப்பட வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் 1–8–2016 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

காவேரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள மனுக்கள் நிலுவையில் உள்ள நிலையில், கேரள அரசு சிறுவாணி நதியின் குறுக்கே எந்தவித கட்டுமானங்களும் மேற்கொள்ளக் கூடாது எனவும், கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே எந்தவிதமான திட்டங்களும் மேற்கொள்ளக் கூடாது எனவும் மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் 2–9–2016 அன்று நிறைவேற்றப்பட்டது.

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கைகள்—

மொத்தம் அளிக்கப்பெற்றவை — 29

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்தவை — 29 ஒவ்வொன்றும் சிறப்பு வாய்ந்த அறிவிப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி, சாதனை படைத்து வருகிறார்கள்.

1) பாதிக்கப்பட்டவர்களிடம் பரிவும் பாசமும் காட்டுவதில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நிகர் எவருமில்லை. கிருஷ்ணகிரி மாவட்டம், யு.சிங்கிரிபள்ளி என்னும் இடத்தில் நடந்த சங்கிலி பறிப்பு சம்பவத்தில், சந்தேகிக்கப்பட்ட நபர்களைப் பிடிக்க முற்படும்பொழுது, கத்தியால் குத்தப்பட்டு, படுகாயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்த ஓசூர் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. முனுசாமி அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண உதவியாக ஒரு கோடி ரூபாய் வழங்குவது குறித்தும், அவரது மகளின் உயர் கல்விச் செலவை தமிழக அரசே ஏற்பது குறித்தும், வீர, தீரச் செயல்களில் உயிரிழப்பு அல்லது பலத்த காயங்களுக்கு உள்ளாகும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 20–6–2016 அன்று அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளித்தார்கள்.

2) விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் எவ்வித சிரமமுமின்றி விற்பனை செய்திட ஏதுவாக, புதிய நவீன அரிசி ஆலைகள், கிடங்குகள் ஆகியவை அமைக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் தரத்தை உறுதி செய்திடும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இதன் முதற்கட்டமாக, நடப்பாண்டில் 13 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் மின்னணு நெல் கொள்முதல், e–procurement திட்டம் செயல்படுத்துவது குறித்தும், ரூ.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்தில் தமிழகத்திற்கே

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

முன்னோடியாக வருடத்திற்கு 30,000 மெட்ரிக் டன் நெல் அரவைத் திறனுள்ள ஒருங்கிணைந்த அரிசி ஆலை அமைப்பது குறித்தும், 40 கோடி ரூபாய் செலவில் திருவாரூர் மாவட்டத்தில் கோட்டூர் மற்றும் நீடாமங்கலம் பகுதிகளில் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட, நவீன வசதிகளுடன் இரண்டு கிடங்குகள் கட்டப்படுவது குறித்தும், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில், 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் நவீன தொழில்நுட்ப வசதிகள் கொண்ட நெல் கொள்கலன்கள் கட்டப்படுவது குறித்தும், திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை, கடலூர் மாவட்டத்தில் கடலூர் ஆகிய இடங்களில் நடப்பு நிதியாண்டில் 18 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 16,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படுவது குறித்தும், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 18 கோடி ரூபாய் செலவில் 90 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 40 இலட்சம் ரூபாய் செலவில், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இரண்டிற்கு புதிய கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 9 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் 11 கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 12 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் 79 கூட்டுறவுச் சங்கங்களை நவீனப்படுத்துவது குறித்தும் 1 கோடியே, 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கும், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டப்படுவது குறித்தும் 9 முத்தான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5–8–2016 அன்று வெளியிட்டார்கள்.

3) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிறப்பான நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு இன்று மின் மிகை மாநிலமாக

முன்னேற்றம் கண்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல், தமிழ்நாட்டில் மின்வெட்டு அறவே இல்லை என்ற நிலை எய்தப்பட்டுள்ளது. அதற்கு வலு சேர்க்கும் வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மின் துறை சார்ந்த பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து வருகின்றார்கள். 80 கோடி ரூபாய் செலவில் கோதையாறு–I புனல் மின் நிலையத்தை மேம்படுத்தி நவீனமாக்குவது குறித்தும், 1,750 கோடி ரூபாய் செலவில் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள 17,535 மின்மாற்றிகளை வளைய சுற்றுத்தர அமைப்புகளாக மாற்றுவது குறித்தும், 270 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகரில் உள்ள 38,844 மின் தூண் பெட்டிகளை மாற்றுவது குறித்தும், 12,778 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டம், உப்பூரில் 800 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அலகுகளுடைய 1,600 மெகா வாட் அனல் நிலையங்கள் அமைப்பது குறித்தும், விருதுநகரில் 2,000 கோடி ரூபாய் செலவில் தொகுப்பு துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும், 26 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு மின் வாரியத்தின் பல்வேறு அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும், 20 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது குறித்தும், மின் உற்பத்தியை அதிகரித்து, சீரான மின் விநியோகத்திற்கு வழிவகை செய்திடவும், மின் திட்டங்கள் குறித்த பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 9–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

4) காடு செழித்தால் நாடு செழிக்கும் என்பதற்கிணங்க, இது, மக்களை மட்டுமல்ல, வனங்களையும், வன விலங்குகளையும் காக்கும் அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், வன வளம் பெருக பல்வேறு அறிவிப்புகளை பேரவையில் அளித்துள்ளார்கள். அந்த வகையில், சென்னையை அடுத்த வண்டலூர் அருகே, வன மரபியல் வளங்களைப் பாதுகாத்திட, வன ஆராய்ச்சிப் பிரிவு மூலமாக 2 கோடி ரூபாய் செலவில் மரப் பூங்கா அமைப்பது குறித்தும், 2 கோடி ரூபாய் செலவில் திருச்சியில் வன மர விதை மையம் அமைப்பது குறித்தும், சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில், "வீட்டில் மூலிகைத் தோட்டம்" அமைப்பது குறித்தும், சென்னை, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் உள்ள வன விலங்குகளை இணைய தளத்தின் மூலம்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

கண்டுகளித்திட, 50 இலட்சம் ரூபாய் செலவில் அகச் சிவப்பு கண்காணிப்பு கேமராக்கள் அமைப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 11–8–2016 அன்று அறிவிப்புகளைப் பேரவையில் வெளியிட்டார்கள்.

5) சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக்கிய மணிமேகலை போல, தனக்கென வாழாமல் தவ வாழ்வு வாழும் தமிழகத்தின் தவப் பயன் மாண்புமிகு அம்மா அவர்கள், நீதித் துறை செவ்வனே செயல்பட, பல்வேறு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். 5 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில், 51 நீதிமன்றங்களில், காணொலிக் கலந்துரையாடல் மூலம் சிறைவாசிகளை நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தும் வசதியை ஏற்படுத்துவது குறித்தும், 4 கோடி ரூபாய் செலவில், சிறைவாசிகளின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஸ்மார்ட் கார்டு வழங்குவது குறித்தும், மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது குறித்தும், சுமார் 33.75 கோடி ரூபாய் செலவில், திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்தும், 23 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 11–8–2016 அன்று அறிவிப்புகளை பேரவையில் வெளியிட்டார்கள்.

6) வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவேண்டும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்க வேண்டும் என்று விவசாயிகளின் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில், விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் நீரினை முழுமையான அளவு சேகரித்து, சிறப்புறப் பயன்படுத்திட வேண்டுமென்ற நோக்கில், புதிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்தி, பாசனக் கட்டமைப்புகளைப் பராமரிப்பதற்கான திட்டங்களை அறிவித்தார்கள். நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், மேட்டூர் கிழக்குக் கரைக் கால்வாயில் ரூ.25 கோடி ரூபாய் செலவில் குறிப்பிட்ட தூரத்திற்கும், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்குக் கரை கால்வாயில் ரூ.25 கோடி ரூபாய் செலவில் குறிப்பிட்ட தூரத்திற்கும் சீரமைப்பது குறித்தும், காளிங்கராயன் வாய்க்காலைப் புனரமைக்கும் பணியின்

தொடர்ச்சியாக, ஈரோடு மாநகருக்குள் செல்லும் இவ்வாய்க்காலின் பகுதிகளில் கான்கிரீட் லைனிங் பணிகள் அமைத்தல் மற்றும் பேபி வாய்க்கால் அமைத்தல் ஆகிய பணிகளை 36 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்துவது குறித்தும், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓமலூர் மற்றும் சேலம் மேற்குப் பகுதிகளில் உள்ள 6 அணைக்கட்டுகள், அதன் வாய்க்கால்கள் மற்றும் 10 ஏரிகள் ஆகியவற்றைப் புனரமைத்து மேம்படுத்துவது குறித்தும், வராக நதியை சீர் செய்து தூய்மைப்படுத்தும் வகையில், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெரியகுளம் பகுதியை ஒட்டியுள்ள பகுதியில், ஆற்றின் இரு புறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து, அதன் கரைகளைப் பலப்படுத்துவது குறித்தும், மழைக்காலங்களில் வைகை ஆற்றில் வரும் வெள்ள நீரைச் சேமிக்கும் பொருட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி அருகே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுவது குறித்தும், 22 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 ஏரிகள், தருமபுரி மாவட்டத்தில் 7 ஏரிகள், வேலூர் மாவட்டத்தில் 12 ஏரிகள், விருதுநகர் மாவட்டத்தில் 22 ஏரிகள் என 49 ஏரிகள் புனரமைக்கப்படுவது குறித்தும், 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சியிலுள்ள பொதுப் பணித் துறை பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு விரிவுரையாளர் அரங்கம் மற்றும் பல்நோக்கு அரங்கம் உள்ளடக்கிய புதிய கட்டடம் கட்டப்படுவது குறித்தும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சிகரமான அறிவிப்புகளை 12–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

7) கிராமப்புறங்களில் சாலைப் போக்குவரத்தை மேம்படுத்தி, போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதன்மூலம், கிராமப்புற மக்கள், குறிப்பாக, விவசாயிகள் தங்களது விளைபொருட்களை எளிதில் சந்தைப்படுத்த வசதியாக இருக்கும் என்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், நபார்டு கடனுதவிமூலம், 159 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 472 கிராமங்களில் வசிக்கும் 22 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், 80 பாலங்கள் அமைப்பது குறித்தும், ஓசூர் நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், ஜுஜுவாடி முதல் பேரண்டப்பள்ளி வரை 18.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளிவட்டச் சாலை அமைப்பது குறித்தும், சென்னை மாநகரின்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

சுற்றுப்புறத்தில் 141.60 கிலோ மீட்டர் நீளமுள்ள முக்கியமான இணைப்புச் சாலைகளை 744 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவது குறித்தும், தாரமங்கலம் நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.11 கிலோ மீட்டர் நீளத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும், அணைப்பாளையம் கிராமத்திலிருந்து மல்லியகரை–ராசிபுரம்–திருச்செங்கோடு–ஈரோடு சாலை, பொன்குறிச்சி என்னும் இடத்தில் இணையுமாறு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலைப் போக்குவரத்து மேம்பாடு அடைவதற்கான அறிவிப்புகளை 12–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

8) உழவர் ஏர் பிடிக்காவிட்டால் பூமித் தாய்க்கு பச்சைப் பட்டாடையேது? உழுபவன் ஓய்வெடுத்தால் ஓட்டத்தை நிறுத்திக்கொள்ளும் இந்த உலகம். தமிழகத்தின் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வழி செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தந்து, காவேரியை மீட்டு வந்து, பெரியாறு காத்துத் தந்து, கறவை மாடு, ஆடு சேர்த்துத் தந்து, நஞ்சை, புஞ்சை காத்து வாழும் நாராயணி, மாண்புமிகு அம்மா அவர்கள்.

காவேரி ஆற்றின் குறுக்கே, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவைப் பெறாமலும் கர்நாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த உத்தேசிக்குமானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள். அந்தவகையில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி, கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய நீரை விடுவிக்க முன்வராத நிலையில், தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நீரைப் பெற்றிட, உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினைத் தாக்கல் செய்வது குறித்தும், ஆகஸ்ட் மாத இறுதிக்குள் சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப்பெறவில்லையெனில், நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு ஒரு தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும், இத்தொகுப்புத் திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கு சம்பா சாகுபடிக்காக 60 கோடியே 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர்

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18–8–2016 அன்று அதிரடியான அறிவிப்புகளைப் பேரவையில் அறிவித்தார்கள்.

9) உயர் கல்வியின் தரத்தினை உயர்த்தவும், ஏழையெளிய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறவும், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகள் மேம்பாடு அடையவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் விளைவாக, உயர் கல்வியின் மொத்த சேர்க்கை விகிதத்தில் நாட்டிலேயே நமது மாநிலம் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது மிகுந்த சிறப்புக்குரியது. பொறியியல் படிப்பு பயிலும் மாணவர்களை இந்திய பொறியியற் பணித் தேர்வில் தேர்ச்சி பெறச் செய்யும் வகையில், சென்னை, தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சி மையங்கள் அமைப்பது குறித்தும், ஆண்டுதோறும் 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 100 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 15 நாட்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெறும்பொருட்டு, அயல்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் திட்டம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுவது குறித்தும், 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையிலுள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் காணொலிக் காட்சி ஒலி ஒளியக மையம் அமைப்பது குறித்தும், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பொருள் சேதமில்லா தரச்சோதனை பயிற்சி மையம் நிறுவப்படுவது குறித்தும், 8 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுவது குறித்தும், காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கத்தில் இந்த ஆண்டு 8 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுவது குறித்தும், அண்ணா பல்கலைக்கழகத்தில் 160 கோடி ரூபாய் செலவில் அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் இணைவுக் கல்லூரிகள், மேகக் கணினியத்தில் இணைக்கப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு பலவித சேவைகள் வழங்கும் மையம் அமைப்பது குறித்தும், அண்ணா பல்கலைக்கழகத்தில்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மோட்டார் வாகன தொழில்நுட்ப மையம் ஒன்று மோட்டார் வாகன தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நிறுவுவது குறித்தும், அண்ணா பல்கலைக்கழகத்தில் 5,000 பேர் அமரும் வசதி கொண்ட ஒரு பெருங் கூட்ட அரங்கம் கட்டப்படுவது குறித்தும், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அண்ணா பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படுவது குறித்தும், விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் புதிய மண்டல மையங்கள் அமைப்பது குறித்தும், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகளில் 4 வருட ஒருங்கிணைந்த பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுவது குறித்தும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில், நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் 4 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை கட்டப்படுவது குறித்தும், 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணவர்கள் நலனைக் கருத்திற்கொண்டு, விளையாட்டு உள் அரங்கம் மற்றும் நூலகம் அமைப்பது குறித்தும், ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில், சூரிய மின் ஒளி மற்றும் நிலத்தடி நீர் சேமிப்புத் திட்டம், கம்பியில்லா தொடர்பு வசதி ஆகியவை ஏற்படுத்தித் தருவது குறித்தும், ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் இப்பல்கலைக்கழகத்தின் விடுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்து தருவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23–8–2016 அன்று அறிவித்தார்கள்.

10) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ள சூளுரையில் "தமிழக மக்களுக்காக என்னையே அர்ப்பணித்து வாழ்கின்ற பெரும் பாக்கியத்தை இறைவன் எனக்கு அருளியிருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறார்கள். பிறருக்காக வாழும் நெஞ்சம், அது கடவுள் வாழும் மஞ்சம் என்பர். ஆம், மாண்புமிகு அம்மா அவர்கள் நெஞ்சத்தில் இறைவன் என்றைக்கும் குடி கொண்டு, தமிழினம் வாழ தமிழர்கள் உயர என்றென்றும் அருள்புரிவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

“வெள்ளத்தே போகாது, வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போதாது, கொடுத்தாலும் குறையாது
கள்ளருக்கும் எட்டாது, காவலுக்குள் அமையாது,
உள்ளத்தே பொருள் இருக்க, ஊரில் உழைத்து உழல்வானேன்”

என்றார் திருமூலர். அதாவது, கற்ற கல்வி வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது. நெருப்பில் எரிந்து சாம்பலாகாது. பிறருக்குக் கொடுப்பதால் செல்வத்தைப் போலக் குறையாது. திருடர்களால் திருடிச் செல்ல முடியாது. அதை, காவல்காரர்களைப் போட்டு கட்டுப்படுத்தி வைக்க முடியாது. இத்தகைய சிறப்புமிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அளிப்பதற்கும், இந்தக் கல்வியை அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் பயில்வதற்கும் இவற்றின்மூலம் கல்விப் புரட்சியை ஏற்படுத்துவதற்கும் தேவையான பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

பள்ளி மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக, அதிலும் குறிப்பாக, ஏழை எளிய மக்களின் குழந்தைகள் அனைவரும் இடைநிற்றல் இன்றி பள்ளியில் கல்வி பயில்வதற்கு ஏதுவாக விலையில்லா புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ண பென்சில்கள், புவியியல் வரைபடங்கள் மற்றும் காலணிகள் வழங்குதல், மிதிவண்டி வழங்குதல், மடிக் கணினி வழங்குதல், பள்ளிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மன்னராட்சி காலத்தில் தோள் வலிமையும், வாள் வலிமையும் பெரிதாகப் போற்றப்பட்டன. இது அறிவு யுகம். மாமன்னர் அக்பர் இந்த மாபெரும் தேசத்தின் பெரும் பகுதியை கட்டி ஆண்டவர். அவர் கல்வி கற்றவர் இல்லை. தோள் வலிமையே அவரை மாமன்னர் ஆக்கியது. ஆனால், சேதுசமுத்திர கடற்கரையில் படகோட்டிக்கு மகனாகப் பிறந்து பாரதத்திற்கே தலைமை ஏற்று, அண்டை நாடுகளிடமிருந்தும், அகிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் அன்னை நாட்டைப் பாதுகாக்க ஆகாயத்திலும் வேலி கட்டிய விஞ்ஞானி அப்துல் கலாம் நாட்டின் குடியரசுத் தலைவரானது, அவரது தோள் வலிமையால் அன்று. வாள் வலிமையால்

அன்று. அறிவின் ஆற்றலால். இந்த உலகை ஆளப்போவது, அறிவாற்றல்தான். அத்தனை ஆற்றல்களின் நிலைக்களனாக இருக்கக்கூடிய மாணவர்களை வளப்படுத்துவதும், வழி நடத்துவதும் நம் முன்னே இருக்கின்ற மிகப் பெரிய சவாலாகும். எனவே, கல்வி வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

கல்வியே பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணி என்பதால், கல்வி வளர்ச்சிக்கான பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தவகையில், 28 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பாண்டில், 5 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படுவது குறித்தும், 3 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 19 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படுவது குறித்தும், இப்பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி மற்றும் சமையலறை கட்டடம் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை அமைத்துக் கொடுப்பது குறித்தும், பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தந்துகொண்டிருப்பதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டில் 60 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தரப்படவேண்டியது குறித்தும், சென்னை, பெரும்பாக்கம் மற்றும் எழில் நகர் பகுதிகளில் தலா ஒரு தொடக்கப் பள்ளியும், ஒரு நடுநிலைப் பள்ளியும் தொடங்கப்படுவது குறித்தும், 5 கோடி ரூபாய் செலவில், சென்னை உள்ளிட்ட 10 மாவட்டங்களிலுள்ள 7,000 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயல்வழிக் கற்றல் அட்டைகள் வழங்குவது குறித்தும், 8 கோடி ரூபாய் செலவில் மலைப் பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கு மழைக் கோட்டு, பூட்ஸ் மற்றும் காலுறைகள் வழங்குவது குறித்தும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 46 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில், வரைபட பயிற்சித் தாள் வழங்குதல், கணிதம் மற்றும் அறிவியல் உபகரணப் பெட்டிகள் வழங்குதல் மற்றும் வாசிப்புத் திறன் மேம்பாட்டிற்கான புத்தகங்கள் வழங்குதல் குறித்தும், 555 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 3 கணினிகள் கொண்ட கணினி வழிக் கற்றல் மையங்கள் உருவாக்கப்படுவது குறித்தும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், கற்றல்-கற்பித்தல் முறைகளை மேம்படுத்திட பின்னணி குரலுடன்கூடிய அசைவூட்டும் காணொளி தொகுப்புகள் வழங்குவது குறித்தும், 45 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு புதிய தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையில் தொட்டுணர்–பயோமெட்ரிக்–கருவிகளைக் கொண்டு வருகைப் பதிவு முறையை முதன்முறையாக அறிமுகப்படுத்துவது குறித்தும், மாணவர்கள் புதிய முறையில் கல்வி கற்பதற்கு ஏதுவாக 11 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகளில் உள்ள சுவர்களில் பாடம் தொடர்புடைய வண்ணச் சுவர் சித்திரங்கள் வரைவது குறித்தும், 33 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் 770 அரசுப் பள்ளிகளிலும், 11 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களிலும் மெய்நிகர் வகுப்பறைகள் ஏற்படுத்துவது குறித்தும், கோயம்புத்தூர், பெரம்பலூர் மற்றும் தருமபுரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடங்கள் மற்றும் தளவாடங்கள், நூலகம் மற்றும் ஆய்வகம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தருவது குறித்தும், நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையை 10,000 ரூபாயாக உயர்த்துவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23–8–2016 அன்று சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

11) மீனவர் நலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுத்துள்ளார்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில், 13.65 கோடி ரூபாய் செலவில் மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஈரோடு மாவட்டம், பவானிசாகர், தஞ்சாவூர் மாவட்டம், அகரப்பேட்டை மற்றும் திருமங்கலக்கோட்டை, திருவாரூர் மாவட்டம், நல்லிக்கோட்டை, தேனி மாவட்டம், மஞ்சளாறு மற்றும் திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு ஆகிய 6 இடங்களில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பது குறித்தும், 9 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பில், திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு, திருவாரூர் மாவட்டம், ஜாம்பவானோடை, தஞ்சாவூர் மாவட்டம், கரையூர் தெரு, தூத்துக்குடி மாவட்டம், கொம்புத்துறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மோர்பனை ஆகிய 5 இடங்களில்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

அனைத்து வசதிகளுடன்கூடிய மீன் இறங்கு தளங்கள் அமைப்பது குறித்தும், 18 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில், கடலூர் மாவட்டம், முதுநகர், நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் கடலூர் மாவட்டம், வெள்ளாறு, நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு, வெட்டாறு ஆகிய மூன்று முகத்துவாரங்களில் பராமரிப்பு மற்றும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது குறித்தும், சென்னை மாநகர், சேத்துப்பட்டு ஏரியில் அமைக்கப்பட்டுள்ள பசுமைப் பூங்காவிற்கு பார்வையாளர்களை மேலும் ஈர்க்கும் வகையில், 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் சூரிய மின்வசதியுடன்கூடிய மீன் காட்சியகம் மற்றும் குளிர்சாதன கவிகைமாடத்தில் dome–ல் முப்பரிமாண காணொளிகளைக் காட்சிப்படுத்தும் மெய்நிகர காட்சியகமும் அமைப்பது குறித்தும், 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, காசிமேடு பகுதியில் சுய உதவிக் குழு மீனவ மகளிர் பயன்பெறும் வகையில், தங்கும் வசதிகளுடன்கூடிய பயிற்சி மையம் மற்றும் உடனடியான சமையலுக்கும், உண்பதற்கும் உகந்த வகையில், கடல் மீன் உணவு வகைகளைத் தயாரித்திட ஒரு மைய சமையலறைக் கூடம் அமைப்பது குறித்தும், சென்னை மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கடல் மீன் உணவுகள் விற்பனை செய்திட ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு நவீன நகரும் கடல்மீன் உணவகங்கள் அமைப்பது குறித்தும், மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பன்னிரெண்டாம் வகுப்பு படித்த இளைஞர்கள் இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்திய கப்பற்படை ஆகியவற்றால் நடத்தப்படும் தகுதித் தேர்வுகளில் எளிதாகத் தேர்ச்சியடைந்து வேலைவாய்ப்பினைப் பெற ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 300 மீனவ இளைஞர்களுக்கு 3 மாத கால பயிற்சி வழங்குவது குறித்தும், அப்பயிற்சியின்போது அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்குவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவர் நலனுக்கான முத்தான அறிவிப்புகளை 24–8–2016 அன்று அறிவித்தார்கள்.

12) மாணாக்கர்களின் பன்முக வளர்ச்சிக்கு விளையாட்டு ஒரு காரணியாக உள்ளதால், கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், 7 கோடி ரூபாய் செலவில் சென்னை

மெரினாவில் பாய்மரப் படகு அகாடமியும், பாய்மரப் படகு மற்றும் துடுப்பு படகு போட்டிகளுக்கான திறன்மிகு பயிற்சி மையம் அமைப்பது குறித்தும், 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் பேராசிரியர்கள் விளையாட்டு தொடர்பான பயிற்சிகள், நுணுக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் பயன்பெற ஏதுவாக மின்நூலகம் அமைப்பது குறித்தும், மதுரை, இடையாபட்டியில் தேசிய மாணவர் பயிற்சி அகாடமியில் பயிற்சி பெறும் தேசிய மாணவர் படை வீரர்கள் மலையேறும் பயிற்சியில் தங்களை செழுமைப்படுத்திக் கொள்ள ஏதுவாக மலையேறும் பயிற்சிக்கான செயற்கை மாதிரி வடிவமைப்பு ஒன்று 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பது குறித்தும் சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

13) ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறுவதுடன், அவர்களின் பொருளாதார நிலை உயரவும் வழிவகை ஏற்படும் வகையில், பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 900 கிலோமீட்டர் நீளமுள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துவது குறித்தும், அதிக அளவில் சேதமடைந்த 1,400 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகளை சீரமைப்பது குறித்தும், 1,200 கிலோ மீட்டர் நீளமுள்ள சிறு பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பிப்பது குறித்தும், 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில், நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக உள்ள இடங்களில், கிணறு ஒன்றுக்கு 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 20 கோடி ரூபாய் செலவில் 250 தனி நபர் கிணறுகள், போதிய இட வசதியில்லாத இடங்களில் 3 விவசாயிகளைக் கொண்ட குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு தலா ஒரு கிணறு வீதம் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 30 கோடி ரூபாய் செலவில் 250 குழு கிணறுகள், மொத்தத்தில் 500 கிணறுகள் 50 கோடி ரூபாய் செலவில் அமைப்பது குறித்தும், இந்த ஆண்டில் ஊரகப் பகுதிகளில் தலா 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,000 அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்படுவது குறித்தும், கிராம ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் பிரதம மந்திரி கிராம திட்ட சாலைகள் ஆகிய சாலைகளின் இருமருங்கிலும் 10,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படுவது குறித்தும், 555 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 68 இலட்சம் பழமரக் கன்றுகள் மற்றும் கட்டடப் பணிகளுக்குப் பயன்படும் மரக்கன்றுகள், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஊராட்சி நிலங்கள், அரசு நிலங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொருத்தமான இடங்களில் நடப்படுவது குறித்தும், கிராம ஊராட்சி செயலர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகையை 50,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாகவும், சிறப்பு மாத ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குவது குறித்தும், 3,524 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்தும், ஏற்கெனவே திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும், இதன்மூலம், இந்தியாவிலேயே அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரும் முதல் மாநிலம் என்ற பெருமை தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் என்பதால், இத்திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வது குறித்தும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் திட்டங்களின்கீழ், இந்த ஆண்டு 15 இலட்சத்து 17 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் 4,175 கிராம ஊராட்சிகளில் கட்டப்படுவது குறித்தும், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கிராம ஊராட்சிகளில் பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள், நடைபாதைகள், சிமென்ட் பெஞ்சுகள், குடிநீர் வசதி, புல்தரை, பசுமைத் தோட்டம் மற்றும் கழிப்பறை ஆகிய அம்சங்களுடன்கூடிய 500 அம்மா பூங்காக்கள் அமைப்பது குறித்தும், ஊரகப் பகுதிகளில் இந்த ஆண்டில், 300 கோடி ரூபாய் செலவில் 8 இலட்சத்து 22 ஆயிரம் குழல் விளக்குகள், எல்.ஈ.டி. விளக்குகளாக மாற்றியமைக்கப்படுவது குறித்தும், ஊரகப் பகுதி இளைஞர்கள் உடல்திறன் மற்றும் மன வளத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், ஒவ்வொன்றும் தலா 10 இலட்சம் ரூபாய் செலவில் 500 அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுவது

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கு இந்த ஆண்டில் 6,000 கோடி ரூபாய் வழங்குவது குறித்தும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

14) நகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், நகர்ப்புறங்கள் தூய்மையாக விளங்கிடவும் வழி ஏற்பட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். இந்த ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சி உட்பட எஞ்சிய அனைத்து நகராட்சிகளிலும் உள்ள தெரு விளக்குகள் 320 கோடி ரூபாய் செலவில் எல்.ஈ.டி. விளக்குகளாக மாற்றப்படுவது குறித்தும், வேளாங்கண்ணி பேரூராட்சியில் 23 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும், 3,229 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில், இந்த ஆண்டு பெருநகர சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருப்பூர், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் மற்றும் நாகர்கோவில், இராஜபாளையம், ஆம்பூர் மற்றும் ஓசூர் நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், 116 கோடி ரூபாய் செலவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் 36 நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்தும், அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெறும் ஏழையெளிய நோயாளிகளின் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் குறைந்த செலவில் தங்குவதைக் கருத்தில் கொண்டு, குறுகிய கால தங்கும் விடுதிகள் அமைப்பது குறித்தும், இதன் முதற்கட்டமாக, 11 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கடலூர், தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 23 குறுகிய கால தங்கும் விடுதிகள் அமைக்கப்படுவது குறித்தும், இந்த ஆண்டு மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் 91 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்தும், 150 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 1,25,352 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்டப்படுவது குறித்தும், 2,184 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பறைகள்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

21 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுவது குறித்தும், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திறந்த வெளியில் மலம் கழித்தலைத் தடுக்க மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 57 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் நீரை மீண்டும் சுத்திகரித்து பயன்படுத்த ஈரோடு மாநகராட்சியில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் 62 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் நிறுவுவது குறித்தும், பெரம்பலூர் நகராட்சியில் நெடுவாசல் சாலையில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் நீரினை மீண்டும் சுத்திகரிக்க மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் நிறுவுவது குறித்தும், தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் 73 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் கட்டுவது குறித்தும், 39 கோடி ரூபாய் செலவில் கடலூர் நகர்ப் பகுதிகளில் 15 வார்டுகளில் 83.67 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டுவது குறித்தும், மழை நீரை சேகரித்தல், நீர் நிலைகளைப் புதுப்பித்தல், சமையல் அறை மற்றும் குளியல் அறைகளில் உபயோகப்படுத்தும் நீரின் அளவைக் குறைத்தல், சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் அடங்கிய நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத் திட்டம் 20 கோடி ரூபாய் செலவில் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது குறித்தும், 108 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் 90,150 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்படுவது குறித்தும், 17 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,620 இருக்கைகளை உள்ளடக்கிய சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டுவது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த எண்ணற்ற அறிவிப்புகளை 29—8—2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

15) பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்திற்கொண்டு பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்து வரும் சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த 27—6—2016 அன்று 31.39 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, 82 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் வருடத்திற்கு 5,000 மெட்ரிக் டன் திறன் கொண்ட பாலிதீன் பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும், 4 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில், நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும், நவீன பாலகங்கள் அமைப்பது குறித்தும், குளிர்சாதன வாகனங்கள் கொள்முதல் செய்வது குறித்தும், 27 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணையில் ஒரு லிட்டர் டெட்ரா பேக் பால் பாக்கெட்டுகள் தயாரிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவது குறித்தும், மதுரை பால் பண்ணையில், 13 கோடி ரூபாய் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், சூரிய ஒளி செறிவூட்டி, மின் மாற்றிகள் மற்றும் வெண்ணெய் சிப்பம் கட்டும் இயந்திரம் ஆகியன நிறுவுதல் குறித்தும், சென்னை, மாதவரம் பால் பண்ணை வளாகத்தில், பழுதடைந்த நிலையில் உள்ள பணியாளர்களுக்கான 452 அரசு குடியிருப்புகளை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புனரமைப்பது குறித்தும், 27 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, ஓய்வூதியத் தொகையுடன் கூடுதலாக மாதம் 3,500 ரூபாய் பெறும் வகையில், புதிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தல், ஓய்வூதியத் தொகையில் 50 சதவிகிதத் தொகை குடும்ப ஓய்வூதியமாக அனுமதித்தல் ஆகியன குறித்தும், 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மருத்துவ வசதி மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சத்தான திட்டங்களை பால் உற்பத்தியாளர்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக பேரவையில் 29–8–2016 அன்று அறிவித்தார்கள்.

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

16) சமூக நலத் துறையின் சார்பான அறிவிப்புகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரவையில் அறிவித்துள்ளார்கள். 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, கெல்லீஸ் சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லத்திற்கு 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும், முதியோர் இல்லங்களில் பயனடையும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியத்தை 300 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்குவது குறித்தும், சமூக நலத் துறையின்கீழ் இயங்கும் சேவை இல்லங்களில் தங்கும் பயனாளிகளுக்கும், இடைநிலை ஆசிரியை பயிற்சியில் சேரும் மாணவியருக்கும், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டப் பயனாளிகளுக்கும் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பை 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்துவது குறித்தும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை 30–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

17) விடா முயற்சிக்கு கண்கூடான சான்றுகள் உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகள். உலகத்தின் மிகச் சிறந்த பேச்சாளர்களை வரிசைப்படுத்தினால், முதலில் நிற்பவர் கிரேக்கத்து டெமாஸ்தனிசு. இவருக்கு திக்குவாய். கூட்டத்தைக் கலைக்க வேண்டுமா, இவரைக் கூப்பிடுங்கள் என்று அவமானப்படுத்தினர். ஆனால், விடாமல் முயற்சி செய்து, கூட்டத்தைக் கூட்ட வேண்டுமா, டெமாஸ்தனிசைக் கூப்பிடுங்கள் என்று சொல்கிற அளவிற்கு உயர்ந்தான். இரண்டு கால்களும் சூம்பிப்போன, வில்மா ரூடால்ஃப் என்னும் சிறுமி, பள்ளியில் நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்கிற தன் ஆவலை அம்மாவிடம் சொன்னாள். ஊக்கமளிப்பதில் ஒப்பற்றவர் ஆயிற்றே அம்மா அவர்கள். அன்றைக்கு ஓட்டப்பந்தயத்தில் தோற்றாலும் பின்னாளில் பயிற்சி பெற்று, 1960 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு, தங்கப்பதக்கம் வென்றாள் வில்மா ரூடால்ஃப். தரையில் ஓடலாம். ஆனால், கால் சூம்பிப் போனவர்கள் மலையேற்றத்தில் வெல்ல முடியுமா? விடா முயற்சி இருந்தால் முடியும். நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த மார்க் இங்லிஸ் இரண்டு கால்களையும் ஒரு விபத்தில் இழந்தவர். செயற்கைக் கால்களைக் கொண்டு, விடாமுயற்சி செய்து எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டு, இமயத்தில் ஏறி நின்று மாபெரும் சாதனை படைத்தது இமாலய முயற்சியாகும். எனவே, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையிலும், நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையிலும், ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழும் வண்ணமும் அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் செயல்படுத்தி வருகிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். இதன் தொடர்ச்சியாக, 1 கோடியே 58 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் 5,000 பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்குவது குறித்தும், 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் 11 மாநகர தாய் சேய் நல மருத்துவமனைகளிலும், சிவகங்கை மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காது கேளாமையை தொடக்க நிலையிலேயே கண்டறிவதற்கான சிறப்பு பரிசோதனைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும், தொடு திரை மென்பொருளுடன்கூடிய கையடக்க கணினிமூலம் சிறப்புக் குழந்தைகளிடமுள்ள தகவல் பரிமாற்ற குறைபாட்டைக் களையும் நோக்கில், இச்சிறப்பு வசதி, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்மூலம் பயனடையும் குழந்தைகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 416 குழந்தைகளுக்கு வழங்குவது குறித்தும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–8–2016 அன்று அறிவித்தார்கள்.

18) அரசு அச்சகத்தில் அச்சுப் பணிகளை விரைவாகவும், நவீன முறையிலும், நேர்த்தியாகவும், உயர்தரத்திலும் மேற்கொள்ள, அரசு அச்சகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். அந்த வகையில், சென்னையில் உள்ள உயர் நீதிமன்ற கிளை அச்சகத்திற்கு 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய புதிய வெப் ஆப்செட் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கான அறிவிப்பினை

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30—8—2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

19) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேன்மை அடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு முத்தான அறிவிப்புகளை பேரவைக்கு அளித்துள்ளார்கள். அந்த வகையில், 50 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் உள்ள மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும், சென்னைக்கு அருகில் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில், குறு உற்பத்தி நிறுவனங்களின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிட்கோ நிறுவனத்தின்மூலம் 50 கோடி ரூபாய் செலவில், குறு உற்பத்தி நிறுவனங்களுக்கென அடுக்குமாடி தொழில் வளாகம் அமைப்பது குறித்தும், 36 கோடி ரூபாய் செலவில் சிட்கோ நிறுவனத்தின்மூலம் நாமக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 186 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டைகள் நிறுவுவது குறித்தும், 27 கோடி ரூபாய் மானியத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்புகளின் பங்களிப்புடன் இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 478 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் தொழில் முனைவோர்களால் அமைக்கப்படவுள்ள தொழிற்பேட்டைகளில் அடிப்படைக் கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும், சிட்கோ—தனியார் கூட்டு முயற்சியில் 11 சதவிகிதப் பங்களிப்புடன் இரண்டு தொழிற்பேட்டைகள் நிறுவுதல் குறித்தும், இந்தத் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 15 கோடி ரூபாய் மானியம் வழங்குவது குறித்தும், திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் தொழிற்பேட்டையில் 3 கோடி ரூபாய் செலவில், 300 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் குறித்தும் சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30—8—2016 அன்று பேரவையில் அளித்தார்கள்.

20) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு அறிவிப்புகளை பேரவைக்கு அளித்துள்ளார்கள். அந்த வகையில், 28 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை பெருநகரம், ஆவடி நகராட்சியின் எல்லையில் அமைந்துள்ள பருத்திப்பட்டு

ஏரியை மேம்படுத்துவது குறித்தும், 2 கோடி ரூபாய் செலவில் தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டையில் 50,110 சதுர அடி நிலத்தில் அம்மா சுற்றுச்சூழல் பூங்கா அமைப்பது குறித்தும், 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள பெரிய குளம் ஏரி புனரமைக்கப்பட்டு, மேம்படுத்தப்படுவது குறித்தும், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் ஈரோடு மாநகராட்சியில் அமைந்துள்ள முத்தம்பாளையம் ஏரி தூர் வாரப்பட்டு, மேம்படுத்தப்படுவது குறித்தும் சிறப்பான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–8–2016 அன்று பேரவையில் அளித்தார்கள்.

21) விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிப்பதால், கால்நடைகளின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து, பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த அடிப்படையில், 37 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில், 27 மாவட்டங்களில் கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுவது குறித்தும், 36 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் இயங்கிவரும் அடைப்பான் நோய் தடுப்பூசி ஆய்வகம், நல்உற்பத்தித் தரத்திற்கு உயர்த்தப்படுவது குறித்தும், 28 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 113 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் என 115 கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 3 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் தீவன விதை உற்பத்தி அலகு, செட்டிநாடு, நடுவூர் மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடை பண்ணைகளில் தீவனக் கட்டி உருவாக்கும் அலகுகள் அமைக்கப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை குறித்த சிறப்பான அறிவிப்புகளை 31–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

22) தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், 20

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

கோடி ரூபாய் செலவில் சென்னை, தரமணியில் உள்ள டைடல் பயோபார்க் நிறுவனத்தில் உயிரி தொழில்நுட்ப அபிவிருத்தி மையம் நிறுவப்படுவது குறித்தும், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் சிப்காட், வல்லம்–வடகால் தொழில் பூங்காவில் 245 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள வானூர்தி பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உலகத் தரத்தில் அமைக்கப்படுவது குறித்தும், 25 கோடி ரூபாய் செலவில் கரூர் மாவட்டம், காகிதபுரம் ஆலையில் உள்ள காகித ஆலையின் செயல்திறன் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், 35 கோடி ரூபாய் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இயங்கி வரும், அடுக்கு காகித அட்டை ஆலை மேம்படுத்தப்படுவதுடன், அடுக்கு காகித அட்டை வைப்பதற்கான கிடங்கு விரிவாக்கம் செய்யப்படுவது குறித்தும், 20 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது குறித்தும், அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அரியலூர் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து, 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர் மாவட்ட மருத்துவமனை மேம்பாடு, 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அரியலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருக்கும் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, அரியலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் பசுமை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுதல் என அரியலூர் பகுதியில் மொத்தம் 13 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் மூலமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், திருவண்ணாமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு வரும் சிப்காட் செய்யாறு தொழில் வளாகத்தில் முதற்கட்டமாக, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்யப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை 31–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

23) வேளாண்மை. 21 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில், 500 விவசாயிகள் பயனடையும் வகையில், 10 குதிரைத் திறன் கொண்ட சூரியசக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு

80 சதவிகித மானியம் வழங்கப்படுவது குறித்தும், 21 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண் பணிகளுக்கான இயந்திரங்கள் வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவது குறித்தும், விவசாயிகள் பல்வேறு வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு 31 கோடியே 6 இலட்சம் ரூபாய் மானியம் வழங்குவது குறித்தும், 21 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 20 ஆயிரத்து 55 ஏக்கர் மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை பரவலாக்கப்படுவது குறித்தும், 10 கோடி ரூபாய் செலவில் 1,27,500 ஏக்கர் பரப்பளவில், வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகளை விவசாயிகள் பின்பற்றும் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்தும், 16 கோடி ரூபாய் செலவில், மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 50 சதவிகித மானியத்துடன் பசுமைக் குடில்களில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுவது குறித்தும், 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் ஆறு அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் நவீனமயமாக்கப்படுவது குறித்தும், 2 கோடி ரூபாய் செலவில், திருப்பூர், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்களில் புதிய தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்கப்படுவது குறித்தும், 49 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் தேர்வு மையங்கள் கட்டப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வேளாண்மைத் துறை சார்ந்த சிறப்பான அறிவிப்புகளை 31–8–2016 அன்று பேரவைக்கு அளித்தார்கள்.

24) மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிப்பதால், தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் இந்தத் துறைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது குறித்தும், அதன்மூலம் கிடைக்கும் வட்டித் தொகை நலத் திட்டங்களுக்குச் செலவிடப்படுவது குறித்தும், வணிகர் நல வாரியத்திற்கு அரசு வழங்கும் தொகுப்பு

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

நிதி 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்படுவது குறித்தும், 228 வணிக வரி அலுவலகங்களில் வணிகர்களின் பயன்பாட்டிற்காக உதவி மையங்கள் ஏற்படுத்தப்படுவது குறித்தும், தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்தால் நிருவகிக்கப்பட்டு வரும் 486 அரசு மின் சேவை மையங்களும் வணிகர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது குறித்தும், 6 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் பழனி ஆகிய மூன்று இடங்களில் 9 வணிக வரி அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிக வரிக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், ஆவணப் பதிவுகளை இணையதளம் மூலமாகவே மேற்கொள்ள, அதற்கான வசதிகள் செய்து தருவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், வணிக வரித் துறை சார்ந்த சிறப்பான அறிவிப்புகளை 31–8–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

25) போக்குவரத்து. 5 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும், 4 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர், வேலூர் மாவட்டம், ஆம்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறை சார்ந்த சிறப்பான அறிவிப்புகளை 1–9–2016 அன்று பேரவையில் அறிவித்தார்கள்.

26) நான் பெற்ற பெண்ணுக்கு எனது பெயரே முதலெழுத்து. பெண் மகவு பிறந்தாலோ, பிறந்தவுடன் வைப்பு நிதி. சிசுக் கொலைகள் என்னும் அடிமுட்டாள்தனங்களை அடியோடு ஒழித்திட்ட சாதனை, மங்கையர்க்கு மண உதவி, தாலிக்குத் தங்கம், அம்மிக் குழவியோடு மல்லுக்கட்டிய கற்காலம் தவிர்க்க இல்லத்துப் பெண்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், ஃபேன், ஆணுக்கு நிகரே பெண் என அறிவிப்புச் செய்யும் வண்ணம், மகளிர் காவல் நிலையம், பெண் கமாண்டோ, சத்தியத்தின் கோட்டில் நின்று, சாணளவும் விலகாது, சமத்துவம் என்னும் தலையாய நோக்கோடு மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மகளிர் உறுப்பினர்களை 50 விழுக்காடாக அதிகரிப்பதற்கான சட்டத்தைக்

கொண்டு வந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். அதேபோன்று, அரசுக்கும், மக்களுக்கும் இடையே பாலமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். அரசின் அனைத்து நலத் திட்டங்களையும் மக்களிடம் எடுத்துச் செல்பவர்களும் அரசு ஊழியர்கள்தான். எனவே, அரசு ஊழியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசுப் பணிபுரியும் தாய்மார்கள், தங்களது பச்சிளம் குழந்தையைப் பேணிப் பாதுகாக்கும் வகையில், பேறுகால சலுகையாக வழங்கப்படும் 6 மாத கால மகப்பேறு விடுப்பு 9 மாத காலமாக உயர்த்தப்படுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1–9–2016 அன்று பேரவையில் அளித்தார்கள்.

27) மக்களை இணைப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு, குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்கு அளித்து வரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இந்த ஆண்டில் இயக்கப்படுவது குறித்தும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 1,600 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை 1–9–2016 அன்று பேரவையில் அளித்தார்கள்.

28) தரமான மருத்துவ சேவையை அனைத்து மக்களும், குறிப்பாக, ஏழையெளிய மக்கள் பெற்றிடும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், 356 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, சென்னை, கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை அரங்கங்கள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து தருவது குறித்தும், 497 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரை, சென்னை கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நவீன அறுவை சிகிச்சை

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

மையத்தில் அறுவை அரங்கத்திற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவது குறித்தும், 153 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், ஈரோடு, திருப்பூர், கடலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மற்றும் பெரியகுளம் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் பல்வேறு உபகரணங்கள் வழங்கப்படுவது குறித்தும், சென்னை, ஆவடி, சேலம், மணியனூர், திருப்பூர், வேலம்பாளையம், திருநெல்வேலி, கண்டிகைப்பேரி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளுக்கான கட்டடங்கள் 80 கோடி ரூபாய் செலவில் கட்டுதல், 51 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்குதல் ஆகியன குறித்தும், 122 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வாங்குவது குறித்தும், 42 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூர், வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை ராஜாஜி மருத்துவமனை ஆகிய 6 மருத்துவமனைகளின் இதயத் துறைக்கு கேத்லேப் கருவி வாங்குவது குறித்தும், சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்பட்டுவரும் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை மையங்களுக்கு 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலும், 22 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 6 அரசு மருத்துவமனைகளில் உள்ள குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு, 7 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலும் புதிய உபகரணங்கள் வழங்கப்படுவது குறித்தும், 8 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்கெனவே இயங்கிவரும் 55 'சீமாங்க்' மையங்களின் மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் 64 பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவற்றிற்கு நவீன உபகரணங்கள் வழங்கப்படுவது குறித்தும், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில், 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 20 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகள் என 40 இரத்த வங்கிகளுக்குக் கூடுதல் உபகரணங்கள் வழங்கப்படுவது குறித்தும், நடப்பாண்டில், முன்னோடித் திட்டமாக, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், 5 கோடியே

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

93 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் தொடங்கப்படுவது குறித்தும், 20 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 31 இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கு தலா இரண்டு டயாலிசிஸ் கருவிகள், 5 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படுவது குறித்தும், மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாநகராட்சிகளிலுள்ள 15 நகர்ப்புற சுகாதார மையங்களுக்கும், பெரம்பலூர், பண்ருட்டி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, அருப்புக்கோட்டை, திருவாரூர், ஆவடி ஆகிய நகராட்சிகளிலுள்ள 8 நகர்ப்புற சுகாதார மையங்களுக்கும் புதிய கட்டடங்கள், 5 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படுவது குறித்தும், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாநகராட்சிகளில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 2 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்படுவது குறித்தும், நடப்பாண்டில் 108 ஆம்புலன்ஸ் திட்டத்தில் செயல்பட்டுவரும் 50 ஆம்புலன்ஸ்களுக்குப் பதிலாக 50 புதிய ஆம்புலன்ஸ்கள் 4 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படுவது குறித்தும், பிரசவங்கள் அதிக எண்ணிக்கையில் நிகழும் 20 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு 20 புதிய வாகனங்களும், தருமபுரி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, பழனி, திருநெல்வேலி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களிலுள்ள தொலை தூர மற்றும் மலைப் பகுதிகளில் 8 நகரும் மருத்துவக் குழுக்கள், 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படுவது குறித்தும், நடப்பு ஆண்டில் விழுப்புரம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவமனைகளில் முதியோர் பிரிவு, 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படுவது குறித்தும், 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அரியலூர், நீலகிரி, தஞ்சாவூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மன நலத் திட்டம் விரிவுபடுத்தப்படுவது குறித்தும், 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காஞ்சிபுரம், திருப்பூர் மற்றும் கடலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், 30 படுக்கைகள் கொண்ட, மது போதை மாற்று சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படுவது குறித்தும், 15 கோடி ரூபாய் செலவில், புற்றுநோய் கண்டறியும் PET SCAN வசதி சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நிறுவப்படுவது குறித்தும், நடப்பாண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அம்மா மகளிர் சிறப்பு முழு உடல்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

பரிசோதனைத் திட்டம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படுவது குறித்தும், அரசு யோகா மற்றும் இயற்கை வைத்தியக் கல்லூரி மாணவியர்களுக்காக, 11 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் விடுதிக் கட்டடம் கட்டப்படுவது குறித்தும், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் 22 நல மையங்கள், 10 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுஷ் பிரிவு ஏற்படுத்துதல் மற்றும் ஏற்கெனவே செயல்பட்டு வரும் 475 ஆயுஷ் மருத்துவ நிலையங்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள், 19 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை 1–9–2016 அன்று பேரவையில் அறிவித்துள்ளார்கள்.

29) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுலாத் துறைக்கு அளித்து வரும் திட்டங்களின் காரணமாகவே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அந்த வகையில், 95 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடற்கரை சுற்றுலாச் சுற்று வசதிகள் மேம்படுத்தப்படுவது குறித்தும், 22 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில், காஞ்சிபுரம் நகரம் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும், 403 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ், முக்கிய சுற்றுலாத் தலங்களில் மேம்பாட்டுப் பணிகள் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படுவது குறித்தும், கோயம்புத்தூரில் ஒரு புதிய மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்படுவது குறித்தும், மிகப் பழமையான சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பழுதடைந்த வகுப்பறைகள் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படுவது குறித்தும், சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் தானியங்கி தீத்தடுப்பு ஒலிப்பான்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்படுவது குறித்தும், சென்னை அரசு அருங்காட்சியகம், 3 பழமையான கட்டடங்கள் மற்றும் 3 புதிய கட்டடங்களில், சுமார் ஒரு இலட்சம் சதுர அடியில், 54 காட்சிக் கூடங்கள் புதுப்பிக்கப்பட்டு, சீரமைக்கப்படுவது குறித்தும், 10 கோடி ரூபாய் செலவில், சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அடிப்படை வசதிகள் செய்து தருவது குறித்தும், இராமநாதபுரம்

மாவட்டம், அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்புகளை 1–9–2016 அன்று பேரவையில் அளித்தார்கள்.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும் — 82

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் — 152

உறுப்பினர்கள் வருகை—

25–5–2016 முதல் இன்று (2–9–2016) வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகைபுரிந்த உறுப்பினர்கள் பட்டியல்:

வரிசை எண்	திரு./திருமதி
1.	திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
2.	திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்
3.	திரு. பா. ஆறுமுகம்
4.	திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்
5.	திரு. சி.வி. இராஜேந்திரன்
6.	திரு. ஐ.எஸ். இன்பதுரை
7.	திரு. எஸ். ஈஸ்வரன்
8.	திருமதி கு. உமா மகேஸ்வரி
9.	திரு. டி.எ. ஏழுமலை
10.	டாக்டர். கா. கதிர்காமு
11.	திரு. V.T. கலைச்செல்வன்
12.	திரு. ஆர். கனகராஜ்
13.	திருமதி வி. கஸ்தூரி வாசு
14.	திருமதி ம. கீதா
15.	திரு. சு. குணசேகரன்
16.	திரு. இரா. குமரகுரு

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

17.	திரு. மு. கோதண்டபாணி
18.	திரு. மா. கோவிந்தராசு
19.	திரு. எ.பி. சக்திவேல்
20.	திரு. அ. சண்முகம்
21.	திரு. பி. சத்திய நாராயணன்
22.	திருமதி மு. சந்திரபிரபா
23.	திருமதி கு. சித்ரா
24.	திரு. ஓ.கே. சின்னராஜ்
25.	திரு. ஆர். சுந்தரராஜ்
26.	திரு. எஸ்.ஜி. சுப்பிரமணியன்
27.	திரு. கே.ஏ. செங்கோட்டையன்
28.	திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்
29.	திரு. எம். செல்வராசு
30.	திரு. C.V. சேகர்
31.	திரு. ஆர். தங்கதுரை
32.	திரு. ரா. தமிழ்ச்செல்வன்
33.	திரு. கே.எஸ். தென்னரசு
34.	திரு. ஆர். நடராஜ்
35.	திரு. அ. நடராஜன்
36.	திரு. பி.எம். நரசிம்மன்
37.	டாக்டர் வெ.ப.பா. பரமசிவம்
38.	திரு. ப. பலராமன்
39.	திரு. எஸ். பவுன்ராஜ்
40.	திரு. கே. பழனி
41.	திரு. பெ. பழனியப்பன்
42.	திரு. வி. பன்னீர்செல்வம்
43.	திரு. கே.ஏ. பாண்டியன்
44.	திரு. என்.ஜி. பார்த்திபன்
45.	திரு. பி.வி. பாரதி
46.	திரு. ஆர். பாலசுப்பிரமணி
47.	திரு. கே.பி.பி. பாஸ்கர்
48.	திரு. அ. பிரபு
49.	திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்

50.	திருமதி பொன். சரஸ்வதி
51.	திரு. அ. மருதமுத்து
52.	திருமதி நா. மனோரஞ்சிதம்
53.	திருமதி ப. மனோன்மணி
54.	திரு. கி. மாணிக்கம்
55.	திரு. சோ. மாரியப்பன் கென்னடி
56.	திரு. எஸ். முத்தையா
57.	திரு. ஆர். முருகன்
58.	திரு. என். முருகுமாறன்
59.	திரு. ஆர். முருகையா பாண்டியன்
60.	திரு. தூசி. கே. மோகன்
61.	திரு. சு. ரவி
62.	திரு. வி. ராதாகிருஷ்ணன்
63.	திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்
64.	திரு. அ. ராமு
65.	திரு. வி.வி. இராஜன் செல்லப்பா
66.	திரு. ஈ.எம்.ஆர். ராஜா, (என்கிற) கே.ஆர். ராஜாகிருஷ்ணன்
67.	திரு. விருகை V.N. ரவி
68.	திரு. க.நா. விஜயகுமார்
69.	திரு. கே.எஸ். விஜயகுமார்
70.	திரு. என்.டி. வெங்கடாச்சலம்
71.	திரு. கோ. வெங்கடாஜலம்
72.	திரு. ச. வெற்றிவேல்
73.	திரு. P. வெற்றிவேல்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் (1–9–2016 அன்று உள்ளவாறு)

மொத்தம் — 27675

ஆண்கள் — 26359

பெண்கள் — 1316

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

நூலகம்—

இக்கூட்டத்தொடரின்போது சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	—	*430*
வழங்கப்பெற்ற நூல்கள்	—	*999*
இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	—	*23*

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	—	*395*
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	—	*6858*
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	*1186*
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	*251*

சிறப்பு நேர்வுகள்—

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அவைக்கு வந்திருந்து, வினாக்கள்–விடைகள் மற்றும் அனைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டு, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உன்னிப்பாக செவிமடுத்து, எந்தத் துறையைப் பற்றி உறுப்பினர்கள் உரையாற்றினாலும், அந்தத் துறை குறித்த அனைத்து திட்டங்கள் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் உடனுக்குடன் உரிய விளக்கங்களை அளித்துள்ளார்கள். மானியக் கோரிக்கைகள்மீதான விவாதங்களில், சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் பதிலுரையின்போது அமைச்சரின் பதிலுரையை முழுமையாகக் கூர்ந்து கவனித்து, பேரவை நடவடிக்கைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ளார்கள்.

அரசின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விவாதங்களின் சில நேர்வுகளில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உடனுக்குடன் எழுந்து, கொள்கை விளக்கக் குறிப்பின் இந்தப் பக்கத்தில், இந்தப் பத்தியில் இத்திட்டம் பற்றிய விவரம்

உள்ளது என்று சுட்டிக்காட்டி, சரியான விவரங்கள் பேரவை உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் சென்றடையவேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தோடு செயல்பட்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒவ்வொரு துறையின்மீதும் அக்கறை செலுத்தி அதன் செயல்பாடுகளை ஆராய்ந்து, அத்தனை விவரங்களையும் தமது விரல் நுனியில் வைத்துள்ளார்கள் என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும். அவர்களது உழைப்புக்கும், அறிவாற்றலுக்கும், மதி நுட்பத்திற்கும், நிருவாகத் திறமைக்கும், ஆளுமைக்கும் ஈடு இணை எவருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, அவர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து, ஏதேனும் குறைகள் இருந்தால், அவற்றைச் சுட்டிக்காட்டி, அவர்களும் ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு அறிவுரை வழங்கி, வழிநடத்தி, அவையில் விவாதம் சீராக நடைபெற வழிவகை செய்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் 9–8–2016 அன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் உரையாற்றும்போது, அவரது கோரிக்கைகளை முன்வைத்து, அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்து வந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், குறுக்கிட்டு, உறுப்பினருக்கு நட்புரீதியாக ஓர் ஆலோசனையைக் கூற விரும்புவதாகவும், உறுப்பினர் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு, இதற்கு அமைச்சர் பதிலளிப்பாரா, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று ஒரு கேள்வியுடன் முடித்திருப்பதால், அமைச்சர் எழுந்து பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்றும், ஆகவே, வினாவோடு முடிக்காமல், வேறு விதமாக முடித்திருந்தால், குறுக்கீடுகளை ஓரளவிற்கு தவிர்க்கலாம் என்றும் உறுப்பினருக்கு ஆலோசனை கூறினார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அது நல்ல யோசனைதான் என்று ஏற்றுக்கொண்டார்.

பேரவையில் 11–8–2016 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தனது உரையை ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆற்றிக் கொண்டிருந்தார். தான் சொல்ல

வந்த கருத்தினை ஆங்கிலத்தில் தெரிவித்தபோது, அதனை நன்கு கவனித்து வந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், My dear young M.L.A. என்று ஆரம்பித்து, அவருக்கு உரிய விளக்கத்தையும், அவரே ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு ஆங்கிலத்தில் தெரிவித்து, அவையோரின் பாராட்டுகளைப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது குறித்து, பேரவையில் 20–6–2016 அன்று விவாதம் எழுந்து, இரு வேறுபட்ட கருத்துகள் நிலவியபோது, இப்பிரச்சினை குறித்து, தொடக்க காலம் முதல், உண்மை நிலையை, நீண்ட நெடிய விளக்கத்துடன் அவைக்கு அளித்து, நாட்டிற்கு உண்மை நிலையை உணர்த்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 3–20

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் 12–8–2016 அன்று உரையாற்றும்போது, தமிழ்நாடு அரசு திரைப்பட விருது, தமிழ்த் திரைப்பட நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்கும் விருதுகள் வழங்கப்படவில்லை என்றும், அதற்கான விழாக்கள் நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார். உடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு பிரம்மாண்டமான விழா விரைவில் நடத்தப்படும், விரைவில் அந்த விருதுகள் வழங்கப்படும் என்று அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினரின் கருத்திற்கு மதிப்பளித்து உடன் நடவடிக்கை எடுத்ததோடு, திரைப்படக் கலைஞர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

30–8–2016 அன்று திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படுவதுபோல் சலுகைகள் வழங்கப்படுவதில்லை என்று குற்றச்சாட்டாகச் சொன்னவுடன், கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ள குறிப்பினை உடன் சுட்டிக்காட்டிப் பேசியது மிகவும் பாராட்டப்பட்டது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய இருக்கையில் உள்ள ஒலிபெருக்கியை விட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் இருக்கைக்கு அருகில் உள்ள ஒலிபெருக்கியிலிருந்து பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்த

[பேரவைத் தலைவர்] [*2016 செப்டம்பர் 2*

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அவரின் செயல் தவறு எனச் சுட்டிக்காட்டி, ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியது, மாண்புமிகு உறுப்பினர்களின் ஒவ்வொரு செயல்பாட்டையும் எந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள், அவை நடவடிக்கைகள் மிகச் சரியாக நடைபெற வேண்டும் என்பதில் எவ்வளவு ஈடுபாடு காட்டுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

பேரவையில் ஒவ்வொரு முறையும் தீர்மானங்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படுகையில், ஒவ்வொரு முறையும் 'ஆம்' என்று தவறாமல் சொல்லியும், அதேபோல, தீர்மானம் நிறைவேற்றப்படுகையில் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில், மேசையைத் தட்டியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேரவை நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கையில், அது அனைவருக்கும் பாடமாகவே அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த அளவிற்கு சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், சட்டமன்ற விதிகளை மதித்தும் வருகிறார்கள் என்பதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் காவல் துறை குறித்த மானியக் கோரிக்கைக்குப் பதிலுரை வழங்குகையில், நல்லவற்றைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது, அல்லவையையும், தீயவையையும் நினைவுகூர்கையில், பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. ஆதாரங்களோடுதான் இந்த அவையில் பேச வேண்டும். முதலமைச்சராக இருந்தாலும், பதிலுரை வழங்குகையில், குறிப்பிட்ட சில நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிட அவற்றுக்கான ஆதாரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்னிடத்திலே முன்னரே வழங்கி, அவற்றை பதிலுரையில் குறிப்பிட அனுமதியும் பெற்றது, அவை விதிகளை எந்த அளவிற்குச் சரியாகப் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) *முதலமைச்சராக இருப்பினும், அவை விதிகளைக் கடைப்பிடிப்பதில் அவரே முதல்வராக உள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

இந்த அவையின் நிகழ்ச்சிகள் விதிமுறைகளின்படி, மரபுகளின்படி மிகச் சரியாக நடைபெற எனக்குப் பெரிதும் வழிகாட்டியாக இருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வினாக்கள்—விடைகள் மற்றும் பல்வேறு அலுவல்களின்கீழ் உறுப்பினர்கள் தெரிவிக்கும் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் விளக்கமளித்ததோடு, பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றைப் புத்தகமாக அச்சிட்டு வழங்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவை நடவடிக்கைகளில் எனக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் விவாதங்களில் சிறப்பாகப் பங்கேற்கவும் உதவி புரிந்த மாற்றுத் தலைவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா, காங்கிரஸ் கட்சித் தலைவர், கொறடா மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியினைப் பதிவு செய்கிறேன்.

இந்த முதலாவது கூட்டத் தொடரின் அலுவல்கள் நிறைவேற எல்லா வகைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்து, மிகச் சிறந்த முறையில் உதவிய பேரவைச் செயலாளர் திரு. அ.மு.பி. ஜமாலுதீன் அவர்களுக்கும், எனது தனிச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) *பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

பேரவையின் நிகழ்ச்சிகளை தினமும் சிறப்புற ஒளிபரப்பு செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், அகில

இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த புனிதமிக்க பேரவையை நடுநிலை கொண்டு வழிநடத்தும் வாய்ப்பை எளியவனான எனக்கு இரண்டாம் முறையாக வழங்கியமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொடர் வெற்றிகரமாக நிறைவுறுவதற்கு அனைத்து வகைகளிலும் எனக்கு வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனக்கு பக்கத் துணையாய் நின்று பணி செய்த அத்துணை நல் இதயங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மகாத்மா காந்தி ஒரு முறை உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய்க்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் தம்மை துன்புறுத்துவோரையும் தண்டிக்காமல் மன்னிக்கும் குணம் பற்றி தாங்கள் தெரிவித்திருக்கும் செய்தி என்னை மிகவும் கவர்ந்தது எனக் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தைப் படித்துவிட்டு, லியோ டால்ஸ்டாய் மிகுந்த தன்னடக்கத்தோடு, இந்தப் பெருமையும், புகழும் எனக்கு உகந்தது அல்ல, உங்கள் நாட்டில் திருக்குறள் என்னும் அற்புத நூலைப் படைத்திருக்கும் திருவள்ளுவரையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதோ இப்பொருள் உணர்த்தும் குறள் என (மேசையைத் தட்டும் ஒலி) ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட "இன்னா செய்தாரை ஒறுத்தல்" என்னும் ஈரடிக் குறளை எடுத்துக்காட்ட, காந்தி வாங்கிப் படித்தார், முடித்துவிட்டுச் சொன்னார். ஆங்கிலத்தில் படிக்கும்போதே இவ்வளவு சுவையாக இருக்கிறதே, இதனை எழுதியிருக்கும் வள்ளுவரின் தாய்மொழியிலேயே படித்தால் இன்னும் இன்பம் தருமே என்றவர், அதற்காகவே அடுத்த பிறவியிலாவது ஒரு தமிழனாகப் பிறக்க வேண்டும் என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–25

மகாத்மா காந்தி மட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் நல்லாட்சி நடைபெறும் தமிழகத்தில், தமிழனாகப் பிறக்க வேண்டும், இல்லையேல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் முதல்வராக வேண்டும் என இறைவனை வேண்டுகின்றனர். ஆசைப்படுகின்றனர். இந்திய தேசத்தின் குறுக்கிலும், நெடுக்கிலும் நாட்டின் அங்கமாக, சங்கமமாகி இருக்கிற பல்வேறு மாநிலங்கள் இதுவரை எத்தனையோ தலைவர்களைக் கண்டிருக்கின்றன. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போன்று தொலைநோக்கோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு நலனுக்குத் திட்டமிடுகிற ஆற்றல்மிக்க தலைவரை நாடு கண்டதில்லை. அதனால் அண்டை மாநிலத்து மக்களும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையை வேண்டுகின்றனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் அம்மா அவர்கள் வெளியிட்ட சூளுரையில், தமிழக மக்களுக்காக என்னையே அர்ப்பணித்து வாழ்கின்ற பெரும் பாக்கியத்தை இறைவன் எனக்கு அருளி இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறருக்காக வாழும் நெஞ்சம், அது கடவுள் வாழும் மஞ்சம் என்பர். ஆம், மாண்புமிகு அம்மா அவர்களின் நெஞ்சத்தில் இறைவன் என்றென்றைக்கும் குடிகொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் வாழ, தமிழர்கள் உயர என்றென்றும் அருள்புரிவார் என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பில் நூறு நாட்களை நிறைவு செய்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாட்சி இன்னும் பற்பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து, சாதனைகள் மேல் சாதனை படைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் தமிழக மக்கள் மென்மேலும் அனைத்து நிலைகளிலும் உயர்வும், மேம்பாடும் அடைய, எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, பேரவையின் கூட்டத் தொடர் இனிதே நிறைவு பெறும் இந்நாளில் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

13. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–28 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

15. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

72. 1977 ஆம் ஆண்டு நகராட்சி பொறியியல் பணி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறையின் 7–9–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 134–ல்

2016 செப்டம்பர் 2]
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

73. (i) *நீரினைப் பயன்படுத்துவோர் சங்க செயல்பாட்டு பகுதியின் அதிகார வரம்புடைய நேர்விற்கேற்ப, 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின் வழிவகைகளின்படி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கமும், மேலாண்மைக் குழுவும் மீள அமைவு செய்யப்பட்டு பதவி ஏற்கும் வரையில், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் மேலாண்மைக் குழுவின் அதிகாரங்களை செயல்படுத்தவும் மற்றும் பணிகளை மேற்கொள்ளவும் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறையின் உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர் அவர்களை தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமனம் செய்தது;* (ii) *பகிர்மானக் குழுவின் செயல்பாட்டுப் பகுதியின் அதிகார வரம்புடைய நேர்விற்கேற்ப, மேற்படி சட்டத்தின் வழிவகைகளின்படி பகிர்மானக் குழுவும், மேலாண்மைக் குழுவும் மீள அமைவு செய்யப்பட்டு பதவி ஏற்கும் வரையில், பகிர்மானக் குழு மற்றும் மேலாண்மைக் குழுவின் அதிகாரங்களை செயல்படுத்தவும் பணிகளை மேற்கொள்ளவும் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறையின் செயற்பொறியாளர் அவர்களை தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமனம் செய்தது;* (iii) *திட்டக் குழு செயல்பாட்டுப் பகுதியின் அதிகார வரம்புடைய நேர்விற்கேற்ப, மேற்படி சட்டத்தின் வழிவகைகளின்படி திட்டக் குழுவும், மேலாண்மைக் குழுவும் மீள அமைவு செய்யப்பட்டு பதவி ஏற்கும் வரையில், திட்டக் குழு மற்றும் மேலாண்மைக் குழுவின் அதிகாரங்களை செயல்படுத்தவும் மற்றும் பணிகளை மேற்கொள்ளவும் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறையின் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களை தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமனம் செய்தது குறித்தும் பொதுப் பணி (டபிள்யூ2) துறையின் 3–3–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 82–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 50(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)].*

74. 2010—2011 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள். [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

75. 2010—2011 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

76. 2014—2015ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

77. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை [(பொது மற்றும் சமூகப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]. (தமிழ், ஆங்கிலம்)

78. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய்ப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

79. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (உள்ளாட்சி அமைப்புகள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

80. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொதுத் துறை

2016 செப்டம்பர் 2]

நிறுவனங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

81. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொருளாதாரப் பிரிவு). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

82. 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதிநிலை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

142. 2014–2015 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

143. 2014–2015 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டுக் கணக்குகள். (தமிழ்)

144. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

145. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

146. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

147. மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

150. "வருவாய்த் துறையின் வரலாற்றுச் சாதனைகள், 2011–2016" என்கிற சிறுநூல். (தமிழ்)

151. "புதிய பயிர் இரகங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள், 2016" என்கிற சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

152. வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016–2017. (தமிழ்)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(41 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வரும் பொதுத் துறை, மாநிலத்தின் பொது நிர்வாகம் சம்பந்தப்பட்ட பல முக்கியப் பணிகளை கவனித்து வருகிறது. இத்துறையில் கவனிக்கப்படும் முக்கியமான பணிகள்:-

- ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப் பராமரிப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சர்களின் பணி நியமனம் தொடர்பான பணிகள்
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அலுவலகப் பணியமைப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்
- மாநில உயர் அந்தஸ்து கொண்ட தகைசால் பெருமக்களின் வருகையின்போது பாதுகாப்பு மற்றும் சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்
- நடுவண் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்
- சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுதில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிர்வகித்தல்
- அரசு விமானப் போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிர்வகித்தல் மற்றும் கவனித்தல்

[2016 செப்டம்பர் 2

- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிர்வாகப் பணிகளை கவனித்தல்
- மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்
- சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரித்தல்
- தேசிய பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அந்நியச் செலாவணி பாதுகாப்பு மற்றும் கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974-ஐ (COFEPOSA) நடைமுறைப்படுத்துதல்
- மனித உரிமைகள் குறித்த விவரங்கள், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993-ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) சம்பந்தப்பட்ட பணிகள்
- இந்திய தரைப்படை, கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகிய இராணுவ அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்
- அயல்நாட்டவர்களைப் பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம், 1946-ன்படி செயல்படுத்துதல்
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தை நிர்வகித்தல்
- மாநிலத்தில் வெவ்வேறு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்
- வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்

2016 செப்டம்பர் 2]

- முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்
- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்
- தலைமைச் செயலக கட்டடங்களை பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்

தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

2. இந்திய தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களை மாநில அளவில் தேசப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை இத்துறை செய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் குடியரசு நாள் விழா அன்று, சென்னை கடற்கரையில் அலங்கார அணிவகுப்போடு, ஆடல், பாடல் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் மேதகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இத்துறை செய்கிறது. மேலும், சுதந்திர தின விழாவின் போது, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைக்கும் நிகழ்ச்சிக்கான பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

3. நடுவண் அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாளன்று தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலர்கள் மற்றும் தலைமைச் செயலக அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சியும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. மாநில அரசின் விருதுகளான வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் மற்றும் துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

4. மேலும், நடுவண் அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்ஷா பதக்கம், பொது

[2016 செப்டம்பர் 2

நிர்வாகத்தில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி விருது போன்ற விருதுகளுக்கும் இத்துறையின் மூலம் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன.

அயல்நாட்டினர் செயலாக்க விதி, 1946

5. இந்தியாவில் தங்குவதற்கு அனுமதியுடனும் உரிய நுழைவு இசைவுடனும் வருகை புரியும் அயல்நாட்டினர்களுக்கு இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதி வழங்குதல், இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விரும்புபவர்களுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் இந்தியாவை விட்டு வெளியேற்ற/வெளியேறக் கோரி ஆணை பிறப்பித்தல் ஆகிய அயல்நாட்டினர் தொடர்பான மாநில அரசால் வழங்க வேண்டிய அனைத்து பொருளினங்களுக்கும் பொதுத் துறை ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது. குடிநுழைவு இசைவு, அயல்நாட்டினர் பதிவு மற்றும் கண்காணிக்கும் முறை (Immigration, Visa, Foreigner's Registration and Tracking System) இவை யாவும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அயல்நாட்டினர் பதிவு அலுவலகங்களில் (FROs) மின்னணு மூலமாக பெறப்பட்டு, இத்துறையால் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலமாக, வெளிநாட்டினர் தொடர்புடைய பதிவு மற்றும் அனுமதிகள் வழங்குவது போன்ற செயல்கள் மின்னணு முறையில் செயல்படுத்தப்படுகின்றன. இம்முறையானது மாநிலத்தில் வெளிநாட்டினருடைய செயல்பாடுகளைக் கண்காணிக்க காவல் துறையினருக்கு உதவியாக உள்ளது. இவற்றுடன், வேலை தேடியோ அல்லது மேற்படிப்பிற்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின்மீது அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டில், சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடவடிக்கை மின்னணு பரிமாற்றம் (online) மூலம் பின்னூட்ட கருத்து தெரிவிக்கும் முறையுடன் நெறிமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதனால் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடைமுறையில் கூடுதல் பொறுப்பு, குறைந்த செலவில் கையாளுவது, சிக்கலில்லாமல் விரைவான தீர்வு அளிப்பது ஆகிய அம்சங்களை விளைவித்துள்ளது.

2016 செப்டம்பர் 2]

மனித உரிமைகள்

6. "உலகில் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் மதிப்பு மற்றும் உரிமைகள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் அனைவரும் மனசாட்சியுடனும் மற்றும் சகோதர மனப்பான்மையுடனும் செயல்பட வேண்டும்".[1]

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 1993-ன்கீழ் கூறப்பட்டுள்ள விதிகளின்படி மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாணையம் சட்டப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, நிர்வாகப் பிரிவு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது. மனித உரிமை மீறல் பற்றிய புகார்களை சம்பந்தப்பட்ட நபரோ அல்லது அவர் சார்பாக எவரும் ஆணையத்துக்கு எந்த மொழியிலும் எழுதி அனுப்பலாம். கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. மனித உரிமை மீறல் நிகழ்வு பற்றி பெறப்படும் புகார்கள் தவிர, ஆணையத்தின் கவனத்துக்கு வரும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆணையமே தன்னிச்சையாக (suo moto) *விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவர் குடும்பத்தினருக்கு உடனடி/இடைக்கால நிவாரணம் வழங்கிட அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்திடும். இவ்வாணையம், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வினை குறிப்பாக மாணவர்களிடம் ஏற்படுத்தி வருகிறது.*

அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

7. அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் தமிழகத்தின் பல்வேறு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் தொடர்பான

"கூறு: 1, [1]*1948 ஆம் ஆண்டு மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனம்".*

[2016 செப்டம்பர் 2

பணிகளையும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் அவர்களின் நலன் பேணுவது இந்த ஆணையரகத்தின் தற்போதைய முக்கிய பணியாகும். துறையில் உள்ள புள்ளிவிவரங்களின்படி, இலங்கையில் 1983-ல் ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 1-7-2016 அன்று பெறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 19,388 குடும்பங்களைச் சேர்ந்த 63,649 நபர்கள் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு சிறப்பு முகாம் உள்ளிட்ட) 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, 'க்யூ' பிரிவு அறிக்கையின்படி 36,651 இலங்கைத் தமிழ் அகதிகள், முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண உதவிகள் மைய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படியும் மற்றும் ஒப்புதலுடனும் வழங்கப்படுகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத் திட்டங்கள்

8. முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்வதே இவ்வரசின் முனைப்பான திட்டமாகும். எனவே, மத்திய அரசு வழங்கி வரும் உதவியோடு கூடுதலாக தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத் திட்ட உதவிகளும், ஜுன் 2011 முதல் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நிவாரணம்

9. முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆடை, பாய், போர்வை, பாத்திரங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி

2016 செப்டம்பர் 2]

உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கீழ்க்கண்டவாறு 4-8-2011 முதல் உயர்த்தப்பட்ட வீதத்தில் பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது:

1.	குடும்பத் தலைவர்	ரூ.1,000/-
2.	ஒவ்வொரு கூடுதல் பெரியவர் (12 வயது மற்றும் அதற்கு மேல்)	ரூ. 750/-
3.	சிறியவர்கள் (12 வயதிற்கு கீழ்)	ரூ. 400/-

மேலும், மாதத்திற்கு 20 கிலோ விலையில்லா அரிசி மற்றும் மானிய விலையில் சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை போன்ற அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டக் கடைகள்மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

<u>கல்வி உதவி</u>

10. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து வரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 12ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இவர்களுக்கு, தமிழக மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று சீருடைகள், மதிய உணவு, நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், பேருந்துப் பயணச்சீட்டு மற்றும் மடிக்கணினிகள் விலையின்றி வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் 29,351 மாணவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் கீழ்க்கண்டவாறு சேர்ந்துள்ளனர்:

வ. எண்	நிலை	மாணவர்களின் எண்ணிக்கை
1.	மழலையர் பள்ளி	3,655
2.	ஆரம்பப் பள்ளி	11,713
3.	நடுநிலைப் பள்ளி	6,205
4.	உயர்நிலைப் பள்ளி	3,903
5.	மேல்நிலைப் பள்ளி	3,022
6.	கல்லூரி	853
	மொத்தம்	**29,351**

11. இத்துடன், இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், தொழில் சார்ந்த கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில், பொதுப் பிரிவின்கீழ் கலந்தாய்வில் கலந்து கொண்டு, சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மற்ற மாணவர்களைப் போல அனைத்துவிதமான கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள். மேலும், தமிழக அரசால் நடத்தப்படும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறு பான்மையினர் நல விடுதிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில், தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு, இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2015-2016ஆம் ஆண்டில், 57 மாணவர்கள் அரசு விடுதிகளில் தங்கியுள்ளனர்.

12. இலங்கை அகதிகள் முகாம்களில் வசித்துவரும் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர கல்வி உதவித் தொகை, அவர்கள் பயிலும் படிப்பிற்கு ஏற்ப குறைந்தபட்சம் ரூ.850/- முதல் அதிகபட்சம் ரூ.4,700/- வரை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

2016 செப்டம்பர் 2]

வ. எண்	படிப்பின் பெயர்	ஆண்டிற்கான உதவித் தொகை (ரூபாயில்)
1.	இளங்கலை	1,200
2.	இளநிலை அறிவியல்	1,250
3.	முதுகலை	1,330
4.	முதுநிலை அறிவியல்	1,650
5.	பட்டயப் படிப்பு	850
6.	இளநிலை பொறியியல்/ இளநிலை தொழில் நுட்பம்	2,750
7.	எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்.,	4,700
8.	கால்நடை மருத்துவம்	1,400
9.	சட்டம்	860
10.	இளநிலை அறிவியல் (வேளாண்மை)	2,850

2015-2016ஆம் ஆண்டில் 597 மாணவர்கள் இத்தகைய கல்வி உதவித் தொகைகள் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

13. அரசாணை (நிலை) எண் 11, பொது (ம.வா.2)த் துறை, நாள் 07-01-2015-ல் தமிழ்நாட்டில் வசித்து வரும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு (மாணவ/மாணவியர்களுக்கு தனித் தனியாக) கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன:

[2016 செப்டம்பர் 2

10 ஆம் வகுப்பு	
நிலை	**பணக்கொடை (ரூபாயில்)**
முதலிடம்	25,000
இரண்டாமிடம்	20,000
மூன்றாமிடம்	15,000

12 ஆம் வகுப்பு	
நிலை	**பணக்கொடை (ரூபாயில்)**
முதலிடம்	50,000
இரண்டாமிடம்	30,000
மூன்றாமிடம்	20,000

பிற நலத் திட்டங்கள்

14. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தங்களின் வருவாயை உயர்த்திக் கொள்ள ஏதுவாக தையல் பயிற்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. 2015-2016-ல் இதுவரை, 216 பெண்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். முகாம்களில் வசிக்கும் அகதிகளில், தொழில் முனைப்புடன் உள்ள பெண்களை, ஊக்குவிக்கும் வகையில், 416 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் சுழல் நிதி "ஒருமுறை மானியமாக" 2014-2015 ஆம் ஆண்டில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2016 செப்டம்பர் 2]

15. மாதாந்திர பணக்கொடை மட்டுமில்லாமல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் 3,867 நபர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு, இறுதி சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இந்த அரசால் ரூ.2,500/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை, 369 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.15,000/-லிருந்து ரூ.25,000/-ஆக 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. 2015–2016–ல் ஆறு குடும்பத்தினர் இதன்மூலம் பயனடைந்துள்ளனர்.

16. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஆகியவை இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பிற்காக நீட்டிக்கப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், பட்டம் /பட்டயம் பெற்ற பெண்களுக்கு ரூ.50,000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்துடன் திருமாங்கல்யத்திற்கான 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு வரை படித்த இதர பெண்களுக்கு ரூ.25,000/- மற்றும் திருமாங்கல்யத்திற்கான 4 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2015-2016 ஆம் ஆண்டில் முறையே 16 மற்றும் 63 மகளிர் பயனடைந்துள்ளனர். அரசு தற்போது திருமாங்கல்யத்திற்காக வழங்கப்படும் தங்கத்தை 8 கிராமாக உயர்த்தி ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளும் பயன்பெறுவர்.

17. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்மூலம் கருவுற்ற பெண்களுக்கு மகப்பேறு உதவியாக

[2016 செப்டம்பர் 2

ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2015–2016ஆம் ஆண்டில் 526 பெண்கள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/- அப்பெண் குழந்தையின் பெயரில் 20 வருடங்களுக்கு வைப்பீடு செய்யப்படுகிறது. இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/- வீதம் ஒவ்வொரு குழந்தையின் மீதும் 20 வருடங்களுக்கு அப்பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படுகிறது. 2015-2016-ல் இத்திட்டத்தின்மூலம் 8 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

18. முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2012–2013ஆம் நிதியாண்டிலிருந்து அகதிகள் முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் பயன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு முகாம்

19. தற்போது தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இம்முகாமில் காவல் துறையின் எதிர்மறையான குறிப்புகள் கொண்ட, மாநிலத்திற்குள் சுதந்திரமாக செல்ல முடியாத இலங்கைத் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 01-07-2016 நிலவரப்படி 14 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946, பிரிவு 3(2)(இ)-ன்கீழ் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடமாட்டம் சிறப்பு முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இவர்களுக்கு தினமும் ரூ.100/- வீதம் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

அகதிகள் தாயகம் திரும்புதல்

20. தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு "வெளிச்செல்" அனுமதி, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. "வெளிச்செல்" அனுமதி, விரைவாக

2016 செப்டம்பர் 2]

வழங்குவதற்கு எளிய நடைமுறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2014-2015 ஆம் ஆண்டில், 396 அகதிகளும், 2015-2016 ஆம் ஆண்டில், 452 அகதிகளும், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையர் (UNHCR) அலுவலகத்தின் நிதி உதவியுடன் இலங்கைக்கு திரும்பியுள்ளனர்.

முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள்

21. 14,542 குடும்பங்களைச் சேர்ந்த 36,651 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டு வசித்து வருகின்றனர். இலங்கைத் தமிழருக்கான விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையானது மைய அரசால் கணிசமாக திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலையில் உள்ளனர். தற்போது தமிழக அரசின் கருத்துருவின் பேரில், மத்திய அரசு, இப்பொருள் தொடர்பான இலங்கை அகதிகளின் கோரிக்கைகளை தனித் தனியாக பரிசீலித்து மிகைத்தங்கலுக்கான அபராதத் தொகை மற்றும் விசா கட்டணத்திலிருந்து விலக்களிக்க முடிவெடுக்க அதிகாரம் உள்ள ஒரு குழுவை அமைத்து உள்ளது.

2015-2016 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர்களுக்காக ரூபாய் 108.70 கோடி செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

22. தமிழர்கள் பலர் வேலை தேடியும், வாழ்வாதாரத்திற்காகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போது, எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசை அணுக வேண்டியுள்ளது. இதற்காக சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில், வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன் காக்க தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு இந்த ஆணையரகத்தின் பெயர் "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் இறந்த உடல்களை வெளிநாடுகளிலிருந்து திரும்பக்

கொண்டு வருதல், பல்வேறு கோரிக்கைகளுக்குத் தீர்வு காணுதல், வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள தமிழர்கள், பணி நிமித்தமாக நிறுவனங்களுக்கு இடையே ஏற்படும் சச்சரவுகள் போன்றவை வெளிநாடுவாழ் தமிழர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாகும். இந்த வெளிநாடுவாழ் தமிழர் பிரிவானது, மேற்குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் தொடர்புடைய இந்திய தூதரகங்களுடன் இணைந்து உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

23. மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) "மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)" ஆகவும் மற்றும் மாவட்ட தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (வெளிநாடுவாழ் தமிழர்கள்)" ஆகவும் செயல்பட்டு வருகிறது. இந்த பிரிவானது வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களிடமிருந்து வருகின்ற முறையீடுகள் மற்றும் குறைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, உரிய பதிவேட்டில் பதிவு செய்து, தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், வெளி நாடுகளில் வேலை தேடிச் செல்லும் தமிழர்கள் தொடர்பான விளம்பரங்களை முறைப்படுத்துவது தொடர்பாகவும், பதிவு செய்யப்படாத முகவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சமீபத்தில், மத்திய அரசு வெளிநாடுவாழ் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்த மனுக்களின் மீது துரித நடவடிக்கை எடுத்து தீர்வு காணும் விதமாக “madad@mea.gov.in” என்ற ஒரு வலைதளத்தினை உருவாக்கி உள்ளது. இவ்வலைதளத்தை கையாளும் அலுவலர்களுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோர் வள மையம்

24. வெளிநாடுகளுக்குச் செல்லும் நபர்களுக்கு உரிய தெளிவுரைகள் வழங்கும் விதமாக அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர் நல ஆணையரகத்தில்

2016 செப்டம்பர் 2]

இடம் பெயர்ந்தோர் வள மையம் ஒன்று 15-6-2015 முதல் இயங்கி வருகிறது. இம்மையம் வெளிநாடு செல்ல விரும்பும் தமிழர்களுக்கு பின்வரும் பொருள்களின்மீது தெளிவுரை வழங்குகிறது:

- வேலைக்கு அமர்த்தும் முகவாண்மையின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்
- விசாவின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்
- இந்தியாவில் இருந்து வெளிநாடு செல்ல தேவைப்படும் ஆவணங்களைப் பெறுதல்
- வேலை கொடுப்பவருக்கும், பெறுபவருக்கும் இடையேயான ஒப்பந்தம்
- வேலை செய்யும் இடத்தின் சூழ்நிலை, வேலைக்குச் செல்லும் நாடு மற்றும் அந்நாட்டு சட்டத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- வேலைக்கு செல்லும் நாட்டிலுள்ள இந்திய தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டிற்குச் செல்லும் முன் வீட்டில் வைத்துவிட்டு செல்ல வேண்டிய ஆவணங்கள் குறித்த தகவல்

சுழல் நிதி

25. வெளி நாடுகளில் இறந்த தமிழர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும், அங்கு இன்னலுறும் மற்றும் உடல்நலம் குன்றிய தமிழர்களை இந்தியா அழைத்து வரவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க ஏதுவாக ரூபாய் ஒரு கோடி சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

26. தமிழகத்தைச் சேர்ந்த இந்தியர்கள் வெளிநாடு செல்லும்போது அவர்கள் எதிர்கொள்ளும் துயரங்களிலிருந்து காப்பாற்ற இந்த அரசு உதவி புரிகிறது. அண்மையில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 10 தமிழர்கள் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆலயத்திற்கு புனித யாத்திரை சென்றபோது அங்கு ஏற்பட்ட கடும் மழை மற்றும் நிலச்சரிவு காரணமாக சிக்கித் தவித்தபோது அவர்களைக் காப்பாற்ற

தமிழக அரசானது நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்கண்ட நபர்களை ஹெலிகாப்டர்மூலம் காப்பாற்றி இந்தியாவிற்கு அழைத்து வர ரூ.2.10 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோல், கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மூன்று வெளிநாடுவாழ் தமிழர்களின் சார்பாக கத்தார் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து அவர்களின் உரிமையை நிலைநாட்ட மனிதாபிமான அடிப்படையில் ரூ.9.50 இலட்சம் இவ்வரசு வழங்கியுள்ளது.

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி நிறுவனம்)

தோற்றம்

27. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி (ரெப்கோ வங்கி) 19-11-1969 ஆம் ஆண்டு, சென்னை கூட்டுறவு வங்கிச் சட்டம், 1961-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கி இலங்கை, மியான்மர் (முன்னாள் பர்மா) போன்ற பக்கத்து நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவ்வங்கி சென்னை கூட்டுறவு வங்கிச் சட்டம், 1961-ன்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் தற்பொழுது பன்மாநில கூட்டுறவு சங்கச் சட்டம், 2002 (Multi State Co-operative Societies Act, 2002)-ன்கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

28. ரெப்கோ வங்கி, மைய அரசின் உள் துறை அமைச்சகத்தின் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அகதிகள் மறுவாழ்வு பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. இவ்வங்கியின் பங்கு மூலதனம் இந்திய அரசு, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநில அரசுகள் மற்றும் தாயகம் திரும்பியோரால் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. 31-03-2016 ஆம் நாள் நிலவரப்படி பங்கு மூலதனம் பின்வரும் விகிதங்களில் அமையப் பெற்றுள்ளது.

2016 செப்டம்பர் 2]

31–3–2016 ஆம் நாள் நிலவரப்படி பங்கு மூலதன விகிதாச்சாரம்			
வ. எண்	பங்கு மூலதனதாரர்கள்	பங்கு மூலதனத் தொகை (ரூ.)	பங்கு விகிதாச்சாரம் %
1.	இந்திய அரசு	76,32,00,000	52.65
2.	தமிழ்நாடு அரசு	7,13,00,000	4.92
3.	ஆந்திர அரசு	1,79,65,000	1.24
4.	கேரள அரசு	61,16,000	0.42
5.	கர்நாடக அரசு	17,47,000	0.12
6.	தாயகம் திரும்பியோர்	58,92,59,882	40.65
	மொத்தம்	144,95,87,882	100.00

29. இந்திய குடியுரிமை பெற்ற தமிழ் வம்சாவளியினைச் சார்ந்த 1,46,500 நபர்கள் இதர நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேயிலை, ரப்பர், சின்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் ரெப்கோ வங்கியின் நிதியுதவியுடன் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தாயகம் திரும்பியவர்களுக்கு ரெப்கோ வங்கி மூலமாக அளிக்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	ஆண்டு	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	2013 – 2014	231.65
2.	2014–2015	294.55
3.	2015–2016	330.00

முன்னாள் படைவீரர்கள் நலன்

30. முன்னாள் படைவீரர்கள் நலனைப் பேணிக் காப்பதில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர்களின் மறுவாழ்வு மற்றும் புனரமைப்பிற்காக படைப் பாதுகாப்புப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் அவர்கள் வாழ்க்கை பயனுள்ள வகையிலும் வளமுடனும் இருப்பதற்கு பெருமுயற்சி எடுத்துள்ளதுடன், இராணுவத்தில் பணிபுரிவோரின் குடும்பத்தார் நலனிலும் அக்கறை செலுத்தி வருகிறது. முன்னாள் படைவீரர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தும் நோக்கில் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் பொதுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

31. முன்னாள் படைவீரர்கள், படைப் பணிபுரிவோர் மற்றும் படைப் பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினரின் நலனை உயர்த்திடும் பொருட்டு முன்னாள் படைவீரர் நல இயக்ககம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,400 படைவீரர்கள் படைப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். 31-03-2016 அன்றைய நிலவரப்படி முன்னாள் படைவீரர் நலத் துறை 1,86,969 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் விதவைகளை தனது பதிவேட்டில் பதிந்துள்ளது. இவ்வியக்ககம் முப்பது மாவட்ட அலுவலகங்கள்மூலம் இவர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்கிறது. அதனுடைய திட்டங்களுக்கு கொடி நாள் நிதி திரட்டும் திட்டத்தின்மூலம் நிதி திரட்டப்படுகிறது.

படை வீரர் கொடி நாள் நிதி

32. படை வீரர் கொடி நாள் நிதியானது பொது மக்கள் மனமுவந்து வழங்கப்படும் நிதியாகும். அவ்வாறு திரட்டப்பட்டு வரும் நிதியானது தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்த நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களின் பல்வேறு நலன்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கொடி நாள் நிதி வசூலில் 2003-ஆம் ஆண்டு முதல் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருவதுடன் மக்கள்

தொகை அடிப்படையில் வழங்கப்படும் சுழற் கேடயத்தையும் தக்க வைத்துள்ளது. 2014 ஆம் ஆண்டின் (7-12-2014 முதல் 6-12-2015 வரை) கொடி நாள் நிதியாக தமிழ்நாடு ரூ.26.51 கோடி நிதி திரட்டியுள்ளது.

33. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் தலையாய திட்டங்களை பின்வருமாறு ஐந்து முக்கியப் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:-

1. *மானியங்கள்/நிதியுதவிகள் வழங்குதல்*
2. *மறு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல்*
3. *பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்*
4. *கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு*
5. *சுய வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்*

I. மானியங்கள்/நிதியுதவிகள் வழங்குதல்

34. முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக பல்வேறு வகை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

35. ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவி, முன்னாள் படைவீரர்களின் மகளுக்கு திருமண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கு கருணைத் தொகை போன்ற நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி ரூ.4,000/-லிருந்து ரூ.4,500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

[2016 செப்டம்பர் 2

36. சமீபத்தில் உயர்த்தப்பட்ட மாதாந்திர நிதியுதவிகளின் அளவு மற்றும் இதர நிதியுதவிகள் அளவு கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:-

வ. எண்	நிதியுதவியின் பெயர்	மாதாந்திர உதவித் தொகை (ரூபாயில்)
1.	ஆதரவற்ற விதவையருக்கான ஆயுட்கால மானியம்	1,500
2.	முதியோர் ஓய்வூதியம்	1,500
3.	கண்பார்வையற்றோருக்கான நிதியுதவி	1,500
4.	தொழுநோய் மானியம்	1,500
5.	பக்கவாதத்திற்கான மானியம்	1,500
6.	மாதாந்திர நிதியுதவி – வறியநிலையில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு	1,500
7.	காசநோயாளிகளுக்கான மானியம்	1,500
8.	மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான நிதியுதவி	1,500
9.	புற்றுநோய் நிவாரண நிதியுதவி	1,500
10.	மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியுதவி (முன்னாள் படைவீரர்/ சார்ந்தோர்)	1,500
1.	**இதர உதவிகள்** திருமண மானியம்	20,000
2.	ஈமச்சடங்கு மானியம்	5,000

37. 2015-2016ஆம் ஆண்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து 10,658 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு மானியங்களாக ரூ.22,83,05,302/- வழங்கப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

(ஆ) தொகுப்பு நிதி

38. தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து, படைப் பணியில் உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கும், ஊனமுற்றோர்களுக்கும் பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

2015-2016ஆம் ஆண்டில், 4,765 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.4,80,78,504/- வழங்கப்பட்டுள்ளது.

வீரதீரச் செயல்களுக்கான பணமுடிப்பு மற்றும் படைவீரர்களின் பெற்றோர்களுக்கான போர்ப் பணி ஊக்க மானியம்

39. வீரதீரச் செயல்களுக்கான வீரப் பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது. இப்பணமுடிப்புத் தொகையினை அரசு 4-2-2016 முதல் பின்வருமாறு உயர்த்தியுள்ளது:

வீரதீரச் செயல்களுக்கான விருது / பதக்கம் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பணமுடிப்பு

வ. எண்	விருது / பதக்கத்தின் பெயர்	ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை ரூ.	உயர்த்தி வழங்கப்பட்ட தொகை ரூ.
1.	பரம்வீர் சக்ரா	15,00,000	25,00,000
2.	அசோக் சக்ரா	12,00,000	20,00,000
3.	மகாவீர் சக்ரா	10,00,000	15,00,000
4.	கீர்த்தி சக்ரா	8,00,000	12,00,000
5.	வீர் சக்ரா	7,50,000	10,00,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 செப்டம்பர் 2

வ. எண்	விருது / பதக்கத்தின் பெயர்	ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை ரூ.	உயர்த்தி வழங்கப்பட்ட தொகை ரூ.
6.	சௌரிய சக்ரா	5,00,000	8,00,000
7.	சேனா/நாவோ/வாயு சேனா பதக்கம் (வீரவிருதுகள்)	50,000	1,00,000
8.	மென்சன்–இன்–டெஸ்பேட்ச்சஸ்	10,000	15,000

போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பணமுடிப்பு

வ. எண்.	பதக்கத்தின் பெயர்	ஏற்கெனவே வழங்கப்பட்டது (ரூபாயில்)	உயர்த்தப்பட்ட பண முடிப்பு (ரூபாயில்)
1.	பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம்	50,000	75,000
2.	சர்வோத்தம் யுத் சேவா பதக்கம்	50,000	75,000
3.	உத்தம் யுத் சேவா பதக்கம்	25,000	40,000
4.	அதி விஷிஷ்ட் சேவா பதக்கம்	25,000	40,000
5.	யுத் சேவா பதக்கம்	15,000	25,000
6.	விஷிஷ்ட் சேவா பதக்கம்	15,000	25,000
7.	சேனா பதக்கம்	15,000	25,000

2016 செப்டம்பர் 2]

2015-2016ஆம் ஆண்டில் வீரப் பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 4 நபர்களுக்கு ரூ.1,65,000/- வழங்கப்பட்டுள்ளது.

40. வீரதீர விருது பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பணமுடிப்பு ஆண்டுத் தொகைக்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக ஒரே தவணையில் கீழ்க்கண்டவாறு வழங்கலாமென அரசு முடிவு செய்துள்ளது:-

ஆண்டுத் தொகைக்கு பதிலாக ஒரே தவணையில் ஒட்டுமொத்தமாக உயர்த்தி வழங்கப்பட்ட தொகை

வ. எண்	விருதின் பெயர்	ஏற்கெனவே வழங்கப்பட்ட ஆண்டுத் தொகை (ரூபாயில்)	ஒரே தவணையில் ஒட்டுமொத்தமாக உயர்த்தி வழங்கப்பட்ட தொகை (ரூபாயில்)
1.	பரம்வீர் சக்ரா	1,000	25,000
2.	அசோக் சக்ரா	800	20,000
3.	மகாவீர் சக்ரா	750	15,000
4.	கீர்த்தி சக்ரா	500	12,000
5.	வீர் சக்ரா	300	10,000
6.	சௌரிய சக்ரா	250	8,000

வீர விருது பெற்ற 18 நபர்களுக்கு ஆண்டுத் தொகையாக ரூ.1,89,000/- மற்றும் பிரதேச இராணுவப் படை விருது (Territorial Army Medal) பெற்ற 44 நபர்களுக்கு ரூ.1,44,000/- வழங்கப்பட்டுள்ளது.

41. படைப் பணிக்கு தனது ஒரே மகன்/மகளை அனுப்பும் பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் ஒரே தடவையாக ரூ.20,000/- மற்றும் வெளளிப் பதக்கமும், தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஒரே தடவையாக ரூ.25,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் அரசு நிதியிலிருந்து ரூ.17,75,000/- போர்ப் பணி ஊக்க மானியமாக வழங்கப்பெற்று அதில் 75 பெற்றோர்கள் பயனடைந்துள்ளனர்.

இ) போரில் உயிர்நீத்தோருக்கான கருணைத் தொகை

42. போரில் மற்றும் சிவில் நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின்போது உயிரிழந்த/ஊனமுற்ற படைவீரர்களின் உயரிய தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் அவர்களின் வாரிசுகளுக்கு ரூ.10 இலட்சம் வரை கருணைத் தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இவ்வகையில் 2015-2016 ஆம் ஆண்டில் 31 நபர்களுக்கு ரூ.1,00,44,000/- கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

43. இக்கருணைத் தொகை தீவிரவாதிகள்/பயங்கரவாதிகளுக்கு எதிரான பணிகளின்போது உயிர்நீத்த/ஊனமுற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படைவீரர்களுக்கும் (CRPF, CISF, ITBP, BSF and SSB) நீட்டிக்கப்பட்டுள்ளது.

II. மறு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல்

(அ) அரசினால் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுதல்

44. முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம்வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக் காலத்தினை மீதமாகக் கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்பில், அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் அவர்களுக்கு பின்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

1.	பிரிவு ''சி'' காலிப்பணியிடங்கள்	5%
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலிப்பணியிடங்கள்	10%
3.	வனவர் காலி ப்பணியிடங்கள்	10%
4.	வனக் காவலர் காலிப்பணியிடங்கள்	5%
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் காலிப் பணியிடங்கள்	25%
6.	தமிழ்நாடு சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு ''சி'' காலிப் பணியிடங்கள்	5%
7.	கால்நடை ஆய்வாளர்	5%

45. முன்னாள் படைவீரர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்துடன் இணைந்து பரிந்துரை செய்யும் அதிகாரத்தை, முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. 2015-2016ஆம் ஆண்டில் மத்திய/மாநில அரசின் பல்வேறு துறைகள் மற்றும் பொதுவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில் குரூப் 'சி' பிரிவில் 88 நபர்களும், குரூப் `டி' பிரிவில் 472 முன்னாள் படைவீரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆ) கோயில் பாதுகாப்புப் படை

46. தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்பு காவல் அலுவலர்களாகப் பணிபுரிய முன்னாள் படைவீரர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகுப்பூதியம் 2012 ஆம் ஆண்டில், ரூ.1,500/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்த்தப்பட்டது.

01-07-2016 அன்றைய நிலவரப்படி 1,485 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

(இ) கருணை அடிப்படையிலான பணிநியமனம்

47. படைப் பணியில் உயிர்நீத்தோர் மற்றும் பணியின் போது உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2012ஆம் ஆண்டு பணி நியமனம் கோரி நிலுவையிலிருந்த விண்ணப்பங்களை சிறப்பு நேர்வாக பரிசீலித்து, தீர்வு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை முகமை அலுவலர்களாக இந்த அரசு நியமனம் செய்தது. இதன்படி பணியிலிருக்கும்போது உயிரிழந்தவர்களின் 223 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

III. பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்

48. ஒவ்வோர் ஆண்டும் தமிழ் நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இராணுவத்தில் சேருவதற்கான முன்னோடி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, 2015-2016ஆம் ஆண்டில், அரசு நிதியிலிருந்து ரூ.15,750/- செலவிடப்பட்டு 15 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் படைவீரர்களின் குடும்பப் பெண்களுக்கு தொழிற்பயிற்சி

49. முன்னாள் படைவீரர்களின் குடும்பம் சார்ந்தோர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் வகையில் வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களில் முன்னாள் படைவீரர்களின் விதவை, முன்னாள் படைவீரர்கள் மற்றும் பணியில் உள்ள வீரர்களின் மனைவி/திருமணமாகாத மகள்/திருமணமாகாத சகோதரி/விதவை மகள்/விவாகரத்தான மகள்/விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாதங்கள் பயிற்சி வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- *தையல் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நாள்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.20/-லிருந்து ரூ.50/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு மூலப்பொருள்கள் வாங்குவதற்கு வழங்கப்படும் உதவித் தொகையும் மாதம்*

2016 செப்டம்பர் 2]

ஒன்றுக்கு ரூ.500/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தையற்பயிற்சி பெறும் அனைவருக்கும் தையற்பயிற்சி முடித்தவுடன் இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டு வருகிறது. தையல் ஆசிரியைகளுக்கான மாதாந்திர ஊதியம் ரூ.8,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தப்படுவதுடன் ஊதிய உயர்வாக ஆண்டுக்கு ரூ.250/- வழங்கிடவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய உயர்வு 01.04.2015 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சி மற்றும் ஊக்கத்தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

IV. கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு

50. தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், இளங்கலை (செவிலியர்), சட்டப் படிப்பு, பட்டதாரி ஆசிரியர் படிப்பு, பல்தொழில்நுட்பப் பட்டயக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி போன்ற பல்வேறு படிப்புகளுக்காக கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகிறது. தற்போது எம்.பி.பி.எஸ். படிப்பிற்கான இட ஒதுக்கீடு இரண்டிலிருந்து ஐந்து ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், செவிலியர் இளநிலை பட்டப் படிப்பிற்கான இட ஒதுக்கீடு ஒன்றிலிருந்து நான்காக உயர்த்தப்பட்டுள்ளது.

V. சுய வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

51. முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதுடன், சுய வேலைவாய்ப்பு துவங்க முன்வருபவர்களை ஊக்குவிப்பதனை அரசு தமது கொள்கையாக கொண்டுள்ளது. சுய வேலைவாய்ப்பிற்காக பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டியில் 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டியில் 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் இத்திட்டங்களின்மூலம் 388 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 12 சுய உதவிக் குழுக்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.35,29,288/- மானியமாக வழங்கப்பெற்று பயனடைந்துள்ளனர்.

[2016 செப்டம்பர் 2

படைவீரர் மாளிகை/முன்னாள் படைவீரர் மையம்/ முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

52. நலத் திட்டங்களுக்கான நிதிகளை திரட்டும் பொருட்டு, படைவீரர் மாளிகை, முன்னாள் படைவீரர் மையம், முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் திரட்டப்படும் நிதி, நல நிதிகளில் சேர்க்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில், இச்சொத்துக்கள்மூலம் வருவாயாக ரூ.1,77,29,911/- பெறப்பட்டுள்ளது.

மின் ஆளுமைத் திட்டம்

53. முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசிய தகவல் மையத்தின்மூலம் மின் ஆளுமைத் திட்டம் துவங்கப்பட்டு கணினி வாயிலாக (online) பதிவு செய்து அடையாள அட்டை வழங்குதல், வேலை வாய்ப்பு உதவி மற்றும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை அறிமுகப்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1,86,000 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையரின் ஆவணங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு மேலும் அவற்றில் 15,000 பதிவுகள் சரிபார்க்கப்பட்டுள்ளன. இது முன்னாள் படைவீரர்கள் இயக்ககத்துடன் உள்ள தொடர்பினை மேம்படுத்த உதவும்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

54. தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) 1986-ல் நிறுவப்பட்டது. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் பதிவுசெய்த முன்னாள் படைவீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு நிறுவனங்கள், துறைகள் ஏனைய சேவை கோரும் முகமைகளுக்கு பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மனிதவள முகமையாக செயல்படுகிறது. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சிக்காக, இலாபத்தினை பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் பணி போன்ற வணிக நடவடிக்கைகளை

2016 செப்டம்பர் 2]

மேற்கொண்டு வருகிறது. 31-03-2016 தேதிய நிலவரப்படி 8,794 முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு பல்வேறு திட்டங்களில் பணியமர்த்தப்பட்டு பணியினை மேற்கொண்டுள்ளனர்.

இதர நலத் திட்டங்கள்

55. மேலும், முன்னாள் படைவீரர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரிபவர்களுக்கு பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படும்
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பும் கணிசமான வருமானம் பெறும் பொருட்டு, "தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நலநிதித் திட்டம்" இக்கழக ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு தோராயமாக ரூ.2.76 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் இறுதி தேர்வில் மாநிலத்தில் முதல் ஐந்து இடங்கள் பெற்ற இக்கழக பணியாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,500/- முதல் ரூ.15,000/- வரை ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது

முதலமைச்சரின் தனிப் பிரிவு

56. முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் அனுப்பும் கோரிக்கை மனுக்கள்மீது விரைந்து தீர்வு காண்பதை உறுதிசெய்யும் பொருட்டு, முதலமைச்சரின் தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கோரிக்கை மனுக்கள்மீது நியாயமாகவும், விரைவாகவும் தீர்வு காண்பது சிறந்த, பொறுப்பான அரசின் இன்றியமையாத கூறு ஆகும். முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும், ஒப்புகை அளிக்கப்பட்டு, அம்மனுக்களில் காணப்படும் குறைகள் அல்லது கோரிக்கைகள் பாகுபாடின்றி

முனைப்புடன் தீர்வு காணப்படும் என்று உறுதி அளிக்கப்படுகிறது. பெறப்படும் மனுக்கள் குறியீடு செய்யப்பட்டு தீர்வு காணும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. கோரிக்கை மீதான பதில்கள் ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

57. முதலமைச்சரின் தனிப்பிரிவு வலைதளம் http:./www/ cmcell.tn.gov.in வழியாக மனுக்கள் பெறும் வசதி கடந்த 2012-ல் துவக்கப்பட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில் மனுக்கள் அலகீடு (scan) செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள்/மாவட்டங்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகின்றன.

58. ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் முன்மாதிரியான சட்டமன்ற தொகுதியாக டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியினை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்பட்டு, முதலமைச்சரின் தனிப் பிரிவு தனி அலுவலரால் மக்களிடமிருந்து நேரடியாக மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்படுகின்றன.

அம்மா அழைப்பு மையம் 24 X 7

59. பொதுமக்கள், தொலைபேசி/கைபேசி வாயிலாக தங்கள் குறைகளை தெரிவித்து தீர்வு பெறும் வகையில் குறைதீர்ப்பு அமைப்பினை மேலும் விரிவுபடுத்தி "அம்மா அழைப்பு மையம் 24 X 7'' கடந்த 19.01.2016 அன்று நிறுவப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது. காலவரையறைக்குட்பட்டு இயன்ற அளவு விரைவாக குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதே அம்மா அழைப்பு மையத்தின் நோக்கமாகும். அழைப்பு மையத்தில் பணிபுரியும் முகவர்களால் தொலைபேசி/கைபேசி வாயிலாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகள் உரிய துறைகளுக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு தீர்வு காணப்படுகின்றன. குறைகளுக்கு தீர்வு செய்யப்பட்ட விவரங்கள் அந்தந்த துறை சார்ந்த குறை தீர்க்கும் அலுவலர்களால் www. ammacallcentre.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

2016 செப்டம்பர் 2]

60. பொது மக்களிடையே விரைவாகப் பெருகி வரும் கைபேசி பயன்பாட்டைக் கருத்திற்கொண்டு ஒரு புதிய கைபேசி வழி செயலி (Mobile App), *குடிநீர், சாலை, துப்புரவு, மின்சாரம், தெரு விளக்கு, மழை நீர் வடிகால் மற்றும் இதர அடிப்படை வசதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக விரைவில் துவக்கி வைக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக, இச்செயலி சோதனை அடிப்படையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் துவங்கப்படும். இச்செயலி முறை குறைதீர்க்கும் அமைப்பினை மாநிலத்தின் பிற பகுதிகளிலும் படிப்படியாக விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்களின் அடிப்படைத் தேவை தொடர்பான குறைகளை தீர்க்கும் வகையில் இச்செயலி அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து 24 மணி நேரமும் செயலாற்றக் கூடியதாக இருக்கும். மேலும், மனுக்களை திறம்பட ஆய்வு செய்தல், கண்காணித்தல் மற்றும் முடிவெடுத்தல் போன்றதொரு "மேலாண்மைத் தகவல் ஏற்பாட்டு முறை"யினை* (MIS) *உருவாக்குவதற்கும் இச்செயலி உதவிகரமாக இருக்கும்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 செப்டம்பர் 2

மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை (தேர்தல்)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

இந்திய நாடு உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று ஆகும். இந்திய அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு அனைவருக்கும் ஒரே மாதிரி வாக்களிக்கும் உரிமை என்ற கொள்கையின் படி, தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களை நடத்துவதற்கான முழு ஒத்துழைப்பினையும் தமிழக அரசு தொடர்ந்து தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது.

15-வது சட்டமன்ற பொதுத் தேர்தல்கள், 2016 தமிழகத்தில் கடந்த 16-05-2016 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தினால் நடத்தப்பெற்றது. எந்தவித அசம்பாவிதமுமின்றி அமைதியான முறையில் தேர்தல் நடத்தப்பட்டது.

1. தேர்தல் நிருவாக அமைப்பு

இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு, 324-ன்கீழ், மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பொறுப்புகள், இந்திய தேர்தல் ஆணையத்திற்கு உள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்டது. இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு, 324-ன் கீழ் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951, குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் சட்டம், 1952, ஆகியவற்றின்மூலம் மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951-ன்படி, வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை,

2016 செப்டம்பர் 2]

நெறிப்படுத்துதல் அறிவுரைகளுக்கு இணங்க, தலைமை தேர்தல் அதிகாரியின் கீழ் தேர்தல் துறை செயல்படுகிறது. மாவட்ட அளவில் தேர்தல் பிரிவின் அனைத்து பணிகளில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, சென்னை மாநகராட்சியின் ஆணையர் மாவட்ட தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்வரும் நிருவாக அரசுப் பணியாளர்கள் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLOs)

மேற்காணும் அலுவலர்கள் தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களாக செயல்படுகிறார்கள்.

ஊரகப்பகுதிகளில் அடங்கும் தொகுதிகளுக்கு, வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் ஆகியோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியின் மண்டல அதிகாரிகள் அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னையைத் தவிர, மற்ற மாவட்டங்களில் வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர்கள், உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அதிகாரிகள் மற்றும் செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு

[2016 செப்டம்பர் 2

அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட அலுவலர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், அதாவது பெயர்களை சேர்த்தல் மற்றும் நீக்கல் போன்ற பணிகளை மேற்கொள்கிறார்கள்.

2. 2016–2017-ன் முக்கிய நிகழ்வுகள்

2.1 வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2016

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 21-ன்படி மக்களவை அல்லது மாநில சட்டப் பேரவைக்கான தேர்தலுக்கு முன்பும், சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்யப்படுகின்றன. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் இத்தகைய வாக்காளர் பட்டியல் திருத்தம் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

1-1-2016-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:

வரைவுப் பட்டியல் வெளியீடு	15-09-2015
கோரிக்கை/ மறுப்புரை அளிக்க கடைசி தேதி	24-10-2015
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	20-01-2016

2.2 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2016 தேர்தலுக்கு பயன்படுத்துவதற்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்தும் சிறப்புப் பணி தமிழகத்தில் 15-02-2016 முதல் 29-02-2016 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒரே பாகத்தில் ஒரு வாக்காளரின்

2016 செப்டம்பர் 2]

பெயர் பலமுறை பதிவு செய்யப்பட்டிருந்தால் அப்பதிவை கண்டறிவதற்கு ஒரே பெயர் கொண்ட வாக்காளரின் பெயர் மற்றும் தந்தையின் பெயர் மற்றும் வயது, 2 வருடங்களுக்கு உட்பட்டு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இப்படி ஒரே பெயர், தந்தை பெயர் கொண்ட வாக்காளரின் புகைப்படங்கள் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு, கள ஆய்வுக்கு அனுப்பப்பட்டது, உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் இறப்பு பதிவேட்டிலிருந்து இறந்தவர்களின் பட்டியலும் தயாரிக்கப்பட்டது. வாக்காளர்கள் தாமே முன் வந்து அதுபோன்ற பலமுறை பதிவு மற்றும் இறந்தவர்கள் குறித்து தெரிவிக்குமாறு ஊடகங்கள்மூலம் கோரப்பட்டனர். மேற்கூறிய, அனைத்து பட்டியல்களையும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று சரிபார்த்தனர். இந்தத் தகவல்கள் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. நீக்குதல் குறித்த விவரங்கள் தேர்தல் அதிகாரியின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல், 2016-க்காகப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில், மாநிலத்தில் 5.82 கோடி வாக்காளர்கள் பின்வரும் விவரங்கள்படி இருந்தனர்:—

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	2,88,63,013	2,93,33,954	4,720	5,82,01,687
பணித் தொகுதி வாக்காளர்கள்	43,836	14,272	-	58,108
மொத்தம்	2,89,06,849	2,93,48,226	4,720	5,82,59,795

3. தேசிய வாக்காளர் தினம்

இந்திய தேர்தல் ஆணையம், ஜனவரி, 25-ம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, 2011 முதல், ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகிறது. 2016 ஆம் ஆண்டின் ஆறாவது தேசிய வாக்காளர்

[2016 செப்டம்பர் 2

தினத்தின் முக்கிய குறிக்கோள் "அனைவரும் ஆர்வமுடன் தேர்தலில் பங்கேற்றல்" என்பதாகும்.

தேசிய வாக்காளர் தினமானது, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் கொண்டாடப்படுகிறது. இந்த வருடம் ஜனவரி 25 ஆம் நாள் மாநில அளவிலான தேசிய வாக்காளர் தினம் ஆளுநர் மாளிகையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி மேதகு ஆளுநர் தலைமையில் அனைவராலும் எடுக்கப்பட்டு, புதிதாக பதிவு செய்த வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட சிற்றேடு "நான் வாக்காளராகப் பதிவு செய்வது மற்றும் வாக்களிப்பது எப்படி? (வாக்காளர்களுக்கான கையேடு)" என்ற தலைப்பில் தமிழில் வெளியிடப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி அனைவராலும் எடுக்கப்பட்டு, வாக்காளர் பட்டியலில் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதேபோன்று, ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டு, புதிய வாக்காளர்களுக்கான புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டு மாநிலம் முழுவதும் 29,291 இடங்களில் தேசிய வாக்காளர் தின விழா நடத்தப்பட்டு 16,18,459 வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

4. சட்டமன்ற பொதுத்தேர்தல், 2016

2016ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தல் தமிழ்நாட்டில், மே 16, 2016 அன்று நடத்தப்பட்டு, மே 19, 2016-ல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தேர்தல்கள் தொடர்பான சில முக்கிய புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:-

(i)	மொத்த வாக்காளர்கள்	:	5,82,59,795
(ii)	மொத்த வாக்குப்பதிவு மையங்கள்	:	66007

2016 செப்டம்பர் 2]

(iii) மொத்த போட்டியிட்ட வேட்பாளர்கள் : 3776

(iv) மொத்தம் பதிவான வாக்குகள் : 4,28,73,674

(v) வாக்குப்பதிவு சதவீதம் : 74.26%

இந்திய தேர்தல் ஆணையத்தினால் 134. அரவக்குறிச்சி மற்றும் 174. தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலை நிறுத்தி வைத்து 28-05-2016 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டது.

சட்டமன்றத் தேர்தல்களின்போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய முயற்சிகள்

4.1 தகவல் தொழில்நுட்பம்

இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல் நடைமுறையை வெளிப்படையானதாக்குவது மட்டுமல்லாமல் குடிமக்களின் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திட அறிவுறுத்தியது.

பங்கேற்பாளர்களின் வசதிகளை அதிகரித்து தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டினை ஊக்குவிக்கவும் சட்டமன்ற தேர்தல்களில் அதிகபடியான வாக்குகள் பதிவு மற்றும் வாக்குகளை உறுதி செய்யும் வகையில் புதிய மென்பொருள்கள் செயல்படுத்தப்பட்டன. இதற்காக ஒரு தகவல் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டு அவர்கள் வாயிலாக தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் செயல்முறைகளின் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றிற்காக கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டது. மேலும், ஹேஷ்டேக் "(#) TN 100 Percent" கீழ் ஒரு சமூக ஊடக பிரச்சாரமும் தொடங்கப்பட்டது. இது கணினியறிவு மிக்க வாக்காளர்கள் மட்டுமல்லாமல், ஊரகப் பகுதி வாக்காளர்களிடமும் வரவேற்பு பெற்றது.

4.1.1 தமிழக தேர்தல்கள்—கைபேசி செயலி

முதல் முறையாக, ஆண்ட்ராய்டு, ஆப்பிள் மற்றும் விண்டோஸ் போன்ற அனைத்து தளங்களிலும் உபயோகிக்கும் வகையில் ஒருங்கிணைந்த கைபேசி செயலி செயல்படுத்தப்பட்டது. வாக்காளர் பதிவு முதல் வாக்குச் சாவடி வரிசை நிலையை அறிந்து கொள்ளுதல் வரையிலான 13 சேவைகள் இந்த பயன்பாடுகள்மூலம்

வழங்கப்பட்டன. ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

4.1.2 சமூக ஊடகங்களில் தமிழக தேர்தல் கண்காணிப்பு

இந்தியாவில் முதல் முறையாக, ஃபேஸ்புக், ட்விட்டர் மற்றும் பிற சமூக ஊடக சேனல்கள் மற்றும் பல்வேறு தளங்களில் தேர்தல் தொடர்பான பதிவுகளை கண்காணிக்க கைபேசி மற்றும் இணைய செயலிகள் தொடங்கப்பட்டன. அனைத்து சமூக ஊடக தளங்களின் உரைகள், படங்கள், ஆடியோ மற்றும் வீடியோக்கள் ஒரு நேரடி கட்டுப்பாட்டு அறைமூலம் உடனுக்குடன் கண்காணிக்கப்பட்டன. பெறப்படும் கட்டணங்கள் மற்றும் புகார்கள் விசாரணைகள் ஆகியவற்றைக் கண்காணித்து உடனடி நடவடிக்கை எடுக்க ஒரு நேரடி டேஷ்போர்டு வசதி ஏற்படுத்தப்பட்டது. பெறப்படும் புகார்கள் தானியங்கி பதிவு செய்யப்பட்டு பொதுமக்கள் குறைதீர் அமைப்புமூலம் உடனடி நடவடிக்கையும் தரமான தீர்வும் உறுதி செய்யப்பட்டன. "ஓட்டுக்கு பணம்" "தேர்தல் நடத்தை விதிமீறல்" "பரிசு விநியோகம்" போன்ற வார்த்தைகள் இணைக்கப்பட்டு இவை தொடர்பான தகவல்கள் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்பட்டு நேரடியாக கணினி மென் பலகைக்கு சென்று தானாகவே பொதுமக்கள் குறைதீர் அமைப்பினை அடைந்து, அதன்மூலம் அலுவலர்கள் கண்காணிக்கும் வகையில் அமைக்கப்பட்டன.

4.1.3 ஆன்லைன் படிவங்களை எளிமைப்படுத்துதல்

வாக்காளர் பெயர் பதிவு செய்தல், பெயர் நீக்குதல் அல்லது சேர்த்தல் குறித்த ஆட்சேபணை தெரிவித்தல், முகவரி மாற்றம் மற்றும் வாக்காளர் பதிவுகளில் திருத்தங்கள் ஆகியவற்றிற்காக, எளிமைப்படுத்தப்பட்ட ஒரு இணையச் செயலி தொடங்கப்பட்டது. வாக்காளர்களுக்கு இந்த மேம்படுத்தப்பட்ட வசதிமூலம் தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர்களின் ஈடுபாட்டினை அதிகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆன்லைன் படிவங்கள் 6,7,8 மற்றும் 8A ஆகியவற்றை நிரப்பும் நேரத்தை குறைக்கும் வகையில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தரவு தளத்துடன் இணைக்கப்பட்டன. ஆன்லைன் படிவங்களை நிரப்பும் நேரம் முந்தைய 30 நிமிடங்களிலிருந்து 5 நிமிடங்களுக்கும் குறைவாக ஆக்கப்பட்டுள்ளது.

4.1.4 மாற்று வாக்காளர் அடையாள அட்டை– படிவம் 001

இந்தியாவில் முதல் முறையாக, ஆன்லைன்மூலம் கட்டணம் செலுத்தி விரைவு அஞ்சல்மூலம் வாக்காளரின் வீட்டிற்கே மாற்று வாக்காளர் அடையாள அட்டை அனுப்பப்படும் வசதி ஏற்படுத்தப்பட்டது. கைபேசி செயலிகள் வாயிலாக வாக்காளர் அடையாள அட்டை விரைவு அஞ்சல்மூலம் பெறுவது மற்றும் விண்ணப்பதாரர்கள் அதன் நிலவரத்தைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

4.1.5 வாக்காளர் பட்டியலில் மேம்படுத்தப்பட்ட பெயர் தேடல் வசதி

வலை மற்றும் கைபேசி தளங்களில் வாக்காளர் பெயர் தேடுவதற்கு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆன்லைன் தேடல் வசதி ஏற்படுத்தப்பட்டது. பெயரில் வரும் ஒரு சில எழுத்துக்களை தட்டச்சு செய்வதன்மூலம் பெயரைத் தேட, மிக நவீன வசதிகள் இந்த இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டன.

4.1.6 வேட்பு மனு தாக்கல்

இந்தியாவிலேயே முதன்முறையாக, வேட்பு மனு தாக்கல் குறித்த தகவல்களை பதிவு செய்வதற்கு ஒரு இணைய வசதி ஏற்படுத்தப்பட்டது. ஆன்லைன்மூலம் வேட்பு மனு விவரங்களைப் புதுப்பித்துக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டன. வேட்பு மனு கூர்ந்தாய்வு செய்தல், வேட்பு மனு திரும்பப் பெறுதல், புகைப்படம் சரிபார்த்தல், படிவங்கள் 3A, 6 மற்றும் 7 A அச்சிடுதல் ஆகியவை கணினி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வாக்குச்சீட்டுக்களில் பிழைகள் ஏதும் ஏற்படாமலிருக்க உறுதிசெய்யப்பட்டது.

4.1.7 ஒற்றை சாளர இசைவு அமைப்பு

முன் ஒப்புதலை பெறும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்களுக்கு இந்த மென்பொருள் மூலமாக கீழ்க்கண்ட அனுமதிகள் வழங்கப்பட்டன:

- வாகனம் பயன்படுத்த அனுமதி
- நட்சத்திர பேச்சாளர் பதிவு செய்தல்
- பொதுக் கூட்டம் நடத்த அனுமதி

- ஊர்வலம் நடத்த அனுமதி
- அலுவலகம் திறந்து கொள்ள அனுமதி
- ஹெலிகாப்டர் இறங்குமிடம் அனுமதி
- கட்சிக் கூட்டம் நடத்த அனுமதி

ஒரு இணையவழி ஒற்றைச் சாளர தளம்மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதிகபட்சமாக 48 மணி நேரத்திற்குள் மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. ஆன்லைன்மூலம் 20-05-2016 வரையில் மொத்தம் 60,991 விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டன.

4.1.8 பொது மக்கள் குறைதீர் அமைப்பு

தகவல் தொழில்நுட்ப புதுமையான பயன்பாடுமூலம் புகார் பதிவு செய்யும் வகையில், மின்னஞ்சல், இணையதளம், கைபேசி செயலி, வாட்ஸ் அப், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைபேசிமூலம் பதிவு செய்யப்பட்ட புகார்கள்-புகார் மேலாண்மை அமைப்பு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு தானியங்கி முறையில் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொரு புகாரும் சம்பந்தப்பட்ட குறைதீர்க்கும் அதிகாரிக்கு தானியங்கி முறையில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. புகார் பதிவு ஆனவுடன் பயனர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் குறுந்தகவல் அனுப்பப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. எந்த ஊடகத்தின்மூலம் புகார் பதிவு செய்யும் போதும், ஒரு குறுந்தகவல் உடனடியாக பறக்கும் படைக்கும் அனுப்பப்பட்டு, அதே குறுந்தகவல் அவர்கள் விரைவில் சம்பவ இடத்திற்குச் செல்வதற்கு ஏதுவாக வழிவகை செய்யப்பட்டது. புகாரின் மீதான நடவடிக்கை நேரம் சில மணி நேரத்திலிருந்து சில நிமிடங்களாக குறைக்கப்பட்டது. 20-05-2016 அன்று வரை, 27,192 புகார்கள் தீர்வு செய்யப்பட்டன.

4.1.9 மதுபான கண்காணிப்பு அமைப்பு

தமிழ்நாடு முழுவதும் சில்லறை மதுபான விற்பனையைக் கண்காணிக்க ஒரு வலை செயலி செயல்படுத்தப்பட்டது. 30 சதவீத அல்லது 50 சதவீத விற்பனை அதிகரிப்பு கொண்ட கடைகள் கண்காணிக்கப்பட்டு, தேர்தல் அதிகாரிகளால் காரணம் கண்டறிய ஆய்வு செய்யப்பட்டன.

4.1.10 வங்கிகளில் பண பரிவர்த்தனை குறித்த அறிக்கை

வங்கிகளில் பணப் பரிவர்த்தனைகளைக் கண்காணிக்க ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டது. இதில் No-Frill accounts மற்றும் வங்கி கணக்குகளுக்கு இலட்ச ரூபாய்க்கு அதிகமான பண பரிவர்த்தனைகள் கண்காணிக்கப்பட்டன. 44 வங்கிகளிலிருந்து அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு, ஏதாவது ஐயத்திற்கிடமான பரிவர்த்தனைகள் உள்ளனவா என ஆராயப்பட்டது.

4.1.11 நிழல் செலவினம் பதிவு

வேட்பாளர்களின் செலவு கண்காணிப்பு மென்பொருள் ஒன்று செயல்படுத்தப்பட்டது. இந்த மென்பொருள்மூலம் தேர்தல் பிரச்சாரத்தின்போது வேட்பாளர்களின் செலவினம் அங்கீகரிக்கப்பட்ட அளவான ரூ.28 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறதா என கண்காணிக்கப்பட்டது. இந்த மென்பொருள் ஒற்றை சாளர இசைவு அமைப்போடு இணைக்கப்பட்டது. அதில் அனுமதி அளிக்கப்பட்டவுடன் தானாகவே அலகு வாரியான விலை அட்டவணை அடிப்படையில் செலவினம் பற்றிய சுருக்க அறிக்கை தயாரிக்கும். செலவினங்களின் தினப்படி கண்காணிப்புக்கும் செலவினங்களைக் கூர்ந்தாய்வு செய்தலுக்கும் இம்மென்பொருள் செலவினப் பார்வையாளர்களுக்கு துணை செய்தது.

4.1.12 இணையப் படிவங்கள்

இந்திய தேர்தல் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கபட வேண்டிய படிவங்களில் தேர்தல் நடத்தை விதி மீறல்கள், வாக்குப்பதிவு இயந்திர கோளாறுகள் மற்றும் பறிமுதல் பற்றிய விவரங்களை தேர்தல் நடத்தும் அதிகாரி/துணை தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடமிருந்து ஆன்லைன்மூலம் பெறப்பட்டன. எனவே, தாள்களின்மூலம் அறிக்கை பெறுதல் நிறுத்தப்பட்டது. இதன்மூலம் அறிக்கைகளை உருவாக்கும் பணிச்சுமை குறைக்கப்பட்டது.

4.1.13 வாகன மேலாண்மை அமைப்பு

தேர்தல் பணிக்குத் தேவையான அரசு மற்றும் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்த ஒரு பிரத்தியேக ஆன்லைன் செயலி செயல்படுத்தப்பட்டது. இது வாகனங்களை வாடகைக்கு

[2016 செப்டம்பர் 2

அமர்த்துவதைக் கண்காணிக்க உதவி செய்தது. இதன்மூலம் ஒரு வாகனம் தேர்தல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் தானாகவே பட்டியல்கள் தயாரிக்கப்படவும், கேட்பு கோரிக்கை சமர்ப்பிக்கபடவும் உதவி செய்தது. வாகன கட்டணங்கள் மற்றும் எரிபொருள் செலவினங்கள் ஆகியவை கணக்கிடப்பட இச்செயலி உதவியது.

4.1.14 வரிசை மேலாண்மை அமைப்பு

பொதுமக்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆன்லைன் சேவை வாயிலாக 1950 என்ற எண்ணுக்கு குறுந்தகவல் செய்து, வாக்குசாவடியில் நிற்கும் வரிசையின் தற்போதைய நிலையை தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டது.

4.1.15 உங்கள் வாக்குச் சாவடியை அறிய

வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடி அமைவிடம் பற்றிய தகவல் பெற ஆன்லைன் தளம் ஏற்படுத்தப்பட்டது. வாக்குச் சாவடி விவரங்களை குறுந்தகவல்மூலம் பெறும் வசதியும் வாக்குச்சாவடியின் புவியியல் அமைவிடம் குறித்தும் கைபேசியில் அறிந்து கொள்ளும் வசதி கூகுள் வரைபடம்மூலம் சேவை ஏற்படுத்தப்பட்டது.

4.1.16 சக்கர நாற்காலியில் முன்பதிவு

முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாக்குச்சாவடியை அணுகும் வகையில் சக்கர நாற்காலி முன்பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டது. தன்னார்வலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். இந்தியத் தேர்தல்களில் இதுவரை இல்லாத வகையில் 13,270 சக்கர நாற்காலிகள் மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டன.

4.1.17 இணைய ஒளிபரப்பு

26,549 வாக்கு சாவடிகளிலிருந்து, வாக்குச்சாவடி நிலவரம், நேரடி இணைய ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதன்மூலம் கண்காணிப்பு மற்றும் பின்னணி இடைமுகம் ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டு, சேமித்த தகவல் மீளப்பெற வழி ஏற்படுத்தப்பட்டது.

2016 செப்டம்பர் 2]

4.2. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்

4.2.1 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலின்போது, பாரத மின்னணுவியல் நிறுவனத்தால் 2006ஆம் ஆண்டுக்கு பின்னர் தயாரிக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

இம்மாநிலத்தில் 37,892 வாக்குப்பதிவுக் கருவிகள் மற்றும் 30,642 கட்டுப்பாட்டுக் கருவிகள் இருந்தன. இது தவிர, இந்திய தேர்தல் ஆணையமானது, பீகார், மகாராஷ்டிரா, குஜராத், ஹரியானா, ஜார்கண்ட் மற்றும் பெங்களூருவிலுள்ள பாரத மின்னணுவியல் நிறுவனம் ஆகியவற்றில் இருந்து 1,15,833 வாக்குப்பதிவுக் கருவிகள் மற்றும் 75,000 கட்டுப்பாட்டுக் கருவிகள் கூடுதலாக இத்தேர்தல் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்தது. மொத்தம், 75,394 கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் 1,06,113 வாக்குப்பதிவு கருவிகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுதேர்தல், 2016-ல் பயன்படுத்தப்பட்டன.

4.2.2 வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவி (VVPAT)

இது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தனித்துவமான கருவியாகும். இதன் மூலம் வாக்காளர் அளித்த வாக்கானது, காகித சீட்டில் அச்சிடப்படுகிறது. அதனை வாக்காளர் பார்க்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. வேட்பாளரின் வரிசை எண் மற்றும் சின்னம் ஆகியவற்றை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட காகிதச்சீட்டானது அக்கருவியிலுள்ள கண்ணாடிப்பேழை வழியாக 7 வினாடிகள் வரை தென்பட்டு, தானாகவே துண்டிக்கப்பட்டு சீலிடப்பட்ட பெட்டியினுள் விழுந்துவிடும்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலின்போது, தேர்வு செய்யப்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்துவதற்காக 5,222 எண்ணிக்கையிலான வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்ததுடன், அக்கருவியினை 1350-க்கும் குறைவான வாக்காளர்கள் உள்ள

வாக்குச்சாவடி மையங்களில் மட்டுமே பயன்படுத்துமாறு ஆணையிட்டது.

கடந்த பொதுத் தேர்தலின்போது, 5,222 எண்ணிக்கையிலான, வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளானது அண்ணாநகர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம் (வடக்கு), ஈரோடு (மேற்கு), திருப்பூர் (வடக்கு), கோயம்புத்தூர் (வடக்கு), திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி (மேற்கு), கடலூர், காஞ்சிபுரம், விழுப்புரம், மதுரை (கிழக்கு), தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 16 சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்பட்டன.

4.3 செலவின கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகள்

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2016-ன் போது செலவின பார்வையாளர்களின் எண்ணிக்கை கடந்த தேர்தலின் போது, மாவட்டத்திற்கு ஒருவர் ஈடுபடுத்தப்பட்டது என்பதிலிருந்து, சராசரியாக ஒரு தொகுதிக்கு ஒருவர் என அதிகரிக்கப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் மொத்தம் 186 செலவின பார்வையாளர்கள் நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டனர்.

- வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுகள் கொடுத்து தூண்டுவதை தடுப்பதற்காக தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், உடனடியாக 715 பறக்கும் படைகள், 712 நிலையான கண்காணிப்பு குழுக்கள் மற்றும் 712 வீடியோ கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு பணியிலமர்த்தப்பட்டனர்.

- இந்த படைகள் GPS கருவி மூலம் மாவட்ட கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிக்கப்பட்டன.

- 12-05-2016 முதல், அதாவது வாக்குப்பதிவுக்கு நெருங்கிய நாளில் பறக்கும் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. மொத்தம் 5,670 மண்டலங்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் மூன்று சுழற்சி முறைகளில் கண்காணிக்க கூடுதல் பறக்கும் படைகள் பணியிலமர்த்தப்பட்டனர். இரவு நேரங்களில் கூடுதலாக

2016 செப்டம்பர் 2]

1,280 பறக்கும் படைகள் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், நிலையான கண்காணிப்புக் குழுக்களும், பறக்கும் படைகளுக்கு கூடுதலாக செயல்பட்டன.

- பண விநியோகம் தொடர்பாக வரும் புகார்களைக் கையாள பகல் நேரங்களில் சுமார் 7,000 பறக்கும் படைகளும், இரவு நேரங்களில் சுமார் 8,300 பறக்கும் படைகளும் எப்பகுதியிலும் வலம் வந்தனர். இத்தீவிர கண்காணிப்பு முறை தமிழ்நாட்டில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி முதல், பறக்கும் படைகளின் நடுநிலைமையினை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு பறக்கும் படையிலும் மத்திய துணை இராணுவப் படையினர் மற்றும் மைய அரசு ஊழியர் ஒருவர் பணியிலமர்த்தப்பட்டனர்.
- தமிழகத்தில் தேர்தல் பயிற்சிக்காக வந்த இந்தியக் காவல் பணியின் (IPS) பயிற்சி நிலை அதிகாரிகள் 117 பேர், ஒவ்வொருவரையும் பறக்கும் படையின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அதில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- இத்தேர்தலுக்காக மொத்தம் 440 சோதனைச்சாவடிகள் மற்றும் 300 துணை இராணுவப்படை கம்பெனிகள் பணியிலமர்த்தப்பட்டன.

4.4 முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு (SVEEP)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க மாநிலம் முழுவதும் முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு குறித்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் செயல் திட்டம் 3 பிரிவாக செயல்படுத்தப்பட்டது.

- முதலாவதாக, தகுதியுள்ள அனைத்து நபர்களும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக "#TN 100 percent" என்ற வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரம் செயல்படுத்தப்பட்டது. இதில் தகுதி வாய்ந்த இளைய வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக டிவிட்டர், பேஸ்புக்,

[2016 செப்டம்பர் 2

யூடியூப், போன்ற சமூக வலைதளங்களும் பயன்படுத்தப்பட்டன. தகுதியுள்ள மாணவர்களை பதிவு செய்வதற்கு அனைத்து கல்லூரிகளிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- இரண்டவதாக, தேர்தல் நாளில் அதிக வாக்குப்பதிவினை நடைபெறச் செய்வது, தேர்தல் நாளினை பொது விடுமுறை நாளாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதனை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும் சிறப்புக் கட்டுப்பாட்டு அறை தமிழ்நாடு அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் தொடங்கப்பட்டது.

- செயல்திட்டத்தின் மூன்றாவது பகுதியாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் அமைந்தது. இந்த சமூக ஊடகப் பிரச்சாரம் "வாக்குக்குப் பணம் வாங்குதல் கூடாது" என்பதை மையப்படுத்தி இருந்தது. இந்தச் செய்தி மக்களிடம் பயனுள்ள வகையில் சென்றடைய திரைப்படம் மற்றும் விளையாட்டுத் துறையில் புகழ்பெற்றவர்களைக் கொண்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. வேட்பு மனு தாக்கல் செய்தவுடன் பல வேட்பாளர்கள் வாக்காளர்களுக்கு கையூட்டு ஏதும் அளிக்கமாட்டோம் என்று தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தின் வெளியே அதற்கென அமைக்கப்பட்ட தனி மேடையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

- வாக்காளர்கள் பணம் பெறாமல் வாக்களிப்போம் என்ற வாக்காளர் உறுதிமொழியினை மே 10, 2016, காலை 10.00 மணியளவில் தமிழகம் முழுவதும் எடுத்துக்கொண்டனர். வாக்காளர் உறுதிமொழியில் 1.65 கோடி மக்கள் பங்கேற்றனர். இந்த முறை மாநிலத்தில் முதன்முறையாக பின்பற்றப்பட்டது.

4.5 பாதுகாப்பு ஏற்பாடுகள்

சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை உறுதிசெய்யும் பொருட்டு பாதுகாப்புத் திட்டம் மற்றும் படைப்பரவலாக்கத் திட்டமும் தயாரிக்கப்பட்டன. பதற்றமான சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் வாக்குச் சாவடிகள் கண்டறியப்பட்டு மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 300 கம்பெனி மத்திய துணை ராணுவப் படையினர், மாநிலக் காவலர்கள் 92,976 பேர், 15 சிறப்புக் காவல் படை பிரிவுகள், ஊர்க்காவலர்கள் 14,148 பேர்

2016 செப்டம்பர் 2]

691 தீயணைப்புப் படையினர், வனத் துறை காவலர்கள் 181 பேர், முன்னாள் படைவீரர்கள் 10,241 பேர், ஓய்வுபெற்ற காவலர்கள் 1067 பேர் மற்றும் 36 இளைஞர் படையினர் ஆகியோர் தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 14-05-2016 முதல் 17-05-2016 வரை ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் 10,042 நாட்டு நலப் பணித்திட்ட முதுநிலை துருப்புகளும் தேர்தல் நடைபெற்ற 16-5-2016 அன்று வாக்குச்சாவடிகளில் வரிசை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

4.6 பார்வையாளர்கள்

இந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டிற்கு 124 பொதுப் பார்வையாளர்கள் 32 காவல் பார்வையாளர்கள் மற்றும் 186 செலவின பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையம் பிரதிநிதியாக நியமித்தது. மேற்கண்ட பார்வையாளர்களைத் தவிர இந்திய தேர்தல் ஆணையம் 234 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வை செய்ய 234 எண்ணிக்கை பார்வையாளர்களை நியமித்தது. மேற்கண்ட பார்வையாளர்களுடன் கூடுதலாக, இந்திய தேர்தல் ஆணையம் 16 மத்திய விழிப்புணர்வு பார்வையாளர்களை (2 மாவட்டங்களுக்கு 1 பார்வையாளர் வீதம்) வாக்காளர் கல்வி தொடர்பான அம்சங்களை மேற்பார்வை செய்ய நியமித்தது.

4.7 வாக்காளர் சீட்டுகள் விநியோகம்

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற வாக்காளர்களுக்கு வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலரால் சான்றளிக்கப்பட்ட, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் சீட்டு அந்தந்த வாக்குச் சாவடி நிலை அலுவலர் மூலமாக வழங்கப்பட்டது. இந்த வாக்காளர் சீட்டு வழங்கும் பணி முறையானது, தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்ட பார்வையாளர்கள் மூலம் மேற்பார்வையில் செய்யப்பட்டது.

4.8 தேர்தல் நடத்தும் அதிகாரிகள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணுகை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பயிற்சி

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2016-ஐ சுமுகமாக நடத்துவதற்கான பயிற்சி, மாநில அளவிலும், மண்டல அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான தேர்தல் மேலாண்மை குறித்த பயிற்சியானது மாநில அளவில் மாவட்ட அளவிலான பயிற்றுனர்களுக்கு சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில், 21-12-2015 முதல் 22-12-2015 வரையிலும், மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் காவல் துறை சார்ந்த அதிகாரிகளுக்கான பயிற்சி 12-1-2016 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்திலும், 19-1-2016 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், 28-1-2016 அன்று சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்திலும், 05.02.2016 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் நடைபெற்றன.

பயிற்றுனர் மற்றும் ஏற்பாட்டாளர்களுக்கான பயிற்சி, மாநில, மாவட்டம் மற்றும் சட்டமன்றத் தொகுதி அளவிலான பயிற்றுனர்களுக்கு 10-1-2016 முதல் 13-01-2016 வரை சென்னையில் உள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டது. மேலும், இப்பயிற்சி, 10 பிரிவுகளாக, 19-01-2016 முதல் 11-03-2016 வரை ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் அமைந்துள்ள குடிமைப்பணி பயிற்சி நிறுவனத்திலும், சென்னை மறைமலை நகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திலும், திருவண்ணாமலை, S.V. நகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திலும், மதுரை, T. கல்லுப்பட்டியில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திலும் மற்றும் தஞ்சாவூர், பட்டுக்கோட்டையில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திலும் பயிற்சி வழங்கப்பட்டது. தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 7-3-2016 இல் சென்னையில் வழங்கப்பட்டது.

4.9 ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்கள் கண்காணிப்பு மற்றும் சான்றளிப்புக் குழு

தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒலி/ஒளி பரப்பப்படும் அரசியல் விளம்பரங்களை கண்காணித்தல் மற்றும் சான்றளிப்பு செய்வதற்காக ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களுக்கு அரசியல் கட்சிகளின் விளம்பரங்களை வானொலி, தொலைக்காட்சி, கேபிள்

2016 செப்டம்பர் 2]

தொலைக்காட்சி மற்றும் இதர ஊடகங்களில் ஒலி/ஒளி பரப்பப்படுவதற்கு முன்னர், சான்றளிப்பு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இக்குழுக்கள், தேர்தல் சம்பந்தமான விளம்பரங்களை கண்காணித்து, பணம் கொடுத்து செய்தி வெளியிடும் நிகழ்வுகளில், தக்க நடவடிக்கை மேற்கொண்டன. மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் மேற்கொள்ளும் முடிவின்மீது மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் மேல்முறையீடு செய்யலாம்.

5. 2016–2017-ல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நிகழ்வுகள்

5.1 01–01-2017–க்கான வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2017

01-01-2017-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்து இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இத்திருத்தப்பணி 01-09-2016 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த சுருக்கமுறைத் திருத்தத்துடன் விரிவான "முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு" (SVEEP) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்துடன் இந்திய தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்திய சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனத்தால் (IIIDEM) தலைமை பயிற்சியாளர்களுக்கும் அவர்கள்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து படிப்படியாக பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25-01-2017-ல் கொண்டாடப்படும். இத்தருணத்தில், புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

5.2 தேசிய அளவில் வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்தும் பணி

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மையினை உயர்த்தவும் வாக்காளர்கள் வாக்குச்சாவடிகளுக்கு சிரமமின்றிச் சென்று வாக்களிக்க வசதி செய்யும் வகையில் வாக்குச்சாவடிகளை சீரமைக்கவும் இந்திய தேர்தல் ஆணையம் தேசிய அளவில் வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்தும் பணியை செயல்படுத்தியுள்ளது.

[2016 செப்டம்பர் 2

தேசிய அளவில் வாக்காளர் பட்டியல் செம்மைப்படுத்தும் பணி, 2016 இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை: (1) தகுதியுள்ள அனைத்துக் குடிமக்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்து வாக்காளர் பட்டியல்களைத் தவறுகளின்றித் தயாரித்தல்; வசிக்காத/இடம் பெயர்ந்த/இறந்த வாக்காளர்களின் பதிவுகள் மற்றும் இருமுறைப் பதிவுகளை நீக்குதல்; இந்திய தேர்தல் ஆணையத்தின் தர நிர்ணயங்களுக்கேற்ப அனைத்து வாக்காளர்களுக்கும் நல்ல தரமான உருவப்படங்கள் இடம்பெற்றிருப்பதை உறுதி செய்தல் ; (2) புவியியல் குறியீட்டு முறையில் பாக எல்லைகளைச் சீரமைத்து அதன்மூலம் பிரிவுகள், பாக எல்லைகள் மற்றும் அமைவிடம், ஆகியவற்றைத் தரப்படுத்தி வாக்குச்சாவடி அமைவிடங்களை பாகத்திற்குள்ளேயோ அல்லது அடுத்த பாகத்திற்குள்ளேயோ மாற்றியமைத்தலும், மேம்படுத்தப்பட்ட வாக்குச் சாவடி வரைபடங்களைத் தயாரித்தலும் ஆகும்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று, வசிக்காத/இடம்பெயர்ந்த/இறந்த/இருமுறை பதிவுகளை களவிசாரணை செய்வதுடன் வாக்காளர்களின் குடும்பத்தொடர்பு விவரங்களும் பெறப்படும். தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தும் பணி, 2016-ன்கீழ் புவியியல் குறியீட்டு முறையில் வாக்காளர் பட்டியல் பிரிவுகள், வாக்குச்சாவடி பாக எல்லைகள் மற்றும் அமைவிடங்களைச் சீரமைக்கும் பணியும் நிறைவடையும்.

இணைப்பு II

(41 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண்16–நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

முகவுரை:

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று - 753

தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகித்து ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வது இத்துறையின் முக்கியப் பணியாகும். மாநிலக் கருவூலத்தை பராமரிக்கும் நிதித்துறை, வரவுகளையும் செலவுகளையும் ஈடுசெய்து தேவைக்கேற்ப கடன் பொறுப்புகளை அளவோடு பராமரித்து நிதி நிருவாகத்தை கவனிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பை வகிப்பதோடு, பெறப்பட்ட கடனை திரும்ப செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுள்ளது. பல்வேறு துறைகளின் தேவைக்கான செயற்குறிப்புகளை நிதித் துறை ஆராய்ந்து மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி நிலைக்கேற்ப, செலவுத் திறன் (cost effectiveness), *நிதி நடைமுறை முதலியவற்றிற்கேற்ப கூர்ந்தாய்வு செய்து, தேவையை மதிப்பீடு செய்து வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்கிறது.*

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் தொலைநோக்கும் குறிக்கோளும்

2. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ செயலாக்கத்திற்கு கொண்டுவந்து மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஓர் அரிய முயற்சியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டை இந்தியாவிலேயே வளமைமிக்க, முன்னேற்றம் செறிந்த,

[2016 செப்டம்பர் 2

வறுமையில்லா மாநிலமாகவும், ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கள் துய்த்து வருகின்ற மாநிலமாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்ற மாநிலமாகவும் உருவாக்குவதே **மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வெளியிட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023-ன் முக்கிய நோக்கம் ஆகும். இக்குறிக்கோள்களை எய்திடும் பொருட்டு, 2023 ஆம் ஆண்டுக்குள், அனைவருக்கும் பயனளிக்கும் தரமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

3. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம், 2012-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், நமது மாநிலத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் செயல்படும் இந்த வாரியம், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023-ன்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான திட்டமிடல், முறைப்படுத்துதல் மற்றும் திட்டங்களை முறையாக செயல்படுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற உதவுகிறது. உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை இந்த வாரியம், ஒருங்கிணைப்பதோடு, அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தவும் உதவுகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம்-,2012, அதன் விதிகள்-2012 மற்றும் வரைமுறைகள்-2013 ஆகியவை, திட்டங்களை விரைவாக செயல்படுத்த வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு தேவையான நிருவாக அதிகாரத்தை வழங்கியுள்ளதோடு தெளிவான நடைமுறைகளையும் நடவடிக்கைக்கான கட்டமைப்புகளையும் வரையறுத்துள்ளன.

4. பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் மாநிலத்தின் முக்கிய கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்தும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 ஆவணத்தின் முதற்பகுதி 22-3-2012 அன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 21-2-2014 அன்று, மாண்புமிகு முதலமைச்சர்

2016 செப்டம்பர் 2]

அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 ஆவணத்தின் இரண்டாவது பகுதியை வெளியிட்டார்கள். துறைவாரியான அணுகுமுறைகளையும், ஆறு முக்கிய துறைகளில் மேற்கொள்ளப்படவுள்ள 217 உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய விவரங்களையும் இந்த ஆவணம் எடுத்துரைத்துள்ளது. தொலைநோக்குத் திட்ட ஆவணத்தின் திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகள் திட்டத் தயாரிப்பு நிதிமூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் 88 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. 16 திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. மேலும், 24 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மற்றும் விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துவங்கும் நிலையில் உள்ளன. மீதமுள்ள திட்டங்கள் பல்வேறு தயாரிப்பு நிலைகளில் உள்ளன.

5. மேலும், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை மாநகரத்திற்கென அறிவுசார் போக்குவரத்து திட்டத்திற்கான (Intelligent Transport System), விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழித் திட்டத்தையும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழி மேம்பாட்டுக் கழகம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு இத்திட்டத்திற்கான நில கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழிச்சாலை திட்டத்தை கிழக்குக் கடற்கரை பொருளாதார பெருவழிச்சாலையின் ஒரு பகுதியாக, கருதி உதவிட ஆசிய வளர்ச்சி வங்கி முனைப்பான ஆர்வம் காட்டி வருகிறது.

6. நமது நாட்டிலேயே ஒரு முன்முயற்சியாக, புதிய உள்கட்டமைப்பு நிதி அமைப்புகளுடன், உள்கட்டமைப்பு வசதிக் கடன் நிதியம் (Infrastructure Debt Fund), மாற்று முதலீட்டு நிதியம் (Alternative Investment Fund), (வகை-I) மற்றும் உள்கட்டமைப்பு முதலீட்டு பொறுப்பாண்மை நிறுவனம் (Infrastructure Investment Trust Fund), ஆகியவற்றை கையாளும் வகையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தை மாநில அரசு நிறுவியுள்ளது. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் இந்த நிதியம் பதிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 3000 கோடி ரூபாய் நிதியை திரட்டுவதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது

[2016 செப்டம்பர் 2

மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகம், சொத்து பராமரிப்பு மேலாண்மை நிறுவனமாகச் (Asset Management Company), செயல்படும். தமிழ்நாட்டில் இது நான்காவது தலைமுறை நிதி நிறுவனமாக இருக்கும். இது வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் புகழ்பெற்ற நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியா மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த வாய்ப்புள்ள முதலீட்டாளர்களிடமிருந்து பெறுகின்ற நிதிகளை அடிப்படையாக கொண்டு, இதன் நிதி ஆதாரம் திரட்டப்படும். இத்தகைய நிதி, அரசு-தனியார் பங்கேற்பு முறையில் அல்லது பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் (Engineering, Procurement and Construction mode), மேற்கொள்ளப்படும் பொதுத் திட்டங்களுக்கு கடன் வழங்குவதற்காகவும் முதலீடு செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும்.

7. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகியவை தவிர, நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகளும் இயங்கி வருகின்றன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை - நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

கருவூலக் கணக்குத் துறை

8. கருவூலக் கணக்கு இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு கருவூலக் கணக்குத் துறை, நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் ஆறு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், ஆறு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மூன்று சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், ஓர் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஓர் உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள் ஆகியவை கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மின்—ஆளுகை முயற்சிகள்

தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை (ATBPS)

9. மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் கண்டறிதல் மற்றும் பட்டியல்களின் ஏற்பளிப்பினை கண்காணித்தல் போன்ற கருவூலச் செயல்பாடுகளில் உள்ள இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்ட கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குதல், குறும்பரப்பு வலையமைப்பு (LAN) மற்றும் தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் (TNSWAN) ஏற்படுத்தித் தருதல், பணியாளர்களின் பணியிடச் சூழலை மேம்படுவதற்காக அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் அரசின் கணக்கு முறைகளை துல்லியமாக கணக்கிடவும், சிறந்த கண்காணிப்புகளை மேற்கொள்ளவும் வசதியளிப்பதோடு, வங்கிகள், பணம் பெறும் அலுவலர்கள், மாநில கணக்காயர் ஆகியவர்களுக்கு தங்கள் பணியை திறம்பட செய்யவும் வழிவகுக்கும்.

வலைதள சம்பள பட்டியல் (Web Payroll)

10. இத்திட்டம், கருவூலக் கணக்குத் துறை அலுவலகங்களில் 2013-2014 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது பிற துறை அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் வரவு-செலவுத்

திட்டப் பணிக்கென அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த தரவுதளத்தின் (Centralized Database) மூலம் பணியாளர்களின் விவர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களைப் பெறும் வகையிலும் வலைதள சம்பளப்பட்டியல் மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மனிதவள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு சிறந்த பயனுள்ள கருவியாக அமைந்துள்ளது.

மின்னணு வழி ஓய்வூதியம் (e-Pension)

11. இத்திட்டம் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கருவூலங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பலன்கள் அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வைமூலம் (ECS/RECS) நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. அனைத்து ஓய்வூதியதாரர்களும் வரவு வைக்கப்பட்ட தங்களது ஓய்வூதிய விவரங்களை அவர்களின் வங்கிக் கணக்கில் இணையதளம் (online) மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IF & HRMS)

12. நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை இணைத்து 'ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, 288.91 கோடி ரூபாய்க்கு அரசு நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக விப்ரோ நிறுவனம் (M/s. Wipro Limited) தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தக்கூடிய அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும் மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் பிப்ரவரி 2017-இல் செயல்முறைக்கு கொண்டுவரப்படும்.

2016 செப்டம்பர் 2]

13. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 22,000-க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின்மூலம் சம்பளப் பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். மேலும், இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழிமூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அரசின் நிகழ்நேர வரவினை உடனுக்குடன் பெற இயலும். இத்திட்டத்தின்மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விவரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital Signature) *மற்றும் விரல்ரேகை பதிவுமுறை* (Bio-Metric) *மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன்மூலம் மாநிலத்தின் நிதி நிலை விவரம் உடனுக்குடன் அரசுக்கு கிடைப்பதுடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற இது வழிவகுக்கும்.*

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2012 மற்றும் 2016

14. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-,2012, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம்மூலம் 01-7-2012 முதல் செயல்படுத்தப்பட்டு 30-6-2016 அன்று முடிவுற்றது. இத்திட்டத்தின்மூலம் அரசு அலுவலர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நான்காண்டுகளில் ரூபாய் நான்கு இலட்சத்திற்கு மிகாமல் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்மூலம் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 113 வகையான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 654 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமின்றி மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து அதாவது

01-7-2012 முதல் 30-6-2016 வரை 731.27 கோடி ரூபாய் மதிப்பில் 1,85,781 பயனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

15. அரசு இத்திட்டத்தினை 30-6-2016-க்குப் பிறகு மேலும் நான்காண்டிற்கு செயல்படுத்த நீட்டிப்பு செய்து ஆணையிட்டுள்ளது. இப்புதிய திட்டத்திலும், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான ரூபாய் நான்கு இலட்சம் வரை மருத்துவ சிகிச்சையினை கட்டணமின்றிப் பெறலாம். மேலும், இவ்வாணையில் புற்றுநோய், கல்லீரல் மற்றும் இதர உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், திறந்த இருதய அறுவை சிகிச்சை, இருதய வால்வு மாற்று சிகிச்சை உள்ளிட்ட குறிப்பிட்ட சில சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்படும் நிதியுதவி வரம்பு ரூ.7,50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ஒரு கண்ணிற்கு ரூ.25,000/- ஆகவும் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ரூ.45,000/- ஆகவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்து காரணமாக, இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிகிச்சை / அறுவை சிகிச்சைகள் அவசரம் கருதி அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொண்டிருப்பினும், மருத்துவ உதவி நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மாதம் ஒன்றிற்கு ரூ.180/- வீதம் பங்கு தொகையாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஜூலை 2016 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்—2014

16. ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம் மூலமாக 1-7-2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் வரையறுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளை பெற்று நான்காண்டுகளுக்கு (2014-2018) இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் மருத்துவ காப்பீட்டு உதவியாகப் பெறலாம். இதற்காக மாதம் ரூ.150/- வீதம் ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் 60 அறுவை சிகிச்சைகள் மற்றும் 54 மருத்துவ நடைமுறைகள் உள்ளிட்ட 114 சிகிச்சைகள் அடங்கும். இதுவரை 655 மருத்துவமனைகள் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவியினை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1-7-2014 முதல்

2016 செப்டம்பர் 2]

31-7-2016 வரை 283.55 கோடி ரூபாய் மதிப்பில் 99,317 பயனாளிகள் மருத்துவ சிகிச்சையினை கட்டணமில்லாமல் பெற்றுள்ளனர்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS)

17. இத்திட்டம், 01-4-2003 மற்றும் அதற்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அரசு பணியாளர்களிடமிருந்து அவர்களது அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இவற்றில் 10 சதவீதம் மாதந்தோறும் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களின் பங்குத் தொகைக்கு நிகராக, அரசும் தனது பங்களிப்புத் தொகையினை அவர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் செலுத்துகிறது. மேலும், பிடித்தம் செய்யப்பட்ட மாதத்திலிருந்து வட்டித் தொகை கணக்கிடப்பட்டு, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் (NPS)

18. அரசாணை நிலை எண்.1155, பொது (சிறப்பு-பி) துறை, நாள் 8-12-2011-இன்படி புதிய ஓய்வூதியத் திட்டம், 1-1-2004 மற்றும் அதற்குப் பிறகு பணியில் சேர்ந்த அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அலுவலரின் கட்டாய பங்களிப்பாக அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்யப்பட்டு அதற்கு இணையாக அரசின் பங்களிப்பும் செலுத்தப்படுகிறது.

19. தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமும், புதிய ஓய்வூதியத் திட்டமும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் மற்றும் கருவூலக் கணக்குத் துறையால் தேசிய தகவல் மையத்துடன் இணைந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்ட முகப்பு எண் (NPS Index Number) *மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட முகப்பு எண்* (CPS Index Number) *அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான கணக்கு விவர சீட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இது தவிர, ஏனைய*

[2016 செப்டம்பர் 2

அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கு விவர சீட்டும் (Account Slip) வெளியிடுவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு இணையதளத்தில் விரைவில் வெளியிடப்படவுள்ளது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS) மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டங்களை (NPS) நடைமுறைப்படுத்துவது குறித்தும் விடுபட்ட வரவுகள் உள்ளிட்ட அனைத்து பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கருவூலக் கணக்குத் துறை இயக்ககத்தால் தினம்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுடன் காலமுறையிலான கலந்தாய்வுக் கூட்டம், மாவட்ட அளவில், மாவட்ட கருவூல அலுவலர்கள்/சம்பளக் கணக்கு அலுவலர்களாலும் மாநில அளவில் கருவூலக் கணக்கு இயக்குநரால் சென்னையிலும் நடத்தப்பட்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

20. இத்திட்டத்திற்கான நடவடிக்கைகளை அரசு தகவல் தொகுப்பு விவர மையம் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்காக மாநில ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (State Nodal Officer) வகைநல்கு அலுவலராகவும் (Facilitator) கருவூல கணக்குத் துறை இயக்குநர் செயல்படுவார். உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து உள்ளாட்சி அமைப்புத் துறை அலுவலர்களோடு கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் ஆய்வு மேற்கொள்வதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட செயல்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித் தொகை வழங்குதல்

21. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் 19-2-2016 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்ததன்படி, அரசாணை நிலை எண் 59, நிதி (ஓ.கு.தீ)த் துறை, நாள் 22-2-2016-ல் பணிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித் துறப்பு செய்தவர்கள், பணியிலிருக்கும்போது பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், இறந்தவர்கள் ஆகியோருக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித் தொகை கோருவது சார்பாக 1366

2016 செப்டம்பர் 2]

விண்ணப்பங்கள் நாளது தேதி வரை கருவூலக் கணக்கு இயக்குநரகத்தில் பெறப்பட்டுள்ளன. இதுவரை 537 நபர்களுக்கு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி கணக்குச் சீட்டுகள் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை (CPS final authorization) ரூ.18,86,65,946/-க்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய சார்—கருவூலங்கள் ஏற்படுத்துதல்

22. "ஒரு வட்டம்-ஒரு சார்-கருவூலம்" என்ற அரசின் கொள்கைக்கிணங்க கடந்த 2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 37 புதிய சார்கருவூலங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு மொத்தம் 243 சார்-கருவூலங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

23. சென்னை மாவட்ட கருவூல அலுவலகத்தைத் தவிர அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்களும் அரசு கட்டடத்தில் தற்போது இயங்கி வருகின்றன. சென்னை மாவட்ட கருவூலத்திற்கு நந்தனத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்ட கருவூலங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமான கட்டடங்களிலேயே இயங்கும் நிலை விரைவில் உறுதி செய்யப்படும்.

24. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 67 சார்-கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அவற்றில் 34 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. 30 சார் கருவூலங்களுக்கான கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், 3 சார் கருவூலங்களுக்கான நில மாற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

25. மேலும், நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 10 அலுவலகங்களுக்கு 36.33 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டு செலவில் ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்ட இவ்வரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கட்டடப் பணி முடியும் நிலையில் உள்ளது.

[2016 செப்டம்பர் 2

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

26. அரசாணை (நிலை) எண் 125, நிதித் துறை, நாள் 10-2-1921-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தோற்றுவிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டபூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களுக்குரிய சட்ட விதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

27. மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார அமைப்புகள் மத்திய, மாநில அரசுகளின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கும், பொது நிதியை இவ்வமைப்புகள் எவ்வாறு செலவு செய்கின்றன என்பதைக் கண்காணித்து மக்களிடையே அதன் நம்பகத்தன்மையை உயர்த்தவும், பதின்மூன்றாவது மத்திய நிதிக் குழு மற்றும் இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 (த.நா.ச.எண் 24/2014) தமிழ்நாடு சட்டப் பேரவையால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கை மற்றும் இச்சட்டத்தின் பிரிவு 5-ன்படி பிற நிறுவனங்களின் தணிக்கை, தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின்படியும், அதன்கீழ் இயற்றப்படவுள்ள விதிகளின்படியும், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் செய்யப்படும் தணிக்கைக்கு இச்சட்டம், சட்டமுறை ஏற்பளிப்பு வழங்குகிறது. இது தவிர, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் தொகுக்கப்பட்ட ஆண்டு அறிக்கையினை, மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கையுடன் சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கவும் இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

28. இச்சட்டத்தை முறையாக செயல்படுத்த மாநில கணக்காயரின் அறிவுறுத்தலின்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க ஏதுவாக பயிற்சி அளிப்பது

2016 செப்டம்பர் 2]

தொடர்பாகவும் தணிக்கை அறிக்கை வடிவத்தை மாற்றி அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29. இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

தொடர் எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
(i)	மாநகராட்சிகள்	12
(ii)	நகராட்சிகள்	124
(iii)	பேரூராட்சிகள்	528
(iv)	மாவட்ட ஊராட்சிகள்	31
(v)	ஊராட்சி ஒன்றியங்கள்	385
(vi)	பல்கலைக்கழகங்கள்	23
(vii)	உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள்	32
(viii)	மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	21
(ix)	தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம்	1
(x)	வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு	2
(xi)	கோயம்பேடு மொத்த விற்பனை குழு	1
(xii)	உள்ளூர் திட்டக் குழுமங்கள்	27
(xiii)	கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்)	2515
(xiv)	பல்வகை நிறுவனங்கள்	10

[2016 செப்டம்பர் 2

உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை

30. உள்ளாட்சி அமைப்புகளின் வரவு செலவுகள், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கையின் தணிக்கைக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த தனியுரிமை தணிக்கையின் (Proprietary Audit) *மேற்கொள்கின்றன. மேலும், அரசு மற்றும் பிற நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் தொகை நன்முறையில் பயன்படுத்தப்படுவதையும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்களைப் பாதுகாக்க அந்த தொகை எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதே நோக்கத்திற்கு முறையாக செலவிடப்படுகிறதா என்பதையும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உறுதி செய்கிறது.*

கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனை தணிக்கை

31. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக முறைப்படியான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 20 சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் 2515 ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)

32. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல்

2016 செப்டம்பர் 2]

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 2000-2001 ஆம் ஆண்டு முதல், உடன் நிகழ் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர்/உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டு தணிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை நடைமுறை (Immediate Post Audit)

33. உடன் நிகழ் தணிக்கை செயல்படுகின்ற 12 மாநகராட்சிகளிலும் 17 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

34. உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றுக்கு வரப்பெற்ற பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்து பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, அதன் அடிப்படையில் தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை

35. உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 107 நகராட்சிகள், 9 பல்கலைக்கழகங்கள், ஏனைய உள்ளாட்சி

[2016 செப்டம்பர் 2

அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணையக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பாகச் சேரும் வருவாய் அடிப்படையில் (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

36. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்பாகச் சேரும் வருவாய் அடிப்படையில் கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) இரு கட்டங்களாக 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

37. ஓர் ஆண்டின் நிதி சார்ந்த நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account), ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதி நிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து, கணக்குகளைப் பேணுவதே இந்த கணக்கு முறையின் நோக்கமாகும்.

38. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், உரிய மதிப்பீட்டு முறைகளோடு, கணக்குகளில் சேர்க்கப்பட்ட அவற்றின் சொத்துக்களை சொத்து பதிவேட்டின்மூலம் அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்களுக்கும் கடன் உதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத் திட்டங்களுக்கு நிதி திரட்டும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

2016 செப்டம்பர் 2]

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கை சான்று வழங்குதல்

39. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும், முறையான தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

40. பல்கலைக்கழக மானியக் குழு, மாநில/மத்திய அரசு மற்றும் ஏனைய நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியுதவிகளை, பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்களும் இத்துறையினால் வழங்கப்படுகின்றன.

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

41. தணிக்கை அறிக்கையின்மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக் கையாடல், பொது மக்களின் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள், மாதாந்திர கால முறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள்மூலம் தொடர் நடவடிக்கையாக அரசுக்கும், நிர்வாகத் துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

42. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, மெய்யான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் கைவிடப்படுகின்றன. மேலும், தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு

[2016 செப்டம்பர் 2

உடனடி தீர்வு காணப்படுகிறது. நிறுவனங்கள் தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், அத்தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

43. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர் நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர் நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 84 உயர் நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 2,445 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவெடுக்கப்பட்டன.

44. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டும், உயர் நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 8 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 407 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள்மீது மாவட்ட உயர் நிலைக் குழுக்களால் முடிவெடுக்கப்பட்டன.

45. சென்னை நீங்கலாக உள்ள பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான மாநில அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரைத் தலைவராக கொண்டும், மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 31 உயர் நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 29,336 தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவெடுக்கப்பட்டன.

சிறப்புப் பணிகள்

46. வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

2016 செப்டம்பர் 2]

(i) உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல்/வழங்கல்

47. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31-7-2016 அன்றுவரை 32,275 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தாங்கள் உயிருடன் இருப்பதற்கான வாழ்வுச் சான்றிதழ் அளித்து, நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

48. உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் ஒன்று இயங்கி வருகிறது.

(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்

49. அரசாணை நிலை எண் 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-5-1999-ன்படி, மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1-8-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2015-2016 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜூலை மாதம் வரை மருத்துவ நலத் திட்டத்தில் 585 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, ரூ.176.83 இலட்சமும், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில் 159 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.62.46 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

[2016 செப்டம்பர் 2

(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்

50. அரசாணை நிலை எண் 23, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை, நாள் 15-3-2013-ன்படி, மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 1-4.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. 2015-2016 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜுலை மாதம் வரை மருத்துவ நலத் திட்டத்தில் 130 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.27.83 இலட்சமும், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில் 54 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.18.90 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(v) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

51. அரசாணை நிலை எண் 260 நிதி (ஓ.கு.தீ)த் துறை, நாள் 15-10-2015-ன்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கையினை மேற்கொண்டு சரியான முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்து வருகிறார்.

(vi) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

52. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் உள்ள இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் நிதியாண்டில் 18 கோடி ரூபாய் இதற்கென அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் ஒதுக்கீட்டுத் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

(vii) அறக்கட்டளைகளின் நிருவாகம்

53. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1-4-1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். இதன்படி, இத்தகைய அறக்கட்டளைகளை அரசே ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை செயல்படுத்துகிறது. இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளர் என்ற நிலையில் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் 15.20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அரசு அறக்கட்டளைகளும், 25.12 கோடி ரூபாய் மதிப்புள்ள 875 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2015-2016 ஆம் நிதியாண்டில் அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக 427 அறக்கட்டளைகளுக்கு 24.25 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மின் ஆளுகை முயற்சிகள்

54. எளிய மற்றும் வெளிப்படையான முறையில் மின்னணுமூலம் மாதாந்திர ஓய்வூதியம் 32,275 உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்குவதற்கு மென்பொருளை உருவாக்க 24.80 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு தற்போது இப்பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

55. தணிக்கைத் தொடர்பான திட்டமிடுதல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் ஆகிய முழுமையான செயல்பாடுகளை மேலாண்மை செய்ய வழிவகுக்கும் தணிக்கை தகவல் மேலாண்மை செயலாக்கத் திட்டம் (Audit Information Management System) *விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இரண்டு கோடி ரூபாய் செலவினத்தில் இத்திட்டம் இருகட்டங்களாக அதாவது 2015-2016 மற்றும் 2016-2017 ஆம் நிதியாண்டுகளில் செயல்படுத்தப்படும். முதற்கட்டப் பணிக்காக அரசாணை நிலை எண் 291, நிதி (கூ.த)த் துறை, நாள் 3-11-2015-ன்வாயிலாக அரசு 2015-2016 ஆம் ஆண்டிற்காக*

[2016 செப்டம்பர் 2

ரூபாய் ஒரு கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனை செயல்படுத்த ஒருங்கிணைப்பு துறையாக கூட்டுறவு தணிக்கைத் துறை நியமிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை நிலை

56. 2013-2014 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டுக்கான ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின், 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை 31-10-2016-க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் 2015-2016 ஆம் ஆண்டுக்கான தணிக்கையை டிசம்பர் 2016-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை நிலை

57. அண்ணா பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தவிர ஏனைய 20 பல்கலைக்கழகங்கள் மற்றும் விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலகக் குழுமங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களின் 2013-2014 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டுக்கான 12 பல்கலைக்கழங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய பல்வகை நிறுவனங்கள் மற்றும் 11 பல்கலைக்கழங்களின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31-10-2016-க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் 2015-2016 ஆம் ஆண்டிற்கான தணிக்கையை டிசம்பர் 2016-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தணிக்கைக் கட்டணம்

58. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீத தணிக்கைச் செலவினம்

2016 செப்டம்பர் 2]

தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜூலை மாதம் வரை 1119.86 இலட்சம் ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மிகைக் கொடுப்பு பிடித்தம்

59. நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் சார்பான தணிக்கைத் தடைகளை நீக்கும் பொருட்டு 2015-2016 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜூலை மாதம் வரையிலான காலத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட 14.31 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு தணிக்கை

60. சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண தள்ளுபடி மற்றும் பிந்தைய கல்வி உதவி தொகை (Post Matric Scholarship) கோரிக்கைகளில் ஏதேனும் முறைகேடு நடைபெற்றுள்ளதா என்பதனைக் கண்டறிவது குறித்து சிறப்புத் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணிகள் முடிவடைந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு தணிக்கைத் துறை

61. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கூட்டுறவுத் துறையின் தனிக்கைப் பிரிவானது, தனியாகப் பிரிக்கப்பட்டு, 17-6-1981 முதல் கூட்டுறவு தணிக்கைத் துறை, தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80-வது பிரிவின்படி, பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

[2016 செப்டம்பர் 2

3. கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும் :

தொடர் எண்	பதிவாளரின் பெயர்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
(i)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	8649
(ii)	கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர்	1401
(iii)	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	306
(iv)	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	
(v)	தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்	932
(vi)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	854
(vii)	மீன் வளத் துறை இயக்குநர்	1284
(viii)	கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் இயக்குநர்	119
(ix)	சர்க்கரைத் துறை ஆணையர்	17
(x)	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	82
(xi)	வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்	122
(xii)	பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநர்	25
(xiii)	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்	171
(xiv)	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர்	55
	மொத்தம்	**14017**

2016 செப்டம்பர் 2]

கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

63. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலை குறிப்பு மற்றும் இலாப நட்ட கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதும் கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதைக் கண்காணிக்க சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை உதவியாக இருந்து வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எதன்பொருட்டு, எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் பெறுவதை உறுதி செய்கிறது.

நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

64. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் தணிக்கையும், இந்திய மைய வங்கியின் பரிந்துரையின்படி 25 கோடி ரூபாய்க்குமேல் வைப்பீட்டுத் தொகைகளைக் கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகளும் பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன்நிகழ் தணிக்கைப் பணிகள் மட்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சட்டமுறை தணிக்கை (Statutory Audit)

65. சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 3.53 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக

[2016 செப்டம்பர் 2

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை வழக்கமான முறையில் மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படை விதி 127-ன் கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127-ன்கீழ், 2015-2016 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட வகையில் பணியாளர்களின் செலவினத் தொகையாக 10.11 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை முன்னேற்ற நிலை

66. கடந்த ஆண்டுகளின் தணிக்கை நிலுவை விவரம் பின்வருமாறு:-

தொடர் எண்	வருடம்	நிலுவையிலுள்ள சங்கங்கள்
(i)	2010-2011	489
(ii)	2011-2012	632
(iii)	2012-2013	784
(iv)	2013-2014	946
(v)	2014-2015	1209

67. நிலுவையிலுள்ள மேற்கண்ட கூட்டுறவு சங்கங்களின் தணிக்கைக்குரிய பதிவேடுகள் நீதிமன்றம், விசாரணை அலுவலர் மற்றும் வணிக குற்றப் புலனாய்வு துறையினரிடம் உள்ளதால் மேற்கண்ட சங்கங்களின் தணிக்கையை முடிக்க இயலாத நிலை உள்ளது. இப்பதிவேடுகள் கிடைக்கப்பெற்றவுடன் தணிக்கை முடிக்கப்படும்

68. 2015-2016 ஆம் நிதியாண்டிற்கான தணிக்கையினை பொறுத்தவரை மொத்தமுள்ள 14017 நிறுவனங்களில் 31-7-2016 வரையிலான காலத்தில் 3925 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10092 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை டிசம்பர் 2016-க்குள் முடிக்கப்படும்.

2016 செப்டம்பர் 2]

சிறப்பு அறிக்கைகள்

69. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 36.27 கோடி ரூபாய் அளவிலான 353 சிறப்பு அறிக்கைகளும் இந்நிதியாண்டில் 31-7-2016 வரையிலான காலத்தில் 4.86 கோடி ரூபாய் அளவிலான 125 சிறப்பு அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

மின் ஆளுகை வாயிலாக தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு (Audit Information Management System)

70. மின் ஆளுகை வாயிலாக "தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு" திட்டத்தினை கூட்டுறவு தணிக்கைத் துறை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் இருகட்டங்களாக அதாவது 2015-2016 மற்றும் 2016-2017 ஆம் நிதியாண்டுகளில் செயல்படுத்த இரண்டு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணிகளுக்காக அரசாணை நிலை எண் 291, நிதி (கூத)த் துறை, நாள் 3-11-2015-ல் அரசால், 2015-2016 ஆம் நிதியாண்டிற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த முயற்சியானது தணிக்கையாளர்களை கணினி பயன்பாட்டுடன்கூடிய தணிக்கைப் பணி மேற்கொள்ள ஏதுவான சூழலை உருவாக்கும். இதனை செயல்படுத்தும்பொருட்டு மென்பொருள் வடிவமைப்பதற்கு தேவையான செயல்முறை திட்டமானது "தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன" முகவரிடம் ஒப்படைக்கப்பட்டு இப்பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

இரண்டு புதிய கூட்டுறவு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்குதல்

71. இத்துறையின் மூலமாக தணிக்கைப் பணிகளைச் சிறப்பாக செய்யும் வகையில் புதியதாக சேலம் மற்றும் விழுப்புரத்தினை

[2016 செப்டம்பர் 2

தலைமையிடமாகக் கொண்டு இணை இயக்குநர் பணியிடத்துடன்கூடிய புதிய இரண்டு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்க அரசாணை நிலை எண் 42, நிதி (கூத)த் துறை நாள் 10-2-2016-ன்படி அரசால் ஆணையிடப்பட்டு மேற்படி இரண்டு மண்டல அலுவலகங்கள் 1-3-2016 முதல் செயல்பட்டு வருகின்றன.

தணிக்கையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

72. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரத்தை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், புத்தாக்கப் பயிற்சிகளும் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகின்றன

சிறு சேமிப்புத் துறை

73. சிறுசேமிப்பு, பொதுமக்களிடம் உபரியாக உள்ள பணத்தினை சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிக பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்பக் கிடைக்க கூடியதாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் 50 சதவீதம், அந்தந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நீண்டகாலக் கடனாக 1-4-2016 முதல் 8.8 சதவீத ஆண்டு வட்டி விகிதம் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

சிறுசேமிப்புத் திட்டங்கள்

74. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 1-4-2016 முதல் மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2016 முதல் வட்டி விகிதங்கள் (%)
(i)	அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA)	4.0	4.0	4.0
(ii)	**கால வைப்பீடு**			
	1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.4	8.4	7.1
	2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.4	8.4	7.2
	3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.4	8.4	7.4
	5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.5	8.5	7.9

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2016 முதல் வட்டி விகிதங்கள் (%)
(iii)	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD 5 ஆண்டுகள்)	8.4	8.4	7.4
(iv)	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS- 5 ஆண்டுகள்)	9.2	9.3	8.6
(v)	அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS)	8.4 (5 ஆண்டுகள்)	8.4 (5 ஆண்டுகள்)	7.8 (5 ஆண்டுகள்)
(vi)	தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC-VIII வது வெளியீடு)	8.5 (5 ஆண்டுகள்)	8.5 (5 ஆண்டுகள்)	8.1 (5 ஆண்டுகள்)
(vii)	10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC IX வது வெளியீடு)	8.8	8.8	20.12.2015 முதல் திட்டம் நிறுத்தப்பட்டது

2016 செப்டம்பர் 2]

தொடர் எண்	திட்ட விவரம்	1-4-2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%)	1-4-2016 முதல் வட்டி விகிதங்கள் (%)
(viii)	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்/பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF -15 ஆண்டுகள்)	8.7 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ. 1.5 இலட்சம்)	8.7 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்)	8.1 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்)
(ix)	கிசான் விகாஸ் பத்திரம் (KVP)	8.7 (100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்) (19.11.2014 முதல்)	8.7 (100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்)	7.8 (110 மாதங்களில் முதிர்வடையும்)
(x)	சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம் (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்)	9.1	9.2	8.6

[2016 செப்டம்பர் 2

செல்வமகள் சேமிப்புத் திட்டம்

75. மத்திய அரசு, செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற சேமிப்புத் திட்டத்தை குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக 3-12-2014 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான வட்டி விகிதம், 1-4-2016 முதல் 8.6 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டுக்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

பொன் மகன் பொது வைப்பு நிதி

76. பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை அடுத்து, ஆண் குழந்தைகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின், பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் (PPF), 4-9-2015 முதல் இந்திய அஞ்சல் துறைமூலம், 'பொன் மகன் பொதுவைப்பு நிதி' என பெயரிடப்பட்டு துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் ஓர் ஆண்டில் 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். இத்திட்டத்திற்கு 1-4-2016 முதல் வட்டி விகிதம் 8.1 சதவீதமாக உள்ளது.

சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

77. 2005-2006 முதல் 2015-2016 வரையிலான நிதியாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் வருமாறு:-

2016 செப்டம்பர் 2]

ரூபாய் கோடியில்

தொடர் எண்	ஆண்டு	நிகர இலக்கு	மொத்த வசூல்	நிகர வசூல்
(i)	2005-2006	5000	12455.75	5594.13
(ii)	2006-2007	5700	10158.54	2637.25
(iii)	2007-2008	--	7791.11	-965.98
(iv)	2008-2009	--	8486.64	- 1216.73
(v)	2009-2010	--	12113.39	1539.39
(vi)	2010-2011	--	13414.56	516.32
(vii)	2011-2012	--	10607.50	-2100.74
(viii)	2012-2013	--	9797.05	-1506.83
(ix)	2013-2014	--	9624.19	-730.78
(x)	2014-2015	--	10936.37	-1084.12
(xi)	2015-2016	--	17259.82	1945.41

78. 2015-2016 ஆம் நிதி ஆண்டில் சிறுசேமிப்பு வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது. தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப் பேணுவதிலும் சிறுசேமிப்பு இயக்குநரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களை, பொது மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

முகவரமைப்புக்கான மத்திய அரசின் தரகுத் தொகை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகை

79. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும்

[2016 செப்டம்பர் 2

முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 27,075 முகவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, 1-12-2011 முதல் அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதங்களில் மத்திய மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:-

தொடர் எண்	முகவரமைப்பு வகை	சிறுசேமிப்புத் திட்டம்	சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை	மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1-12-2011 முதல்	மாநில அரசின் ஊக்கத் தொகை 31-3-2012 வரை
அ.	நிலைப்–படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம்	அஞ்சலக மாத வருவாய் திட்டம் (POMIS), தேசிய சேமிப்பு பத்திரம் (NSC), அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1, 2, 3 மற்றும் 5 ஆண்டுகள்) (POTD)	6266	0.5 %	0.5 %
		கிசான் விகாஸ் பத்திரம் (KVP) (19.11.2014 முதல் இந்திய அரசால் மீண்டும் அறிமுகப்–படுத்தப்பட்டது)		15-7-2015 முதல் 0.5% லிருந்து 1% ஆக உயர்த்தப்–பட்டுள்ளது	

2016 செப்டம்பர் 2]

தொடர் எண்	முகவரமைப்பு வகை	சிறுசேமிப்புத் திட்டம்	சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை	மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல்	மாநில அரசின் ஊக்கத் தொகை 31.3.2012 வரை
ஆ.	மகளிர் முகவர் திட்டம் (MPKBY)	அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் (PORD)	20603	4%	2%
இ.	அனுமதி–யளிக்கப்பட்ட முகவர்களின் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் / பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF)	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் (PPF)	206	--	--
	மொத்தம்		27,075		

80. மேற்கண்டவற்றில் மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு 31-3-2012 வரையில் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க மாநில அரசு அனுமதித்துள்ளது.

[2016 செப்டம்பர் 2

விளம்பரம்

81. பொது மக்களிடையே, சிறுசேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்டங்களில் ஒன்றிய அளவில் நாடகங்களை நடத்தியும் அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் மாவட்ட அளவில் சிறுசேமிப்பு அரங்கு அமைக்கப்பட்டும், சென்னையில் உள்ள வர்த்தக கண்காட்சிகளில் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

வெகுமதிகள்

82. சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் "திறமையான மகளிர் முகவர்கள்" (MPKBY) மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் நிலை முகவர்கள் (SAS) மற்றும் சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டக் குழும தலைவர்கள் (PRSS) ஆகியோருக்கு வெகுமதிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

83. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னனுத் தகவல் செயலாக்க உபகரணங்கள்மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவுத் திட்டமிடும் நோக்குடன், 1971 ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னனு தகவல் செயலாக்க உபகரணங்களைப் பயன்படுத்தி, அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:-

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்

(ii) இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாள்களுக்கு முகப்புத் தாள்கள் அச்சடித்தல்

2016 செப்டம்பர் 2]

(iii) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

(iv) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்

தேர்வுப் பணிகள்

84. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

85. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் கீழ்க்கண்ட தேர்வுகளின் முடிவுகளைத் தொகுக்கும் பணியினை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வி ஆண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:-

தேர்வுப் பணிகள்	**மார்ச் 2015**	**சிறப்பு துணைத் தேர்வு 2015**	**அக்டோபர் 2015**	**மொத்தம்**
மேல்நிலைப் பள்ளித் தேர்வு	843044	68941	33694	945679
பத்தாம் வகுப்பு தேர்வு	1073011	64427	36527	1173965
எட்டாம் வகுப்பு தேர்வு	16531			16531
ஆசிரியர் கல்வி பட்டயப்படிப்பு தேர்வு	38095			38095
தொழில்நுட்பத் தேர்வு	13420			13420
பெருமொத்தம்	**1984101**	**133368**	**70221**	**2187690**

[2016 செப்டம்பர் 2

விடைத்தாள்களுக்கு முகப்புத்தாள் அச்சடித்தல்

86. உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத் தாள்களை அச்சிடும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மார்ச்/ஏப்ரல் 2016 உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான 1.413 கோடி முகப்புத் தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக அரசு ரூபாய் 84,65,040/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட விவரங்களை தொகுத்து பராமய்த்தல்

87. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள்/நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம் சார்ந்த தகவல்கள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலக் கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத் துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டப் பணிகள் 2013-2014 நிதியாண்டிற்ருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 4,44,639 பணியாளர்களுக்கு கீழ் கண்டவாறு பங்களிப்பு ஓய்வூதிய குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

	துறைகள்	இதுவரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்
(i)	அரசுப் பணியாளர்கள்	3,26,151
(ii)	அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம்/நகராட்சிப் பள்ளிகளின் பணியாளர்கள்	91,513
(iii)	உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள்	26,833
(iv)	அனைத்திந்தியப் பணி அலுவலர்கள்	142
	மொத்தம்	**4,44,639**

2016 செப்டம்பர் 2]

88. அரசுப் பணியாளர்கள்/அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள்/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களாகிய 3,49,687 சந்தாதாரர்களுக்கு, 2014-2015 ஆம் ஆண்டிற்கான கணக்குத் தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர சந்தாதாரர்களுக்கும் 2014-2015 ஆம் ஆண்டுக்கான கணக்குத் தாள்கள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

89. 2015-2016 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான கணக்கு விவர சீட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டக் கணக்கு விவர சீட்டுகளும் (Account Slip) விரைவில் இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி

90. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதியை பராமரிக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-7-2015-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் இதுநாள் வரை 1,82,747 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களிடமிருந்தும் ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. வரவினப் பட்டியல்கள் மாதந்தோறும் அனைத்து மாவட்ட கருவூலங்களிலிருந்து பெறப்பட்டு தகவல் பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2016 செப்டம்பர் 2

அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

91. அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன், பல்வேறு சட்டவரையறைக்கு உட்பட்ட வாரியங்கள் (Statutory Boards) *மற்றும் சட்டவரையறைக்கு உட்படாத* (Non-Statutory) *நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:-*

சட்டப்படியான நிறுவனங்களின் தணிக்கை

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு
(i)	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2014-2015
(ii)	தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்	2014-2015
(iii)	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	2014-2015
(iv)	சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	2014-2015
(v)	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்	2014-2015

92. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்படியான வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

2016 செப்டம்பர் 2]

சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை

93. கீழ்க்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:-

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை / நிறுவனங்கள்
(i)	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்	96,740
(ii)	வேளாண்மை விரிவாக்க மையங்கள்	874
(iii)	எடைகள் மற்றும் அளவைகள் நிறுவனங்கள்	311
(iv)	ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள்	685

94. இத்துடன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நல வாரியம் மற்றும் நாட்டுப்புற கலைஞர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம், ஏனைய 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் ஏனைய பல்வகை நிறுவனங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தணிக்கைச் சான்று

95. மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு முடிப்புகளுக்கான கருத்துருக்களுக்கு சான்றளிப்பதுடன் மானிய

[2016 செப்டம்பர் 2

உதவிபெறும் நிறுவனங்களுக்கு, மானியத் தகுதிச் சான்று இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

ஏனைய பணிகள்

96. அரசின் குறிப்பிட்ட ஆணைகளின்படி 14 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள்/ஆய்வாளர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

97. மேலும், கீழ்க்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது:-

(i) நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அனைத்து அரசுப் பணியாளர்களின் ஊதிய நிர்ணய தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகளின் தணிக்கை.

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

98. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் மாதந்தோறும் தொகுக்கப்பட்டு திருத்த நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவருக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தணிக்கைக் கட்டணங்கள்

99. சட்டப்படியான வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கைப் பணியாளர்களின் சம்பளச் செலவின

2016 செப்டம்பர் 2]

அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் 1.5 சதவீதமும் தணிக்கை கட்டணமாக இத்துறையால் வசூலிக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

சிறப்புத் தணிக்கை

100. அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு நெறிமுறைகளுக்கு புறம்பான முறையில் அனுமதிக்கப்பட்ட பணி மேம்பாட்டு ஊதியம் (Career advancement scheme), *வேறு துறையில் பெறப்பட்ட முனைவர்* (Ph.D.) *மற்றும் ஆய்வியல் நிறைஞர்* (M.Phil.) *பட்டத்திற்கு ஊக்க ஊதிய உயர்வு மற்றும் வேறு துறையிலுள்ள இளையோரை காட்டி மூத்தோருக்கு வழங்கிய ஊதிய நிர்ணயத்தினை சிறப்பு தணிக்கை செய்ய இத்துறையிடம் அரசு ஒப்படைத்துள்ளது. இது தொடர்பாக மேற்கண்ட தணிக்கையின் முதற்கட்ட அறிக்கை உயர் கல்வித் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

[2016 செப்டம்பர் 2

இணைப்பு III

(41 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 35—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசுத் துறைகளில் மனித வளத்தினை சிறப்பான முறையில் பயன்படுத்திட, திரு. டி.ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், 1976-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஆறாம் நாள் பொதுத் துறையிலிருந்து பிரித்தெடுத்து, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை என்ற சிறந்த துறையை உருவாக்கியது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது:-

(i) *பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை;*

(ii) *பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.*

இத்துறையின் பணிகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:-

(அ) அறிவுரை வழங்கும் பணிகள்

(ஆ) சட்டரீதியான பணிகள்

(இ) நிருவாகப் பணிகள்

மனிதவள மேம்பாட்டின் முக்கியமான எல்லாப் பணிகளையும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை சிறப்பான முறையில் கவனித்து வருகின்றது. இத்துறை, முக்கிய பணிகளான பணியாளர்களை நியமித்தல், பயிற்சியளித்தல், ஊக்குவித்தல், பதவி

2016 செப்டம்பர் 2]

உயர்வு வழங்குதல், தலைமைச் செயலகம் மற்றும் இதர துறைகளின் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை கவனித்தல் ஆகியவற்றில் தனது சிறப்பான பணியினை செயல்படுத்தி வருகிறது.

பணியாளர் மேலாண்மை என்பது மாற்றத்திற்குட்பட்டதாக இருப்பதால் அதை நிகழ்கால தேவைக்கேற்ப தரம் உயர்த்துவது அவசியம். பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பணியாளர் எனும் முக்கிய மூலாதாரத்தைச் செறிவாக்கி, அவர்கள், தத்தம் பணியை சூழல்களுக்கேற்பவும், மாற்றங்களுக்கேற்பவும் செயலாற்றச் செய்கிறது.

இவற்றோடு, தலைமைச் செயலக அலுவல்கள் குறித்த நடவடிக்கைகள், அரசுப் பணியாளர் நலன் ஆகியவற்றில் இத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

இத்துறை ஆற்றிவரும் பல்வேறு பணிகள் கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளன:-

அ. அறிவுரை வழங்கும் பணிகள்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் இனங்களில் தலைமைச் செயலக துறைகளுக்கு அறிவுரை வழங்கும் ஒரு துறையாக விளங்குகிறது:-

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள், தலைமைச் செயலகப் பணியின் கீழ்வரும் பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு தயார் செய்தல், அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.

ii. அரசுப் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல், தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாக சிறப்பு-பொது ஆகிய விதிகளைத் தளர்த்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

iii. அடிப்படை விதிகள், விதிக் கூறுகள் ஆகியவற்றிற்கு தெளிவுரைகள் வழங்குதல்.

[2016 செப்டம்பர் 2

iv. *முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை விதிக் கூறுகளின்படி ஆய்வு செய்தல்.*

v. *வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதியை அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 'இணைக் கல்வி நிர்ணயப் பரிசீலிப்புக் குழுவின்' பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடுதல் போன்றவையாகும்.*

ஆ. சட்டரீதியான பணிகள்

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன:-

1. மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணி விதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக):—

i. *தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதிகள் (பகுதி-I மற்றும்-II).*

ii. *தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.*

iii. *தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.*

iv. *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்.*

v. *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.*

vi. *தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்.*

vii. *தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்.*

viii. *தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் - இனம் XXII.*

2016 செப்டம்பர் 2]

2. தமிழ்நாடு தலைமைச் செயலகத்திற்கான குறிப்பிட்ட பணி விதிகள்:–

i. *தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்.*

ii. *தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள் - இனம்* XII *மற்றும்* XII-A

iii. *தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.*

3. பிற நிறுவனங்கள் தொடர்பான விதிகள்:–

i. *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.*

ii. *தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005.*

4. அரசு அலுவல்கள்:–

இத்துறையினால் தலைமைச் செயலக அளவில், தமிழ்நாடு அரசின் அலுவல்கள் குறித்த பின்வரும் விதிகளும் நிருவகிக்கப்படுகின்றன:-

i. *தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;*

ii. *அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.*

இ. நிருவாகப் பணிகள்

இத்துறையினால் பின்வரும் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

i. *தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் கீழ்வரும்* (One Unit System) *அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.*

ii. *பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் கூட்டு மன்றக் கூட்டங்களை நடத்துதல்.*

[2016 செப்டம்பர் 2

iii. *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆகியவற்றின் பணியாளர் தொடர்பான நிருவாகப் பணிகள்.*

ஈ. இதரப் பணிகள்

1. மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு மற்றும் மைய அரசு நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2. பயிற்சியளித்தல்:—

i. *பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் களப்பணி அளவிலான பணியாளர்களுக்குரிய பயிற்சியும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மூலமாக சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.*

ii. *முதுநிலை/உயர்நிலை அளவிலான அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிகள் அளித்தல்.*

iii. *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்குத் தலைமைச் செயலகத்தின் அன்றாட செயல்பாடுகள் குறித்த சிறப்புப் பயிற்சி.*

3. இத்துறையின் கட்டுப்பாட்டில் பின்வரும் இயக்குநரகங்கள், அரசமைப்பின்கீழ் செயல்படும் அமைப்புகள், அவை சம்பந்தமான நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:—

i. *ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்.*

ii. *ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்*

iii. *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.*

iv. *தமிழ்நாடு தகவல் ஆணையம்.*

v. *அண்ணா மேலாண்மை நிலையம்.*

vi. *பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்.*

2016 செப்டம்பர் 2]

vii. 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்.

viii. அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை.

ix.. குடிமைப் பணிகள் பயிற்சி மையம், மதுரை மற்றும் கோயம்புத்தூர்.

x. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.

4. அரசுப் பணியாளர் நலன்

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் ஒட்டுமொத்த நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை இந்த அரசு மிக முக்கியமெனக் கருதுகிறது. அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் இனிமையான, இணக்கமான சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கையை உறுதி செய்கிறது.

அரசுப் பணியாளர்களுக்கான ஊதியம், பணிவரன்முறை போன்ற கோரிக்கைகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் குறித்த காலத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

5. மின் ஆளுகை

மின் ஆளுகை என்பது அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும், நடவடிக்கைகளும் எளிதாகவும், திறமையாகவும், வெளிப்படையான தன்மையுடனும் மக்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் முறை ஆகும். தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நிருவகிக்கப்படும் விதிகள் மற்றும் சட்டங்கள் அரசு வலைதளம் www.tn.gov.in-ல் வெளியிடப்பட்டு, வெளிப்படையான மற்றும் திறமையான ஆளுகைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்துறையினால் 2007 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட அரசு நிலை ஆணைகளும், இதர முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஆணைகளும் மின்னணுத் தொகுப்பில் (Electronic Compedium) தலைமைச் செயலக குறும்பரப்பு வலைதளத்தில் 'http://parserver1/par/gos/default.htm' வெளியிடப்பட்டுள்ளன. மின்னணுக் கோப்பு கையாளும் முறையின்கீழ் [Electronic File Processing System (EFPS)],

கணினி மயமாக்கப்பட்ட அஞ்சல் பகிர்வு முறை, தன் பதிவேடு பதிவு செய்தல்/கண்காணித்தல் ஆகியவை தலைமைச் செயலகத் துறைகளில் தேசிய தகவலியல் மையத்தின் மூலமாக (NIC) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய நடைமுறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பணியாளர் தகவல் முறையில் (Personnel Information System-PINFOSYS) தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அனைத்து துறைகளின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரது பணி தொடர்பான விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6. தற்போது நடைமுறையிலுள்ள அரசின் பல்வேறு சேவைகளை எளிமைப்படுத்துதல்

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால், 7-8-2014 அன்று சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசுத் துறைகளின் வழியாக மக்களுக்கு ஆற்றும் சேவைகளை விரைவுபடுத்தும் நோக்கோடு, பல்வேறு துறைகளினால் அளிக்கப்படும் 25 சேவைகள் கண்டறியப்படுவதற்கும், தொடர்புடைய துறைகளுடன் கலந்து ஆலோசித்து அவற்றை எளிமைப்படுத்தி முறைப்படுத்தவும் பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட 381 ஆலோசனைகள், தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதன் தொடர் நடவடிக்கை, ஒவ்வொரு துறையிலும் அமைக்கப்பட்ட மூன்று நபர்கள் குழுவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகம் சென்னை, பார்க் டவுன், வ.உ.சி. நகரில் இயங்கி வருகிறது.

அ. அமைப்பும் பணிகளும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளைச் சுயமாகவும், நேர்மையாகவும், பாகுபாடின்றியும் செயல்படுத்தும் வகையில், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு

2016 செப்டம்பர் 2]

உறுப்பினர்களைக் கொண்டதாகும். இத்தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ன்படி கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவலக பணிகளை மேற்கொள்கிறது:-

i. இத்தேர்வாணையம், முதன்மைப் பணியான பணியாளர்களைத் தேர்வு செய்யும் முகமையாகச் செயல்படுதல்.

ii. பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

iii. அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துதல்.

iv. டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாக நடத்துதல்.

ஆ. தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய சீர்திருத்தங்கள்

இத்தேர்வாணையம் தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்திடவும், பணி நியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:-

i. தேர்வாணையம் ஒவ்வொரு ஆண்டும் போட்டித் தேர்வுகளுக்கான நேரடி தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே

[2016 செப்டம்பர் 2

வெளியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு தங்களை முன்னதாக திட்டமிட்டு தயார் செய்து கொள்ளலாம்.

ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும், பயன்பாட்டிற்கு எளிதாக உள்ளவாறு இணையதளம் வழியே விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

iii. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் கையொப்பம் மற்றும் புகைப்படத்துடன் நிரந்தரமாக பதிவு செய்யும் முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, விண்ணப்பதாரர்கள் தொடர்பான நிரந்தர தரவுதளம் பராமரிக்கப்படுகிறது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

iv. தேர்வுக்கூடங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அனைத்துத் தேர்வுக்கூடங்கள்/அறைகள் இணைய ஒளிப்பதிவு கருவிகளின் வழியாக கண்காணிக்கப்படுகின்றன.

v. மாற்றுத் திறனாளிகளின் வசதியினை கருத்தில் கொண்டு அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் அவர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், தேவைப்படின் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

vi தொழில்நுட்பப் பதவிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகள், முறைகேடுகள் ஏதுமின்றி நேர்மையாகவும், விரைவாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட தேர்வாணையம் கணினிவழி தேர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

vii. தேர்வு முடிவடைந்த பின்னர் கொள்குறி வகையைச் சார்ந்த தேர்வுகளுக்கான தற்காலிக விடைகள் உடனடியாக தேர்வாணையத்தின் இணையதளத்தில்

வெளியிடப்படும். தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் கோரிக்கை அல்லது மறுப்பு இருப்பின் அது குறித்த கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது,

viii. தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களின் விரிவான விடை எழுதுதல் தொடர்பான விடைத்தாள் நகலினை தேர்வாணையத்திலேயே பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. இத்தகைய முறை தேர்வாணையத்தின் நடவடிக்கைகளின் வெளிப்படைத் தன்மையினை உறுதிப் படுத்துகிறது.

ix. கடந்த பிப்ரவரி 2012 முதல் தேர்வாணையம், பணி மற்றும் அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கலந்தாய்வு முறையில் காலிப் பணியிடம் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.

x. துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களுக்கு ஒற்றைச் சாளர முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தி செயல்படுத்துகிறது.

இ. சாதனைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஜனவரி 2015 முதல் மார்ச் 2016 வரை, உதவி மருத்துவ அலுவலர் தேர்வு (83 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-I) (74 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-II) (1,241 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி-II-அ) (1,863 காலிப் பணியிடங்கள்), கிராம நிருவாக அலுவலர் தேர்வு (813 காலிப் பணியிடங்கள்), உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் தேர்வு (270 காலிப் பணியிடங்கள்), தாய், சேய் நல அலுவலர் தேர்வு (89 காலிப் பணியிடங்கள்), உதவி வேளாண் அலுவலர் தேர்வு (417 காலிப் பணியிடங்கள்), நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர் (சிவில்) தேர்வு (213 காலிப் பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளை நடத்தியுள்ளது.

[2016 செப்டம்பர் 2

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடந்த மே 2011 முதல் 22-8-2016 வரை பல்வேறு துறைகளுக்கான 58,553 காலிப் பணியிடங்களுக்கான இறுதி முடிவினை வெளியிட்டுள்ளது.

ஈ. 2016–2017 ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத்திட்ட ஆண்டு அட்டவணை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 29-1-2016 அன்று 2016-2017 ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணையை வெளியிட்டுள்ளது.

உ. பொது

மாநில சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கென ஆண்டறிக்கையை ஆணையம் தயார் செய்கிறது.

3. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005

2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள தகவலை குடிமக்கள் பெறுவதையும், பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படையான தன்மையையும், பொறுப்புடைமையை மேம்படுத்துவதையும் மற்றும் ஊழலைத் தடுத்து நிறுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

அ. சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், விரிவான பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. இச்சட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்துத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், உரிய அரசுகளினால் நேரடியாக அல்லது மறைமுகமாக கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுகின்ற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட சொந்தமாக அமைக்கப்பட்ட மற்றும் அதன் கட்டுப்பாட்டின்கீழுள்ள அல்லது கணிசமான நிதியுதவி அளிக்கப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்தும்.

எந்த ஒரு இந்திய குடிமகனும் பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்து வரப்படுவதுமான தகவல் எவ்வடிவில் இருந்தாலும், அவை தாளிலோ அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ அல்லது

2016 செப்டம்பர் 2]

உறுதிச் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளாகவோ, எந்த வடிவத்தில் இருந்தாலும் அந்த வடிவத்தில் தகவலைப் பெற உரிமையுடையவராவார். மேலும், பணியினை, ஆவணங்களை அல்லது பதிவுருக்களை பார்வையிடவும் செய்யலாம்.

ஆ. தானாகவே முன்வந்து வெளிப்படுத்துதல்

தகவல் பெறுவதை எளிதாக்கும் வகையில் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் பதிவுருக்கள் அனைத்தையும் உரியவாறு பட்டியல் வரிசைத் தொகுப்பிலிட்டும், அகர வரிசைத் தொகுப்பில் அட்டவணைப்படுத்தியும் வைத்து வருதல் இச்சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பு, செயற்பணிகள், கடமைகள் மற்றும் இதர விவரங்களையும் வெளியிடுதல் வேண்டும்.

இ. தகவல் பெறும் வழி

பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அவற்றின் ஒவ்வொரு அலுவலகத்திலும் அல்லது அதன் ஒவ்வொரு அலகிலும் பொதுத் தகவல் அலுவலர்களை நியமனம் செய்கின்றது. எந்த ஒரு குடிமகனும் தகவல் கோரி சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலருக்கு தனது வேண்டுகோளை சமர்ப்பித்தால் அப்பொதுத் தகவல் அலுவலரால் 30 நாட்களுக்குள் அதற்கான பதில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, தகவலினை வெளியிடுவதிலிருந்து குறிப்பாக விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர்த்து, பிற இனங்களில் குடிமக்கள் தகவல் பெறலாம். பதில் வழங்கப்படவில்லை என்றாலோ அல்லது விண்ணப்பதாரருக்கு தமக்கு வழங்கப்பட்ட பதிலில் திருப்தியில்லை என்றாலோ உரிய துறையில் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

ஈ. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் கட்டமைப்பு

2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(1)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தமிழ்நாடு அரசினால், தமிழ்நாடு தகவல் ஆணையம் 7-10-2005 அன்று தோற்றுவிக்கப்பட்டது. ஒரு மாநில தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் ஆறு மாநில தகவல் ஆணையர்களைக் கொண்டு தமிழ்நாடு தகவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி, அதற்கு

[2016 செப்டம்பர் 2

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் குறித்தளிக்கப்பட்ட செயற் பணிகளை ஆற்றுதல் ஆகியன ஆணையத்திற்களிக்கப்பட்ட உரிமையாகும். தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை, தேனாம்பேட்டை, தியாகராயர் சாலையில் கதவிலக்கம் எண் 2-ல் உள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் பணிகளை கவனிக்க ஒரு செயலாளர், ஒரு பதிவாளர், ஒரு சட்ட அலுவலர் மற்றும் இதர பணியாளர்கள் உள்ளனர். 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(4)-ன்படி, மாநில தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல் மேலாண்மை, மாநில தலைமைத் தகவல் ஆணையரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

உ. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012

3-9-2012 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ-III) துறையின் அரசாணை (நிலை) எண் 137-ல் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012 அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதில், தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்யப்படும்போது, மனுதாரர்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அவ்வாறு செய்யப்பட்ட மேல்முறையீடுகள் மீது தீர்வு காண்பது குறித்த நடைமுறைகள் ஆகியன அடங்கியுள்ளன.

ஊ. தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு வசதிகள்

காது கேட்கும் திறன் மற்றும் பார்வை குறைபாடு உடையவர்கள், ஆணையத்திற்கு அளிக்கும் எழுத்துப்பூர்வமான வேண்டுகோளின் பேரில் இவ்வாணையத்தின் விசாரணையின்போது அவர்களுக்கு உதவிபுரிய எவர் ஒருவரையும் அழைத்துவர அனுமதிக்கப்படுவர்.

பார்வை குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்பட்டால் அவர்களுக்கு, சென்னை, பூந்தமல்லியில் உள்ள பார்வை குறைபாடுடையவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் மண்டல மையத்தின் உதவியுடன், ஆணையத்தின் முடிவுகள்/ஆணைகளை, பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி அச்சு எழுத்து முறையில் வழங்க வழிவகை

செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே முதல் முறையாக செய்யப்பட்டுள்ள வசதியாகும்.

எ. பொது

இவ்வாணையத்திடம் செய்யப்படும் மேல்முறையீடுகளில் அவர்களது மேல்முறையீடுகள் பெறப்பட்டு அவை பதிவு செய்யப்பட்ட விவரம் குறுந்தகவல் சேவை (SMS) மூலம் பெறும் வசதி இவ்வாணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேல்முறையீடு அல்லது புகார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, வழக்கு விசாரணைகள் பொதுவாக ஆணையத்தின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென வளாகத்தில் மூன்று விசாரணைக் கூடங்கள் உள்ளன. சில சமயங்களில் தொலை தூரங்களில் உள்ள மேல்முறையீட்டாளர்களின் வசதிக்காக வழக்கு விசாரணைகள் மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள காணொலி காட்சி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கென ஆண்டறிக்கையை ஆணையம் தயார் செய்கிறது. ஆணையத்தின் இணையதளத்தில் இவ்வாணையத்திற்கு செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடுகள்/புகார்கள் குறித்த வழக்குப் பட்டியல்கள் மற்றும் ஆணையத்தின் முடிவுகள் குறித்த விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையிலான ஊழல் தடுப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1964 ஆம் ஆண்டு பிப்ரவரியில், மைய விழிப்புப் பணி ஆணையம் மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில் நிருவாகரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படும் ஊழல் குறித்த தனி இனங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான நோக்கங்களாகும்.

இதனைப் பின்பற்றி, மாநில அரசு 1965-ல், மாநில விழிப்புப் பணி ஆணையத்தினை ஏற்படுத்தியது. ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு இயக்குநரகம், மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது.

மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:-

i. பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டார் அல்லது ஊழல் புரிந்துள்ளார் என சாட்டுரைக்கப்படுகின்ற அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளார் எனில் அவர் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii.. ஒரு பொது ஊழியர் தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை/புலனாய்வு மேற்கொள்ளுதல்.

iii. தேவைப்படும் தகவல் மற்றும் புள்ளிவிவரங்களை சேகரித்தல்.

iv. தன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

அ. மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகார வரம்பு

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின்மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது:—

i. தமிழ்நாடு அரசின் அனைத்து பொது / அரசு ஊழியர்கள்.

ii. மாநில அரசின் அனைத்து சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள், நிறுவனங்கள்.

iii. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது ஊழியர்கள்.

2016 செப்டம்பர் 2]

மாநில விழிப்புப் பணி ஆணையம் தனது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கின்றது. இவ்வாண்டறிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு சட்டப்பேரவை முன் வைக்கப்படுகிறது.

ஆ. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

தமிழ்நாட்டின் பொது நிருவாகத்தில் ஊழல் தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள, முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் 1964-ல் உருவாக்கப்பட்டது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது. இவ்வியக்குநரகத்தின் முக்கிய செயல்பாடுகளாவன:

i. மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் உத்தரவின் பேரில் ஊழல் குற்றச்சாட்டுகள், அதன் தொடர்பான நடத்தைகள் ஆகியவற்றின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii. குறிப்பிட்ட புகார்களின் பேரில், கையூட்டு பெறும் பொதுப் பணியாளர் மீது உரிய முறைகளைப் பின்பற்றி தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

iii. பொதுமக்களிடம் இருந்து பொதுப் பணியாளர்கள் குறித்து பெறப்படும் ஊழல் தொடர்பான புகார்களின்மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

iv. லஞ்ச ஊழல் முறைகேடுகளைக் கண்டறிவதற்காக நுண்ணறிவுத் தகவல்கள் சேகரித்து ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன்கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்.

v. இவ்வியக்குநரகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு தெரியப்படுத்துதல்.

கையூட்டு கேட்டு பிடிபடும் பொதுப் பணியாளர்கள் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை அலுவலரால் உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படுவர். இத்தகைய கடுமையான நடவடிக்கை

[2016 செப்டம்பர் 2

மற்ற பொதுப் பணியாளர்கள் தமது பணிகளில் நேர்மையாக செயல்படுவதற்கு வழிவகுக்கும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்துத் துறை தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு மற்றும் அரசு பொது நிறுவனங்கள் கீழ்க்காணும் தகவலை தங்கள் அலுவலகத்தின் தகவல் பலகையில் பார்வையில் படுமாறு வைக்கவேண்டும் என்றும் இதனை இணையதளத்தில் வெளியிடவேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது:

''லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்''

ஊழல் தொடர்பான புகார்களை

இயக்குநர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,

சென்னை—16

என்ற முகவரிக்கு அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறது.

இணையதள முகவரி: www.dvac.tn.gov.in

தொலைபேசி எண்: 22310989 / 22321090 / 22321085

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அனைத்துத் துறை தலைவர்களும் தங்களது துறையில் இரண்டாம் நிலை அதிகாரத்தில் உள்ள அலுவலர்களை கண்காணிப்பு அலுவலராக நியமித்து, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களது துறை அலுவலர்கள்மீது விசாரணை நடத்தவும் அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும், உரிய கால இடைவெளியில் துறையின் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களது அலுவலகத்தில் சந்தேகத்திற்குரிய இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்த இயக்குநரகத்தின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தெரியப்படுத்தவும் ஆண்டுதோறும் சென்னை தீவுத் திடலில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் ஊழல் தடுப்பு மற்றும்

2016 செப்டம்பர் 2]

கண்காணிப்புத் துறையின் சார்பாக அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. ஊழலுக்கு எதிராக தகவல் பலகைகள், பாடல்கள், வீடியோ காட்சிகள் ஒளிபரப்புதல், பொது மக்களை உறுதிமொழி ஏற்க வைத்தல் ஆகிய செயல்பாடுகள் நடைபெறுகின்றன. உயர் அலுவலர்கள், அவ்வளாகத்தில் சுழற்சி முறையில் வருகை தந்து இயக்குநரகத்தின் செயல்பாடுகளை பார்வையாளர்களுக்கு விவரிக்கின்றனர்.

இ. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்

மாநில அரசிலும், நகராட்சி நிருவாக அமைப்புகளிலும் பணிபுரியும் அலுவலர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள் 1955 மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் அடிப்படையில் துறைரீதியாக விசாரணை நடத்த ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயத்திடம் அனுப்பப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த நேர்வுகள் மீதான விசாரணையின் பொருட்டு தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோரவும் அதிகாரங்களை பெற்ற நீதிமுறை சார்புடைய அமைப்பாகும்.

தற்போது சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் ஒழுங்கு நடவடிக்கை ஆணையராகச் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் அதன் விசாரணைக்கு உதவ சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) நியமிக்கப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுகள் மீதான தீர்ப்பாணை/விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு ஒழுங்கு நடவடிக்கை ஆணையரால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கையின் தன்மைக்கு ஏற்ப உரிய ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

5. பயிற்சி

மனித ஆற்றலே அனைத்து ஆற்றல்களிலும் மிக முக்கியம் வாய்ந்ததாகும். முறைப்படுத்தப்பட்ட பயிற்சி என்பது மனித

[2016 செப்டம்பர் 2

ஆற்றல் மேம்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக கடந்த ஆண்டுகளில் மாறிவிட்டது. நிருவாகம் மேம்பட, அரசு பணியாளர்களின் செயல்திறன் மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொதுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

அ. தலைமைச் செயலக பயிற்சி நிலையம்

இப்பயிற்சி நிலையத்தில், தலைமைச் செயலக துறைகளில் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு பொது நிருவாக விதிமுறைகள், நிதி நிருவாக விதிமுறைகள் குறித்து 30 வேலை நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 90 அணிகளுக்கு தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளில் தலைமைச் செயலகத்திலுள்ள 1,300 உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு அவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நெறிகள் குறித்து ஒரு ‘புத்தாக்கப் பயிற்சி’ இந்நிலையத்தின்மூலம் அளிக்க உத்தேசிக்கப்பட்டு, 26 அணிகளில் ஒவ்வொரு அணியிலும் 50 உதவிப் பிரிவு அலுவலர் வீதம் பயிற்சியளிக்கும் வகையில் மே 2016 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஆ. அண்ணா மேலாண்மை நிலையம்

அண்ணா மேலாண்மை நிலையம் தமிழக அரசின் மாநில நிருவாகப் பயிற்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் அமைச்சுப் பணியாளர்கள் முதல் அகில இந்தியப் பணி அதிகாரிகள் வரை அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களுக்கும் பயிற்சி தரும் முதன்மை பயிற்சி நிறுவனமாக விளங்குகிறது.

2015-2016 ஆம் ஆண்டில் 31-3-2016 முடிய அண்ணா மேலாண்மை நிலையம் 595 பயிற்சி நிகழ்ச்சிகளில் 21,143

2016 செப்டம்பர் 2]

அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்கள்மூலம் அளிக்கப்பட்ட பயிற்சிகளும் இதில் அடங்கும்.

இந்நிலையம், பொது மேலாண்மை குறித்த பயிற்சிகளுடன் சிறப்பு பயிற்சிகளான பேரிடர் மேலாண்மை, மின் ஆளுகை மற்றும் தகவல் தொழில்நுட்பம், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கூறுகள், ஒட்டுமொத்த தர மேலாண்மை, சுகாதாரம் மற்றும் மருத்துவமனை நிருவாகம் போன்ற சிறப்பு பயிற்சிகளை அதிகமாக நடத்தி வருகிறது. மேலும், தேவை அடிப்படையிலான பயிற்சி வகுப்புகள்/பயிற்சி பட்டறைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, குற்ற வழக்கு தொடர்வுத் துறை, வணிக வரித் துறை, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் மத்திய அரசின் வணிக மற்றும் தொழில் அமைச்சகம் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து நிறுவனம் போன்ற பல்வேறு துறைகளின் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையம் தன்னாட்சியுடனும், சுயச்சார்புடனும் விளங்க இதன் நிதி சார்பான கொள்கை முடிவுகளை ஆட்சிமன்றக் குழு எடுத்துவருகிறது. இந்நிலையத்தின் ஆட்சிமன்றக் குழு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. இக்குழு, பயிற்சிப் பொருண்மைகளை வலுவாக்கும் பொருட்டு, துணைத் தலைவராக அரசுத் தலைமைச் செயலாளரையும், பயிற்சி, கல்வி ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த பிற அலுவலர்களையும் மேலாண்மை தொடர்புடைய வல்லுநர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.

பயிற்சி நிகழ்வுகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில் நிலையத்தின் கட்டமைப்பு உயர்த்தப்பட்டு அது தற்போது இயங்கி வரும் 'மகிழம்பூ' கட்டடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 25-5-2005 அன்று திறந்து வைக்கப்பட்டது.

1. 2015–2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்பு பயிற்சிகள்:

i. தமிழ்நாடு சுகாதாரமுறைத் திட்டத்தின் ஆதரவோடு 2008-2009ஆம் ஆண்டு முதல் மக்கள் நல்வாழ்வு மற்றும்

[2016 செப்டம்பர் 2

குடும்ப நலத் துறையின் முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கான "மருத்துவ நிருவாகம்" என்கிற தலைப்பில் 12 நாட்கள் வழங்கப்படும் பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலமாக, தமிழக அரசின் பாராட்டு இந்நிலையத்திற்கு வழங்கப்பட்டது.

ii. மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் நிதி உதவியுடன் 2014 ஆம் ஆண்டில் 27 இந்திய வனப் பணி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு கிடைக்கப் பெற்ற வரவேற்பின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டிலும் இதே பயிற்சியினை அளித்திட மத்திய அரசினால் நிதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 18-1-2016 முதல் 22-1-2016 வரை 24 இந்திய வனப் பணி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

iii. 'முனைப்புப் பயிற்சித் திட்டம்-அனைவருக்கும் பயிற்சி' என்ற திட்டத்தின்கீழ் 2013 ஆம் ஆண்டில் மைய அரசால் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிதியின்மூலம் ஆளுமை மேம்பாடு, மனோபாவ மாற்றம், விதிகள் மற்றும் கட்டுப்பாடு, கணினிப் பயிற்சி ஆகிய பல்வேறு தலைப்புகளில், 31-3-2016 வரை 223 பயிற்சி வகுப்புகளில் 5,775 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது

iv. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவதுபோல் 6 நேரடி நியமன பயிற்சி துணை ஆட்சியர்களுக்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பயிற்சி 2015-2016 ஆம் ஆண்டிலும் அளிக்கப்பட்டது.

v. மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் நிதி உதவியுடன், இந்நிலையம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கோட்பாடுகளை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரப்புவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. 31-3-2016 முடிய 13

2016 செப்டம்பர் 2]

பயிற்சிகள் நடத்தப்பட்டு அதில் கலந்து கொண்ட 629 அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. எஞ்சிய பயிற்சிகள் 2016-2017 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடத்தப்பட இருக்கின்றன.

vi. 2011 ஆம் ஆண்டு தொகுப்பில் இருந்து, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட 9 இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அலுவலர்களின் (தகுதிகாண் பருவத்தினர்) பணித்திறனை அதிகரிக்கும் வகையில், ஒரு மாத கால பணியறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டது. மாவட்ட பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து முழுமையான விவரங்கள் கிடைத்ததால் பயிற்சியாளர்கள் இந்த பயிற்சியினை வெகுவாக விரும்பினார்கள். 2012, 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டு தொகுப்பினைச் சார்ந்த அலுவலர்களுக்கும் இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

vii. தமிழ்நாடு அரசு வெளியிட்ட வருவாய்த் துறையின் அரசாணை (நிலை) எண் 404, நாள் 11-10-2013 மூலம் வருவாய் உதவியாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கு 'பேரிடர் மேலாண்மை' குறித்த பயிற்சி இந்நிலையம் மூலமாக அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில் இப்பயிற்சி பல மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

viii. மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சியினை 2014-2015 ஆம் ஆண்டில் மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மூன்று மாநிலங்களில் தலா ஐந்து மாவட்டங்கள் என முன்னோடித் திட்டமாக நடத்துவதற்கு தேர்வு செய்தது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு வார கால அளவிலான ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. மக்களுடன் நேரடித் தொடர்புள்ள

பணியாளர்களின் பொதுவான ஆளுமைத்திறன் மனப்பாங்கு ஆகியவை குறித்த பொதுவான திறன்களையும், துறை சார்ந்த குறிப்பிட்ட திறன்களையும், ஆளுமையையும் மேம்படுத்தி பொது சேவையின் தரத்தை உயர்த்துவதே இவ்வறிமுகப் பயிற்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் இப்பயிற்சித் திட்டம் அண்ணா மேலாண்மை நிலையத்தால் செயலாக்கப்பட்டது. முதல் பயிற்சி நிகழ்ச்சி 5.1.2015 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. இம்முன்னோடி திட்டத்திற்காக மைய அரசு ரூ.1.80 கோடி சிறப்பு மானிய உதவியினை அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு வழங்கியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையம் 25 அணிகளாக அனைத்து பயிற்சிகளையும் நடத்தி முடித்ததோடு, இம்முன்னோடி திட்டத்தில் 1,000 அரசு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்கினையும் விஞ்சி 1,127 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டில் தேர்ந்து எடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் (கன்னியாகுமரி, தருமபுரி, மதுரை, சேலம் மற்றும் திருச்சி) 350 அலுவலர்களுக்கு 12 நாட்கள் கொண்ட பயிற்சியை வழங்க மைய அரசு ரூ.63.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியது. இதன் முதல் பயிற்சி 26.10.2015-ல் தொடங்கப்பட்டு 31-3-2016 வரையில் 8 பயிற்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ix. பொதுத்தேர்தல்-2016 பணிகளில் ஈடுபட்ட மாநில அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கு 2015 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சி நடத்தப்பட்டது. மேலும், மைய அரசின் பயிற்றுநர்கள்மூலம், மாநில தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட துணைத் தேர்தல் அதிகாரிகள், காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையர்களுக்கும் நான்கு நாட்கள் ‘சிறப்பு பயிற்சி’ இந்நிலையத்தில் ஜனவரி 2016-ல் நடத்தப்பட்டது.

2016 செப்டம்பர் 2]

x. 'நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெற உரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை, புனர்வாழ்வு மற்றும் மீளகுடியேற்ற சட்டம் '2013' என்னும் தலைப்பில் நில நிருவாகத் துறையின் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்காக மூன்று பயிற்சிகள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன.

xi. மத்திய கலால் மற்றும் சுங்கத் துறையைச் சார்ந்த கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி ஆணையர்களுக்கு 'தலைமைப் பண்புகள் மற்றும் அலுவலக நடைமுறைகள்' என்ற தலைப்புகளில் முறையே பயிற்சி அளிக்கப்பட்டது.

xii. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர்களுக்கு 'அலுவலக நடைமுறைகள்' என்ற தலைப்பில் மூன்று நாட்கள் கொண்ட பயிற்சி கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.

xiii. 2015-2016-ல் முதன் முறையாக 'Microsoft Corporation இந்தியா பிரைவேட் லிமிடெட்' என்ற தனியார் நிறுவனத்துடன் சேர்ந்து தமிழக அரசின் அரசு செயலாளர் நிலையிலான அலுவலர்களுக்கு 'தகவல் தொழில் நுட்பத் துறையில் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கான தொழில்நுட்ப பட்டறை' நடத்தப்பட்டது.

xiv. .பட்டு வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு முதன்முறையாக 'அலுவலக நடைமுறைகள்' என்னும் தலைப்பில் பயிற்சி நடத்தப்பட்டது.

xv. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து நகராட்சி அலுவலர்களுக்கு 'மேலாண்மை தகவல் அமைப்பு' குறித்த ஒரு சிறப்பு பட்டறை நடத்தப்பட்டது

xvi. முதன் முறையாக மத்திய அரசின்கீழ் இயங்கும் சென்னையை சார்ந்த உணவக மேலாண்மை பயிற்சி நிலையத்தின் பேராசிரியர்களுக்கு 'மேலாண்மை கொள்கைகள் மற்றும் பணிகள்' என்னும் தலைப்பில்

பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி உணவக மேலாண்மை பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

xvii. சென்னை மாநகராட்சியின் உதவி கல்வி அலுவலர்களுக்கு ‘அலுவலக நடைமுறைகள்’ குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சி சென்னை மாநகராட்சியின் நிதி ஆதரவுடன் நடத்தப்பட்டது.

xviii. சென்னை மாநகராட்சியின்மூலம் மாநகராட்சி அலுவலர்களுக்கு ‘மன அழுத்த நீக்க மேலாண்மை’ பயிற்சி (Stress management) அளிக்கப்பட்டது.

xix. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக துணை ஆட்சியர்களுக்கு ‘கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டம்’ (Abolition of Bonded Labour Act) குறித்த பட்டறைகள் மூன்று அணிகளாக நடத்தப்பட்டது.

xx. சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த பற்றாளர்களுக்கு (Nodal Officers) ‘தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005’ குறித்த பயிற்சி வகுப்புகள் நிலையத்தால் தனியாக நடத்தப்பட்டது.

xxi. நிதி மேலாண்மை மற்றும் கணக்கியல், நவீன சேமிப்பு செயல்முறைகள், தானிய சேமிப்பு மற்றும் பராமரிப்பு, பூச்சி மற்றும் கரையான் போன்றவைகளால் ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்துவது, உணவு தானியங்கள் தரம் மேம்பாடு, பொது நிருவாகம் மற்றும் கட்டுமான மேலாண்மை என்ற தலைப்புகளில் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கு 8 தனிச் சிறப்புடைய பயிற்சிகள் நிலையத்தால் அளிக்கப்பட்டன.

2. மண்டல பயிற்சி நிலையங்கள்

மதுரை, திருச்சி மற்றும் சேலம் மையங்களில் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டதிலிருந்து, குறைந்தபட்சம் ஒரு

2016 செப்டம்பர் 2]

மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு பயிற்சி என்ற அளவில் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்டத்தில் இயங்கும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், அதிகாரிகள் தத்தம் மாவட்டத்திலேயே பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர். 2015-2016 ஆம் ஆண்டில் 31-3-2016 முடிய 168 பயிற்சிகளின்மூலம் 8,685 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்த மண்டல பயிற்சி நிலையங்கள்மூலம் இந்நிலையம் தனது பயிற்சி திட்டங்களை மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்போடு மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டித்துள்ளது.

இ. 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான (A & B Group Officers) *அடிப்படைப் பயிற்சி நிலையம் 'மகிழம்பூ' வளாகத்திற்கு அருகில் இருக்கும் 'காஞ்சி' வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' பாடப் பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில் 15 அணிகளில் 409 அலுவலர்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.*

ஈ. அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்

பட்டியலினத்தைச் சார்ந்த தேர்வர்களுக்காக, குடிமைப் பணித் தேர்வுகளுக்கு பயிற்சியளிக்க முன்தேர்வு பயிற்சி மையம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதைப் போன்றே பிற்படுத்தப்பட்ட-மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த தேர்வர்களை வழி நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி மையம் 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்விரண்டு மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ***'அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்'*** *என்று பெயரிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இயக்குநர், அண்ணா மேலாண்மை*

நிலையம் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அவர்களின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கட்டணமின்றி உண்டி, உறையுள் வசதி அளிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 123, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-III) துறை, நாள் 15-10-2013 மூலம், மாணவ/மாணவியர்களின் பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது, அதற்கான வரம்பினை நீக்கி அவர்களிடம் உணவுக் கட்டணம் வசூலிப்பதை முழுவதுமாக கைவிடுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் இச்சலுகையைப் பெறுவதற்காக பயிற்சியாளர்களது பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/- ஆக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை அரசால் நீக்கப்பட்டு, சமூக நீதி முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

1. முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சி (Preliminary Examination)

ஒவ்வோர் ஆண்டும் நுழைவுத் தேர்வின்மூலம் முதல் நிலைத் தேர்வு பயிற்சிக்கு தகுதிவாய்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வின்மூலம் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் 2016 ஆம் ஆண்டு, முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்க 325 பயிற்சியாளர்கள் (225 - முழுநேரம் தங்கிப் பயிலும் பயிற்சியாளர்கள் + 100-பகுதி நேரப் பயிற்சியாளர்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அரசாணை (நிலை) எண் 149, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-III) துறை, நாள் 19-12-2013-ல் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை 200-ல் இருந்து 225 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, உண்டி, உறையுள் வசதி அதிகரிக்கப்பட்டிருப்பதே இந்தக் கூடுதல் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது. 2011-2012 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்ட ஆட்சியரக அலுவலகங்கள் மூலமாக நுழைவுத் தேர்வுக்கான அறிவுசார் எழுத்து வாசிப்பு (ICR Intelligence Character Reader) விண்ணப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்நுழைவுத் தேர்வுக்கு 2015 ஆம் ஆண்டு 8,914 நபர்கள் விண்ணப்பித்தார்கள். அவர்களில் 5,078 பேர் தேர்வை எதிர்கொண்டார்கள்.

2016 செப்டம்பர் 2]

சேர்க்கைக்கான இடஒதுக்கீடு பின்வருமாறு:

இனம்	முழு நேரம்	பகுதி நேரம்
ஆதி திராவிடர்	92	41
அருந்ததியர்	18	08
பழங்குடியினர்	03	01
மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்	40	18
பிற்படுத்தப்பட்டோர்	54	24
பிற்படுத்தப்பட்டோர் – (முஸ்லிம்)	07	03
மாற்றுத் திறனாளிகள்	07	03
இதர வகுப்பினர்	04	02
மொத்தம்	**225**	**100**

[2016 செப்டம்பர் 2

2. முதன்மைத் தேர்வு பயிற்சி (Main Examination)

ஒவ்வோர் ஆண்டும் முதல் நிலை தேர்வு முடிவுகள் வரப்பெற்றவுடன், வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு சுமார் மூன்று மாத கால தீவிர பயிற்சி (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் பயின்று வெற்றி பெற்ற மாணவர்கள் அல்லாமல் இதர மாணவர்களும் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். 2015-2016 ஆம் ஆண்டில் 225 மாணவ/மாணவியர்களுக்கு குடிமைப் பணித் தேர்வில் முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து அகில இந்திய குடிமைப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 82 தேர்வர்களில் 42 தேர்வர்கள் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் வருமான உச்ச வரம்பின்றி மாதம் ரூ.3,000/- உதவித் தொகை, படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்படுகிறது.

3. மாதிரி ஆளுமைத் தேர்வு

முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்நிலையம் மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்தி வருகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்கு வெகுநாட்கள் முன்னதாக இது நடத்தப்படுகிறது. மேலும், புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு இடைநிகழ்வுச் செலவிற்கு ரூ.2,000/- வழங்கப்படுகிறது.

4. பயிற்சி ஆசிரியர்கள்

இப்பயிற்சி மையத்தில் ஒரு முதல்வர், இரண்டு முழு நேரப் பேராசிரியர்கள் தவிர, 20-க்கும் அதிகமான அழைப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு 23-க்கும் மேற்பட்ட பாடப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் சுமார் 21,000 புத்தகங்கள் கொண்ட நூலகமும், கணினி வசதிகளும் உள்ளன. நடப்பு நிகழ்வுகளில் பயிற்சியாளர்கள் நுணுக்கங்களை நன்கு அறிந்து திறனை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு வாசிப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

5. அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தின் புதிய கட்டடம்

இப்பயிற்சி மையம் இதற்கு முன்பாக 1984 ஆம் ஆண்டு முதல் சென்னை, அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கட்டடத்தில், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. முப்பது ஆண்டு கால பழமையான இக்கட்டடத்தில் பயிற்சியாளர்கள் குறைந்த வசதிகளுடன் பயிற்சி பெற்று வந்தனர்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தற்போது நிலவிவரும் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ளும் வகையிலும், நவீன வசதிகள் கொண்ட ஒரு புதிய பயிற்சி மையம் ஒன்பது மாத காலத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் அருகிலுள்ள 'காஞ்சி' வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடம் ரூ.1014.00 இலட்சம் மதிப்பீட்டில் 50,843 சதுர அடியில் மூன்று தளங்களுடன் அமைந்துள்ளது. மேலும், இக்கட்டடம் குளிர் சாதன வசதியுடன் கூடிய வகுப்பறை, கூட்ட அரங்கு, கணினி அறை, நூலகம், நவீன சமையல் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. அறைகலன்களுடன் கூடிய தங்கும் வசதி 225 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 12.10.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

6. குடிமைப் பணிகள் பயிற்சி மையம் – மதுரை, கோயம்புத்தூர்

சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தை போன்று இந்திய ஆட்சிப் பணிகள்/இந்திய காவல் பணிகளில் சேர விரும்பும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கிராமப்புற மாணவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, 'அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையம்' என்ற பெயரில் புதியதாக இரண்டு பயிற்சி மையங்கள் அரசால் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி மையங்களில் மத்திய தேர்வாணையத்தின் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்விற்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2016 செப்டம்பர் 2

உ. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

தமிழக அரசின் அனைத்துத் துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர்களுக்கும்/உதவியாளர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியை வழங்கும் பொருட்டு பவானிசாகரில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள முதல்வரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அது தவிர ஐந்து துணை ஆட்சியர்கள், கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஐந்து கணக்கு அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த இரண்டு உதவி இயக்குநர்கள் ஆகியோர் இந்நிலையத்தில் பயிற்சியளிக்க விரிவுரையாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். கணினி பாடத்தில் பயிற்சியளிக்க கணினி விரிவுரையாளர் மற்றும் பகுப்பாய்வர் பணியிடம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையைச் சார்ந்த ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணி மாறுதல் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பயிற்சியாளர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு பயிற்சி அளித்து வருகிறார்.

1. பயிற்சி நிகழ்வுகள்

i. *இந்நிலையம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை வெவ்வேறு பிரிவுகளில் 1,05,573 அலுவலர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.*

ii. *நிலுவையிலுள்ள பயிற்சி பெறவேண்டியவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கோடு அடிப்படைப் பயிற்சியானது, குறுகிய காலப் பயிற்சியாக 41 நாட்களுக்கு நிலையத்திலேயே வழங்க அரசாணை (நிலை) எண் 94, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி-I) துறை, நாள் 26-7-2013-ன்மூலம் அரசு ஆணையிட்டது. அதன்படி, அடிப்படைப் பயிற்சி குறுகிய காலப் பயிற்சியாக 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நடத்தப்பட்டு வருகிறது. 31-5-2016 வரை 18 அணிகளில் 7,026 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.*

iii. *அரசாணை (நிலை) எண் 120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி-I) துறை, நாள் 19-11-2014-இன்படி, கோவை, திருச்சி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய நான்கு காவலர் பயிற்சி பள்ளிகளில் 2-1-2016 வரையிலும் 37 நாட்கள் கொண்ட சிறப்பு*

சுருக்கப்பட்ட பயிற்சிகள் 31 அணிகளில் மொத்தம் 7,280 இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

iv. ஆக மொத்தம், இரண்டு குறுகியகால அடிப்படைப் பயிற்சிகளின்மூலம் செப்டம்பர் 2013 முதல் நாளது தேதி வரை 14,306 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

v. தற்போது 6,424 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. இவர்கள் அனைவருக்கும் ஒரு அணிக்கு 450 நபர்கள் வீதம் வருடம் ஒன்றிற்கு 8 அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, நிலுவை வெகுவாக குறைக்கப்பட்டுவிடும்.

vi. அமைச்சுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சியைத் தவிர துணை வட்டாட்சியர்களுக்கு விடுமுறை நாட்களை உள்ளடக்கிய 28 நாட்களுக்கு உள்ளிடப் பயிற்சி இந்நிலையத்தால் 1981 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை 138 அணிகளில் 3,173 துணை வட்டாட்சியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். வணிக வரி அலுவலர்கள், தமிழ்நாடு மின்சார உற்பத்தி-விநியோக வாரியத்தின் கணக்கு அலுவலர்கள், சத்துணவுப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கும் இந்நிலையத்தால் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2. புதிய கட்டடங்கள் கட்டுதல்

இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கான கட்டமைப்பை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும் அரசு ரூ.3,623.34 இலட்சம் வழங்கியது. மேலும், ரூ.220.84 இலட்சத்திற்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்புதிய கட்டடம் நவீனமயமாக்கப்பட்ட உள்கட்டமைப்பு, பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

6. ஆய்வுப் பிரிவு

அரசு அலுவலகங்களில் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், திறமையை மேம்படுத்தவும் மற்றும் நீண்டகால தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டும், ஆய்வு மேற்கொள்ளும் திட்டம் 1959 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

[2016 செப்டம்பர் 2

துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 36 துறைத் தலைமை அலுவலகங்களில், ஒவ்வோர் ஆண்டிலும் தயாரிக்கப்படும் ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆய்வுக்குப் பின்னர் முதனிலை ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு, உரிய துறைத் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகிறது. முதனிலை ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளைக் களைந்து, குறைகளைவு அறிக்கையை அத்துறைகள் அரசுக்கு அனுப்புகின்றன. அரசினால் நியமிக்கப்படும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு செய்யப்படுகின்றன. இறுதி ஆய்வு அலுவலர்கள் ஆய்வு மற்றும் பொதுக் குறிப்புகளை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தீர்வு காண்பதற்காக இறுதி ஆய்வை மேற்கொண்ட பின்னர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

மாவட்ட நிருவாகத்தின் திறனை மேம்படுத்தும் வகையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஆய்வுப் பிரிவின் அலுவலர்கள், பதினோரு (11) மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை குறித்த 'முன்னோடி பயிற்சி' மற்றும் கண்காணிப்பாளர், மேலாளர் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு அலுவலக நடைமுறைகள் குறித்த மூன்று நாட்களுக்கான 'குறுகியகால பயிற்சி' ஆகியவற்றை நடத்துகின்றனர். இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வோராண்டும் மாவட்ட ஆட்சியரகங்களில் நடத்தப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் 30 முன்னோடி பயிற்சிகளும் 30 குறுகிய கால பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

அ. மாவட்ட ஆய்வுக் குழுக்கள்

மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்கும், சார்நிலை அலுவலகங்களின் பணியை நெறிப்படுத்துவதற்கும் மாவட்ட ஆய்வுக் குழுக்கள் 1975 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. பதினோரு மாவட்ட ஆய்வுக் குழுக்கள் தற்போது உள்ளன. இக்குழுக்கள் துணை ஆட்சியர் நிலையிலான ஆய்வுக் குழு அலுவலர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

2016 செப்டம்பர் 2]

மாவட்ட ஆய்வுக் குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் விரிவான ஆண்டு ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்ட அலுவலகங்களில் 12 விரிவான ஆண்டு ஆய்வுகளையும், 240 திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காலமுறையில் மாவட்ட ஆய்வுக் குழுக்களின் மாதாந்திர பணி திறனாய்வு செய்யப்பட்டு அவற்றின் மீதான குறிப்புரை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், அவற்றின் நகல் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. மாவட்ட ஆய்வுக் குழுக்களானது மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு பிரிவுகள் மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கு உறுதுணையாக செயல்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் இணைந்து 107 ஒருங்கிணைந்த கூட்டங்கள் மாவட்ட ஆய்வுக் குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன.

ஆ. புத்தாக்கப் பயிற்சி

அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் உள்ள இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்களுக்கு ஐந்து நாட்கள் கொண்ட புத்தாக்கப் பயிற்சி ஆண்டுதோறும் ரூ.10.40 இலட்சம் செலவில் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

7. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு

அரசின் நடைமுறையிலுள்ள செயல்பாடுகளை மாற்றி அமைப்பதன்மூலம் பணியாளர்களின் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு, அரசு 1-8-1970 அன்று, நிதித் துறையில், அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு ஒன்றை உருவாக்கியது. அதன் பிறகு அரசு, மைய அரசின் நிலையைப் பின்பற்றி, 1-10-1979 அன்று இக்குழுவை நிதித் துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு மாற்றியது.

அரசின் பல்வேறு துறைகளிலுள்ள வழிமுறைகளையும், நடைமுறைகளையும் எளிதாக்கவும், பணிக்கேற்ப பணியாளர்களின் தேவையைக் கணித்து அறியவும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும், ஆவணங்களை சிறந்த முறையில் பராமரிக்கவும்,

சிக்கன நடவடிக்கை மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும், தேவையான நுண்ணாய்வை மேற்கொள்ளவேண்டி, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு உருவாக்கப்பட்டது.

மேற்படி குழு, அரசு துறைகளில் நுண்ணாய்வை மேற்கொள்வதற்காக, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு வல்லுநர் தலைமையில், ஒரு குழுவுக்கு இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள் வீதம் இரண்டு நிருவாகக் குழுக்களையும், வரவு-செலவு கணக்கு உட்பட அக்குழுக்களுக்கான அலுவலக நடைமுறைகளை மேற்கொள்ள, அரசு துணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) தலைமையில், ஒரு ஆராய்ச்சி அலுவலர், ஒரு உதவி பிரிவு அலுவலரைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றையும் உள்ளடக்கியது. அரசு துணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்கள், இரண்டு நிருவாகக் குழுக்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

இக்குழு, இதுவரை 233 நுண்ணாய்வுகளை மேற்கொண்டுள்ளது. திருச்சியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவளிக்கும் தொழில்நுட்ப நிறுவனத்திலும், சென்னையில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திலும் இக்குழு தனது நுண்ணாய்வை அண்மையில் மேற்கொண்டு நிறைவு செய்துள்ளது.

8. 2016–2017 ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதி திட்டங்கள்

2016-2017 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.1,01,67,000/- மதிப்பீட்டில், பின்வரும் மாநில புதுமை நிதித் திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது:-

1 தமிழ்நாடு தகவல் ஆணையம்

மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.30,64,000/- மாநில தகவல் ஆணையத்திற்கு, மேல் முறையீட்டு மனுக்களை இணைய வழி அனுப்பும் முறையினை அறிமுகப்படுத்துதல்

2 விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம்

மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.71,03,000/- விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்தின் தலைமையிடம் மற்றும் அதன் பிரிவு அலுவலகங்களை கணினிமயமாக்குதல்

2016 செப்டம்பர் 2]

9. முடிவுரை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, செவ்வனே திட்டமிட்டு பல்வேறு வகைகளில் அரசு அலுவலர்களுடைய ஆற்றலை வலுப்படுத்துவதன்மூலம் அரசு சீராக இயங்குவதற்கு செம்மையாகப் பணியாற்றி வருகிறது. அரசு அலுவலர்கள் தங்கள் திறனால், திடமான நம்பிக்கையுடனும், பணி அனுபவத்தின் மூலமாகவும் அவர்கள் முன்வைக்கப்படும் சவால்களையும், கடினமான பணிகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்கிறார்கள். உயர்ந்த குறியீடுகளை நிர்ணயித்து பணியாளர்கள் அதை அடைவதற்கு இத்துறை உதவுகின்றது.

இணைப்பு IV

(41 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

"நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத் திட்டங்கள் உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக்கோட்டுக்குக்கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்"

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

முகவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பைக் கருத்தில் கொண்டு, 2023 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, "தொலைநோக்குத் திட்டம் - தமிழ்நாடு 2023"-ஐ 22 மார்ச், 2012 அன்று வெளியிட்டுள்ளார்கள். இந்த தொலைநோக்குத் திட்டம் - தமிழ்நாடு 2023 நாட்டிலேயே மிகச் சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மாநிலமாகவும், மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனித வள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதே இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்

2016 செப்டம்பர் 2]
முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத்தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அடிப்படைப் பொறுப்புகளாக இருந்தன. மத்திய திட்டக் குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டதால் இத்துறையின் செயல்பாடுகள் மாற்றம் பெறும். தமிழ்நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் திட்டமிடுதல், இடைப்பட்ட கால செயல்பாடு அடிப்படையில் திட்டமிடுதல் மற்றும் அம்முயற்சிகளில் மிக அதிகமான கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியவை இத்துறையின் செயல்பாடுகளாக அமையும். நிர்வாகத் துறைகளால் தயார் செய்யப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிர்வாகத் துறை என்ற முறையில் மாநிலத் திட்டக் குழு, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை, கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக் கொள்கிறது. மேலும், இத்துறை மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான “நிதி ஆயோக்” உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும். இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்புமூலம் மின்-ஆளுமை திட்டம் (e-governance), ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைதளமான www.tn.gov.in/department/23-ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் முந்தைய மத்திய திட்டக் குழு உடன் தொடர்பு கொண்டு தயாரித்து வந்தது. இத்துறை புதிய அமைப்பான "நிதி ஆயோக்" உடன் இணைந்து நீண்டகால செயல் உத்திகள் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் 2030—ஐ எய்த மாநில அரசின் முயற்சிகளுக்கு ஒருங்கிணைந்து செயல்படுதல்;

iv. மாநிலத்தின் நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள் மீது ஆய்வுகள் மேற்கொள்வதை மேற்காணுதல்;

v. திட்டப் பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vi. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகித்தலும்;

vii. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

viii. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச்-செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;

ix. சீரான பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக

2016 செப்டம்பர் 2]

திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்;

x. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்;

xi. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xii. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளிவிவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

xiii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xiv. வரவு-செலவுத் திட்டம் 2015-2016-ல் அறிவிக்கப்பட்ட சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

xv. மாநிலத் திட்டக் குழு, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xvi. சிறப்பு முயற்சிகள் பிரிவின்கீழ் ‘மெட்ரோ இரயில்’ போன்ற புதிய மற்றும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல்.

2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து காணலாம்:—

(ரூபாய் கோடியில்)

திட்டம்	ஆண்டுகள்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு	செலவினம்	% விழுக்காடு
முதலாம் திட்டம்	1951–1956	86	80	93.0
இரண்டாவது திட்டம்	1956–1961	186	188	101.1
மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள்	1961–1969	608	613	100.8
நான்காவது திட்டம்	1969–1974	552	559	101.3
ஐந்தாவது திட்டம்	1974–1979	1,122	1,165	103.8
ஆறாவது திட்டம்	1980–1985	3,150	3,645	115.7
ஏழாவது திட்டம்	1985–1990	5,750	6,317	109.9
ஆண்டுத் திட்டம்	1990–1991	1,450	1,591	109.7
ஆண்டுத் திட்டம்	1991–1992	1,600	1,726	107.9
எட்டாவது திட்டம்	1992–1997	10,200	14,024	137.5
ஒன்பதாவது திட்டம்	1997–2002	25,000	25,036	100.1
பத்தாவது திட்டம்	2002–2007	40,000	43,568	108.9
பதினோராவது திட்டம்	2007–2012	85,344	92,656	108.6
பன்னிரெண்டாவது திட்டம்	2012–2017	2,11,250	2,31,498 *	–

2016 செப்டம்பர் 2]

*\ *2015-2016 ஆம் ஆண்டு கணக்குகள் முன்மதிப்பீடு மற்றும் 2016-2017 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.*

2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

மார்ச் 2012-ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 113 சதவீதம் அதிகரித்து, ரூபாய் 85,344 கோடி ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், 2007—2012 திட்டக் காலத்தில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

2.3 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017), பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, 2,11,250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் "தொலைநோக்குத் திட்டம் - தமிழ்நாடு 2023"-ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.3.1 பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆண்டுவாரியான ஒதுக்கீடுகளும் இதுவரை செய்யப்பட்ட செலவினங்களும்.

ஆண்டுவாரியான ஒதுக்கீடு/செலவினம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கான ஆரம்ப திட்ட ஒதுக்கீடு ரூ.2,11,250 கோடி.

(ரூபாய் கோடியில்

வருடம்	ஒதுக்கீடு 2012–2017	செலவினம் 2012–2016
2012-13	28,000	28,528
2013-14	37,128	37,745
2014-15	50,660	51,330
2015-16	55,100	55,803 (த)
2016-17	60,610	-
மொத்தம்	**2,31,498**	**1,73,406**

(த) தற்காலிகமானது

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் துறைவாரியான ஒதுக்கீடுகளும் செலவினங்களும்

(ரூபாய் கோடியில்)

வ. எண்	துறை	ஒதுக்கீடு 2012-17	செலவினம் 2012-16
1.	வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை	25,033	15,053
2.	ஊரக வளர்ச்சி	42,059	26,673
3.	எரிசக்தி	10,088	15,224
4.	தொழில் மற்றும் கனிமங்கள்	5,764	4,000
5.	போக்குவரத்து	21,107	14,692
6.	சமூக சேவைகள்	1,16,296	89,791
7.	ஏனையவை	11,151	7,973
	மொத்தம்	**2,31,498**	**1,73,406**

2.3.2 2014-2015 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) மூன்றாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2014-2015, 50,660 கோடி ரூபாய் (38,105.27 கோடி ரூபாய் (மாநில திட்டம்) + 12,554.73 கோடி ரூபாய் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு) ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு முதல், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் உள்ள மத்திய அரசின் பங்கு, மாநில திட்ட ஒதுக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பல மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியில் குறைவு இருந்தாலும் கூட திட்டச் செலவினமானது ரூ.51,330.25 கோடியாக இருந்தது. இது திட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாகும்.

2016 செப்டம்பர் 2]

2.3.3 2015–2016 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய அரசானது மத்திய திட்டக் குழுவிற்குப் பதிலாக "நிதி ஆயோக்" என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்தது. மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஆட்சிமன்றக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 8-2-2015 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை இறுதி செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் எதுவும் நிதி ஆயோக்கிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. எனினும், 2015-2016 வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூ.55,100 கோடி ஒதுக்கப்பட்டது. துறைகளிடமிருந்து பெறப்பட்ட செலவினங்களின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டிலும் திட்ட செலவினம் திட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.3.4 2016-2017 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி மற்றும் இறுதி ஆண்டான 2016-2017 ஆம் ஆண்டு திட்டத்தினை செயல்படுத்த ரூ.60,610 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து பன்னிரெண்டாவது திட்டத்தின் திட்ட செலவினம் ஆரம்ப திட்ட ஒதுக்கீடான ரூபாய் 2,11,250 கோடியை விட ரூபாய் 2,31,498 கோடியாக அதிகரித்து திட்ட இலக்கை விட 9.58 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.4. திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தின் திட்டச் செலவினங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலம் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளிலிருந்து பெறப்பட்டு, நிதி ஆண்டின் இறுதிக்குள் திட்ட ஒதுக்கீடுகள் யாவும் முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்காக தலைமைச் செயலாளர் அவர்கள் முன் வைக்கப்படுகிறது.

[2016 செப்டம்பர் 2

2.5 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மறுசீரமைத்தல்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மற்றும் மாநில அரசின் சொந்த நிதி பங்களிப்புடன்கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு நிதியாண்டுகளில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 2014-2015 ஆம் ஆண்டில், மத்திய அரசு இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்துள்ளது. முதலாவதாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய நிதி உதவி, மாநில திட்ட நிதி உதவியாகக் கருதப்பட்டது. மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மத்திய அரசு, நடைமுறையிலிருக்கும் 142 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை 66 திட்டங்களாக மாற்றி அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களுக்குப் பொருந்தும் வகையில் வழிகாட்டி நெறிமுறைகளை திருத்தி அமைப்பதற்கு ஏதுவாக, இத்திட்டங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் செய்வது குறித்த ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படி மாநில அரசிடம் மத்திய அரசு கோரியது. இதன்படி, தமிழக அரசு, ஒவ்வொரு திட்டங்கள் மீதான விரிவான கருத்தினையும், பரிந்துரைகளையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இப்பரிந்துரைகளில், சில மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பல திட்டங்களின் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில், பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், 2015-2016 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய அரசின் வரி தொகுப்பிலிருந்து 2014-2015 ஆம் நிதியாண்டில் 13-வது நிதிக் குழுவின் பரிந்துரையான 32%-ல் இருந்து 42% ஆக உயர்த்தி மாநிலங்களுக்கு மத்திய அரசு பகிர்ந்தளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி உதவித் திட்டங்களுக்கான பங்களிப்பினை மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, மத்திய அரசின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், சில

2016 செப்டம்பர் 2]
மத்திய நிதி உதவி பெறும் திட்டங்கள் மத்திய அரசின் முழுமையான பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் அதே வேளையில், குறிப்பிட்ட சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை மாற்றியமைக்கப்பட்ட பங்களிப்பு விகிதங்களுடன் செயல்படுத்தவும், 8 மத்திய நிதி உதவிபெறும் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி உதவியினை முழுவதும் நிறுத்தவும் முடிவு செய்தது. இந்த நிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு, மாநில நிதி ஆதாரங்களிலிருந்து தொடர்ந்து நிதி வழங்குவது குறித்து முடிவெடுக்கும்படி மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, 14-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் விளைவாக எந்த ஒரு கூடுதல் நிதியும் மாநில அரசுக்கு கிடைக்கவில்லை. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் பங்கு அதிகரித்தபோதிலும் அனைத்து இனங்களிலும் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. 14-வது நிதிக் குழுவின் அறிக்கையில், 2011-2012 ஆம் நிதியாண்டில் மாநிலங்களுக்கான மொத்த நிதி பரிமாற்றம் 53.7 சதவீதமாக இருந்தது என்றும், ஆனால், 2015-2016 ஆம் நிதியாண்டிலிருந்து இது 49 சதவீதமாக மட்டுமே இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மிக முக்கியமாக, தமிழகத்தைப் பொறுத்தவரை, மத்திய வரித் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் வரியானது 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாக குறைந்துள்ளது. இது 19.04 சதவீதம் சரிவைக் காட்டுகிறது. மேலும், தமிழகத்திற்கு சிறப்பு மானியங்கள் எதுவும் மத்திய அரசால் வழங்கப்பெறவில்லை. வருவாய் பற்றாக்குறை மானியங்கள் பெறுவதற்கும் மாநில அரசுக்கு வாய்ப்பு இல்லை. எனவே, இடையில் நிறுத்தப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தவும், சில குறிப்பிட்ட திட்டங்களில் குறைக்கப்பட்ட மத்திய நிதியுதவியை அதே அளவில் ஈடு செய்ய மாநில அரசால் கூடுதல் நிதி வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசால் கணிசமான கூடுதல் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

புது டில்லியில் 8-2-2015 அன்று நிகழ்ந்த நிதி ஆயோக்கின் ஆட்சிமன்றக் கூட்டத்தில், திருத்தியமைக்கப்பட்ட மத்திய அரசு

பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கான அளவுகோல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கீழ்க்காணும் விரிவான கருத்துரைகளை மாநில அரசு முன்வைத்துள்ளது.

i. மாநிலங்களுக்கிடையிலான செயல்திறன் வேறுபாடுகள் மற்றும் வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முதன்மை திட்டங்களின் வடிவமைப்பில் போதுமான நெகிழ்வு தன்மை இருக்க வேண்டும். திட்ட வடிவமைப்பு, உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான திட்டங்களை மாநிலங்கள் செயல்படுத்துவதற்காக, அதிக அளவிலான நெகிழ்வுத்தன்மையினை அனுமதிக்கும் விரிந்த துறைவாரியான நிதி ஒதுக்கீடுகளை அளிப்பதாக இருக்க வேண்டும்.

ii. மத்திய நிதி உதவியின் மாநிலவாரியான ஒதுக்கீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் வரன்முறை, மிகச் சிறந்த நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ஏற்கெனவே தங்கள் சொந்த நிதியாதாரங்களை முதலீடு செய்து குறிப்பிடத்தக்க அளவுக்கான வளர்ச்சி பெற்ற மாநிலங்களைத் தண்டிப்பதாக அமையக்கூடாது.

iii. சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும், திட்டங்களை செயல்படுத்துவதற்கும், குறிப்பிட்ட ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அளவுகள் குறித்து தெளிவான, முன்னரே கணிக்கத்தக்க மற்றும் நிச்சயத்தன்மை உடைய நிதி ஒதுக்கீட்டிற்கான வரன்முறைகள் அமைய வேண்டும். மேலும், வருடாந்திர ஒதுக்கீடு குறித்த தகவல்கள் போதுமான கால அளவுக்கு முன்னரே தெரிவிக்கப்படவேண்டும்.

iv. மாநிலங்களின் சொந்த முன்னுரிமைச் செலவினங்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டச் செலவுகளில் மாநிலங்களின் பங்கு அதிக பட்சம் 25 சதவீதம் என்ற அளவுக்குள் அமையுமாறு வரையறுக்கப்படவேண்டும்.

v. மத்திய அரசின் திட்டத்தினைப் போன்றதொரு திட்டம்,

2016 செப்டம்பர் 2]

மாநில அளவில் ஏற்கெனவே நடைமுறையிலிருந்தால் மத்திய திட்ட நிதியினை மாநிலத் திட்ட நிதியோடு இணைத்துக் கொள்ள அனுமதிப்பதற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகள் அமைய வேண்டும்.

vi. உறுதியளிக்கப்பட்ட ஒதுக்கீடு, எவ்வித இடைக்காலக் குறைவுகளுமின்றி முழுமையாக அளிக்கப்பட வேண்டும். மத்திய அரசின் பங்கு, ஒரு ஆண்டில் இரண்டு தவணைகளுக்கு மேற்படாத வகையில் அளிக்கப்பட வேண்டும். முந்தைய ஆண்டுகளின் விடுபட்ட நிதி, நடப்பு ஆண்டு நிதியினை வழங்குவதற்கு முன்பாகவே அளிக்கப்பட்டு விட வேண்டும்.

vii. நிதி வழங்குவதற்கான வரையறைகளில், விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டு, அதன் பயனாக வழங்கப்படும் நிதியின் அளவு தன்னியல்பாகவே (automatic) உயர்த்தப்பட வழிவகை செய்ய வேண்டும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் 90:10 முதல் 50:50 வரை உள்ள விகிதங்களின் அடிப்படையில் இருந்தது. முதலமைச்சர்களைக் கொண்ட துணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு தற்போது உள்ள 66 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை 28 பொதுவான திட்டங்களாக மாற்றி அமைத்துள்ளது. இந்த 28 பொதுவான திட்டங்களில், 6 திட்டங்கள் மிக முக்கியத் திட்டங்களாகவும் 20 திட்டங்கள் முக்கியத் திட்டங்களாகவும் மீதமுள்ள 2 திட்டங்கள் விருப்ப அடிப்படையிலான திட்டங்களாகவும், வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிக முக்கியத் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் தற்போது உள்ள விகிதத்திலேயே தொடரும். முக்கியத் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் ஒரே விதமாக 60:40 என்ற விகிதத்தில் இருக்கும். விருப்ப அடிப்படையிலான திட்டங்களின் பங்களிப்பு விகிதம் 50:50 என்ற விகிதத்தில் இருக்கும். இத்திட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

A. மிக முக்கியத் திட்டங்கள்

1. தேசிய சமூக நிதியுதவித் திட்டம்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

3. ஆதி திராவிடர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

4. பழங்குடியினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

5. சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

6. பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

B. முக்கியத் திட்டங்கள்

7. பசுமைப் புரட்சி (விவசாய அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்)

8. வெண்மை புரட்சி (கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம்)

9. நீலப் புரட்சி (ஒருங்கிணைந்த மீன் வள மேம்பாடு)

10. பிரதம மந்திரி விவசாய நீர்ப் பாசனத் திட்டம்

 a. அனைத்து விளை நிலங்களுக்கும் நீர்ப்பாசனம்

 b. குறைந்த நீர்ப்பாசனத்தில் அதிகவிளைச்சல்

 c. ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

 d. விரைவுப்படுத்தப்பட்ட நீர் பாசன வசதி மற்றும் வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டம்

11. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்

12. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம்

 a. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் - ஊரகம்

 b. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் - நகர்ப்புறம்

13. தேசிய குடிநீர் இயக்கம்

2016 செப்டம்பர் 2]

14. தூய்மை இந்தியா இயக்கம்

a. தூய்மை இந்தியா இயக்கம் - ஊரகம்

b. தூய்மை இந்தியா இயக்கம் - நகர்ப்புறம்

15. தேசிய சுகாதார இயக்கம்

a. தேசிய ஊரக சுகாதார இயக்கம்

b. தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம்

c உயர்தர சுகாதார பாதுகாப்புத் திட்டம்

d. சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்வியியல் மனிதவள மேம்பாடு

e. ஆயுஷ் தேசிய இயக்கம்

16. தேசிய நல்வாழ்வுத் திட்டம்

17. தேசிய கல்வி இயக்கம்

a. அனைவருக்கும் கல்வித் திட்டம்

b. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

c. ஆசிரியர் பயிற்சி மற்றும் முதியோர் கல்வி

d. தேசிய உயர் கல்வித் திட்டம்

18. மதிய உணவுத் திட்டம்

19. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள்

a. அங்கன்வாடி பணிகள்

b. தேசிய ஊட்டச் சத்து இயக்கம்

c. மகப்பேறு உதவித் திட்டம்

d. வளரிளம் பெண்களுக்கான திட்டம்

e. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்

f. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

20. *பெண்கள் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிக்கும் திட்டம் (பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் வளர்ப்பு, அனைத்து சேவை மையம், பெண்கள் உதவி மையம், விடுதிகள், இரவு தங்கும் விடுதிகள், பாலினம் சார்ந்த நிதி ஒதுக்கீடு, ஏனையவை)*

21. *தேசிய வாழ்வாதார இயக்கம்*

a. *தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்*

b. *தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்*

22. *வேலை மற்றும் திறன் மேம்பாடு*

a. *வேலைவாய்ப்பினை பெருக்கும் திட்டம்*

b. *பிரதம மந்திரி திறன் அபிவிருத்தித் திட்டம்*

23. *சுற்றுச் சூழல், வனம் மற்றும் வன உயிரினங்கள்*

a. *தேசிய பசுமை இந்தியா இயக்கம்*

b. *ஒருங்கிணைந்த வன புகலிட மேம்பாட்டுத் திட்டம்*

c. *இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு*

d. *தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம்*

24. *நகர்ப்புற மறுசீரமைப்பு இயக்கம் (அம்ருத் மற்றும் திறன்மிகு நகரங்களுக்கான இயக்கம்)*

25. *காவல் துறை நவீனமயமாக்குதல் (பாதுகாப்பு தொடர்பான செலவினங்கள்)*

26. *நீதித் துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் (ஊர் பஞ்சாயத்துகள் மற்றும் மின்ஆளுமை நீதிமன்றங்கள்)*

C. விருப்ப அடிப்படையிலான திட்டங்கள்

27. *எல்லைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்*

28. *சியாமா பிரசாத் முகர்ஜி ஊரக மற்றும் நகர்ப்புற இயக்கம்*

2016 செப்டம்பர் 2]

2.6 இருபது அம்சத் திட்டம், 2006–ன் ஆய்வு

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டில் "இருபது அம்சத் திட்டம் 2006" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினைக் குறைத்தல், வேலைவாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்-2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம். திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2.7 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவல் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் துறைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன:

(i) எரிசக்தி,

(ii) தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பம்,

iii) நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,

iv) சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்

v) இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர்த் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவல் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக்கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

2.8 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசு துறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்19 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 15-2-1984-ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப துறை மாநிலத்தில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்பு துறையாக அமைக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களைப் பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்-ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 5-8-2016 அன்று, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட புவிசார் தரவுகளை, 42 புவிசார் அடுக்குகளாக தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பிற்கான இணையதள பயன்பாட்டில் இணைத்து தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவரத் தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்புக் குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மை செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் முதன்மை செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின்கீழ் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு/ தொலையுணர்வு திட்டங்களுக்கான கருத்துருக்கள்மீது முடிவுகள் மேற்கொள்வதை மேற்பார்வையிட்டு வருகிறது. தமிழகத்தின் புவியியல் தகவல் அமைப்புக்கான பூகோள வரைபடத்தின் அடிப்படை அலகுகளை ஒத்திசைவு செய்து நிலைப்படுத்தவும், அந்த வரைபடத்தின் பல்வேறு துறைகளில் தற்போது நடைமுறையில் உள்ள பலதரப்பட்ட அலகுகளை ஒன்றிணைக்கவும் இக்குழு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2.9 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளிவிவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளிவிவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளிவிவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

2.10 பெருந்திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் உண்மையான பயனாளிகளுக்கு சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும்

செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மை செயலாளர் தலைமையில் இயங்கும் குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட வேண்டிய திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தொடர்புடைய துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறவும் தேவைகளின் அடிப்படையில் ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும், மதிப்பார்ந்த நிறுவனங்களுக்கு மதிப்பீடு ஆய்வுகளை மேற்கொள்ளவும் செய்யும். மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கும் அறிவுரைக் குழுவிற்கு மதிப்பீடு வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை இடையிடையே சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் www.tn.gov.indear/index.htm என்ற அரசின் இணையதளத்திலும் வெளியிடப்படுகின்றன.

2.11 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

8-8-2014 அன்று, விதி எண் 110-ன்கீழ் சட்டமன்ற பேரவைக்கு அளித்த அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறப்பான நிர்வாகத்தின் முக்கிய திட்டக் கூறு ஆகிய ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். அரசின் வெவ்வேறு துறைகளின் ஓர் ஆலோசனைத் துறை என்ற முறையிலும் மாநில திட்டக் குழு, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகியவற்றின் நிர்வாகத் துறை

2016 செப்டம்பர் 2]
என்ற வகையிலும், ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கைத் தயாரிப்பதை மேம்படுத்துவதற்கு, அரசு அளிக்கும் சிறப்பு முக்கியத்துவத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை தனித் தன்மையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசில், ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கைத் தயாரிப்பை மேம்படுத்துவதற்கு, இத்துறை, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நடைபெற்று வரும் திட்டங்களையும், பெருந்திட்டங்களையும் முறையாகக் கண்காணிப்பதும், மதிப்பீடு செய்வதும், ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை தயாரிப்புக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த அரசானது, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும். நடந்தேறி வருகின்ற திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் முறையாக கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். பல்வேறு அரசுத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயன்களை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகளவிலான செயல்விளைவு மதிப்பீட்டு ஆய்வுகளுடன், இடைக்கால திருத்தங்களை மேற்கொள்வதற்கும், இனிவரும் காலங்களில் சிறப்பான மற்றும் மிகவும் பயனுள்ள திட்டங்களை வகுப்பதற்கும் இத்தகைய ஆய்வுகள்மூலம் பெற்ற படிப்பினையைப் பயன்படுத்த இயலும். பகுப்பாய்வு மற்றும் கொள்கை தயாரிப்பிற்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்கள் உருவாக்கித் தரப்படும்.

2.11.1 மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Massachussets Institute of Technology, USA), அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (Abdul Latif Jameel-Poverty Action Lab (J-Pal)) என்பது, மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையில், வறுமையைக் குறைக்கிற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகிற உலகம்

முழுவதிலுமுள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த மேம்பாட்டு பொருளாதார வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஓர் கட்டமைப்பாகும்.

8-8-2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 2-9-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிக பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் - வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 19-11-2014 அன்று கையெழுத்திடப்பட்டது. வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கியத் திட்டக் கூறுகள் வருமாறு:

(i) கொள்கைக் குறித்த பேச்சு வார்த்தை

தமிழ்நாடு அரசும் தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் தமிழ்நாடு அரசின் தலைசிறந்த கொள்கை முன்னுரிமைகளைக் கண்டறிந்து பின்வருவனபற்றி கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்:

(i) மாநில அளவில், படிப்படியான அளவு வீதத்தில் பெரிதாக்கி காட்டுவதற்கு முன், களப்பணி பரிசோதனைக்கு முனைப்புடன் உட்படுத்தப்படும், புதுமையான வளவாய்ப்புத் தீர்வுகளைக் கூட்டாகக் கண்டறிதல்.

(ii) இந்தியாவின் மற்ற பகுதியிலும் உலகளவிலும் பரிசோதிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தக் கூடிய கொள்கை புதுமைகளைக் கண்டறிதல்.

(ii) மதிப்பீட்டுத் திட்டங்கள்

சாத்தியக்கூறினை அளவீடு செய்வதற்கு முன்னர், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தெரிவு செய்தல்.

2016 செப்டம்பர் 2]

(iii) திறன் மேம்பாடு

பின்வரும் நடவடிக்கைகள் வாயிலாக நடந்தேறி வருகிற அல்லது புதிய திட்டங்களை கண்காணித்து மதிப்பீடு (Monitoring Evaluation) செய்யும் பணியை மேற்கொள்வதற்கு, உள்ளார்ந்த திறன் மேம்படுத்துதலில், தமிழ்நாடு அரசுக்கு, தெற்கு ஆசியாவின் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவும்:

(அ) கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தேவைகளை அறுதியிடல்

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, நடைமுறையிலுள்ள கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தகவல் ஆதாரங்கள், கண்காணித்தலில் அவற்றின் பயன்பாடு, முடிவுகளை/விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை தொடர்பான வேறுபாடுகள் ஆகியவற்றை கண்டறிவதற்கு, மதிப்பீடு தேவைகளை கண்டறியும் பயிற்சி முறை ஒன்றை நடத்தும்.

(ஆ) மதிப்பீட்டு வழிகாட்டி குறிப்புகள்

மதிப்பீடுகளை தொடங்கி நிருவகிப்பது குறித்த வழிகாட்டி குறிப்புகளை உருவாக்குவதற்கு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு தொழில்நுட்ப உதவி வழங்கும்.

(இ) திறன் மேம்பாட்டு பயிலரங்குகள்

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, தொடர்புடைய கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தலைப்புகள் பற்றி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கும், தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகளுக்கும் செயல்முறை பயிற்சி அளிக்க வகைசெய்யும்.

[2016 செப்டம்பர் 2

(ஈ) கண்காணிப்பு ஏற்பாட்டு முறைகளுக்கு தொழில்நுட்ப உதவி

செயல் விளைவு அடிப்படையிலான கண்காணிப்பு கட்டமைப்புகளை பின்பற்றுவதற்கும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகள், முனைப்புடன் கண்காணித்து முடிவு எடுப்பதற்கான ஏற்பாட்டு முறைகளை வலுப்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசிற்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவி செய்யும்.

17-9-2014 அன்று தலைமைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற முதலாவது வழிநடத்தும் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல் - வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக கீழ்க்காணும் ஐந்து ஆய்வுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. அந்த ஆய்வுகளின் தற்போதைய நிலை கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது:

வ. எண்	திட்டம்	பயன் பெறும் துறைகள்	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	திறன் வளர்ப்பின் மூலம் இளந்தொழிலாளர் சந்தையின் பயன்களை அதிகரிக்கும் திட்டம்	தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை	திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.
2.	வளரிளம் பருவத்தில் ஏற்படுகின்ற இரத்த சோகைக்கு தீர்வு காண வாரந்தோறும் செறிவூட்டப்பட்ட இரும்புச்சத்து மாத்திரைகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படுகிற பயன்களை மதிப்பிடும் திட்டம்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை	திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

2016 செப்டம்பர் 2]

வ. எண்	திட்டம்	பயன் பெறும் துறைகள்	திட்டத்தின் தற்போதைய நிலை
3.	தொற்றாத நோய்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கற்பிக்கும் திட்டம்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை	திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது –அடிப்படை கணக்கெடுப்பு செப்டம்பர், 2016ல் தொடங்கப்பட உள்ளது
4.	தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களை அதிகரிக்க பெண்களை ஈடுபடுத்தும் திட்டம்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை	திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முழு அளவிலான மதிப்பீடு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
5.	தமிழ்நாட்டில் வடமாவட்டங்களில் உள்ள தொடக்கப்பள்ளி கல்வி நடைமுறை குறித்து மதிப்பீடு செய்வதற்கான திட்டம்	பள்ளிக் கல்வி துறை	திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது

28-7-2015 அன்று நடைபெற்ற இரண்டாம் வழிநடத்தும் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல் - வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக பின்வரும் நான்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செயல்படுத்தும் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன:—

வ. எண்	திட்டம்	பயன் பெறும் துறைகள்	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	தமிழ்நாட்டில் உணவு செறிவூட்டல் மூலம் இரத்தசோகையை ஒழிக்கும் திட்டம்	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது – முதற் கட்டமாக பொது விநியோகத் திட்ட கடைகளின் கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.
2.	நகர்ப்புற வேலையின்மை: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திறனுக்கேற்ற வேலைகளை ஒப்பிடுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கண்டறிதல்.	நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – இத்திட்டத்தில் பயன்பெறும் துறையாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மாற்றப்பட்டுள்ளது.
3.	பொது/கழிப்பறைகளுக்கான உபயோகிப்பாளர் கட்டண வசூல் அடிப்படையிலான ஒப்பந்த வழிமுறைகளை வடிவமைப்பதன் மூலம் நீடித்த நிதி மற்றும் பொருத்தமான சேவை வழங்கும் திட்டம்.	நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறையிடம் இருந்து திட்டத்தை தொடங்க கடிதம் பெறப்பட்டவுடன் இத்திட்டத்திற்கான ஆய்வு ஆரம்பிக்கப்பட உள்ளது.
4.	தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் கழிப்பறை பயன்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டம்.	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2016 செப்டம்பர் 2]

22-12-2015 அன்று நடைபெற்ற மூன்றாம் வழிநடத்தும் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல்-வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக பின்வரும் மூன்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செயல்படுத்தும் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன:—

வ. எண்	திட்டம்	பயன் பெறும் துறைகள்	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	தமிழ்நாட்டில் வாழும் வயது முதிர்ந்தவர்களின் சமூக பொருளாதார நிலையை அறிய அமைக்கப்பட்ட குழுவின் கணக்கெடுப்பு	பொருள் இயல் மற்றும் புள்ளியியல் துறை	நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – முதற்கட்ட ஆய்வு பொருளியியல் மற்றும் புள்ளி இயல் துறையுடன் நடத்தப்பட்டது.
2.	தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களை அதிகரிக்க பெண்களை ஈடுபடுத்தும் திட்டம்	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – இதற்கான நிதி தேசிய சுகாதார திட்டத்திலிருந்து வழங்கப்பட உள்ளது.
3.	தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பள்ளிகளை தயார் நிலைப்படுத்தி குழந்தைகளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்.	சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை	நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – அடிப்படை ஆய்வு செப்டம்பர், 2016-ல் தொடங்கப்பட உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2.11.2 புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு

வரவு-செலவுத் திட்டம், 2015-2016-ல் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து, புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு மையம் (Data nalytics Unit) *உருவாக்கப்படுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அரசிடம் குவிந்துள்ள புள்ளி விவரங்கள் நிகழ்கால அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, மக்களுக்கு சேவைகளை சிறப்பாக கொண்டுசெல்லும் நோக்குடன் அரசின் கொள்கைகளை அவ்வப்போது மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இதன்மூலமாக ஏற்படும். இத்தகைய மையத்தை ஏற்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இது ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.*

புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு மையம் சார்ந்த கருத்துருக்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், அதன் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் முதன்மைச் செயலாளர், திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அவர்களை தலைவராகக் கொண்டு வழிநடத்தும் குழு ஒன்றினை அமைத்து அரசாணை (நிலை) எண். 91, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 5-11-2015-ன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.11.3 கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

கொள்கை தயாரிப்பு குறித்த ஆலோசனையைப் பெறுவதற்காக, சமூக அறிவியலாளர்கள் மற்றும் பிற வல்லுநர்களின் சிறப்பறிவுத் திறனை பயன்படுத்துகிற ஒரு முயற்சியாக, வெவ்வேறு கருத்துகளைக் கேட்டறிந்து, அவற்றை கொள்கை தயாரிப்புக்கான முயற்சிகளில் சேர்க்கிற வகையில், வெவ்வேறு கருத்தரங்குகள் மற்றும் குழுக் கூட்டங்களில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய புள்ளியியல் நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பொருளியல் கல்வி நிறுவனம் மற்றும் IFMR *போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களின் பங்கேற்பை இத்துறை ஊக்குவிக்கிறது.*

2016 செப்டம்பர் 2]

2.12 சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

1975 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிடையே பெரிய வனப் பகுதிகளை எல்லைகளாகக் கொண்டும் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் மலைப்பாங்கான மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, செயல்படுத்தப்பட்ட இரண்டு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுத்தி வந்தது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு தனியாக செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், நீலகிரி மலைப் பகுதியின் தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டமானது கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலும் கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களில் முழுமையாகவும் செயல்படுத்தப்பட்டது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதற்கும் திட்ட முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி இவ்விரு திட்டங்களையும் மேலும் தொடர மத்திய அரசினை மாநில அரசானது வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசானது இத்திட்டங்களை 2015-2016 ஆம் நிதியாண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கிவிட்டது. எனவே, இம்மலைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைக் கருதி மாநில அரசானது இந்த இடர்ப்பாடிலிருந்து மீளும் முயற்சியாக ரூபாய் 75.00 கோடி ஆண்டு ஒதுக்கீட்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.

2.12.1 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் 1975-1976 முதல் மத்திய அரசின் 90 விழுக்காடு நிதி உதவியுடனும் மீதமுள்ள 10 விழுக்காடு தொடக்க காலத்தில் கடனாகவும் பின்னர் மாநில அரசின் பங்களிப்பாகவும் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டங்களின் முக்கிய குறிக்கோள் உயிரினப் பன்மயத்தினை தொடர்ந்து பயன்படுத்துவதை

நோக்கமாகக் கொண்டு இயற்கைச் சூழலைப் பேணுதல் மற்றும் இயற்கைச் சூழலை மீளச்செய்வதாகும். உள்ளூர் மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களில் இத்திட்டங்கள் கவனம் செலுத்துவதுடன் பல்வகை உயிரினப் பெருக்கம் மற்றும் நீடித்த வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான உத்திகளின் வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்தில் சமுதாய பங்கேற்பை உறுதி செய்வதும் ஆகும். செயல்திறன், வெளிப்படையானத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்வதற்காக பங்கேற்கும் அணுகுமுறையின்மூலம் நீர்வரத்துப்பகுதி அடிப்படையிலான மேம்பாடு இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. நீர்வரத்துப்பகுதி அணுகுமுறையின் முக்கிய நோக்கமானது, நீர் மற்றும் நில வளங்களுக்கு ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதி செய்வதுடன், இயற்கையோடு இயைந்த உயிரின வாழ்க்கைச் சூழல் மேலும் நலிவடையாமல் தடுத்தல் ஆகும்.

தமிழகத்தின் எல்லையோரப் பகுதிகளான திண்டுக்கல், மதுரை, தேனி, ஈரோடு கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இடதுசாரி தீவிரவாதம் பரவாமல் தடுப்பதற்காக பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட பணிகள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணிகள் போன்றது ஆகும்.

மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் 2015-2016-ல், மத்திய அரசானது மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் / மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியன 2015-2016 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படும் என்றும், அத்திட்டங்களை மாநில அரசின் நிதி ஆதாரங்களில் இருந்து தொடர்ந்து செயல்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தி இருந்தது. அதனைத் தொடர்ந்து உடனடியாக தமிழக அரசானது 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூபாய் 75.00 கோடி முதலீட்டில் மாநிலத்தின் மலைப் பகுதிகளை உள்ளடக்கிய சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்தது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியானது, தமிழ்நாட்டில் கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டருக்கு மேலான மலைப் பகுதிகளை

2016 செப்டம்பர் 2]

இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்குப் பகுதிகள், 10 மாவட்டங்கள், 40 வட்டங்கள் மற்றும் 67 வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள 36 நகராட்சிகள், 148 பேரூராட்சிகள் மற்றும் 1266 கிராம ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்கெனவே சேர்க்கப்படாத ஈரோடு மாவட்டத்திலுள்ள பகுதிகள் தற்பொழுது சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 40, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு1) துறை, நாள் 4-3-2016-ல் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு அரசின் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட மேலாண்மைக்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் துறையாக விளங்குகிறது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியினை ஒட்டியுள்ள இடைப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி, வனப் பகுதியிலோ அல்லது வாழ்விடப் பகுதிக்கு அருகாமையிலோ அமையப்பெறாமல் உள்ள பகுதியாக இருப்பதால் அரசின் குறைந்த முதலீடுகள் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. மேலும், இப்பகுதி மண் மற்றும் நீர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்த பகுதியாக இருக்கிறது. எனவே, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது, நீர், விவசாய நிலங்கள் மற்றும் மனித வாழ்வாதாரம் ஆகியவற்றிற்கிடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தக்கூடிய நீர் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் நீர்வாழ் உயிரின பெருக்கத்தினை உள்ளடக்கியதாகும். மேலும், இத்திட்டத்தின்மூலம் மக்கள் அவர்கள் வாழும் இடங்களிலேயே அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை அதிகரிக்க நுண்ணிய நீர்பிடிப்புப் பகுதி அடிப்படையில் திட்டமிடுதலில் அதிக கவனம் செலுத்தப்படும்.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மண்வளப் பாதுகாப்பு, வனம் மற்றும் சுற்றுச்சூழல், தோட்டக்கலை, வேளாண்மை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஊரகச் சாலைகள், நகர்ப்புற மற்றும்

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்பு வசதிகளில் இடைவெளி நிரப்பும் பணிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர் வள மேம்பாடு மற்றும் மீன் வளம் ஆகியவற்றிற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கிறது.

இத்திட்டம், பரவலாக்கப்பட்ட ஆளுமையின் அடிப்படை அலகுகளான கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி அல்லது நகராட்சிகளில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களைப் போன்று வட்டம் மற்றும் வட்டாரங்கள் முழுவதையும் திட்ட செயல்பாட்டுக்கு எடுத்துக்கொண்டது போல் இல்லாமல் மலைப் பகுதிகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கும் நடைமுறை உறுதி செய்யப்படும்.

திட்ட இயக்குநரகமானது, இரண்டு அலகுகளைக் கொண்டு களச் செயலாக்கத்தினை மேற்கொண்டு திட்டம் செயல்படுவதை மேற்பார்வை செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. பிரிவு 1-ன்கீழ், தற்போதுள்ள மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநரின் பணி எல்லை மற்றும் செயல்பாடுகள் மேலும் விரிவுபடுத்தபட்டு கீழ்காணும் மாவட்டங்களும் சேர்த்துக்கொள்ளப்படும்:-

1. நீலகிரி
2. கோயம்புத்தூர்
3. திருப்பூர்
4. ஈரோடு

பிரிவு 2-ன்கீழ் மாநிலத் திட்டக் குழுவில் தற்பொழுது உள்ள மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் மூலமாக எஞ்சிய மாவட்டங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் மேற்பார்வை செய்யப்படும். அவையாவன:-

1. திண்டுக்கல்
2. மதுரை
3. தேனி
4. விருதுநகர்
5. திருநெல்வேலி
6 கன்னியாகுமரி

2016 செப்டம்பர் 2]

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் முன்னர் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் யாவும் அடிப்படையில் குறிப்பிட்ட துறையின் செயல்பாடுகளோடு சம்பந்தப்பட்ட துறை சார்ந்த திட்டங்களாக இருந்தன. தற்போதைய திட்டத்தின்கீழ், மிகவும் வலுவான திட்டங்களுக்கான பணி மற்றும் துறைகளை இனங்கண்டு செயல்படுத்துவதற்காக, திட்டச் செயல்பாட்டிற்கான பகுதிகள் மற்றும் துறைசார்ந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது, தற்பொழுது நடைமுறையில் உள்ள பிற திட்டங்களின் முழு பயன்களைப் பெறும் விதத்தில் அத்திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது நிதித் தேவை மற்றும் திட்டச் செயலாக்கத்தில் ஏற்படும் பற்றாக்குறைகளை சரிசெய்ய மட்டுமே பயன்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, திட்ட ஒருங்கிணைப்பிற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் போது, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் திட்ட உதவிகள் ஒரு முழுமையான திட்டத்தினை உருவாக்க ஆதார நிதியாக பயன்படுத்தப்படும். திட்டங்களுக்கான உதவிகள் அனைத்தும் மாநிலத்தில் மலைப் பகுதிகளின் இலக்கான பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் நீடித்த மேம்பாட்டுக் கொள்கைக்கு ஒத்திசைவாக இருப்பதையும் உறுதி செய்யும்.

2015-2016 ஆம் ஆண்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.12.2 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக தொலைவில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்

தமிழ்நாட்டின் மலைப்பாங்கான மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக நலத் திட்டங்களைச் செயல்படுத்த 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளில் சிறப்பு நிதி ஒப்பளிக்கப்பட்டது. இந்நலத் திட்டங்கள் 2015-2016 ஆம் ஆண்டு சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தொலைவில் உள்ள மலைப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்தும்

விரைந்து செயல்படுத்தப்படுவது குறித்தும் ஆய்வு செய்வதற்குத் தேவையான காலமுறைக் கூட்டங்கள் மாநில அரசால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

2.13 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29-4-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-ல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது சிறப்பு முயற்சிகள் துறையின் நோக்கமாகும்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 2-11-2006 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146-ல் "சிறப்பு முயற்சிகள்'' என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்'' சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை "சிறப்பு முயற்சி" திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18-1-2007ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் ''சிறப்பு முயற்சி'' திட்டமாக அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

2.14 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், வட்டாரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளை களைவதற்குரிய முக்கிய சமூக காரணிகளான சுகாதாரம் மற்றும்

2016 செப்டம்பர் 2]

கல்வி, மேலும் பிற சமூக, பொருளாதார காரணிகளான தனிநபர் வருமானம், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை மற்றும் பாலினம் சார்ந்த வளர்ச்சி ஆகிய காரணிகளின் அடிப்படையில் 100 மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பின்தங்கிய வார்டுகள் கண்டறியப்படும். அரசாணை நிலை எண் 13, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 7-4-2013-ல் ஆண்டிற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி நிறுவப்பட்டுள்ளது. இந்நிதியின்மூலம் இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகளை களையும் பொருட்டு இலக்குகளை கொண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாணை நிலை எண் 68, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 26-8-2015-ல் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக மாநிலத்தில் உள்ள 105 பின்தங்கிய வட்டாரங்களை பொருத்தமான அளவுகோலின் அடிப்படையில் தேர்வு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2.15 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல்

8-8-2014 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 இன் முக்கியமான குறிக்கோளின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டை புத்தாக்க மையமாக உருவாக்குவதற்கு "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" (Tamil Nadu Innovation Initiatives-TANII) *என்ற ஓர் அமைப்பினை மாநில திட்டக்குழுவில் நிறுவுவதற்கு அரசு ஆணை (நிலை) எண் 93, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.) துறை, நாள் 26-9-2014-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஏற்கெனவே உள்ள பகுதி* II *திட்டத்தை மாற்றியமைத்து 2015-2016 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாநில புத்தாக்க நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக "மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது" என்ற பெயரில் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள்/நிறுவனங்கள் பின்வருமாறு:

i. *மாநிலத் திட்டக் குழு*

ii. *பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை*

iii. *மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை*

iv. *சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், ஒரு கூட்டுத் துறை நிறுவனம்*

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

3.1.1 மாநிலத் திட்டக் குழு

மாநிலத் திட்டக் குழு, தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக் குழு அளித்து வருகிறது.

3.1.2 மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள்

i. *ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்;*

ii. *வரைவு ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக் குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்;*

iii. *நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்;*

2016 செப்டம்பர் 2]

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்;

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்;

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்;

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்;

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்;

ix. மாவட்டத் திட்டக் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்;

x. ஐந்தாண்டுத் திட்டம்/ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களை தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்;

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல்;

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும் பொழுது அரசுக்கு அளித்தல்;

xiv. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது; மற்றும்

xv. தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் மூலமாக தமிழ்நாடு வரைவு நிலப் பயன்பாட்டுக் கொள்கையை உருவாக்குதல்.

2017-2018 ஆம் ஆண்டு முதல், திட்டம் மற்றும் திட்டம் சாராத செலவினங்களை ஒன்றிணைக்கக் கருதி உள்ளதால், மாநிலத் திட்டக் குழுவின் பணி மற்றும் செயல்பாட்டில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

"தொலைநோக்குத் திட்டம் - தமிழ்நாடு 2023" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ்நாட்டை உருவாக்க குறிக்கோள் கொண்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக் குழுவில் நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

3.1.4 மாநில புத்தாக்க நிதி

அரசு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்கெனவே உள்ள பகுதி - II புதிய திட்டத்தை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்கு 2015-2016-ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் ரூ.150 கோடி வழங்கப்படுகிறது. அரசு ஆணை

2016 செப்டம்பர் 2]
எண் 124, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 24-10-2014-ல் புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

2015-2016 ஆம் ஆண்டில் மொத்தம் 73 புதுமைத் திட்டங்கள் மற்றும் 3 திட்டங்கள், மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாட்டின்கீழும், இறுதி செலவாக ரூ.183.04 கோடியில் மூன்றாண்டுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் ஆண்டான 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.125.39 கோடியாகும்.

2016-2017 ஆம் ஆண்டில் புதுமை திட்டங்களுக்கான முதல் சுற்றில் மதிப்பீடு கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.75.16 கோடிக்கு 42 திட்டங்கள் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் 2016-2017 ஆம் ஆண்டின் இரண்டாவது சுற்று மதிப்பீட்டிற்காக துறைகளிடமிருந்து புதுமைத் திட்டங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

3.1.5 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண் 83, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 3-9-2014-ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம் 2015-2016 தயாரிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட 14 துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள் சார்ந்த துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்றனவா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன. மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டை குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராதத் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன. இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட

திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களை திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு தீர்வு காணப்பட்டது. மேலும், மாநில அரசு, மைய அரசு மற்றும் வெளிநாட்டு உதவிபெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

3.1.6 தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவானது தமிழ்நாடு வரைவு நிலப் பயன்பாட்டு கொள்கை உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் தொடர் ஆராய்ச்சி ஆய்வுகள் 2013 - 2014 மற்றும் 2014-2015 ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலே உள்ள ஆராய்ச்சி ஆய்வுகள் நிலப் பயன்பாடு மற்றும் நிலப் போர்வை குறித்த மாற்றம், நகரமயமாதல், தொழில்மயமாதல், சமூக பொருளாதார நிலை குறித்து ஏற்கெனவே உள்ள சட்டங்களின் கட்டமைப்பு மற்றும் நிலப் பயன்பாட்டு கொள்கைகளின் காரணமாக நிலப் போர்வை மாற்றங்கள் மற்றும் தாக்கங்களின் மதிப்பீடு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2015 - 2016 ஆம் ஆண்டில் எட்டு ஆராய்ச்சி ஆய்வுகள் மற்றும் ஆறு தொழிற்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016 - 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் புதிய ஆராய்ச்சி ஆய்வுகள் குறித்த முன்மொழிவுகள், சம்பந்தப்பட்டத் துறை / பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்பட்டுள்ளன. 2016 - 2017 ஆம் ஆண்டிற்கான புதிய ஆய்வுகள் குறித்த முடிவுகள் இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

அரசாணை எண் 40, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 4-3-2016-ல், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக (SADP), ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மலைப் பகுதிகளுக்கான, மாநில அளவிலான தொழில்நுட்ப நிறுவனம் (STCHA) தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் செயல்பட உள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டமானது உத்தேசிக்கப்பட்டுள்ள

2016 செப்டம்பர் 2]
தாங்கல் மண்டலம் (Buffer Zone) பக்கத்தில், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி மற்றும் விரிவாக்கப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகள், தற்பொழுது உள்ள அல்லது நுண்ணிய நீர்ப்பிடிப்பு அடிப்படையில் திட்டமிடுதல் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

3.1.7 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

மாநிலத்தில் சமச்சீர் வளர்ச்சியடைய, அரசு உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்காக கொண்டுள்ளது. இதற்காக இவ்வரசு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை 2012-2013-ல் அறிமுகப்படுத்தியது. நிதி சமூக பொருளாதார வளர்ச்சி குறியீடுகளின் அடிப்படையில் மண்டலங்களில் காணப்படும் வேறுபாட்டினைக் குறைக்க இந்நிதி அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர், தலா வருமானம், வேலைவாய்ப்பின்மை, வறுமை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின வேறுபாடுகள் போன்ற சமூக பொருளாதார குறியீட்டுக் காரணிகளை இந்நிதி அடிப்படையாகக் கொண்டது. ஊரகப் பகுதிகளில் உள்ள வட்டாரத்தினை அடிப்படை அலகாகவும் மற்றும் நகரப்பகுதிகளில் வார்டுகளை அடிப்படை அலகாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட அளவிடக்கூடிய குறியீட்டு காரணிகளை கொண்டு அடிப்படை அலகுகளான வட்டாரம், வார்டுகள் ஒப்பிட்டு பின்தங்கிய நிலை அளவிடப்படுகிறது. நகரப் பகுதிகளில், நகராட்சி, மாநகராட்சி வார்டுகளில் அதிக அளவில் குடிசை பகுதிகள் அமைந்துள்ள வார்டுகளை (Slum population) பின்தங்கிய பகுதிகளாக கருதி இப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நகர பஞ்சாயத்துகளிலும் பின்தங்கிய வட்டாரப் பகுதிகளுக்கு உட்பட்டு, மேலும் குறைந்த அளவு மக்கள் தொகை நெருக்கமுள்ள பகுதிகளாக இருப்பின் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும்.

இத்திட்டத்தை, மாநிலத் திட்டக் குழு மாவட்டந்தோறும் உள்ள மாவட்ட திட்ட குழுக்கள்மூலம் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. மாநிலத் திட்டக் குழுவின் முக்கிய செயல் தலைவராக, மாவட்ட ஆட்சித் தலைவர் விளங்குகிறார். மாநில அளவிலான அதிகார குழுவின் வழிகாட்டலின்படி, தொலைநோக்குத் திட்டங்களுக்கு ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் இந்நிதியைக் கொண்டு செய்து வருகிறது. சமச்சீர் வளர்ச்சி நிதிக்காக, ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டாரங்களில், 105 வட்டாரங்கள் பின்தங்கிய வட்டாரங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய நிலையை கண்டறிய கலந்தாய்வின் மூலமும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான குறியீட்டு காரணங்களைக் கொண்டு பின்தங்கிய நிலையை கண்டெடுத்து சிறப்பு ஆய்வும் செய்து வருகிறது. இதற்கு மாவட்ட ஆதார நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவி வருவதுடன், மற்ற மாவட்ட அளவிலான, பல அரசு துறைகளும், தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கவும் மற்றும் தனித் திட்டம் தயாரிக்கவும் உதவுகின்றன. தற்பொழுது 72 வட்டாரம் மற்றும் 3 நகரப் பகுதிகளுக்கு தொலைநோக்குத் திட்டம் (Perspective Plan) தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பின்தங்கிய காரணிகளை நேரடியாக தவிர்க்கும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய காரணிகளான வறுமை, வாழ்வாதாரம், கல்வி, சத்துணவு, சேவை வழங்குவதில் முன்னேற்றம், அடிப்படை வசதிகள், வாழ்வாதார வாய்ப்புகள், சாலை இணைப்பு, போக்குவரத்து வசதி போன்றவை, பலவித முன்னேற்றங்களையும் அடைய வழிவகுக்கும். வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு, கல்வி மேம்பாடு, சிறந்த சுகாதார வசதி திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு, மனித திறன் மேம்பாடு போன்றவற்றிற்கான முன்னேற்றத்திற்கு மாநில சமச்சீர் நிதியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் யாவும் மாநில அதிகாரக் குழுவால் கண்காணிக்கப்பட்டு மற்றும் நிதி ஒதுக்கீடு ஏற்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிதியின் செயல்பாடு மாநில அளவிலான கண்காணிப்புக் குழு, உறுப்பினர் - செயலர், உள்ளிட்ட மாநில கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் இதர மாநிலத் திட்டக் குழு அலுவலர்கள் மற்றும் மாவட்ட திட்டக் குழு அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது.

இந்நிதியின்கீழ் இதுவரை 452 திட்டங்கள் ரூபாய் 274.25 கோடிக்கு பின்தங்கிய வட்டாரங்களான கிராம பகுதிக்கும் நகர வார்டுகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வருகிற 2016-2017 நிதி ஆண்டிற்கு ரூபாய் 100 கோடி என்ற அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2016 செப்டம்பர் 2]

3.1.8 மனித மேம்பாட்டு அறிக்கை

மாநிலத் திட்டக் குழு 32 மாவட்டங்கள் மற்றும் மாநிலத்திற்கான மனித மேம்பாட்டு அறிக்கையை மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளில் இடைவெளியை நீக்கும் திட்டத்தின்கீழ் தயாரித்து வருகிறது. மனித மேம்பாட்டுக் குறிப்பீடுகள் மாவட்டங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை வெளிக்கொணரும் மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள், மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஆராயும். மனித மேம்பாட்டு அளவுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான தொலைநோக்குத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளீடுகளை அளிப்பதற்கும் இவ்வறிக்கை பயனுள்ளதாய் அமையும்.

3.1.9 மாநில மதிப்பீடு மற்றும் ஆய்வுக் குழு

அரசு ஆணை எண் 78, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 3-9-2014-ல் மாநில மதிப்பீடு ஆலோசனைக் குழு கூடுதல் பணிகளுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர், அதன் தலைவராவார். அக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும். இக்குழுவின் பணிகள்:—

i. *மாநில மதிப்பீட்டு குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ஆய்வுகளுக்கான செயல் முறைகளுக்கு ஒப்புதல் அளிப்பதும்;*

ii. *இடைநிலை மதிப்பீடு அறிக்கைகளையும், வரைவு அறிக்கைகளையும் இறுதி செய்வதும்;*

iii. *மதிப்பீடு ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கான மேல் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பதும் ஆகும்.*

3.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

உலகப் பொது மறையாம் திருக்குறளினை வகுத்துக் கொடுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள் எண்களின் (அதாவது புள்ளி விவரங்களின்) புள்ளியியலின் முக்கியத்துவத்தை இக்குறளில்

இயம்பியுள்ளார். அதனடிப்படையில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை தமிழகத்திற்கான புள்ளி விவரங்களை வேளாண்மைத் துறை, தொழில் துறை, வீட்டு வசதி மற்றும் கட்டடப் புள்ளி விவரங்கள், சந்தை மற்றும் விலைப் புள்ளி விவரம், மாநில வருவாய் மதிப்பீடு மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உட்பட பல்வேறு திட்டங்கள் வாயிலாக புள்ளிவிவரம் சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து அரசுக்கு புள்ளி விவரங்கள் வழங்குவதில் மாநில முகமை மையமாக செயல்படுகிறது. தமிழக அரசும் இந்திய அரசும் கொள்கை முடிவெடுக்கவும் நலத் திட்டங்களை செயல்படுத்தவும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை சமூக பொருளாதார காரணிகளை உரிய நேரத்தில் தேவையான, நம்பகமான முறையில் அளித்து வருகிறது.

3.2.1 துறையின் செயல்பாடுகள்

பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகள் இத்துறையின் மூலம் கணிக்கப்பட்டு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதோடு மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசின் தேவைக்கேற்ப வழங்குவது இத்துறையின் முக்கிய செயல்பாடாகும். மேலும், இத்துறையால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தமிழ்நாடு புள்ளியியல் கையேடு, பருவம் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கை போன்றவை பல்வேறு துறைகளுக்கும் உடனடி பார்வைக் கையேடுகளாக பயன்படுகின்றன. இவை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் பரவலாக பயன்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு துறை சம்பந்தப்பட்ட திட்ட செயல்பாடுகளை இத்துறையின் தொழில்நுட்ப பணியாளர்கள் மதிப்பீடு செய்து பல்வேறு ஆய்வறிக்கைகள் மூலம் அரசின் சமூக பொருளாதார திட்டங்கள் சிறப்பாக செயல்பட பணியாற்றி வருகின்றனர்.

பன்னாட்டு அளவில் பல்வேறு நாடுகள் மக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்காக ஆதார ரீதியிலான கொள்கை

2016 செப்டம்பர் 2]

முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடங்கியுள்ளது. இந்த சிறப்பு செயலாக்கத்தினை நமது மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக இத்துறையில் சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.2.2 துறையின் புதிய முயற்சிகள்

1. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் `புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம்' அமைத்தல்

இத்துறை இதற்கு முன்னர் புள்ளி விவரங்களை சேகரித்து அரசுக்கும் பல்வேறு துறைகளுக்கும் வழங்கும் பணியை மேற்கொண்டு வந்தது. தற்போது, இத்துறை உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவ்விவரங்களை சிறப்பாக ஆய்வு செய்து பல்வேறு சிறப்பு அறிக்கைகள் வெளியிடும் துறையாக மாறத் தொடங்கியுள்ளது.

பல்வேறு அரசுத் துறைகள் செயல்படும்போது எழும் எண்ணிலடங்கா விவரங்களை ஆராய்ந்து, பயனுள்ள அறிக்கைகளாக அரிதாக வகைப்படுத்தப்படுகிறது. 2015-2016-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் தமிழ்நாடு மின் ஆளுமை குழுவுடன் இணைந்து “புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம்'' ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இம்மையம் உயர்மட்டக் கொள்கைகள் முடிவெடுப்பதற்கு வேண்டிய அடிப்படை விவரங்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை உருவாக்கும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

இப்புதிய பகுப்பாய்வு மையமானது, நவீன தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பல்வேறு துறை திட்டங்களின் தேவையான புள்ளிவிவரங்களை அளித்து கொள்கை முடிவுகளை விரைவாக எடுக்க உதவுவது இதன் நோக்கமாகும். இதற்காக “செயல்படும் பிரிவு” ஒன்றும் துறையில் உருவாக்கப்பட்டு பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக தொகுத்து பிற துறைகளுக்குத் துல்லியமாக தேவையின் அடிப்படையில் வழங்கும்.

இரு கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தில் புள்ளியியல் தொழில் உத்தியைப் பயன்படுத்தி தீர்க்கமான மற்றும் விரிவான பகுப்பாய்வு உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மாதிரி ஆய்வுக்காக, மிக அதிக புள்ளி விவரங்களை கொண்டுள்ள பள்ளி கல்வித் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகள் முதற்கட்டமாக தங்களது புள்ளி விவரங்களை பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளன.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் - மாநில புத்தாக்க நிதி 2015-2016-ன்கீழ், இத்திட்டத்திற்கான மொத்த செலவின நிதியாக ரூ.428.66 இலட்சம் (முதலாண்டு ரூ.63.00 இலட்சம், இரண்டாம் ஆண்டு ரூ.365.66 இலட்சம்) வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டு அரசாணை எண் 20, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள். 26-2-2016-ன்படி 2015-2016 ஆம் ஆண்டிற்கான முதற்கட்டமாக ரூ.63.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு குடும்ப நிலை குறித்த குழு ஆய்வு நடத்துதல்

தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது இந்த ஆய்வின் நோக்கமாகும். சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் உரிய நேரத்தில் புள்ளி விவரங்கள் வழங்குவது இந்த ஆய்வின் நோக்கமாகும். தமிழ்நாடு குடும்ப நிலை குழு ஆய்வானது தொடக்க நிலை, இறுதி நிலை என இரு கட்டங்களாக மூன்று ஆண்டுகள் நடத்தப்பட உள்ளது. இந்த ஆய்வு சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம் (Madras Institute of Development Studies) மற்றும் மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஆய்வு மையத்தின் மாதிரி ஆய்வு நிறுவனம் (Survey Research Centre of Michigan University) ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படும். இதற்கான புரிந்துணர்வு வரைவு ஒப்பந்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்திற்கான மாதிரி வடிவமானது (Sample Design) சுகாதாரம், வருமானம், நுகர்வு, இடப் பெயர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார உடைமைகள் மற்றும் மக்களாய்வு ஆகிய காரணிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டு வருகிறது.

2016 செப்டம்பர் 2]

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் - மாநில புத்தாக்க நிதி 2015-2016-ன்படி இத்திட்டத்தின் மொத்த செலவின தொகையாக ரூ.390.00 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3. தமிழக – வயது முதிர்ந்தோரின் சமூக – பொருளாதார நிலை குறித்த ஆய்வு

மூத்த குடிமக்களின் உடல்நிலை, மனநிலை, நிதி மற்றும் வாழ்வு சூழ்நிலை அறிந்து "தரவு தளம்" (Data base) தயாரித்து அவர்களின் வாழ்வு நிலையை மேம்படுத்துவது இந்த தொடர்குழு ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, தெற்கு ஆசியா மற்றும் இத்துறையுடன் இணைந்து மூன்றாண்டுகளுக்கு நடத்தப்படும் தொடர் ஆய்வாகும். அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, தெற்கு ஆசியா நிறுவனம் தொழில்நுட்பத்திற்கும் மற்றும் தரக்கட்டுப்பாட்டிற்கும் ஆலோசனை வழங்கும் மையமாக செயல்படும். மேலும், வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த, தேவைப்படும் மிக முக்கிய நுணுக்கமான தீர்வுகள் அடைய இந்த ஆய்வின் முடிவுகள் தனித்துவத்துடன் உதவும்.

இந்த தொடர்குழு ஆய்வினை மூன்று ஆண்டுகளுக்கு நடத்த திட்ட செலவினமாக ரூ.606.00 இலட்சம் (ரூ.90.00 இலட்சம் + ரூ.254.01 இலட்சம் + ரூ.261.99 இலட்சம்) அரசு புத்தாக்க நிதி - தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து 2015-2016 ஆம் ஆண்டிற்கு அரசாணை (நிலை) எண் 21, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ(ம) 2,இ) துறை. நாள் 27-2-2016 மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.3 வேளாண்மை புள்ளிவிவரங்கள் சேகரித்தல்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிக்கும் வேளாண்மை தொழில்களின் பங்கு மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்துறையின் வேளாண்மை புள்ளிவிவரம் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப் பயன்பாடு, நீர்ப் பாசனம், நில உடைமை, பயிர் காப்பீடு, விவசாயக் கூலி, விவசாயிகளின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள்

விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகள் மேற்கொள்ள பயன்படுகிறது. இத்துறையில் பின்வரும் பல்வேறு விவசாயம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- நம்பகத்தன்மையான உற்பத்தி மதிப்பீடுகளையும், ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விகிதத்தினையும் கணக்கிடுவதற்காக பயிர் அறுவடை பரிசோதனை திட்டத்தின்கீழ் பழங்கள், காய்கறிகள் மற்றும் குறும் பயிர்கள் ஆகியவற்றில் பயிர் அறுவடை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தில் மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, அன்னாசி மற்றும் எலுமிச்சை ஆகிய பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு, சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்குமான விளைச்சல் விவரங்கள் கணிக்கப்படுகிறது. இதற்காக 2015-2016 ஆம் ஆண்டில் 682 கிராமங்களில் 1,364 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறும் பயிர் திட்டத்தில் 2015-2016 ஆம் ஆண்டில் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி, இஞ்சி ஆகிய பயிர்களில் 613 கிராமங்களில் 1,226 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ஒவ்வோர் ஆண்டும், ஜமாபந்தி மற்றும் பயிர் அறுவடை ஆய்வின் இறுதி முடிவுகளின் அடிப்படையில் பயிர் விளைச்சல் விவரங்களை ஆய்வதற்கு முன்னதாக பயிர் பரப்பு மற்றும் பயிர் உற்பத்தி விவரங்களை பருவ வாரியாக தெரிந்து கொள்வதற்காக முதன்மையான 56 உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

- பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின்கீழ் 9276 பயிர் அறுவடை பரிசோதனைகள் 2015-2016 ஆம் ஆண்டு (பசலி ஆண்டு 1425) நடத்தப்பட்டு 16 முக்கிய பயிர்களுக்கு விளைச்சல், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.

- மாநில மற்றும் மாவட்ட வாரியாக தென்னை மற்றும் கமுகு தோப்புகளின் எண்ணிக்கை / ஹெக்டேருக்கு சராசரியாக காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை / ஆண்டுக்கு தோப்புகளின் சராசரி உற்பத்தி வீதம் ஒரு ஆண்டின் மொத்த உற்பத்தி மாநிலத்திற்கும்

மாவட்டத்திற்கும் தென்னை மற்றும் கமுகு ஆய்வு திட்டத்தின்கீழ் கணக்கிடப்படுகின்றன.

- *2015-2016 ஆம் ஆண்டில் (பசலி ஆண்டு 1425), இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்பொருட்டு, 20 பயிர்களின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரம்/குறுவட்டம் வாரியாக காரிப் பருவத்தில் 64,120 பயிர் அறுவடை பரிசோதனைகளும், ராபி பருவத்தில் 54,906 பயிர் அறுவடை பரிசோதனைகளும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.*

- *2016-2017 ஆம் ஆண்டிற்கு "பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா" என்ற புதிய பயிர் ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் காரிப் பருவம் முதல் கிராம அல்லது குறுவட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமங்களில் உள்ள குறிப்பிட்ட பயிர்களின் சராசரி விளைச்சல் பயிர் அறுவடை சோதனைகளின்மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.*

- *மழைப்புள்ளி விவரத் திட்டத்தின்படி பல்வேறு துறையின் 628 நிலையங்களிலிருந்து சாதாரண மழைமானிமூலம் மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றது.*

- *நீர்ப் பாசன புள்ளியியல் திட்டத்தின்கீழ் ஆதார வாரியாக, பயிர் பரப்பு வாரியாக மற்றும் நீர் பிடிப்புப் பகுதி வாரியாக புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வட்ட வாரியாக மாவட்ட நீர்ப்பாசன புள்ளியியல் கையேடு வெளியிடப்படுகின்றது. பொருளாதார நிலைத் தன்மையைத் தீர்மானிப்பதில் பெரு மற்றும் நடுத்தர பாசன திட்டங்களின் பயன்களை செலவு - பயன் அடிப்படையில் மதிப்பீடு செய்ய இவ்விவரங்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட நீர்ப் பாசன விவரங்கள் தொகுக்கப்படுகின்றன.*

- *மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் 385 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, வயலில் வேலை செய்யும் தொழிலாளர் மற்றும் இதர விவசாயத் தொழிலாளர்கள் என இரு பிரிவாக சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாநில அளவிலான சராசரி தினக் கூலி விகிதம் மற்றும் விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.*

- விற்பனை மிகுதி திட்டத்தின் நோக்கமானது, பயிரிடுபவரின் சொந்த உபயோகம், கூலி வகை மற்றும் விதை ஒதுக்கீட்டிற்கு பின் விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நெல் குறித்து அளவிடுவதாகும்.

3.2.4 மத்திய நிதி உதவித் திட்டங்கள்

- பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளி விவரங்கள் கணக்கெடுக்கப்படுகிறது. காரிப், ராபி, கோடை ஆகிய மூன்று பருவத்திலும் உயர் ரகம், உள்ளூர் ரகம் பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பு மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டு, 3484 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பருவ வாரியாக பயிர் பரப்பு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு விவரங்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் மத்திய, மாநில அரசு அலுவலர்களால் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத் தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுவதுடன், முக்கிய உணவுப் பயிர்களுக்கு விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்கவும், அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்கொள்ளுதலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

- வேளாண்மைக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை 1970-1971 முதல் நடத்தப்படுகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு ஒன்பதாவது கணக்கெடுப்பாகும். 9-வது வேளாண்மைக் கணக்கெடுப்பின் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு ஜூலை 2015 - ஜூன் 2016-யினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஜூலை 2016 முதல் நடைபெற்று வருகிறது. இக்கணக்கெடுப்பு வருவாய்த்

துறையால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் அடிப்படையில் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மூன்று கட்டங்களில் இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பு கைப்பற்றுதாரர்களை முக்கிய அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். நிலப் பதிவேடுகளிலிருந்து நில சாகுபடியாளர்களின் நில கைப்பற்று, நில குத்தகை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிர் சாகுபடி முறை, சமூக நிலை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள், கருவிகளின் பயன்பாடு, பூச்சிக் கொல்லி, இயற்கை உரப் பயன்பாடு போன்ற பல புள்ளி விவரங்கள் இக்கணக்கெடுப்பின்மூலம் சேகரிக்கப்படுகின்றன.

3.2.5 மாநில வருவாய் புள்ளி விவரங்கள்

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் நாட்டின் மாநிலங்களுக்கிடையேயான நிலையினை ஒப்பிட்டு ஆய்விட அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும் அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

1. மாநில வருவாய்

மாநில வருவாய் பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின்கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011-2012 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு 2011-2012, 2012-2013, 2013-2014, ஆம் ஆண்டுகளுக்கு திருத்திய மதிப்பீடும், 2014-2015 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2015-2016 ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடும் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

[2016 செப்டம்பர் 2

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு (அடிப்படை ஆண்டு 2011-12)

(ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி		நிகர மாநில உள்நாட்டு மதிப்பீடு	
		நடப்பு விலையில்	நிலையான (2011–12) விலையில்	நடப்பு விலையில்	நிலையான (2011–12) விலையில்
1.	2011–12	751485	751485	674478	674478
2.	2012–13	855481	787907	768951	705426
3.	2013–14 (தி.ம.)	971090	842182	861429	740623
4.	2014–15 (து.ம.)	1092564	900628	970953	790760
5.	2015–16 (மு.ம.)	1212668	979816	1080461	863423
தி.ம. – திருந்திய மதிப்பீடு, து.ம. – துரித மதிப்பீடு, மு.ம.– முன் மதிப்பீடு					


தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

(ரூபாயில்)

வ எண்	ஆண்டு	நடப்பு விலையில்	நிலையான (2011–12) விலையில்
1.	2011–12	92984	92984
2.	2012–13	105032	96355
3.	2013–14 (தி.ம.)	116583	100233
4.	2014–15 (து.ம.)	130197	106034
5.	2015–16 (மு.ம.)	143547	114712
தி.ம. – திருந்திய மதிப்பீடு, து.ம. – துரித மதிப்பீடு, மு.ம.– முன் மதிப்பீடு			

2016 செப்டம்பர் 2]

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி – நடப்பு மற்றும் நிலையான விலையில் (2011–12)



மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் (அடிப்படை ஆண்டு: 2004-2005) 2004-2005 ஆம் ஆண்டு முதல் 2011-2012 ஆம் ஆண்டு வரையில் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2. மாநிலக் கணக்கு

தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை 2013-2014 (A/C), 2014-15 (R.E), 2015-2016 (B.E) *ஆண்டுகளுக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரவு-செலவு கணக்கு விவரங்களும் சேகரிக்கப்பட்டு மாநில வருவாய் மதிப்பீடு கணிக்க பயன்படுத்தப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மூலதன ஆக்கம் ஆகியவற்றைக் கணிக்க மண்டல மற்றும் உள்நாட்டு ஆட்சியகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.*

3. மூலதன ஆக்கம்

மாநிலத்தின் ஒவ்வொரு பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் மொத்த நிலையான மூலதனம் கணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்கான மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள் 2004-2005 முதல் 2010-2011 ஆகிய வருடங்களுக்கு கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 2011-2012 முதல் 2014-2015 ஆகிய வருடங்களுக்கு மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள்

கணிக்கப்பட்டு வருகின்றன. மூலதன கணிப்பு வருங்கால வளர்ச்சி சார்ந்த மாநில பொருளாதாரத்தைப் பற்றி அறிந்துகொள்ளவும் பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் பங்கினை தெரிந்துகொள்ளவும் உதவுகிறது.

3.2.6 விலைவாசி மற்றும் விலைவாசி குறியீட்டெண்

1. அங்காடி புலனாய்வு மற்றும் விலைப் புள்ளி விவரம்

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வாரந்தோறும் / மாதந்தோறும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. மொத்த விலைகள் மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண் கணக்கிடுவதற்கு விலை விவரக் குறிப்பு ஒரு முக்கிய உள்ளீடாகும்.

2. மொத்த விலை குறியீட்டெண்

வேளாண்மை மற்றும் இதர பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டிற்கான மொத்த விலை குறியீட்டெண் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

3. தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் திட்டம் மத்திய மற்றும் மாநில தொடருக்கு தனித் தனியாக கணக்கிடப்படுகிறது. மத்திய அரசினைப் பொறுத்த வரையில் தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க தமிழகத்திலிருந்து ஆறு மையங்களில் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் குன்னூர்) விலைவாசிப் புள்ளிகள் சேகரிக்கப்பட்டு சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப்பட்டு மத்திய அரசின்மூலம் குறியீட்டெண்கள் வெளியிடப்படுகின்றன. மாநில அரசினைப் பொறுத்தவரை கடலூர், நாகர்கோவில், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மையங்களுக்கு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மூலமாகவே மாதந்தோறும் தொழிலாளர் நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

2016 செப்டம்பர் 2]

3.2.7 சமூகப் புள்ளியியல்

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறியவும் அதனைப் புரிந்துகொள்ளவும் சமூகப் புள்ளியியல் விவர பகுப்பாய்வுகள் அடிப்படை கருவியாக விளங்குகின்றன. தனி மனித நிலை குறித்தும் சமூகத்தின் சூழ்நிலை குறித்தும் மனிதனின் பொருளாதார நடத்தையின் மூலமும் சமூக சூழ்நிலையில் இருந்தும் அறிய முடிகிறது. சமூகப் புள்ளியியல் ஆய்வு குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் உட்பட அனைத்து பிரிவுகளின் விவரங்களும் சிறப்பாக ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விவரங்களும் இவ்வாய்வின்மூலம் கணக்கிடப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களான தேசிய மாதிரி ஆய்வு, ஆண்டுத் தொழில் ஆய்வு, தொழில் உற்பத்தி குறியீடு, வீட்டு வசதி மற்றும் கட்டட புள்ளி விவரங்கள், கைத்தறி மற்றும் தமிழ்நாடு புள்ளியியல் கையேடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. தேசிய மாதிரி ஆய்வு

தேசிய மாதிரி ஆய்வு, மாநில அளவில் மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி செயல்படுகிறது. குடும்பத்தின் நுகர்வுச் செலவு, அமைப்புசாரா தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை, நிலம் மற்றும் கால்நடை கையிருப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற குடிசை சார்ந்த விவரங்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும். மாதிரி ஆய்வுகளின் வாயிலாக கிடைக்கப்பெறும் விவரங்களைக் கொண்டு பல்வேறு பொருள் குறித்து கணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய மாதிரி ஆய்வு 73-வது சுற்றில் (ஜூலை 2015-ல் தொடங்கி ஜூன் 2016 வரை) பதிவு பெறாத, வேளாண் சாராத நிறுவனங்கள் குறித்த ஆய்வு நடைபெற்றதுடன் தற்போது 74-வது சுற்றின் வாயிலாக சேவை நிறுவனங்கள் குறித்த ஆய்வு நடைபெற்று வருகின்றது.

2. வீட்டு வசதிப் புள்ளி இயல்

இத்திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடுகள், தற்போது உள்ள வீடுகளில் மாற்றங்கள் செய்வது போன்ற விவரங்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிடமிருந்து பொது மற்றும் தனியார் துறைகளின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இவ்விவரங்கள் கட்டட கட்டமைப்புக்கான கொள்கை முடிவுகள் மேற்கொள்ள அரசுக்கு பயன்படுகிறது.

3. வீடு கட்டத் தொடங்கும் குறியீடு

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்ட அமைச்சகத்தின்கீழ் உள்ள தேசிய கட்டிட அமைப்புமூலம் வீடு கட்டத் தொடங்கும் குறியீடு தமிழகத்தின் தேர்வு செய்யப்பட்ட நகரங்களிலிருந்து புள்ளி விவரங்கள் பெறப்படுகின்றன. இக்குறியீடு பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிய முக்கிய காரணியாக உள்ளது. மேலும் வீடு கட்டத் தொடங்கும் குறியீட்டு கணக்கீட்டின் நோக்கமானது வீட்டு வசதித் திட்டத்தில் நிகழும் மாற்றங்களையும் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியைக் கண்டறியப் பயன்படுகிறது.

4. கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண்

இக்குறியீட்டெண் கட்டுமானப் பொருட்கள், தொழிலாளர் மற்றும் இதரச் செலவு ஆகியவற்றின்மூலம் பதினாறு மாவட்டங்களிலிருந்து விவரங்கள் பெறப்பட்டு கணிக்கப்படுகிறது. தமிழகத்தின் கட்டுமான செலவினத்தில் நிலவும் வேறுபாடுகளை அறிய இந்த ஆய்வு முடிவுகள் பயன்படுகின்றன.

3.2.8 தொழிற் புள்ளி விவரங்கள்

1. ஆண்டுத் தொழில் ஆய்வு

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம், 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)-ன்கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 செப்டம்பர் 2]

மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, ஆண்டு தொழில் ஆய்வு 2013-2014 தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் மாதிரி ஆய்வுமூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விவரங்கள் தொழிற் உற்பத்திப் பிரிவிலிருந்து மாநில வருவாயின் பங்கினை கணிப்பதற்கு உதவுகிறது.

2. தொழிற் உற்பத்திக் குறியீட்டெண்

கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று பெரும் தொழில் பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்பட்டு, அதனடிப்படையில் தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. கனிமம் தொகுப்பில் பதினான்கு வகையான விவரங்களும், உற்பத்தி தொகுப்பில் 272 தொழிற்சாலைகளிலிருந்து விவரங்களும் மற்றும் மின்சாரத் தொகுப்பில் ஒரு வகைக்கும், மாதாந்திர உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவ்விவரத்திலிருந்து குறுகிய கால தொழிற் உற்பத்தி வளர்ச்சியினை கணிக்க முடிகிறது.

3. கைத்தறிப் புள்ளிவிவரம்

கைத்தறித் திட்டத்திலிருந்து கைத்தறி துணியின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்படுகின்றன. இவ்விவரங்கள் 178 குவி மையங்களிலிருந்து (சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) சேகரிக்கப்பட்டு நெசவாளர்களின் சமுதாய பொருளாதார நிலை குறித்த ஆய்வு ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்றது.

3.2.9 பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை, அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விரிவான புள்ளிவிவரக் கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருவாய் மதிப்பீடுகளில் அமைப்புசாரா துறையின் பங்களிப்பை கணிப்பதற்குத் தேவையான

தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும்' செயல்படுத்துவதற்கும் தேவையான நிறுவன புள்ளிவிவரங்கள் குறிப்பாக, அமைப்புசாரா துறை, அவற்றில் வேலைவாய்ப்பு நிலை பற்றிய விவரங்கள் இக்கணக்கெடுப்பின்மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

3.2.10 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, ஆண்டு புள்ளி இயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளி இயல் கையேடு, வட்டாரப் புள்ளி இயல் கையேடு ஆகிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

3.2.11 இந்திய புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இத்திட்டமானது மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். மத்திய மற்றும் மாநில புள்ளி விவர அமைப்பு ஒருங்கிணைப்பிற்கும் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, தமிழக அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரூ.40.76 கோடி மதிப்பீட்டிற்கு 28.09.2011—ல் ஏற்படுத்தியது. தற்போது, மத்திய அரசு வழங்கியுள்ள அறிவுரைகளின்படி, திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரூ.40.76 கோடியிலிருந்து ரூ.24.15 கோடியாக (ரூ.19.31 கோடி மத்திய அரசின் பங்கு மற்றும் ரூ.4.84 கோடி மாநில அரசின் பங்கு) குறைக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்து இனங்களையும் செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையிலும் மற்றும் மத்திய நிதியுதவியில் ஏற்படும் குறைவினை சரிசெய்யும் பொருட்டும் மாநில அரசு கட்டாயம் அளிக்க வேண்டிய தொகையான ரூ.4.84 கோடிக்கு அதிகமாக ரூ.14.52 கோடியினை வழங்கியுள்ளது.

3.2.12 மனித வள மேம்பாடு

இத்துறை பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடு இன்றியமையாததாகும். ஆகவே, திறனுள்ள அலுவலர்களை துறையில் நியமிக்கும் வகையில் இருபத்திரண்டு புள்ளியியல் உதவி இயக்குநர்கள் நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து நியமனம் செய்யப்பட்டனர்.

2016 செப்டம்பர் 2]
மேலும், இத்தேர்வாணையத்தின் மூலம் 268 புள்ளியியல் உதவி ஆய்வாளர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர்.

3.2.13 தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்

இத்துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளிக்க வேண்டி 'தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்' நிறுவப்பட்டு, தற்பொழுது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு 1-5-2012 முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்திற்கு, 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திருத்திய மதிப்பீடு ரூ.44.59 இலட்சம் ஆகும். இம்மதிப்பீட்டுத் தொகையில், பதிமூன்று விதமான பயிற்சிகள் பதினேழு தொகுதிகளாக நடத்தப்பட்டு' 503 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 2016-2017 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இப்பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.58.63 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம், இத்துறை பணியாளர்களுக்கு உரிய கால இடைவெளியில் பின்வரும் பயிற்சிகளை பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது:

- பொருளாதாரம் மற்றும் புள்ளிஇயல் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள், அலுவலக புள்ளிஇயல் அமைப்பு, அது தொடர்பான முறைகள், காரணங்கள் பகுத்தாய்தல் தொடர்பு திறமைகள், அறிக்கை தயாரிக்கும் திறமைகள் போன்றவற்றில் அறிமுகப் பயிற்சிகள்.
- தேவை அடிப்படையிலான குறுகிய கால பயிற்சிகள் முறையே தேசிய மாதிரி ஆய்வு, மாநில வருவாய் கணக்கீட்டு முறைகள், புள்ளி இயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களை பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து

நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, இத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும், கொள்கைகள் வகுப்பதற்கும் அரசுக்கு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு உதவும் பொறுப்பு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான 'தமிழ்நாடு - ஓர் பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தைத் தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv திட்ட நோக்கம் நிறைவேற்றல்

v. திட்டப் பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வது மற்றும் திட்டத்தின் செலவு பயன் பகுப்பாய்வு செய்வது.

3.3.3 ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை முறைப்படுத்தி பயனுள்ள வகையில் செயல்படுத்த உதவுகின்றன. இத்துறையால், இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மே 2016

2016 செப்டம்பர் 2]
வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 745 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டாய்வுகள் சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களைச் சார்ந்ததாகும்.

3.3.4 2015–2016 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII):

இத்திட்டத்தின்கீழ் அரசாணை எண் 7, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ(ம)ம) துறை, நாள் 19-1-2016 மின்னணு முறையில் விவரங்கள் சேகரிப்பதற்கும், இத்துறையின் ஊழியர்களுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்கும் அரசின் மூலம் ரூ.7.88 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) திட்டத்தின்கீழ் 2016-2017 ஆம் ஆண்டிற்கு மின் வழி மதிப்பீடு அமைப்புக்கான ரூபாய் 41.00 இலட்சம் வலைதளம், சமூக அறிவியலுக்கான புள்ளியியல் தொகுப்பு (SPSS) மென்பொருள், ஆலோசனை மற்றும் பராமரிப்பு மற்றும் பயிற்சி போன்றவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

3.3.5 புத்தாக்க முயற்சிகள்:

1. அரசாணை நிலை எண் 78, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ2(ம)ம), துறை, நாள் 16-9-2015-ன்படி,

 i மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளின் பட்டியலை இறுதி செய்வது மற்றும் இத்துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது குறித்தும் மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மாற்றி அமைக்கப்பட்டது.

 ii மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) புதியதாக உருவாக்கப்பட்டு இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் நிலை மற்றும் கண்டறியப்படும் ஆய்வின் முடிவுகளை ஆய்வு செய்து வருகிறது.

2. இத்துறை தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக

அமைப்புடன் இணைந்து மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டி பதிவேடு உருவாக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. இத்துறை தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் இணைந்து நடப்பில் உள்ள துறையின் கையேடு மற்றும் மதிப்பீட்டு முறைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

4. ஆய்வுக்கான புள்ளிவிவர சேகரிப்பை மேம்படுத்த தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு மூலம் இத்துறையின் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுவதும் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

5. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் வழிகாட்டுதலின்படி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் (0-6 வயது) ஊட்டச்சத்து நிலை குறித்து மிக பெரிய அளவிலான கணக்கெடுப்பு மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடு குறித்து ஆய்வினை செயல்படுத்தி வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

6. வெளி நிறுவனங்கள்மூலம் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அரசின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டு ஆய்வு நிறுவனங்களின்மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

7. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட ஆய்விற்கு தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உருவாக்கி வகுத்துத்தந்த திட்ட வரைவுரை வேண்டுதல் (RFP) படிவங்களை பயன்படுத்தி மூன்று மதிப்பீட்டாய்வுகள் துவங்கப்பட உள்ளன.

i தொடர் மற்றும் விரிவான மதிப்பீட்டு ஆய்வினை (CCE) பத்தாம் வகுப்பிற்கு கொண்டு செல்வதற்கான ஆய்வு மேற்கொள்வது.

ii மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்திற்கான ஆய்வு மற்றும் அதில் கிராமப்புற விவசாயிகளின் கூலி மற்றும் வேலை அளிப்பு மற்றும்

iii திருமாங்கல்யம் திட்டத்தின்கீழ் (தாலிக்கு தங்கம்) விலையில்லா தங்க நாணயம் வழங்குதல் குறித்த ஆய்வு.

3.3.6 2016–2017 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

2016-2017 ஆம் ஆண்டில் வேளாண்மை, வனம், கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் மற்றும் தொழில் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 12 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, ''தமிழ்நாடு - ஓர் பொருளாதார ஆய்வறிக்கை'' தயாரித்து வெளியிடும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.4 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்து வருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்தது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொது போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதர பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர்) தயார் செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-1-ன்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ. நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.0 கி.மீ. நீளத்திலும் இந்த வழித்தடங்களில் கீழ்க்காணும் நிறுத்த நிலையங்கள்: அமைந்துள்ளன.

வழித்தடம்—1: வண்ணாரப்பேட்டை - மண்ணடி - உயர் நீதிமன்றம் - சென்னை சென்ட்ரல் - அரசினர் தோட்டம் - எல்.ஐ.சி. - ஆயிரம் விளக்கு - ஏ.ஜி-டி.எம்.எஸ் - தேனாம்பேட்டை - நந்தனம் - சைதாப்பேட்டை - சின்னமலை - கிண்டி - ஆலந்தூர் - நங்கநல்லூர் சாலை - மீனம்பாக்கம் - சென்னை விமானநிலையம் ; மற்றும்

வழித்தடம்—2: சென்னை சென்ட்ரல் - எழும்பூர் - நேரு பூங்கா - கீழ்ப்பாக்கம் - பச்சையப்பன் கல்லூரி - செனாய்நகர் - அண்ணாநகர் கிழக்கு - அண்ணாநகர் கோபுரம் - திருமங்கலம் - கோயம்பேடு - புறநகர் பேருந்து நிலையம் - அரும்பாக்கம் - வடபழனி - அசோக் நகர் - ஈக்காட்டுத்தாங்கல் - ஆலந்தூர் - பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம்-1-ல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம்-2-ல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும், எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

2016 செப்டம்பர் 2]

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும், மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிருவாக ஒப்புதலை பிப்ரவரி 2009-ல் வழங்கியது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனம் (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டது. அதேபோன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Co-operation Agency) வெளிநாட்டு கடனுதவி பெறப்பட்டுள்ளது.

செலவினம் / செயல் முன்னேற்றம்

தமிழ்நாடு அரசு 2383.09 கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், 1854.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 30-6-2016 வரை 1950.53 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 365.55 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 70,94.74 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 98 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 100 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப் பாதைகளின் கட்டுமானப் பணிகள் 65 சதவிகிதமும் முடிவுற்றுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டு இறுதிவரை ஒட்டுமொத்த செயலாக்க

சாதனை 85 சதவிகிதமாகும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில், பெருந்திரள் இரயில் மற்றும் மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

பயணிகள் சேவையைத் துவக்கி வைத்தல்

வரலாற்று நிகழ்ச்சியாக, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான (10.15 கி.மீ) உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29-6-2015 அன்று பயணிகள் சேவையை துவக்கி வைத்தார்கள். மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடங்களான சின்னமலை முதல் சென்னை விமான நிலையம் மற்றும் ஆலந்தூர் முதல் புனித தோமையார் மலை வரையில் அடுத்த மாதம் துவக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலத்தடி வழித்தடங்களில் பயணிகள் சேவை பல்வேறு நிலைகளில் துவக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் இறுதி வாக்கில் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டம்-I-இன் நீட்டிப்பு

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்-1-ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப் பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் (9.051 கி.மீ), ரூ.3,770 கோடி செலவில் நீட்டிப்பதற்கான கருத்துருவினை தமிழ்நாடு அரசும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனமும் மத்திய அரசின் சட்டரீதியான ஒப்புதலுக்காகவும் நிருவாக ஒப்புதல் வழங்கும் பொருட்டும் முன்மொழிந்திருந்தது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு 15-6-2016 அன்று நிருவாக ஒப்புதல் அளித்தது. வண்ணாரப் பேட்டையிலிருந்து கொருக்குப்பேட்டை வரையிலான நிலத்தடி வழித்தடங்கள் / நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வழங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நீட்டிப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியதோடல்லாமல், கட்டுமானப் பணிகளையும் 23-7-2016 அன்று துவக்கி வைத்துள்ளார்கள்.

2016 செப்டம்பர் 2]

கட்டம்–2

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டம் தயாரிப்பதற்கான நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-2 மொத்தம் 104.5 கி.மீ நீளம் கொண்ட மூன்று வழித்தடங்களைக் கொண்டதாகும். (1) மாதவரம் முதல் சிறுசேரி வரை (பழைய மகாபலிபுரம் சாலை வழியாக), (2) சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரை (3) மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு, ஆலோசனை நிறுவனம் வழித்தட அமைப்பு நிலையங்களின் உத்தேசத் திட்டங்கள் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறது. தற்போது 100 சதவீத ஆரம்பக் கட்ட ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது, அவ்வறிக்கை நவம்பர், 2016-ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிணையாக, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-2-ற்காக தமிழ்நாடு அரசு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து "புதிய அலுவல் மேம்பாட்டு கடனுதவி"-யின் அடிப்படையில் இலகுவான கடனைப் பெறுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் 2016 ஆம் ஆண்டுக்கான சுழல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இணைப்பு V

(41 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

முன்னுரை

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (குறள் 1024)

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், ஓய்வூதியப் பலன்களை விரைவாக வழங்குவதை உறுதி செய்வதற்கும் 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

2. தமிழ் நாட்டில் 31-07-2016 நாள் நிலவரப்படி சுமார் 7,24,648 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	கருவூலம் மூலம்	பொதுத் துறை வங்கிகள் மூலம்	மொத்தம்
1.	மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்	3,50,810	47,898	**3,98,708**
2.	ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள்	68,022	10,490	**78,512**

2016 செப்டம்பர் 2]

வ. எண்.	விவரம்	கருவூலம் மூலம்	பொதுத் துறை வங்கிகள் மூலம்	மொத்தம்
3.	மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள்	1,74,636	13,912	**1,88,548**
4.	ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள்	26,807	4,493	**31,300**
5.	ஏனைய ஓய்வூதியதாரர்கள்	27,275	305	**27,580**
	மொத்தம்	**6,47,550**	**77,098**	**7,24,648**

__3.__ இந்த மானியக் கோரிக்கையின்கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

4. இந்த மானியக் கோரிக்கையின்கீழ், 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு 20,769.25 கோடி ரூபாயும், பல்வகைப் பொதுவான பணிகளுக்காக 129.00 கோடி ரூபாயும், சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக 20.43 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 20,918.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2016 செப்டம்பர் 2

5. ஓய்வூதியம் (Pension).

(i) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 1-7-1996 முதல் 30 ஆண்டுகளாக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) 1-1-2006 முதல், ஒரு ஓய்வூதியதாரர் குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ரூ. 3,050/- பெறத் தகுதியுடையவராவார்.

6. பணிக்கொடை (Gratuity).

(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity).

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடைக்கு கூடுதலாக ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டுமொத்த தொகையாகும்.

(ii) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity).

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

2016 செப்டம்பர் 2]

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை 1-1-2006 முதல் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்.

(iii) *ஓய்வுகாலப் பணிக்கொடை* (Retirement Gratuity).

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 161/2 மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப்

பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-1-2006 முதல் ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை ரூ. 10 இலட்சம் ஆகும். 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்.

7. குடும்ப ஓய்வூதியம் (Family Pension).

(i) அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

2016 செப்டம்பர் 2]

(ii) *விதவை அல்லது மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருளீட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக அல்லது பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். 28-11-2011 முதல் இம்மாநில ஓய்வூதியதாரர்களின் மணமாகாத / விவாகரத்து பெற்ற / விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியமாக மருத்துவப் படியுடன் ரூ. 3,050/- வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.*

(iii) *1-1-2006 முதல் வழங்கப்படும் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ. 3,050/- ஆகும்.*

8. கருணைத் தொகை (Ex-Gratia Payment).

பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற / பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-1-2016 முதல் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை 237 சதவீத அகவிலைப்படியுடன் ரூ. 605/-லிருந்து ரூ. 645/- ஆக உயர்த்தி அரசு' ஆணைகள் பிறப்பித்துள்ளது.

[2016 செப்டம்பர் 2

9. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension).

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியாக 331/3 விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

10. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்.

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவாக 240 நாட்களை ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும் போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்கு ஒப்படைப்பு செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

2016 செப்டம்பர் 2]

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும்’ சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் ரொக்கமாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் தர ஊதியமும், அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும், நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

11. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

(அ) அகவிலைப்படி.

(i) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) மருத்துவப்படி.

(i) 1-6-2009 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு ரூ. 100/- மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

(ii) தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ) பொங்கல் பரிசு.

அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ. 500/-அரசு வழங்குகிறது.

[2016 செப்டம்பர் 2

(ஈ) பண்டிகை முன்பணம்.

அரசு ஊழியர்களைப் போல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூ. 1,000/-லிருந்து ரூ. 2,000/- ஆக 14-3-2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

12. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014.

(i) *1995 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்திற்கு மாற்றாக வாழ்க்கைத்துணை உட்பட தமிழ்நாடு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014 நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு அதாவது 1-7-2014 முதல் 30-6-2018 முடிய இரண்டு இலட்சம் ரூபாய் வரை பணச் செலவின்றி மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில், 1-7-2014 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ரூ. 150/- பிடித்தம் செய்யப்படுகிறது.*

(ii) *தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம்-1995ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை விட கூடுதலான மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை இத்திட்டத்தில் வாழ்க்கைத்துணை உட்பட ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ன்கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ரூ. 1.00 இலட்சத்திற்கு மாற்றாக தற்போது நான்கு*

ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ரூ. 2.00 இலட்சம் வரை பணச் செலவின்றி மருத்துவ சிகிச்சை பெற முடியும். இப்புதிய திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 1-7-2014 முதல் 31-7-2016 வரை 99,317 பயனாளிகள், 283.55 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ உதவியை பெற்றுள்ளனர்.

13. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்.

1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு, ஓய்வூதியத்திலிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ரூ. 80/- பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 7-6-2013 முதல் உயர்த்தப்பட்ட ரூ. 50,000/- வழங்கப்படுகிறது. 31-7-2016 வரை இத்திட்டத்தின்கீழ் 1,65,007 குடும்பங்கள் பயனடைந்துள்ளன மற்றும் இறந்துபோன ஓய்வூதியதாரரின் குடும்பங்களுக்கு ரூ. 493.65 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 1984.

இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ. 20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ. 10,000/-மும் சேர்த்து வழங்கப்படுகிறது.

15. தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000.

(i) இத்திட்டம் 1-10-2000 முதல் துவக்கப்பட்டது.

(அ) 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசு அலுவலர்களும் விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேரலாம்.

இத்திட்டத்தில் ரூ. 50/- வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டம் 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேருபவர்களுக்கு கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தாத் தொகை ரூ. 70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூ. 10,000/-மும் பணியில் இருந்து ஓய்வுபெறும்போது வழங்கப்படுகிறது.

(ii) மேற்கண்ட திட்டங்களுக்கு ஓய்வூதிய இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு அலுவலர் ஆவார். வரவு-செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கப்பட்ட தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரிகள் தவிர) அந்தந்தத் துறைகள்மூலம் தொகை வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

16. உள்ளாட்சிமன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக் காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

17. கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்.

மாநில அரசின் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம் / அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

வ. எண்	ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு	கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்	31-7-2016 அன்றுள்ளபடி ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை
1.	80 முதல் 84 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%.	24,472
2.	85 முதல் 89 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%.	9,319
3.	90 முதல் 94 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%.	2,245
4.	95 முதல் 99 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%.	415
5.	100 மற்றும் அதற்கு மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%.	55
		மொத்தம்	**36,506**

18. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:—

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்
2001-2002	3,050.48	16.07
2002-2003	3,488.20	16.86
2003-2004	3,279.96	13.84
2004-2005	3,921.05	13.78
2005-2006	4,488.83	13.22
2006-2007	5,461.68	13.35

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்
2007-2008	6,038.96	12.71
2008-2009	7,776.21	14.13
2009-2010	8,439.24	15.11
2010-2011	11,855.27	16.89
2011-2012	12,687.97	14.89
2012-2013	13,248.08	13.41
2013-2014	14,934.37	13.82
2014-2015	17,528.06	14.32
2015-2016 (RE)	19,130.69	13.83
2016-2017 (RBE)	20,918.68	14.12

மின்னணு ஓய்வூதியம் (e-Pension).

*19. ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (*Electronic Cleaning Service*) / மண்டல மின்னணு தீர்வு முறை (*Regional Electronic clearing service*) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (*e-pension Central Server*) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாகப் பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படுகிறது.*

ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering).

20. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களை கருத்தில் கொண்டு, ஓய்வூதியர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவலியல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. வருங்காலங்களில் இந்த வசதியினை வங்கிகளில் கிடைக்கச் செய்வதன்மூலம், ஓய்வூதியதாரர்கள் இணையதளம் வாயிலாக அருகிலுள்ள வங்கிகளிலேயே அடையாளம் காணும் மின்னணு பதிவு செய்தல் முறையினைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும்.

மேலும், வருடாந்திர ஓய்வூதியர் நேர்காணலின்போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களுக்காக இந்திய அரசால் தொடங்கப்பட்ட உயிர்புள்ளியியல் துணைகொண்ட இலக்க முறை ஜீவன் பிரமான் சேவையாகும். தற்பொழுதுள்ள ஆதார் இணைப்பினைப் பயன்படுத்தி, ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக ஆதார் உயிர்புள்ளியியல் சான்றளிப்பின் அடிப்படையில் அரசு முகமையினால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழ் ஒரு தகுதிவாய்ந்த சான்றிதழாக ஏற்கப்படுவதால், ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக இச்சேவையினை பயன்படுத்திகொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறது.

ஆதார் எண்களை ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் 100 சதவீதம் இணைக்கும் நடவடிக்கையினை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. இப்பணி நிறைவேற்றப்பட்டவுடன், எந்த விதமான இடர்பாடுகளும் இல்லாமல் அனைத்து ஓய்வூதியதாரர்களும் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாகவே வாழ்வுச் சான்றிதழை உருவாக்கிடலாம். ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் ஓய்வூதியரின் நேர்காணலுக்கு அல்லது உரிய அலுவலரால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழுக்கு வற்புறுத்தாமல் இணையதளம் மூலம் வாழ்வுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வழிவகை ஏற்படும்.

21. இது தவிர எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்போது ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமுமின்றி இதன்மூலம் மிக எளிதான முறையில் பெற முடியும்.

ஓய்வூதிய சான்றிதழ்கள் மின்னணுமயமாக்கல் (Digitization).

22. ஓய்வூதியம் பெறும் ஆணைகளை கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்த ஆணைகளை மின்னணு ஓய்வூதிய மென் பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கென அரசு 1.26 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மின்னணுமயமாக்கலுக்குப் பின்னர், சான்றிதழ்கள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்கவும், ஒரே நேரத்தில் பதிவுகளை, எல்லைகளைக் கடந்து பலர் பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுப்பதோடு, கணினிமயமாக்குவதன் காரணமாக சான்றிதழ்களின் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும்.

23. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.

1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003க்குப் பின்னர் பணியில் புதியதாக பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம் (ஊதிய கட்டில் உள்ள ஊதியம் மற்றும் தர ஊதியம்) மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. மாநில கணக்காயர், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை நிருவகித்து வந்த நிலையில், அது தற்போது கருவூலக் கணக்கு இயக்குநருக்கு மாற்றப்பட்டு, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் வாயிலாக கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 31-3-2016 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 4,32,978 அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, வட்டி உட்பட மொத்தம் 13,690 கோடி ரூபாய் ஓய்வூதிய பொதுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதிய இயக்குநரகம்

24. *தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதிகள்' 1978ன் படி ஓய்வூதியம், பெறுவதற்குரிய பணி புரிந்து, ஓய்வூதியம் பெற தகுதியுள்ள மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வுபெற்றபின், ஓய்வுபெற்ற காலம் வரை நிர்ணயிக்கும் மற்றும் அவ்வப்போது அரசு அனுமதிக்கும் ஓய்வூதியப் பலன்களில் மறு நிர்ணயம் செய்யும் ஓய்வூதியம், ஒப்பளிப்பு வழங்கும் அலுவலரால் மாநில தலைமைக் கணக்காயர்மூலம் அனுமதிக்கப்பட்டு விதித் தொகுப்பின்படி கருவூலம் / சார் கருவூலம் / ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் பெற்று வருகின்றனர். மேலும், பணி முடித்த ஓய்வூதியதாரர்களைத் தவிர, பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளர்கள் மற்றும் மறைந்த ஓய்வூதியதாரர்களின் மனைவி/கணவர் அல்லது தகுதியுள்ள மகள் / மகன் ஆகியவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.*

அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத் துறையை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை இணைச் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இயக்குநரைத் தவிர ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர், ஒரு உதவிக் கணக்கு அலுவலர், பிற அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்களின் துணையுடன் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) *மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.*

(ii) *ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்பு மூலம் தீர்த்தல்.*

(iii) *ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.*

(iv) *அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேம நல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.*

(v) *தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995 நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.*

(vi) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(vii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(viii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ix) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநில கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(x) அமைப்புச் சாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிருவகித்து நிறைவேற்றுதல்.

ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்.

25. பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகவும் பெறப்படும் மனுக்கள்மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து 641 மனுக்களும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 725 மனுக்களும் மற்றும் மாவட்டங்களிலிருந்து 1,665 மனுக்களும் ஓய்வூதிய இயக்ககத்தில் பெறப்பட்டன. இந்த மனுக்கள்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, மனுதாரர்களின் குறைகள் களையப்பட்டு வருகின்றன.

2016 செப்டம்பர் 2]

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒய்வூதியதாரார் குறை தீர்க்கும் நாள் கூட்டம்.

26. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாவட்டவாரியான குறை தீர்க்கும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஓய்வூதிய அதாலத்.

27. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் 22-2-2002 முதல் செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள் மீது வழங்கப்படும் உத்தரவின்மீது தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட, ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதிய துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) ஆவார். மாதம் இரு முறை இந்த அதாலத் நடைபெறுகிறது. 1-1-2015 முதல் 31-12-2015 வரை 66 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 19 மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், தொடர்பு வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்.

28. ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் தொடர்பு வங்கி அலுவலர்களுடன் மாதாந்திர கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வங்கிகள்மூலம் செயல்படுத்தப்படும் பொதுத் துறை வங்கித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னைமூலம் செயல்படுத்தப்படும் முன்னோடித்திட்டம் மூலமும், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

ஓய்வூதியர்களின் வழிகாட்டி.

29. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்களை இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பதிவிறக்கம் செய்யலாம். மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்.

30. தேசிய தகவலியல் மையம் உருவாக்கியுள்ள மென்பொருளைக் கொண்டு, மருத்துவ நல நிதித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விபரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள தொழிலாளர் சேம நல நிதித் திட்டமும், தேசிய தகவலியல் மையத்தால் சிறு மாற்றங்களுடன் முழுமைப்படுத்தி கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்களின் நலத் திட்டங்களில் பெறும் உதவிப் பணத்தை மின்னணு பணப் பட்டுவாடா முறையில் (E.C.S.) ரிசர்வ் வங்கி மூலமாக அவரவர் வங்கிக் கணக்குகளில், கணினிமூலம் நேரடியாக

2016 செப்டம்பர் 2]

பணம் பட்டுவாடா செய்யும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த தேசிய தகவலியல் மையம் மற்றும் வங்கி அலுவலர்களோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினிமூலம் பணம் பட்டுவாடா செய்வதன்மூலம், காசோலைமூலம் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, உடனடியாக வங்கிகள்மூலம் அவரவர் வங்கிக் கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படுவது உறுதிபடுத்தப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்.

31. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

32. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள், துப்பாக்கி சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இது தவிர, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால்

[2016 செப்டம்பர் 2

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

33. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2016 முதல் ஓய்வூதிய தொகை ரூ. 11,000/-லிருந்து ரூ. 12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

34. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும், தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2016 முதல் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ. 5,500/-லிருந்து ரூ. 6,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

35. விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 6,000/-ஆக உயர்த்தி 15-8-2016 முதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர்

2016 செப்டம்பர் 2]

சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 111 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 5 பேர்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 65 பேர்களுக்கும் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பேரன் ஒருவருக்கும் இந்த சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

36. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

(அ) மருத்துவ வசதிகள்:

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது மாதமொன்றிற்கு ரூ. 100/-லிருந்து மாதமொன்றிற்கு ரூ. 500/- ஆக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவச் சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது ‘A’ வகுப்பு வசதிகளுடன்கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளின் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் சிகிச்சை வழங்கப்படுகிறது.

(ஆ) போக்குவரத்து வசதி.

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீட்டு வசதி.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்குமாடி வீடுகளில், ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர் / நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை.

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

(உ) ஈமச் சடங்குச் செலவு.

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 5,000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின் / மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

37. *தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் தகுதியுள்ள விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:*

2016 செப்டம்பர் 2]

வ. எண்	பல்வேறு வகையான ஓய்வூதியங்கள்	எண்ணிக்கை
1.	மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 12,000/- + ரூ. 500/- மருத்துவப்படி)	289
2.	மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 6,000/- + ரூ. 500/- மருத்துவப்படி)	1,378
3.	சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 6,000/- வீதம்)	111
4.	வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 6,000/- வீதம்)	5
5.	மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ. 6,000/- வீதம்)	65
6.	வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் (மாதம் ஒன்றுக்கு ரூ. 6,000/- வீதம்)	1

38. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்.

15-8-1972 முதல் மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (Swatantrata Sainik Samman Pension) *செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:*

(அ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூ. 6,330/- ஓய்வூதியத்துடன் 1-8-2015 முதல் 238 சதவீதம் அகவிலைப்படியும் சேர்த்து மொத்தம் ரூ. 21,395/- வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மைய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 1,193 ஆகும்.

(ஆ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ரூ. 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

39. மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2016-2017 ஆம் ஆண்டிற்கு ரூ. 19,29,45,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.